Regd. No. M. 2569

1223

ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الإسلام

மலர் 6

செந்தமிழ் மாத சஞ்சிகை

இதழ் 5

HIFAZATH-UL-ISLAM

ஹிஜ்ரீ 1354 முஹர்ரம்மீ, 1935 மே மீ

1. அல்குர் ஆன் ... 161
2. அல்ஹதீது ... 163
3. முஹர்ரம் பண்டிகை ... 165
4. மேனாட்டில் இஸ்லாம் பரவிய வரலாறு ... 167
5. மௌலானு லெய்யித் அத்தாவுல்லா ஷாஹ் புகாரிமீது வழக்கு ... 178
6. திருமறைத் தமிழுரை ... 190
7. ஹஸ்ரத் அப்துல்லா ஹிப்னு அப்பாஸ் (ரலி.) 191
8. விஷயத்திரள் ... 194
9. பிறமதத்தார் காதியானிக் கொள்கைக்குப் பலங்கொடுப்பதேன் ... 196
10. யவ்முந்நபீ விழா ... 199

சென்னை
ஹிபாஜத்துல்இஸ்லாம் சங்கத்தாரின்
வெளியீடு

K.R. SARMA

ஹிபாஜத்துல் இஸ்லாம்

சந்தா விபரம்

இந்தியா, பர்மா, ஸீலோன் முதலிய உள் நாடுகளுக்கு ...	ரூபா	3	0	0
பினாங்கு, சிங்கப்பூர், மலாயா முதலிய வெளிநாடுகளுக்கு...	,,	4	0	0
தனிப் பிரதி ...	,,	0	4	0

ஒரு வருஷத்திற்கு குறைந்து பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

நிபந்தனைகள்

1. சந்தாதாரர்களாகச் சேருகிறவர் முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

2. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும், மணியார்டர் அனுப்பும்பொழுதும் தங்கள் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிடவேண்டும். பதிலறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

3. ஒரு வருஷத்திற்கு இடையில் சந்தாதாராகச் சேருவோர் இஷ்டப்பட்டால் முந்திய மாதங்களின் சஞ்சிகைகளையும் கிரயங்கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

4. விஷயதானஞ் செய்ய விரும்புங் கனவான்கள் எளிய நடையில் ஒரே பக்கத்தில் மிகத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

5. மதசாஷணையான விஷயங்களும், வீண் தர்க்கங்களையுண்டு பண்ணும் வியாசங்களும், ஆளைக்குறித்துத் தாக்கி எழுதும் வியாசங்களும், பத்திரிகையின் நோக்கத்திற்கு மாறுபாடான வியாசங்களும் பிரசுரிக்கப்படமாட்டா.

6. எந்த வியாசத்தையும் நிறுத்திக்கொள்ளவும், திருத்திக்கொள்ளவும், சுருக்கிக்கொள்ளவும் ஆசிரியற்கு உரிமையுண்டு.

மானேஜர்,

"ஹிபாஜத்துல் இஸ்லாம்" ஆபீஸ்,

43-A, போஸ்டாபீஸ் தெரு,

G. T., மதராஸ்.

தமிழ்நாடு ... காப்பக நூலகம்
20834
சென்னை

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம். [குர்ஆன்

ஆசிரியர்:—மௌலவீ A. R. அப்துர்றஹீம் ஸாஹிப் (பாக்கவி)

மலர் 6	ஹிஜ்ரி 1354 முஹர்ற்றம் மீ 1935 ஸ்ரு மே மீ	இதழ் 5

அல் குர்ஆன்

வேதத்தை யுடையவர்களில் அநேகர் தங்களுக்கு உண்மை வெளியானபின்பும், தங்கள் மனதின்கண்ணுள்ள அழுக்காற்றினால், (முஸ்லிம்களே) நீங்கள் விசுவாசங்கொண்டபின், உங்களைக் காபிர்களாகத் திருப்பிவிட வேண்டுமென்று விரும்புகிறார்கள். ஆகவே, அல்லாஹ் தன்னுடைய கட்டளையை வெளியாக்கும்வரை நீங்கள் (அவர்களை) மன்னித்து கூஷமித்துக்கொண்டிருங்கள். நிச்சயமாக அல்லாஹ் எல்லா வஸ்துவின்மீதும் சக்தி பெற்றவனாயிருக்கிறான்.
(அல் குர்ஆன் 2—109).

மேலே கூறப்பட்டுள்ள திருமறை வாசகத்தின் கருத்து நமக்கு மிகமிகத் தெளிவாக இருக்கின்றனவாதலால், இதில் கூறப்பட்டுள்ள விஷயம் யாதென்பதை யாம் ஈண்டுகூற வேண்டியதில்லை. ஆனால் இவ்வாயத்தில் கூறப்பட்டுள்ள விஷயம் இக்காலத்தில் எவ்வாறுநடைபெறுகிறதென்பதைப் பற்றித்தான் இங்கு கூறவேண்டியதாக இருக்கிறது.

மேனாட்டினரின் ஏகாதிபத்தியம் என்ற பிரவாகமும், பரங்கி நாகரீகமும் இப்பூவெளியில் எற்படுத்தி இருக்கிற நாசவேலை, கீழ்நாட்டின் உடலத்தின் மீது மட்டுமில்லாமல் அதனுடைய ஆன்மா, அதனுடைய நாகரிகம், அதனுடைய சமூகவாழ்க்கை ஆகியவைகளையுங் கூட மிகவும் பலமாகக் காயப்படுத்திவிட்டன. எனவே, அவைகளின் ஒரே தாக்குகையானது கீழ்நாட்டின் உடலத்தையும் ஆன்மாவையும் வேலை தீர்த்துவிட்டது. இப்பரங்கிப் பிரவாகம் இன்ன திசையை நோக்கித்தான் செல்கிறதென்று குறிப்பாய்ச் சொல்லமுடியாது; இவ்வளவு வேகத்தில்தான் அது செல்கிறது என்னும் வரையரையுங் கிடையாது. இது உலகமெங்கும் வியாபித்திருக்கிறது; வாழ்க்கையின் எந்தப் பிரிவும் இதனால் பாதிக்கப்படாமலில்லை. மதக்கொள்கை, நடத்தை ஆகியவைகளின் எந்தக் கிளையும் இதன் பிடியிற் சிக்காமலில்லை. நமது மூளை ஏதேனும் ஒன்றைப்பற்றிச் சிந்திக்குமாயினும் அச்சிந்தனைக்கும் கூட மேனாட்டு நாகரீகம்தான் வழிகாட்டியாகவந்து குறுக்கிட்டுக் கொள்கிறது. நமது கண்கள் எதைப்பார்த்தாலும் மேனாட்டு அழகையும் சௌந்தரியத்தையும்தான் அதன் முகக்கண்

ணடியின் மூலமாகப்பார்க்கிறது. சுருங்கக் கூறின் நாம் உட்காருதல், எழுந்திருத்தல், நமது சங்கங்கள், கழகங்கள், நமது உணர்ச்சிகள், நமது சொற்கள் ஆகிய எவ்விஷயத்திலும் மேனாட்டுப் பரங்கிக் கலப்பில்லாத தொன்றுமில்லை. அதை நாம் "நியூ பாஷன்" என்ற பெயரால் கொண்டாடுகிறோம்.

மேனாட்டு ஆதிக்கம் நம்முடைய சொத்து, செல்வம், பூமி, வருவாய்க்குரிய மார்க்கம் ஆகிய யாவற்றிலும் அதிகாரம் பெற்று நம்மை நெருக்கிக்கொண்டிருக்கிறது. இதுமட்டுமன்று; நம்முடைய எண்ணம், உணர்ச்சி, ஈமான், உறுதி, நாகரீகம், பழக்கம், சமுதாயம், ஆகிய எல்லா விஷயங்களிலும் இராக்கொள்ளையடித்து நமக்கு எவ்விதமான பிரத்தியேக சுயஅறிவே இல்லாமலாக்கிவிட்டது. இதனால் நாம் நம்மையே மறந்து மேனாட்டின் நாகரீகத்தை முற்றிலும் பின்றொடர்ந்து விடுகிறோம். ஐரோப்பாவானது நமது ஸ்தூலங்களை அடிமைப்படித்தி இருப்பினும் நமது உணர்ச்சியிலும் கொள்கையிலும் தனது செல்வாக்கை ஏற்படுத்தி அவைகளைத் தன்பக்கல் திருப்பாதிருக்குமாயின் மேனாட்டு ஆதிக்கத்தால் நமக்கு அத்துணை நஷ்டமும் கஷ்டமும் ஏற்பட்டிருக்காது. இவ்வாறு பாதகமடைந்தவர்களில் முஸ்லிம்கள்தாம் அதிக நஷ்டத்தை அனுபவித்து வருகிறார்கள். இம் மேனாட்டு நாகரீகம் நமக்குக் காண்பித்துக் கொடுத்த அளவுக்குத்தான் நம்முடைய அறிவும், பயிற்சியும் முயற்சியும் உண்டாகின்றன.

ஆங்கிலக் கல்லூரிகளில் கல்வி பயிலுவதால்தான் அறிவு வளர்ச்சியும், தாராள நோக்கமும் உன்னத லக்ஷியமும் உண்டாகிற தென்று சொல்லப்படுகிறது. இவைகள் உண்மையாய் இருக்கலாம். ஆனால், மார்க்கத்தையும், மார்க்கச் சட்டத்தையும் பரிகசித்தலும், அல்லாஹ்வும் அவனது றஸூலும்கூறியுள்ள உபதேசங்களைப் பழைய காலத்துச் செய்திகள் என்று கூறுவதும், இன்னும் எடுத்ததற்கெல்லாம் மூல்லாக்கள் என்று, மார்க்கக் கல்வி கற்றவர்களின் மீது வெறுப்பாகப் பேசுவதும், அவர்களைத் தூற்றுவதும் எங்கிருந்து உண்டாகின்றன? சுயமதிப்பு, சமூகமதிப்பு யாரால் பாழ்படுத்தப்படுகிறது? நியாயமில்லாத அகம்பாவம், ஒழுக்கமின்மை, பெரியாரை மதியாமை இவைகளெல்லாம் எந்த இடத்திலிருந்து உண்டாகின்றன? ஆகவே, நீங்கள் இவைகளை ஒன்றுக்கொன்று சீர்தூக்கிப் பார்த்து பரங்கி நாகரீகத்தால் நீங்கள் அடைந்த லாபம் எவ்வளவு, நீங்கள் இழந்த முதல் இத்தனை என்பதை கணக்குப் பாருங்கள்.

நமது வாலிபர்கள் அந்நிய ஸ்கூல்களில் சரித்திரங்களைக் கற்பதால், இவர்கள் தங்களுக்களிக்கப்பட்ட சரித்திரக் கல்வியின் பயனாக, இந்தியாவின் சக்கிரவர்த்தியான ஔரங்கஜேபை ஒரு பகற் கொள்ளைகாரனுக்குச் சமமாகவே மதித்து விட்டனர். இச்சரித்திர ஆசிரியர்கள், முஸ்லிம் அரசர்கள் செய்த சிற்சில தவறுகளுக்கெல்லாம் இஸ்லாம்மதத்தைத்தான் குற்றவாளியாக ஆக்குகிறார்கள். நமது வாலிபர்கள் இங்கிலாந்தின்சரித்திரங்களைப் படிப்பதுகொண்டு மேனாட்டினர் தாம் நமது எஜமானர்கள் என்றும் நம்மைச் சீர்திருத்தக் கூடியவர்கள் என்றும், வழிகாட்டிகள் என்றும் உணர்ந்து கொண்டனர். எனவே, கல்வியறிவில்லாதிருந்த நமக்கு இவர்கள் தாம் கல்வி அறிவைப்புகட்டி நமக்குப் புது நாகரீகத்தைத் தந்தவர்கள் என்றும், நம்முடைய மூதாதையர் காட்டுமிராண்டிகளாகவும் ஜனஹிம்சை செய்பவர்களாகவும் இருந்தார்களென்றும் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள்.

நமது இளவாலிபர்களுக்கு இவ்விதமான உணர்ச்சியை உண்டுபண்ணி, இஸ்லாமிய நடையுடை பாவனைகளைவிட்டு அவர்களை அந்நியர்களாக ஆக்கிவிட்டபடியால், அவர்கள் ஆங்கிலக் கலாசாலைகளை விட்டு வெளியேறிய பின்னர், அவர்களிற் பெரும்பாலர் இஸ்லாத்தைப் பரிகசிப்பவர்களாகவும், இஸ்லாத்தின் கொள்கைகளும், சட்டமுறைகளும் அநாகரீகம் வாய்ந்தவைகளென்று முடிவு செய்பவர்களாகவுமாய் விட்டனர். இம்மட்டுடன் நிற்காமல் தங்களது எல்லையை மீறி, இஸ்லாத்தின் இமாம்களாகவும் மார்க்கச் சீர்திருத்த வாதிகளாகவுமிருக்க முன்வந்து, அதற்கான முயற்சி செய்பவர்களாகவும் ஆகிவிட்டனர்.

இதற்குக் காரணம் என்னவென்பதை இன்னும் ஆழமாக நாம் கவனித்துப் பார்ப்போமாயின், நமக்கு மற்றொரு உண்மையும் வெளியாகின்றது. அதாவது, ஐரோப்பாவின் மூலமாக அவர்களுக்குக் கற்பிக்கப்படும் இஸ்லாமியக் கொள்கை, அவர்களிற் பெரும்பாலோர் கல்விச்சாலைகளைவிட்டு வெளியேறியவுடன் தன்னுடைய எல்லைக்கு மேலில் அதிகமாகப்பிர

வேசித்துமதக்கோட்டைத்தைத்தகர்த்தெரிந்து விடவேண்டு மென்ற தணிச்சல் கொள் வதற்குக் காரணமாகி விடுகின்றது.

தற்கால இஸ்லாமிய நூல்கள் இரண்டு வகை யாக இருக்கிறது. (1) கீழ்நாட்டு அறிஞர்கள் அறபி முதலிய பாஷைகளில் எழுதிய நூல்கள். (2) மேனாட்டுக் கிறிஸ்துவப் பாதிரிமார்கள் ஆங்கிலம் முதலிய ஐரோப்பிய பாஷைகளில் இஸ்லாத்தைப்பற்றி எழுதிய நூல்கள். ஆனால் ஆங்கிலக் கல்விச் சாலைகளில் பயிலும் மாணவர் கள் இஸ்லாத்தைப்பற்றி, ஐரோப்பிய பாதிரி மார்கள் ஐரோப்பிய பாஷைகளில் எழுதிய நூல்களை வாசிக்கின்றனராதலின் அந்நூல்கள் இஸ்லாத்தைப்பற்றிச் சரியாக எடுத்துரைக் கின்றன வென்று முடிவுசெய்துகொண்டனர். ஐரோப்பிய பாதிரிமார்கள் இஸ்லாத்தைப் பற்றி எழுதிய நூல்கள் இஸ்லாத்தின் அபி விருத்தியைக் கருதியோ அல்லது இஸ்லாத் தின் கொள்கையை உள்ளது உள்ளபடி அறி வித்துப் பொதுஜனங்களைக் காப்பாற்ற வேண்டு மென்பதைக் கருதியோ எழுதப்பட்டதாக இல்லை. ஆகவே, அவை இஸ்லாத்தைக் குழி தோண்டிப் புதைக்கவேண்டும் என்ற நோக்கத் தால் எழுதப்பட்டவைகள் என்று கூறுவது மிகைப்படுத்திக் கூறுவதாகாது. இந்நிலைமை யில் நமது இளவாலிபர்கள் இஸ்லாத்தின்பால் கொண்டுள்ள அபிமானத்தின் காரணமாக இப்புத்தகங்களை வாங்கிப் படித்துத் தவறான எண்ணத்தைக்கொண்டு விடுகின்றனர். மேலும், "இஸ்லாமிய உலமாக்கள் தப்பான விஷயங் களையும் குறுகிய புத்தியையும் உடையவர்கள்; இவர்கள் தங்களது பதவியைவிட்டு விலகிவிட வேண்டும்" என்று அவர்கள்மீது தோஷங்கூறி உலமாக்களின் ஸ்தானத்தில் ஆங்கிலங் கற்ற வர்கள் வந்துவிடவும் முயலுகின்றனர். ஆனால், இவ்வாங்கிலங் கற்றோரிலநேகர் கற்றிருக்கிற இஸ்லாம், அல்லாஹ் தஆலாவானவன் தனது றஸூல் (ஸல்.) அவர்கள் மூலமாக நமக்குக் கற்பித்த இஸ்லாமன்று. இவர்கள் கற்றிருக்கிற இஸ்லாம் ஐரோப்பிய கிறிஸ்துவர் கள் ஏற்படுத்தி இருக்கிற, இஸ்லாமென்று சொல்லப்படுபவையே யாகும். இவர்கள் உண் மையான இஸ்லாத்தை விரும்பவே மாட்டார் கள். ஏனெனில், நபிகள் நாயகம் (ஸல்.) அவர் களை நோக்கி இறைவன் இவ்வுண்மையை அன்று 1350 வருஷங்களுக்கு முன்னரே அறிவித்துளான். அதாவது,

மேலும் (நபியே) யூதர்களும் கிறிஸ்தவர் களும் அவர்களுடைய மார்க்கத்தை நீர் பின் பற்றுதவரை அவர்கள் உம்மீது திருப்தியடை யவே மாட்டார்கள்." என்பதே.

ஆகவே, யூதர்களும் கிறிஸ்துவர்களும் எக் காலத்திலும் இஸ்லாத்தின்பால் திருப்தி கொள்ளவும் மாட்டார்கள்; இஸ்லாத்தைச் சரியாக எடுத்துரைக்கவும் மாட்டார்கள்; நய வஞ்சகமாகத் தங்கள் கொள்கைகளையே போதிக்க முன்வருவார்கள் என்பது திண்ணம். ஆகவே, மேனாட்டுப் பாதிரிமார்களால் எழுதப் பட்ட இஸ்லாமிய கிரந்தங்கள்மூலம் இஸ் லாத்தை நம்மவர் அறிந்துகொள்ள முயலுவது நமக்கு நாமே நஷ்டத்தை உண்டுபண்ண முய லுவதாகும். எனவே, இஸ்லாத்தைப்பற்றி, இஸ்லாமியபாஷைகளிலுள்ள நூல்களிலிருந்தே விஷயங்களை உணர்ந்துகொள்ள முயல்வது தான் அறிவுடமையாகும். மேல்கூறப்பட் டுள்ள ஆயத்தில் அல்லாஹ் தஆலா, வேதக் காரர்களின் பிரயத்தினங்களை விளக்கிக் கூறி பிருப்பதால் நாம் மிக்க ஜாக்கிரதையாக இருந்து அவர்களின் மாயவலையில் சிக்கிக் கொள்ளாதிருக்க முயற்சிப்போமாக.

அல் ஹதீது

அல்லாஹ்வை பயப்படுவதின் மேன்மை.

எம்பெருமானார் நபியகரீம் (ஸல்.) அவர்கள், தூய்மை பொருந்திய மஸ்ஜிதின்கண் ணே வீற்று அல்லாஹ் தஆலாவை பயந்தொழு கும் மேன்மைகளை எடுத்து விளக்கி வரு வதற்கிடையே, "அல்லாஹ்வின் பயமேலீட் டால் அழுது கண்ணீர்விடுபவன் நரகமடைய மாட்டான்" எனத் திருவாய் மலர்ந்தருளினர் களென, ஹஸ்ரத் அனஸ்பின் மாலிக் (ரலி.) அவர்களைத் தொட்டும் றிவாயத்துச் செய்யப் பட்டிருக்கிறது.

ஹஸ்ரத் அல்லாமா அப்துல் அஜீஸ் சாவீஷ் (ரஹ்.) அவர்கள் இந்த ஹதீதை விரித்துரைக்குங்கால், ஏமாற்றம் தந்திரம் இவைகளை விட்டு, அல்லாஹ் தஆலாவினுடைய பயத்தைப் பிரதானமாகக் கொண்டிருப்பதானது மேலான வணக்கமாக இருக்குமென்றும், இதனை கைகொண்டொழுகுபவன் மேலான பதவியடைந்த பாக்கியவானுகுமென்றும் கூறியிருக்கின்றார்கள்.

அல்லாஹு தஆலாவின் முடுகுதலை அடைவதற்கு அவனை பயந்து நடப்பதைத் தவிர வேறு இதர மார்க்கமில்லையென்று ஹஸ்ரத் ஜுனைத் பக்தாதீ (ரஹ்.) அவர்கள் கூறியிருக்கிறார்கள். மானிடன் தான் புரிந்துள்ள பாவமான காரியாதிகள்மீது கவலைகொண்டு துக்கமடைந்தவனுய் இருப்பதற்கு பயமெனப்படும். சிலமகான்கள் மேன் பதவியடைந்து உத்தம சீலர்களாய்த் திகழ்ந்ததற்குள்ள விஷயங்களெல்லாம் தங்களுக்கு நன்கு தெரியுமென்றும், அவர்கள் இவ்வாறு மேன்பதவி அடைந்ததற்கு அல்லாஹ்வை அஞ்சி பயபக்தியுடையவர்களாக இருந்ததே காரணமாகுமென்றும், அவர்களில் ஹஸ்ரத் 'புலல் பின் இயாள்' கல்வி பயின்று தீர்ச்சையடைந்த பின் சுமார் 11 வருடகாலம்வரை இஷாவுக்குச் செய்த ஒளுவைக்கொண்டே பஜ்ர் தொழுகையை நிறைவேற்றியிருப்பதுடன் இரவு முழுதும் அல்லாஹ் தஆலாவுக்கு பயந்து அழுதவர்களாய் இருந்திருக்கிறார்களென்றும், இதற்கிடையே அவர்கள் அழுது கவலைப்படாத எவ்வித இரவும் செல்படியானது கிடையாதென்றும் ஜுனைத் (ரஹ்.) அவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

ஹலாலான சம்பாத்தியத்தைத் தேடுதல்.

ஒரு நாளன்று நபிகள் பெருமானர் (ஸல்.) அவர்கள் ஹலாலான-சரியான-உண்மை மார்க்கத்தில் சம்பாத்தியஞ் செய்வதின்மேன்மைகளை எடுத்துக் கூறிக்கொண்டிருப்பதற் கிடையே, தன் கையின் சம்பாத்தியத்தைக் கொண்டு சாப்பிடுபவன் கியாமத் நாளில் சாலிஹீன் களுடனிருப்பான்''எனத்திருவாய் மலர்ந்தருளியதாக ஹஸ்ரத் அப்துல்லாஹிப்னு மஸ்ஊத் (ரலி.) அவர்களைத்தொட்டும் றிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

ஹஸ்ரத் இமாம் கஸ்ஸாலி (ரஹ்.) அவர்கள் இந்த ஹதீதை விரித்துரைக்குங்கால், சத்திய மற்றமார்க்கங்களை விட்டு நேரான உண்மை மார்க்கத்தில் பிரயாசையுடன் சம்பாத்தியஞ் செய்து ஜீவனஞ் செய்வது மேலான வணக்கமாகுமென்றும், இந்நிலைமையில் அல்லாஹ் தன் மீது கடமையாக்கி வைத்திருப்பவர்களின் பாத்தியதைகளையெல்லாம் நிறைவேற்றி விடுவதற்கும், ஹலாலான சாப்பாட்டைக் கொண்டு தன் வயிற்றை நிறப்பிக் கொள்வதற்கும் முயற்சிப்பவன் உண்மை வணக்கவாளி என்றும், அல்லாஹ்வின் பாதையில் தியாகஞ் செய்த வீரபுருடனுகு மென்றும் கூறியிருக்கிறார்கள்.

நபிகள் பெருமானர் (ஸல்.) அவர்கள், மானிடர்களிடம் அறுதிமானம் வாங்குவதற்கிடையே அநீதி, ஏமாற்றம், சதிபுரிதல் இன்னும் இதர ஆகாக்கருமங்களை விட்டுத் தவிழ்ந்து கொள்ளுமாறும், தன் கைக்கு கீழுள்ளவர்களுக்கு ஹலாலான விதத்தில் சாப்பாடு கொடுக்கும்படியும் உறுதி வாங்குவார்கள்.

பிரீதி கொள்வதின் மேன்மை.

''நீங்கள் ஈமான் கொள்ளாதவரை சுவனபதியடைய மாட்டீர்கள்; நீங்கள் ஒருவருக்கொருவர் பிரீதிகொள்ளாதவர்களாக இருக்கும்வரை ஈமானுடையவர்களாக மாட்டீர்கள்'' என பெருமானர் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் அனஸ்பின்மாலிக் (ரலி) அவர்களைத் தொட்டும் றிவாயத்துச்செய்யப்பட்டிருக்கிறது.

ஹஸ்ரத் இமாம் கஜ்ஸாலீ (ரஹ்) அவர்கள் இந்த ஹதீதை விரித்துரைக்குங்கால், ஒவ்வொருவரும் தன்சகோதரர்களுடன் தக்க—ஒழுங்கான முறையில் நடந்து கொள்ளவேண்டுமென்றும், இவ்வாறு நடந்து வந்தகாலே முஸ்லிம்களின் முன்னேற்றமென்னும் ஒளி உலகெங்கும் வீசிக்கொண்டிருந்ததென்றும், முஸ்லிம்களாகிய நாம் சங்கை மரியாதை என்னும் பார்வையைக்கொண்டு நோட்டமிடப்பட்டு வந்தோமென்றும், இதுகாலே அவைகளையெல்லாம் கைவிட்டு விட்டதன் பயனுக நாம் கேவலமாக மதிக்கப்பட்டு வருகிறோமென்றும் கூறியிருக்கிறார்கள்.

விருந்தினரை உபசரித்தல்.

நபிகள் பெருமானர் (ஸல்) அவர்கள் விருந்தாளிகளை உபசரிக்க வேண்டுவதன் அவசியத்தைக் கூறுங்கால், ''அல்லாஹ்வின் மீதும், மறுமைநாள் மீதும் உறுதி கொள்பவன் விருந்தினரை உபசரிக்கவும்'' எனக் கூறினர்கள்.



முஹர்ரம் பண்டிகை

முஹர்ரம் மீ இஸ்லாமிய ஹிஜ்ரீ வருஷத்துக்கு முதல் மாதமாகும். இந்த மாதம் முதல் தேதிதான் இஸ்லாமிய வருஷப்பிறப்பின் முதல் தினமாகும். உலகில் பற்பல மதத்தாரும் தங்கள் தங்கள் வருஷப்பிறப்பு தினத்தை விமரிசையாகக் கொண்டாடுவதுபோல் முஸ்லிம்களாகிய நாம், நமது இஸ்லாமிய வருஷப் பிறப்பு தினத்தைக் கொண்டாடுவதில்லை. நமக்கு முக்கிய கொண்டாட்ட தினங்கள் வருஷத்தில் இரண்டு நாட்களேயாகும். அவை முறையே ஈதுல் பித்று பெருநாளும், ஈதுல் அல்ஹாப் பெருநாளுமேயாகும். இவ்விரண்டையும் தவிர முஸ்லிம்கள் முக்கியமாகக் கொண்டாடக்கூடிய தினம் இஸ்லாம் மார்க்கச் சட்டப்படி நமக்கு வேறு நாட்களில்லை என்று கூறலாம். நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் பிறந்ததினம், லைலத்துல் கத்ரீ, லைலத்துல் மிஃராஜ், ஆஷூரா, லைலத்துல் பராஅத் ஆகிய முக்கிய தினங்கள் நமக்கு இருக்கின்றன வாயினும் அவைகள் மேற்கூறப்பட்ட இரு தினங்களையும்போல் அவ்வளவு கடமையான நாட்களன்று. ஆனால் துர்அதிர்ஷ்டவசமாக ஏனைய சமூகத்தார் இஸ்லாத்தைப்பற்றித் தவறாக எண்ணக் கூடிய ஒரு விஷயம் நம்மவரில் ஏற்பட்டு விட்டது. அதாவது, இஸ்லாத்தின் வருஷப்பிறப்பிலிருந்து 10 தினங்கள் வரை முஸ்லிம்களுக்கு முஹர்ரம் பண்டிகை என்று முக்கியமானதொரு பண்டிகை இருப்பதாக பிறமத நண்பர்கள் நினைத்து வருகின்றனர். இந்த மாதம் பிறந்த வுடன் ஹிந்து முஸ்லிம்களுக்கிடையே இப்பண்டிகையை உத்தேசித்துப் பல இடங்களில் வகுப்புக்கலவரம் ஏற்படுவதும், இவ்விதக் கலவரங்களைத் தடுக்க அரசாங்கத்தார் பலமான முன்னேற்பாடுகள் செய்வதும், 144-வது பிரிவைப் பல இடங்களில் பிரயோகிப்பதும் சகஜமாகி விட்டது. நமது தென்னாட்டைப் பொறுத்தவரை அத்தனை 144-களுக்கு அவசியம் இன்னும் நேரவில்லை. அவ்வாறு நேராமலிருப்பதே நமது அவாவாகும். இறைவன் அத்தனை கலவரங்கள் ஏற்படாதிருக்க அருள்புரிய வேண்டும்.

நிற்க, இக்கொண்டாட்டம் முஸ்லிம்களுக்கு அவசியமானதா? என்பதைப் பற்றிக் கவனிப்போம்: இது இஸ்லாத்தில் இல்லாத புதியதொரு கொண்டாட்டமாக இருப்பது மட்டுமில்லாமல் இஸ்லாத்தின் அடிப்படையான கொள்கைக்கே நேர்விரோதமாகவுமிருக்கிறது. இஸ்லாத்தில் விக்கிரக ஆராதனை இல்லை என்பது உலகப் பிரசித்தம். ஆனால், முஸ்லிம் அல்லாதார் இஸ்லாத்தைப் பற்றி தப்பருத்தம்கொண்டு "நாங்கள் விக்கிரகத்தை வணங்குகிறோமென்றால் முஸ்லிம்கள் பஞ்சாவை வணங்குகிறார்கள்" என்று தவறாகக் கூறவேண்டிய சந்தர்ப்பத்தளவில் இஃது கொணர்ந்து சேர்த்துவிடுவதாக இருக்கிறது. இதற்குக் காரணம், இந்தப்பண்டிகையில் பஞ்சாவும், சப்பரமும், கூடும், கொடியும், பூக்குழியும், வேஷமும், ஆடல்பாடல்களும் அனுஷ்டிக்கப்படுகின்றன; இவை இஸ்

லாத்துக்கு முற்றிலும் விரோதமான வைகளென்பதி லையமில்லை.

இதனை இந்நாட்டிலுள்ள பொறுப்பு வாய்ந்த முஸ்லிம்கள் எவரும் செய்வ தில்லை. ஆனால் இஸ்லாத்தின் போதனை யைக் கொஞ்சமும் அறியாத சில பாம ரர்கள் தெரியாத்தனத்தால் இதை ஒரு புண்ணியகாரியமெனக் கருதி இஸ்லாத் துக்குக் கண்ணியக் குறைவான இக் காரி யத்தைச் செய்து வருகிறார்கள். நமது நாட்டிலுள்ள ஹிந்துக்கள் வடநாட்டினரைப்போலில்லாமல் இப்பண்டிகையை வெகு புனிதமாக மதித்து, இதைக்கொண் டாடுவதற்காகச் சில இடங்களில் அநே கம் பூமிகளையும் கூட வக்புச்செய்திருக் கிறார்கள். ஹிந்துக்களில் அநேகர் இத் தகைய பஞ்சாச் சாவடிகளுக்கு தர்மகர்த் தாக்களாகவும் இருந்து வருகிறார்கள். வேஷம் போடுவதிலும் சில இடங்களில் ஹிந்துக்களே முதன்மை ஸ்தானத்தை அடைந்திருக்கிறார்கள். சுருங்கக் கூறு மிடத்து, அநேக இடங்களில் இந்துக்களே இதனைக் கொண்டாடுகிறார்கள் என்றுங் கூறிவிடலாம். சமீப காலத்தில் மதரா ஸில் நடைபெற்ற இப்பண்டிகையின் போழ்து, மதராசிலுள்ள பஞ்சமர்கள் தாம் 99|100வரை வேஷங்களைப்போட்டு இதைக் கொண்டாடினர்கள் எனலாம். ஆயினும் பிறமதத்தார் கொண்டாடு வதை நாம் கவனிக்கவேண்டியதில்லை; நம்மவர்தாம் இதில் தலையிடாமல் ஒதுங்கி இருக்கவேண்டும் என்று சிலர் நினைக்க லாம். ஆனால் நம்மவர் இதில் சிரத்தை கொள்ளாமல் இருப்பது முடியாத காரி யம். இவ்வாறு கொண்டாடுவதால் இஸ் லாத்துக்கு அகௌரவமும், கண்ணியக் குறைவு மேற்படுகிறது என்பதை இப் பண்டிகை தினத்தின் போழ்து மதராஸ் முதலிய பெரிய நகரங்களிலிருப்பவர்கள் நன்குணர்வர். ஆதலால், தம்மை முஸ் லிம் என்று சொல்லிக் கொள்பவர் ஒவ் வொருவரும் இஸ்லாத்தின் கண்ணியத் தைக்காக்க முன்வரல்வேண்டும். இக் கொண்டாட்டத்தில் முஸ்லிம் அல்லா தார் சம்மந்தப்படுவதையும், அவர்கள் வேஷம் முதலியன போட்டு இஸ்லாத் தின் கண்ணியத்துக்குக் குறைவு உண்டு பண்ணுவதையும் தடுக்க முஸ்லிம்கள் முன் வரல்வேண்டும். அத்துடன் முஸ் லிம்களும் தங்கள் மஹல்லாக்களில், தங்கள் கிராமங்களில் இத்தகைய கொண்டாட்டங்களும், வேஷங்களும், ஊர்வலங்களும் நடைபெறுமற் றடுக்க ஆங்காங்குமுயற்சி செய்தலும்வேண்டும். இக்கொண்டாட்டத்தை 'அஹ்ல ஸுன் னத்து வ ஜமாஅத்'' தார்கள் தடைசெய் தால் ஷீஆ வகுப்பாருக்கு கோபம் உண் டாகுமே என்று சிலர் நினைக்கக்கூடும். நல்ல வேளையாக நமது நாட்டில் ஷீஆ வகுப்பினர் இல்லையாதலால், நமது நாட்டிலுள்ள கிராமப் பகுதிகளில் இதைச் சுலபமாகத் தடை செய்து விடல் முடியும். மதராஸ், வேலூர், பெங்களூர் போன்ற நகரங்களில் ஷீஆ வகுப்பினர் இருக்கின்றனர். அவர்களைத் தடை செய்ய நாம் முயலுவோமாயின் அங்கு பிளவும் கலவரமும் ஏற்பட இடமுண்டு. ஆதலால், அங்குள்ள அஹ்ல ஸுன்னத் ஜமாஅத்தார் தங்கள் மஹல்லாவை மாத் திரம் இத்தகைய கண்ணியக் குறைவான காரியம் நடைபெற விடாமற் காப்பாற் றிக்கொள்ள முயலுவார்களாயின் இதில் எவ்வளவோ நற் பலன் ஏற்படக்கூடும். இதற்கு நமது நாகூர் வழிகாட்டி இருக் கிறது. அங்குள்ள மார்க்கபக்தி நிறைந்த முஸ்லிம்கள் இத்தகைய வேஷங்களும், ஊர்வலங்களும் தங்கள் தெருக்களில் வரக்கூடாது என்று ஏகமனதாகத் தீர் மானித்து கவர்ன்மெண்டாரிடம் முற் கூட்டியே அறிவித்து 144-வது பிரிவுப் படி தடையுத்தரவும் வாங்கித் தங்கள் தெருக்களை மட்டிலும் இத்தகைய ஆபா சக் கொண்டாட்டத்தை விட்டுக்காப் பாற்றி விட்டனர். இறைவன் இவர்களது முயற்சிக்காக இகபரசாதனங்களைத் தந் தருளுவானாக. இவர்கள்காட்டிய சமா

தானமான சிறந்த வழியினை மற்ற இடங்களிலுள்ள முஸ்லிம்களும் பின்பற்றி ஒழுகுவார்களாயின், அத்தி பூத்தாப் போல் ஆங்காங்கு கிராமங்களில் நடைபெறுகிற இவ்வனாச்சாரக் கொண்டாட்டம் நாளடைவில் நசித்தொழிந்து போம் என்பது திண்ணம். நாகூர் முஸ்லிம்கள் இவ்விஷயத்தில்வழிகாட்டியதற்கு அவர்களை நாம் பாராட்டுவதுடன் மற்றொரு விஷயத்தையும் அவர்களுக்கு அறிவித்துக்கொள்ள விரும்புகிறோம்.

அதாவது, அங்கு அடக்கம் செய்யப்பட்டிருக்கும் மகான் அவர்களை ஜியாரத்துச் செய்யும் காலை, பெரியார் அவர்களின் கண்ணியத்துக்கு மாறான அநேக பித்அத்துகள் நடைபெறுகின்றன என்பதுயாவருக்கும்தெரிந்தவையே எனவே, அக்குறைகளையும் நிவர்த்தி செய்து, இஸ்லாத்துக்கு முற்ற முற்ற ஒழுங்கான முறையில் அந்த உற்சவம் நடைபெறச்செய்ய ஸ்தல முஸ்லிம்கள் விரும்பிடின் அவ்வாறு செய்வது வெகு சுலபமானகாரியமேயாகும். ஸ்தலமுஸ்லிம்கள் இதில் ஏகமனதான அபிப்பிராயங் கொள்ளவில்லையானால், முஹர்ரம் பண்டிகை விஷயத்தில் செய்ததுபோல் அந்தந்த மஹல்லாவி லுள்ளவர்கள் தங்கள் மஹல்லாவில் மாத்திரம் இஸ்லாத்துக்கு முரணாக காரியங்கள் நடைபெற விடாமற் காப்பாற்றிக் கொள்ளமுன்வருவார்களாயின், அவ்வுற்சவ முறை கூடிய சீக்கிரத்தில் திருந்திவிடும் என்பதை அறிவித்துக் கொள்கிறோம். இறைவன் இவ்விஷயத்தில் முஸ்லிம்களுக்கு சீரான புத்தியைக் கொடுத்து நேரான பாதையில் நடத்துவானாக. ஆமீன்.

மேனாட்டில் இஸ்லாம் பரவிய வரலாறு

எகிப்து - கெய்ரோ வாலிப முஸ்லிம் சங்கத்தின் அங்கத்தினரான ஜனாப் H. முஹம்மது பஜ்லுர் ரஹ்மான் அன்ஸாரீ அவர்களால் எழுதப்பட்டது

(மேனாட்டில் தற்போது 192,30,000 முஸ்லிம்களிருக்கின்றனர். அமெரிக்கா முதலிய நாடுகளில் 3,55,000 ஜனங்கள் வரை முஸ்லிம்களாக இருக்கின்றனர். இங்கு எவ்வாறு இஸ்லாம் பரவியது? முதல் முதலாக இங்கு இஸ்லாம் மதத்தைப் பரவச்செய்தவர் யார்? எப்பொழுது இஸ்லாம் பரவ ஆரம்பித்தது? என்பவைகளை இவ்வியாசம் விளக்குகிறது. ஆதலின் காதியானி லாகூரி மிர்ஜாயிகள் தாம் முதல்முதலாக இஸ்லாத்தை மேனாட்டில் பரவச் செய்தவர்கள் என்று நமது நாட்டில் பிதற்றப்பட்டு வரும் பொய்க்கூற்றுகளின் அந்தரங்கநோக்கம் இவ்வியாசத்தின் மூலமாக வெளிப்படும் எனநம்புகிறோம். எனவே, ஜனாப் H. முஹம்மது பஜ்லுர் ரஹ்மான் அன்ஸாரீ அவர்களது இவ்வியாசத்தை நன்றியுடன் பிரசுரிக்கிறோம்.-ப-ர்)

முகவுரை

பரிசுத்த நபிமுஹம்மது (ஸல்.) அவர்கள் தாம் கடைசி நபியாகவும், திரு குர்ஆன் இறைவனுலிறக்கப்பட்ட கடைசி வேதமாகவும் இருப்பதால் இஸ்லாம் மதம் மற்றெல்லா மதங்களையும் மாற்றிவிட்டு அவைகளிலுள்ள அசல் முக்கிய மூலக்கொள்கையைத் தன்னுள்ளடக்கிக் கொண்டது. மேலும் இஸ்லாத்தைப்பரவச் செய்வதில் நபிகள்பிரான் (ஸல்.) அவர்களால் உயர்ந்த திட்டமும் ஏற்படுத்தப்பட்டுளது.

மதம் என்ற முறையில் ஏனைய மதங்களையெல்லாம் இஸ்லாம் தோற்கடித்துவிட்டது. இதர மதங்களை மதப்பிரசார முறையில் அது தோற்கடித்து விட்டதால் முஸ்லிம்களுக்கு ராஜீய அதிகாரம் இருந்தகாலத்திலுங்கூட இஸ்லாம் மதத்தின்மீது பிறமதத்தாருக்கு குரோ

தம்இருந்துகொண்டிருந்தது. ஆனால், இஸ்லாத்தைப் பின்பற்றியோர் இவ்விஷயத்தில் இஸ்லாத்துக்கு எவ்வளவு சேவை செய்யவேண்டியதாக இருந்ததோ அவ்வளவையும் அவர்கள் சம்பூரணமாகச் செய்யவில்லை. முஸ்லிம்களுக்கு ராஜிய சமாதான மின்மையும் ராஜீய வீழ்ச்சியும் ஏற்பட்டிருக்கிற சென்ற ஒரு நூற்றாண்டில் அவர்கள் உலகத்துக்குச்செய்து காண்பித்திருக்கிற மதப்பிரசார பக்தியை நான் பாராட்டமுடியாது. இன்னும் அவர்கள் அதிகமாக இவ்விஷயத்தில் செய்திருக்கலாம் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். தற்போது முஸ்லிம் உலகுக்கு அநேக ராஜீயக் குறைகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதிலும், இந்த ராஜீயக் குறைகள் முஸ்லிம்களின் முழுகவனத்தையும் அதிகமாகக் கவர்ந்திருக்கின்றன என்பதிலும் சந்தேகமில்லை. ஆனால், இப்பொழுது முஸ்லிம்கள் தங்களுடைய தற்கால பிரசார வேலைகளை எல்லாம் புதிய முறையில் செய்வார்களாயின் தற்போது அவர்கள் அடைந்திருக்கும் வெற்றிகளைப் பார்க்கினும் பத்துமடங்கு பரிசுத்த வெற்றியைப் பெறுவார்கள். இவ்விஷயத்தைத் தான்நான் இவ்விடத்தில் மிகவும் அழுத்தமாக வற்புறுத்திக் குறிப்பிட விரும்புகிறேன்.

இவ்வியாசத்தைப் படித்தபின் தெளிவாக வேண்டிய மற்றொரு விஷயமும் இங்குளது. சென்ற சில வருஷங்களாக அஹ்மதியர்களில்லாகூர் பார்ட்டியார்களும் காதியானி பார்ட்டியார்களும் தாங்கள் தாம் மேனாட்டில் இஸ்லாமியப்பிரசாரம் எனும் துவஜத்தைத் தாங்கி நிற்பவர்களில் முதன்மையானவர்கள் என்று படாடோபமாகக் கூறி வருவதின் சாயம் வெளுத்துவிடும். இம்மாதிரியாக அவர்கள் கூறிவந்ததில், காதியான் குலாம் அஹ்மதுவின் கூட்டத்தில் முஸ்லிம் வாலிபர்களிற் சிலரைச் சேர்த்துக் கொள்வதைத் தவிர வேறுநோக்கம் கிடையாது. இந்த *குலாம் அஹ்மது காதியானி என்பவர் தமக்கு நபிப்பதவி வந்திருப்பதாகவும், தான் வாக்களிக்கப்பட்ட மஸீஹாயும், மஹ்திபும் முஜத்திதாகவு மிருப்பதாயும் இதர பல பதவிகளையெல்லாம் அடைந்திருந்ததாகவும் தாவாச் செய்தார்.

கலப்பற்ற வெறும் நிழலாக இருந்தாலும் சரியே, தங்கள் வழியில் வருகிறவ்வொன்றையும் கண்மூடித்தனமாகப் பற்றிக்கொள்ள முயலுகின்ற முஸ்லிம் வாலிபர்களை எடுத்துக் கொள்ளுங்கள், அவர்கள் தங்களது சிறந்த இஸ்லாமிய உணர்ச்சியின்மூலம், "அஹ்மதியர்களின் பிரசாரமானது பலவிதத்திலும் பொய்யான விஷயங்களை அடிப்படையாகக் கொண்டது என்பதையும், மேனாட்டில் இஸ்லாமியப் பிரசார துவஜத்தை உயர்த்தியவர்களில் அஹ்மதியர்கள் முதன்மையானவர்களல்லவென்பதையும், முஸ்லிம் உலகத்திலிருந்து வசூலிக்கப்படும் பணம் அஹ்மதியா இயக்கத்தைப் பலப்படுத்துவதற்காகச் செலவிடப்படுகிறதென்பதையும், அஹ்மதியர்கள் இஸ்லாத்துக்கு வேறான தனி இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்பதில் பெருமை கொள்கின்றனர் என்பதையும், அஹ்மதியர்களைப்போல் முஸ்லிம்களிடமிருந்து பணத்தைக் கொள்ளையடிக்காமல் தங்களது சொந்த முயற்சியால் மேனாட்டில் இஸ்லாமியப் பிரசாரம் செய்தவர்களும், இப்பொழுதும் செய்து கொண்டிருப்பவர்களுமான முஸ்லிம்கள் இருக்கிறார்கள்; இவர்களால் இதுவரை எவ்வளவோ காரியம் நடைபெற்றிருக்கின்றன என்பதையும் தெரிந்து கொள்ளட்டும்!

ஆதிகாலத்தில் முஸ்லிம் பிரசாரகர்களிடம், தங்களைப்பற்றி பிரமாதமாக விளம்பரம் செய்துகொள்ளும் குணம் இல்லாமலிருந்தது. ஆனால், அஹ்மதியர்களோவெனில், முஸ்லிம் வாலிபர்களது மனப்பான்மையைக் கவர்ந்து கொள்ளத் தக்கவாறு தங்களைப்பற்றி உண்மையற்ற விஷயங்களைக் கூறியேனும் தங்களை விளம்பரப்படுத்திக் கொள்வதில் முனைந்து நிற்கின்றனர். ஆனால், முஸ்லிம் வாலிபர்கள் மத விவகாரங்களில் அதிகம் நிதானமுள்ளவர்களாக இருந்துகொண்டு நிழல்களைக்கண்டு தங்கள் நிதானத்தை இழந்து விடக்கூடாது. முஸ்லிம் வாலிபர்கள்தாம் இனி உலகத்துக்குத் தலைமைப்பதவி வகிக்க வேண்டிய பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கி

---

* மிர்ஜா குலாம் அஹ்மது காதியானியைப்பற்றியும், அவருடைய போதனையைப் பற்றியும் தெரிந்துகொள்ள விருப்பமுள்ளோருக்கு ஹைதராபாத் உதுமானியா சர்வ கலா சாலையைச் சேர்ந்த புரோபஸர் இல்யாஸ்பர்னீ, எம். எ., எல். எல். பி. எழுதிய "காதியானிமத்ஹப்" என்ற உருது புத்தகத்தை வாங்கிப் படிக்கும்படி சிபார்சு செய்கிறேன். இப்புத்தகம் இங்கிலீஷ், அறபி முதலிய பாஷைகளில் மொழி பெயர்க்கப்பட்டு வருகின்றது.

மூர்கள் என்பதையும், அவர்கள் மத விஷயங்களில் அலக்ஷியமாக இருப்பதை உதறித் தள்ளிவிட்டு மதபக்தி யுள்ளவர்களாக இருக்க வேண்டுமென்பதையும் அவர்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளட்டும்.

மேனாட்டில் நாம் இஸ்லாத்துக்காக எவ்வளவு காரியம் செய்யக் கடமைப்பட்டிருந்தோமோ அவ்வளவு காரியங்களையும் செய்யவில்லை என்பதை நாம் அறிவோம். நமதுவேலையை நாம் செய்யாமல் அசட்டை செய்துவிட்டோம் என்பது இதற்கு காரணமன்று. ஆனல், முக்கியமாகச் சென்ற ஒரு நூற்றாண்டாக நமக்குள் சீர்திருத்தம் செய்து கொள்ளும் வேலையும், ராஜிய விஷயங்களில் நாளுக்கு நாள். நாம் அலக்ஷிக்கப்பட்டுக் கொண்டிருந்ததுமே அதற்குக் காரணமாகும்.

நாம் இந்த வழியில் நமது புத்தியைச் செலுத்திக்கொண்டிருந்தபோது அஹ்மதிய மிர்ஸாயிகள், மிர்ஜா குலாம் அஹ்மதுவின் *தாவாக்களைப் பிரசாரம் செய்வதிலும், இஸ்லாத்துக்கு அவைகள்தாம் பொறுத்தமானவை என்று பிரகடனப்படுத்துவதிலும் அவர்கள் தங்களுடைய முழுமுயற்சியையும் ஈடுபடுத்திக் கொண்டிருந்தனர்.

இப்பொழுது, அஹ்மதியர்கள் தாம் இஸ்லாத்துக்காக முன்னின்று உழைப்பவர்கள் என்று கூறிக்கொள்ளவும், மிர்ஜா குலாம் அஹ்மதுவை விசுவாசங் கொள்ளாத 40- கோடி உலக முஸ்லிம்களையும் குரங்குகளென்றும், நாய்களென்றும், பன்றிகளென்றும், காட்டுப் பன்றிகளென்றும், வியபிசாரப் புதல்வர்களென்றும், மடையர்களென்றும், ஈமானில்லாதவர்களென்று கூறவும்துணிந்து விட்டனர்.

கடைசியாக யான் முஸ்லிம் வாலிபர்களை வேண்டிக்கொள்வதென்னவெனில், இஸ்லாத்தின் செய்திகளை உலகத்திலுள்ள எல்லா பாகங்களிலும் கொண்டுபோய் பிரசாரம் செய்ய வேண்டுமென்பதே. மேலும் அறபி, உருது, துருக்கிமுதலிய முஸ்லிம் பாஷைகளில் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள ஏராளமான இஸ்லாமிய நூல்களின் பெரும் பொக்கிஷங்களிருக்கின்றன வாதவின் இப்பொக்கிஷங்களை மேனாட்டிற்கு அவர்கள் காண்பித்துக் கொடுப்பார்களாயின் மேனாடானது இஸ்லாத்தைத் தழுவி விடும்.

ஆகவே, இந்த வியாசத்தில் இஸ்லாம் மதம் தன்னுடைய வசிய சக்தியினல் மேனாட்டு ஜனங்களை எவ்வாறு ஸ்வீகரித்துக்கொண்டது என்பதை யான் விளக்கியுளேன். ஆகையால், உலகத்திலுள்ள முஸ்லிம்களும் குறிப்பாய் முஸ்லிம் வாலிபர் உலகும் இதனை நன்கு கவனித்துப் பார்த்து கட்டுப்பாடான மதப்பிரசார இயக்கத்தை ஆரம்பிக்கவேண்டும். அது பொது இஸ்லாத்தின் அழைப்புக்கு வெகு சீக்கிரத்தில் உலகம் அடங்கவும் தலைசாய்த்து விடும் என்பது திண்ணம்.

பஜ்லு, R. அன்ஸாரி,
61. ஆப்தாப் ஹோட்டல்,
முஸ்லிம் சர்வகலாசாலை,
அலிகார்.

புதிய முஸ்லிம் உலகம்

ஸையத் ஜமாலுத்தீன் அப்கானீ (றஹ்.) அவர்களுடையவும், அவரைப் பின்பற்றி அவர் காட்டிய வழியில் செல்பவர்களான, ஷிப்லீ, முஹம்மது அப்துஹு ஆகியவர்களைப் போன்றவர்களின் காலத்திலிருந்து, உலகில் இஸ்லாம் பரவிய வரலாற்றைப்பற்றிய சரித்திரத்தில் புதிய அத்தியாயம் ஒன்று ஆரம்பமாகி இருக்கிறது. மேனாட்டில் புத்துணர்ச்சி ஏற்பட்டிருப்பது ஒரு பக்கல் கிடக்க, தற்போது கீழ் நாட்டிலும் இந்த நம்பிக்கையில் புதிய விழிப்பு ஏற்பட்டிருக்கிறது. சென்ற சில காலமாக ஜப்பான், இந்தியா, ஆஸ்டிரேலியா முதலிய நாடுகளிலுள்ள புத்தர், கிறிஸ்துவர், ஹிந்துமதத்தார் ஆகியவர்களிலிருந்து சிறந்த பலரை இஸ்லாம்மதம் தன் பக்கல் ஈர்த்துக் கொண்டிருக்கிறது. ஒரு பெருங் கூட்டத்தினர் இன்று ஜப்பானில் முஸ்லிம்களாய்த் திகழ்ந்து வருகின்றனர். அவர்களிற் சிலர் மிக மேன்மை வாய்ந்தவர்களாகவும், அப்துல்ஹை துருக்கிஸ்தானீ, இயால்பேக் துருக்கிஸ்தானீ போன்றவர்களின் தலைமையின்கீழ் இஸ்லாமியக் கல்வி சம்பந்தமானவும், மார்க்க சம்பந்தமானவும் பிர

---

*மிர்ஜா குலாம் அஹ்மது முஸ்லிம் உலகத்தின் மீது கிறிஸ்துவ ஆதிக்கத்தை ஸ்தாபிதம் செய்யும் விஷயத்திலும், தாம் தற்கால நபியாகவும், (நஅவூதுபில்லாஹ்) இஸ்லாத்தின் மஹ்தீயாகவும் வந்திருப்பதாக தம்முடைய சொந்த வாதத்தைக்கூறியும் அவருடைய காலத்திலிருந்து உலகம் முடியும்வரை முஸ்லிம்கள் ஜிஹாது செய்வதைத் தடுக்கும் வேலையிலுமாக 50-அலமாரிகள் நிறம்பத்தக்க அத்தனை புத்தகங்களையும் விளம்பரங்களையும் பிரசுரம் செய்தார்.

சாரம் செய்பவர்களாகவும், சொந்தப்பத்திரிகை யுள்ளவர்களாகவும் இருந்து வருகின்றனர்.

இந்தியாவிலுள்ள தாழ்த்தப்பட்டவர்களி லும் இதர வகுப்பு ஹிந்துக்களிலிருந்தும் இஸ் லாம் மதத்தைத் தழுவிய ஒரு பெருங் கூட் டத்தினர்களை யல்லாமல் ஹிந்து சமூகத்தின் பிரபலஸ்தர்களான K. L. கௌபா, ரஷீதுத் தீன் என்ற மாற்றுப் பெயருள்ள டாக்டர் ராம தாஸ், இளவரசி ஜாவித்பானு போன்றவர்களும் சமீபகாலத்தில் இஸ்லாத்தைத் தழுவி இருக் கிறார்கள். ஆஸ்டிரேலியாவில் ஏற்கனவே அப் கானிய ஒட்டகக் கூட்டத்தாரால் 17-க்கு அதிகமான மஸ்ஜிதுகள் கட்டப்பட்டிருக்கின் றன. ஆஸ்திரேலியாவின் தலைநகரான மெல் போர்னில் ஒரு சிறந்த மஸ்ஜிது கட்டப்பட்டு வருகிறது. அதனுடைய திறப்புவிழா பிலிப் பைன் தீவுகளைச்சேர்ந்த மேன்மை தங்கிய சுல் தான் அவர்களால் நடப்பித்துவைக்கப்படும். இந்து மகாசமுத்திரத்திலும் பசிபிக் மகாசமுத் திரத்திலுமுள்ள தீவுகளும், மலேயா, சயாம் ஆகிய தேசங்களும், அறபிப் பண்டிதர்களின் செல்வாக்காலும், பிரசித்திபெற்ற இந்திய முஸ் லிம் மதப்பிரசாரகரான மௌலானா மௌலவீ அல்ஹாஜ் அப்துல் அலீம்ஸித்தீகி அவர் களின் மதப்பிரசார வேலைகளினாலும் இஸ்லாத் தின்பால் விழித்துக்கொண்டு புத்துணர்ச்சி பெற்றிருக்கின்றன என்பதற்கு சாக்ஷிகளாக இருக்கின்றன.

நாம் ஐரோப்பா, அமெரிக்காமுதலிய தேசங் களைச் சுற்றிப் பார்ப்போமாயின் அங்கு இஸ் லாத்துக்குச் சாதகமான ஒரு முக்கிய புரட்சி தலைசிறந்து விளங்குவதைக் காண்போம். சரித் திரத்தை யுணர்ந்த ஒவ்வொரு மாணவரும் இஸ்லாம்மதம் ஐரோப்பாவில் முதல்முதலாக மூர் ஜாதியினரின் கொடியின்கீழ் ஸ்பெயின் தேசத்திலும், துருக்கியரால்கிழக்குஐரோப்பா விலும் பிரவேசித்தது என்பதையும், அக்காலத் தில் முஸ்லிம் ஆட்சியின் கீழ்எல்லா தேசங் களிலும் வெற்றிகரமான சமாதானத்தை நில வச்செய்ய இஸ்லாம் தகுதியுள்ளதாக இருந்த தென்பதையும் தெரிந்துகொள்வர். ஆனால் முஸ்லிம் ராஜீய அதிகாரம் வீழ்ச்சி யடைந்த தானது இஸ்லாத்துக்கும் முஸ்லிம்களுக்கும் விரோதமான எதிர்தாக்குக்கு அது உட்பட வேண்டியதாயிற்று. எனவே,ஸ்பெயின் தேசத் தில் முஸ்லிம்கள் எரிக்கப்பட்டும், வெட்டப் பட்டும் போனதுமட்டு மில்லாமல் கிறிஸ் துவ மதத்தைத் தழுவாவிடில் தேசத்தை விட்டுச் சென்றுவிட வேண்டும் என்னும் நிர்ப்பந்தத்துக்குட்படுத்தவும்பட்டனர். ஆனால் கிழக்கு ஐரோப்பாவிலிருந்த முஸ்லிம்கள் இந் தக் கதியைவிட்டுத் தப்பிக்கொண்டதன் பய னாக இன்றும் பால்கன் தீபகல்பத்திலுள்ள தேசங்களிலும், ஆஸ்டிரியாவிலும், ஹங்கேரியா விலும் ஏராளமான முஸ்லிம்கள் பெருகி வரு வதை நாம் காண்கிறோம்.

மத்திய காலத்தில் இஸ்லாத்து விரோதமாக ஏற்பட்ட எதிர்த்தாக்கானது இஸ்லாத்துக்கு தகுதியற்றதும், கொடுமையான தப்பபிப்பிரா யத்தை யுண்டுபண்ணுவதற்குக் காரணமான தாகவும் ஏற்பட்டுவிட்டது. அந்தக்காலத்தில் இஸ்லாத்தைப்பற்றி ஐரோப்பாவில் எழுதப் பட்ட புத்தகங்களை வாசிப்பதுகொண்டு மனம் புண்படுகிறது என்பது உண்மை. இதனால்தான் இஸ்லாத்தைப்பற்றி தவறான முறையில் எடுத் துக் கூறப்பட்டுத் தவறான நடவடிக்கைகளைச் செய்யும்படியான அந்த மூடுபனிக்குள் முஸ் லிம் பிரசாரசபை உண்டாகவில்லை என்று தெரிகிறது. மேலும் இஸ்லாத்துக்கு சரி யான மதிப்புக் கொடுப்பதும் அப்பொழுது அசாத்தியமாகவே இருந்தது. ஆனால், ஜமா லுத்தீன் அப்கானீ, அமீர் அலீ போன்றவர் கள் இச்சேவையிலீடுபட்டு பிரசார அஸ்தி வாரக்கல் நாட்டினர்.

இங்கிலாந்து தேசம் அநேகம் சாக்ஸன் அர சாங்கங்களின் ஆட்சியின்கீழ் சிதறுண்டிருந்த காலத்தில், மெர்சியா (Mercia) சமஸ்தானத் தைத் தங்கநாணயம் ஒன்றின் (இந்த சமஸ் தானம் ஹம்பருக்கும் தேம்ஸ்க்கு மிடையில் இருந்தது) ஒரு பக்கத்தில் ஒபா (King Offa) அரசரின் சிரசு முத்திரையும், மற்றொரு பக் கத்தில் இஸ்லாமிய கலிமாவின் அறபி வாக்கியங் களும் அச்சிட்ப்பட்டிருப்பதை பிரிட்டிஷ் மியூ ஸியத்தில் நாம் காண்கிறோம். மேலும் அல்ஹாஜ் பீட்டர்ஆப் எக்ஸீட்டர் என்பவர்தான் இங்கி லாந்தின் முதல் முஸ்லிம் என்பதை இங்கிலாந் தின் சரித்திரத்திலிருந்து தெரிந்து கொள்கி றோம். இவர் கி. பி. 1678-ல் இஸ்லாம் மதத் தைத்தழுவினர். இஸ்லாத்தைத் தழுவிய அதே வருஷத்தில் ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்றி விட்டு எக்ஸீட்டருக்குத் திரும்ப வந்து தம் முடைய பிரயாண வரலாற்றைப்பற்றிப் புத்தகமும் எழுதி இருக்கிறார்.

19-வது நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஸ்காட் லண்டைச் சேர்ந்த தாமஸ் கெய்த் (Thomas Keith) என்பவர் இஸ்லாத்தைத் தழுவினர். அதாவது, அவர் எகிப்து தேசத்தில் தங்கி இருந்தகாலத்தில் இஸ்லாத்தின் போதனைகளை யுணர்ந்து இஸ்லாத்தில் வந்தார். பின்னர் இவர் கி. பி. 1885-ம் வருஷத்தில் மதீனமா நகரில் கவர்னர்பதவியிலுமிருந்தபோது மேனாட்டு நூல்களைச் சமீபகாலத்தில் துருவி ஆராய்ந்து பார்த்ததிலிருந்து பிரஞ்சு சக்கிர வர்த்தியான நெப்போலியன் போனபார்ட் என்பவர் எகிப்துக்கு வந்திருந்த காலத்தில் இஸ்லாத்தைத் தழுவியதாகவும், அப்பால் அவர் முஸ்லிமாகவே இருந்து மரித்ததாகவும் தெரிய வருகிறது. இன்னும், அவர் இஸ்லாம் மதத்தைத் தழுவியபின் ஜீவித்திருந்த எஞ்சிய காலத்தில், ஐந்து நேரத் தொழுகையையும் தவறுமல் தொழுது கொண்டும், திருகுர்ஆனை ஓதிக்கொண்டு மிருந்திருக்கிறார்.

ஸ்விட்ஜர்லாந்து தேசத்தைச் சேர்ந்த சஞ்சாரியும், நூலாசிரியருமான ஜான் லூவிஸ் பர்க்கார்ட் (John Leuis Burckhadt) என்பவர் இஸ்லாத்தைப்பற்றி ஆராய்வதற்காக இஸ்லாமிய தேசங்களிலும் முஸ்லிம்களின் மத்தியிலும் சஞ்சாரம்செய்து கி.பி. 1814-ல் இஸ்லாம் மதத்தைத் தழுவினர். இவருக்கு இப்ராஹீம் என்று பெயர் வைக்கப்பட்டது. இவர் கி. பி. 1784-ல் பிறந்து 1817-ல் மரணமடைந்தார். இன்னும் அதே 1814-ல் ஹஜ்ஜுக் கடமையையும் நிறைவேற்றி இருக்கிறார். அவர் இறந்து போகும் தருவாயில் தம்மை முஸ்லிம்களை அடக்குவதுபோலவே அடக்கம்செய்யவேண்டுமென்று தம்முடனிருந்த கிறிஸ்துவ நண்பர்களை அவர் வேண்டிக் கொண்டார். ஆகவே, அவரது ஜனஸா முஸ்லிம்களிடம் ஒப்புவிக்கப்பட்டு இஸ்லாமியச் சட்டப்படி அவர் நல்லடக்கம் செய்யப்பட்டார்.

19-வது நூற்றாண்டின் பிற்பகுதியில் அமெரிக்க மிஷன் மத போதகரான செவரென்ட் நார்மன் என்பவர் கிறிஸ்துவ மதத்தை பிரசாரம் செய்வதற்காக துருக்கிக்குச் சென்றதாகவும், அங்கு அவர் 1875-ம்வருஷத்தில் இஸ்லாத்தைத் தழுவியதாகவும், பின்னர் முஸ்லிம் மதபோதகர்என்ற முறையில் அவர் அமெரிக்காவுக்குத் திரும்பியதாகவும், ஆனல் அங்கு அவரது ஊழியங்கள் ஸ்திரமானதாக இல்லை என்றும் சரித்திரங்களில் காண்கின்றோம்.

முஸ்லிம் மகா பண்டிதர்களான அமீர்அலீ, மௌலானு சிராக்அலீ போன்றவர்கள் எழுதிய புத்தகங்கள் வாயிலாக 19-வது நூற்றாண்டின் இறுதியில்தான் இஸ்லாம் மதம், மிஷனரி மதம் என்ற முறையில் ஐரோப்பாவில் பிரவேசித்ததாகத்தெரிகிறது. இம்மகாபண்டிதர்களின்பேனு முனையின் வன்மையானது இஸ்லாத்தைப்பற்றி ஆழ்ந்து யோசிக்கும்படி மேனாட்டு ஜனங்களைச் செய்துவிட்டது.

பிரிட்டிஷ் பார்லிமெண்ட் பிரபுக்கள் சபை அங்கத்தினரான லார்டு ஸ்டான்லீ ஆப் ஆல்டர்லீ என்னும் ஆங்கிலேயர் துருக்கியில் ராஜதூதராக இருந்த சமயம் 1875-ம் வருஷத்தில் இஸ்லாத்தைத் தழுவிக்கொண்டு தனக்கு அப்துர் ரஹ்மான் என்னும் இஸ்லாமிய நாமமும் சூட்டிக்கொண்டார். இவர் 1903-ம் வருஷம் நவம்பர் மாதம் மரணமாகி, லண்டனிலுள்ள துருக்கி ஸ்தானிகரின் இமாமினல் ஜனஸா தொழுகை நிறைவேற்றி வைக்கப்பட்டு இஸ்லாமியச்சட்டப்படி அடக்கம் செய்யப்பட்டார். சிறந்த பத்திராதிபர் என்று பெயர் வாங்கிய அலக்ஜாண்டர் வெப் என்பவர் பிலிப்பைன் தீவில் அமெரிக்க ஐக்கிய நாட்டின் கான்ஸல் ஜெனரலாக உத்தியோகம் பார்த்துக் கொண்டிருந்தகாலை இவர் பிலிப்பைன் தீவுகளிலுள்ள மோரோஸ் எனும் ஜாதி முஸ்லிம்களினல் இஸ்லாம் மதத்தின் சிறந்த கொள்கைகளையுணர்ந்து கி. பி. 1877-ல் இஸ்லாம் மதத்தைத் தழுவினர். இவருக்கு முஹம்மது என்று பெயர் வைக்கப்பட்டது. இவர் அதே வருஷத்தில் தமது உத்தியோகத்தை ராஜிநாமாச் செய்துவிட்டு முஸ்லிம் பிரசாரகர் என்ற முறையில் இந்தியா மார்க்கமாக அமெரிக்காவுக்குச் சென்றார். அதுபொழுது கீழ்நாட்டிலுள்ள முஸ்லிம்கள் அவருக்கு உதவிபளித்தனர். இவர் இஸ்லாம் மதப் பிரசார வேலையைத் திறமையாகச்செய்துவந்ததுடன் இஸ்லாம் மதத்தைப்பற்றிச் சில புத்தகங்களையும் எழுதியுள்ளார். அவைகளில் "அமெரிக்காவில் இஸ்லாம்" என்ற புத்தகமும் ஒன்றாகும். அதில் இஸ்லாமியக்கொள்கைதான் பகுத்தறிவுக்கும் தத்துவத்திற்கும் பொருத்தமுடையது என்பதை நன்குவிளக்கிக் காட்டியுள்ளார். "தி முஸ்லிம் ஒர்ல்டு ("The Muslim World") என்னும் ஒரு மாதாந்த சஞ்சிகையையும் பிரசுரித்து வந்தார். இப்பொழுது இந்தப் பெயர் டாக்டர் ஜ்வீமர் என்பவரால் இஸ்லாத்துக்கு விரோத

மாக செய்யப்பட்டு வரும் எதிர்பிரசாரத் துக்கு எடுத்துக் கொள்ளப் பட்டுளது. அலக்ஜாண்டர் மகாயுத்த காலத்தில், இஸ் லாம் மதத்தைத் தழுவிய சொற்பளவு உள்ள ஜனங்களையும், இஸ்லாம் மதத்தின்பால் அபி மானம் கொண்ட ஒரு பெருந்தொகையான ஜனங்களையும் விட்டு மரணமடைந்தார். இந் தக் காலத்தில் இஸ்லாத்தைத் தழுவியவர்களில் ஹாலேவரைச்சேர்ந்த மிஸ்டர் ஸ்சுமன் (Mr. Schuman) என்பவரின் பெயரையும் குறிப்பிடாமல் விட்டுவிடுவதற்கில்லை. இவர் கான்ஸ்தந்திநோபிளிலுள்ள ஷெய்குல் இஸ் லாம் அவர்களுக்கெழுதியக் கடிதத்தின் மூலம் இஸ்லாம் மதத்தைத் தழுவினர்.

மேனட்டில் இஸ்லாம் மதம் பரவிய சரித்திர வரலாற்றில் லிவர்ப்பூலிலுள்ள சட்ட அறிஞ ரான மிஸ்டர் W. H. கொய்லம் என்பவர் இஸ்லாம் மதத்தைத் தழுவிய முக்கிய சம்பவ மும் ஒன்றாகும். இவர் 1886-ம் வருஷத்தில் மொரோக்கோ (மகரிபுதேசம்) வுக்கு விஜயம் செய்யும்படி நேர்ந்தது. அதுபொழுது அங்கு ஒரு அறபி இமாமுடன் செய்த சம்பாஷணை யின் மூலமாக இவர் இஸ்லாத்தின்பால் இழுக் கப்பட்டார். பின்னர் இவர் இங்கிலாந்துக்குத் திரும்பவந்தபோது முஸ்லிம் மதப்பிரசாரகர் என்ற முறையில் லிவர்பூலில் தங்கினர். இவர் தருக்கிக்கு விஜயம் செய்தபோது மிதமான பொருளுதவியும்கிடைத்து, இவரால் ஆரம்பிக் கப்பட்டஇப்பிரசார வேலை அதிகமாகப் போற் றப்பட்டது. இவரால் 1894-ம்வருஷத்தில் 200 கௌ முஸ்லிம்களைக் கொண்ட ஒரு சகோதரத் துவப்பான்மை ஏற்படுத்தப்பட்டது என்ப தாக ஹாஜீ சுலைமான் மேமன் என்பவரின் "பிரயாணங்கள்" ("Travels") என்ற புத்த கத்திலிருந்து தெரியவருகிறது. இவர்களிற் சிலர் இங்கிலாந்தில் மேதாவிகள் என்று பெயர் வாங்கியவர்கள். மிஸ்டர் கொய்லமுக்கு இப் பொழுது ஷெய்குல் இஸ்லாம் அப்துல்லா கொய்லம் பே என்ற பெயர் வந்தது. இவர் லிவர்ப்பூலில் ஒரு முஸ்லிம் கல்வி ஸ்தாபனத் தையும், மஸ்ஜிதையும் ஏற்படுத்தினர். இஸ் லாம் மதப்பிரசாரவேலையைச் செய்வதற்காக "The Cresent" என்ற ஒரு வாரப் பத்திரி கையும், "The Islamic World" என்ற மாதப் பத்திரிகையும் ஆரம்பிக்கப்பட்டன.

இவருடைய பிரசாரத்தினால் ஆரம்பமாகஇஸ் லாம் மதத்தைத் தழுவியவர்களில் புரொப்ஸர் யஹ்யா அன்னலர் ஜான் பர்கின்ஸன், எப். ஜி எஸ் என்பவரும் ஒருவராகும். இவர் கியாதி பெற்றவர், தத்துவ சாஸ்திரி, வித்துவான், பின்வரும் விஷயங்களை முற்கூட்டியே சொல் லும் திறமையுள்ளவர். இவர் இஸ்லாம் மதத் தைத் தழுவியபின் தன்னுடைய முழுமுயற்சி யையும், சிரத்தையையும் இஸ்லாத்திற்கு அற் பணம் செய்துவிட்டார். இவர் இஸ்லாம் மதத் தைப்பற்றிப் பொதுவாகவும், இஸ்லாமிய தத்து வத்தைப்பற்றி முக்கியமாகவும் அநேகப் புத்த கங்களையும் வியாசங்களையும் எழுதியுள்ளார். இன்னும், இஸ்லாத்தின் ஷாஹ்நாமா என்னும் பெயருள்ள ஒருபுத்தகத்தையும்எழுதியுள்ளார். முஸ்லிம் வீரர்களின் கதைகள், ("The Tales of Muslim Chivalry" இஸ்லாத்தின் புதல் வர்கள்) ("Sons of Islam") என்ற புத்தகங் களும் இவைகளைச் சேர்ந்தவைகளேயாகும்.

ஆனல் இவர் எழுதிய சில நூற்கள் இன்ன மும் பிரசுரிக்கப்படாமலிருப்பது நமது துரதிர் ஷடமாகும். இவருக்கு இஸ்லாத்தின்பாலுள்ள இடையறு பக்தியுடன் இவரது வித்வத் திற மையும் சேர்ந்து கொண்டதானது இவரை முஸ்லிம் வீரத்துவத்தைப்பற்றிய காவியம் எழுதும்படிச் செய்தது. இது இஸ்லாமிய நூல் களில் விலைமதிக்க முடியாத ஒரு நீதியாக இருந்துவருகிறது. மிஸ்டர் பார்கின்ஸன் தம் மிடம் பேசவரும் ஒவ்வொருவரையும் சுலப மாகத் தம் வசப்படுத்திக் கொள்ளும் சக்திபெற் றிருந்தார். இவர் கீழ்நாட்டுக்கு வந்தபோது அவரைச் சந்தித்துப் பேசிய எல்லா முஸ்லிம் களுடைய இருதயங்களும் அவர்பால் மரியாதை யும்பக்தியும் கொண்டன. இஸ்லாத்தின்பால் பூரண பக்தியுள்ள வாழ்க்கையை அவர் நடத்தி விட்டு, ஒரு பெருந் திரளான ஜனங்களை பரதவிக்க விட்டுவிட்டுச் சென்ற 1921-ம் வரு ஷத்தில் 'தாருல்பகா' அடைந்தார்.

இனி கொய்லம் என்பவரைப்பற்றி மீண்டும் கவனிப்போம். அவர் இரண்டு இஸ்லாமியப் பத் திரிகைகளை வெளியிட்டதல்லாமல் அநேக இஸ் லாமிய கிரந்தங்களையும் எழுதியுள்ளார். இது வல்லாமலும் 19-வது நூற்றாண்டின் கடைசி பத்து வருஷ காலத்தில் அவர் இரண்டு புத்த கங்களையும் எழுதி வெளியிட்டுள்ளார். "இஸ் லாத்தின் கொள்கை" என்பது ஒரு புத்தகத் தின் பெயர். "மத பக்தியும், மத பக்தி கொண் டவனும்" என்பது மற்றொரு புத்தகத்தின் பெயர்.

கொய்லம் தத்வ சாஸ்திரியாக மட்டுமில்லாமல் விஞ்ஞான சாஸ்திரியாகவும், சப்த சாஸ்த்திரங்களை அறிந்தவராகவுமிருந்தார். இந்தக் காரணத்தால் அவர் பல விஞ்ஞான சாஸ்திரப் பத்திரிகைகளின் ஆசிரியர் என்ற முறையிலும் ஊழியம் செய்திருக்கிறார். 20 -வது நூற்றாண்டின் முதல் பத்து வருஷ காலத்தில் அவர் கொஞ்சம் வித்தியாசமான உடையில் காணப்பட்டாராயினும் பிறகும் இஸ்லாம் மதப் பிரசாரகராகவே இருந்தார். அத்துடன் அவர் லௌகீகக் கல்வியிலும் தேர்ந்தவராக இருந்தால் 1908-ம் வருஷம் முதல் அவரது மரண பரியந்தம் டாக்டர் ஹாரூன் முஸ்தபாலியான், எம்.ஏ., பிஎச். டீ,டீ.லிட்.ஈ., எஸ்ஸீ.டீ., எல்எல் டீ, எப். எஸ். பீ. என்னும் பட்டங்களுடன் விளங்கினர். ஆகவே இவர் முஸ்லிம் மதப்பிரசார ஏற்பாட்டுக்கு முக்கிய தலைவராக இருந்தாராயினும் லௌகீகக் கல்வியை முதன்மையாகவும், மதப்பிரசார இயக்கத்தை இரண்டாவதாகவும் கவனித்து வந்தார். அது காலை ஆனரபில் ஸையத் அமீர் அலீ, டாக்டர் காலித் ஷெல்டிரேக் போன்ற திறமையான மனிதர் இவ்வூழியத்தில் முனைந்து நின்று ஈடுபட்டிருந்ததால் 1932-ல் அவர்மரணமடையும்வரை ஒரு நிமிஷ நேரம்கூட மதப்பிரசார அலுவலகளிலிருந்து கண்ணை நீக்கிக்கொள்ளவே இல்லை. அவர் கடைசி மூச்சை விடும் பரியந்தம் "இஸ்லாமிக் ரிவியு" என்ற பத்திரிகையினுடையவும் இதர முஸ்லிம் பத்திரிகைகளினுடையவும் பக்கங்களில் மதசம்பந்தமான அவருடைய வியாசங்கள் அலங்கரித்துக்கொண்டிருந்தன. இன்னும் அவருடைய நா, எப்பொழுதும் இஸ்லாம் மதப்பிரசார வேலையைப் பற்றியே பேசுவதாக இருந்தது. இவருடைய ஜீவியகாலத்தில்தான் புரொப்ஸர் நூருத்தீன் ஸ்டெபன் என்ற பிரசித்தி பெற்றவர் இஸ்லாம் மதத்தைத் தழுவினர். இவர் தமக்குப் பின் இஸ்லாம் மதப்பிரசார வேலையில் ஒரு பெரிய சிறந்த ரிக்கார்டை ஏற்படுத்திவிட்டு மரித்தார்.

இஸ்லாம்மதத்தைப் பிரசாரம் செய்யும்ஆங்கிலேயர்களில் அப்துல்லா கொய்லம்என்பவருக்கு அடுத்தபடியாக டாக்டர் காலித் ஷெல்டிரேக் என்பவரின் பெயர் வருகிறது. இவர் இஸ்லாம் மதத்தைச்சுயமே படித்து 1903-ம் வருஷத்தில் இஸ்லாம் மதத்தை சுயமே தழுவினர். அக்காலத்தில் லண்டனில் வாசித்துக் கொண்டிருந்தவரும், சமீபகாலத்தில் கல்கத்தாவில் மரணமடைந்தவருமான டாக்டர் ஸர் அப்துல்லாஸுஹ்ரவர்தீ, எம். எல். ஏ. வுடன் இவர் சேர்ந்து இங்கிலாந்திலும் பிரான்சிலும் இஸ்லாம் மதப்பிரசார வேலையை ஆரம்பித்து அநேக ஜனங்களை இஸ்லாம் மதத்தில் சேர்த்தார். அவர்களில் மேஜர் ஜெனரல் ஜே. பி.பி. என்பவர் மிகப்பிரக்யாதிபெற்றவராகும். முஹம்மது டிக்ஸன் என்பவர் 1905-ம் வருஷத்தில் இஸ்லாத்தைத் தழுவினர். இவர்களையல்லாமல் டாக்டர் காலித் ஷெல்டிரேக்கின் முயற்சியால் இஸ்லாம் மதத்தைத் தழுவியவர்களில் வலீத் பின் ஸ்டட் (1904), அஹ்மது பிரௌனிங் (1905), உமர் பிலட் (1906), உமர் ரிச்சார்ட்ஸன் (1915), ருஷ்ய ஜெனரலான பாரன் ஹௌவன் (1920), எல். ஜே. முஹம்மது ஹில் (1920), நியூயார்க்கைச் சேர்ந்த ரெவரெண்ட் ஜே. மேனர்டு (1925), பிலால் ஆண்டிரூஸ் (1926), ராயல் ஆகாய விமானப் படையைச் சேர்ந்த வலீத் டைஸான் (1927), ஹெச் ஹைனஸ் பிரின்சஸ் டயாங் மூடா ஆப் சாரவாக் கைருன்னிஸா கிலேடிஸ் பால்மர் (1932), காலித் கன்ரூட் சிம்ஸன் (1932), ஜாவா பென்டியிங் இஞ்ஜினீரிங் காலேஜ் புரோப்ஸர் ஸி. பி. டபிள்யு. ஷுமேக்கர் (1934), ஆகியவர்களும் முக்கியஸ்தர்களாவார்கள்.

டாக்டர் காலித் ஷெல்டிரேக் திறமை வாய்ந்த பத்திராதிபராவர். இவர் முஸ்லிம் பத்திரிகைகளில் ஏராளமான வியாசங்கள் எழுதி வெளியிட்டிருக்கிறார். இவர் கொஞ்ச காலத்துக்கு முன் லண்டனில் 'மினரத்' எனற பெயரால் ஒருபத்திரிகையை ஆரம்பித்தார். ஆனல், பண நெருக்கடியினல் பின்னர் அது நிறுத்தப்பட்டுவிட்டது. இவர் கீழ்நாடுகளில் பிரயாணஞ் செய்துகொண்டு தற்போது இந்தியாவில் இருக்கிறார். இவருக்கு லண்டனில் ஒரு மதப்பிரசார சபை இருக்கிறது. அதற்கு "தி வெஸ்டர்ன் இஸ்லாமிக் அஸ்ஸோஸியேஷன்" என்று பெயர். இச்சபைக்கு இவர் தலைவராகவுமிருக்கிறார். முஸ்லிம் பிரமுகர்களிற் பலர் இச்சபைக்குப் போஷகர்களாகவுமிருக்கிறார்கள்,

இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஜெர்மனியும் இரண்டு முஸ்லிம் பிரசாரகர்களை வரவேற்றுக்கொண்டது. இவ்விருவரும் உடன் பிறந்த இரு சகோதரர்களாவார்கள். இவர்கள் அலிகார் எம். ஏ. ஓ. காலேஜில் மாணவர்களாக

இருந்து தங்களது மேல்படிப்புக்காக ஜெர்மனி சென்றவர்களாகும். இவர்களில் ஒருவரது பெயர் புரொப்ஸர் அப்துஸ்ஸத்தார் கைரீ என்பதாகும். மற்றொருவர் பெயர் டாக்டர் அப்துல் ஜப்பார் கைரீ என்பதாகும். இவ்விரு மாணவர்களும் இஸ்லாத்தின் பால் அதிக சிரத்தையுள்ள முஸ்லிம் மதப்பிரசாரகர்களாக இருந்தனராதலில் வேறு பல தேசங்களிலிருந்து ஜெர்மனியில் கல்வி பயிலுவதற்காக வந்துள்ள இதர முஸ்லிம் மாணவர்களின் ஒத்துழைப்பின்பேரில் ஜெர்மன் தலைநகரான பெர்லினில் ஒரு மதப் பிரசார சபையை ஏற்படுத்தினர். அதற்கு Organisationsstatut-der Islamischen Germeindu Zu Berlin என்று பெயர். இவர்கள் தாம் ஜெர்மனியில் இஸ்லாம் மதப்பிரசாரம் செய்த முதல் மனிதர்களாவார்கள். எனவே, இன்னேர் ஜெர்மனி, ஸ்வீடன், டென்மார்க், ஹாலண்டு, ஆஸ்டிரியா, ஸ்வீட்ஜர்லாண்டு, இங்கிலாந்து பிரான்சு, போலண்டு ஆகிய தேசங்களில் 400-க்கு அதிகமானவர்களை இஸ்லாம் மதத்தில் சேர்த்தனர். டாக்டர்காலித்பான்னிங், அல்ஹாஜ் ஸயித்க்ராமேர் (ஜெர்மனியர்,) ஹெர் முஹம்மது ஆஜாத்லியோ போல்டவிஸ் (ஆஸ்டிரியர்,) டாக்டர் ஸயித் பெலிக்ஸ் வலீ, (இவர் ஹங்கேரியில் பிரசித்திபெற்ற பப்ளிஸரும் ராஜதந்திரியுமாவார்), ஜீ. அலீ (டென்மார்க்) முதலியவர்கள் மேற்கண்ட இரு சகோதரர்களால் இஸ்லாம் மதத்தைத் தழுவியவர்களில் பிரசித்தி பெற்றவர்களாவார்கள். அவர்கள் தற்போது ஜெர்மனியில் இல்லையாயினும் அவர்கள் ஏற்படுத்திய இஸ்லாமியசொஸைட்டி இன்னமும் தக்க சேவை புரிந்துவருகிறது. டாக்டர் வாலில் அர்ஸலான், ஷாபிஜ் மன்ஸூருத்தீன் அஹ்மது முதலியவர்கள் இச்சொஸைட்டிக்குத் தற்போது பிரதானமானவர்களாக இருந்து வருகிறார்கள்.

அஹ்மதியா இயக்கத்தில் சேர்ந்திருந்த காஜாகமாலுத்தின் என்பவர் சுத்தமான கலப்பற்ற இஸ்லாமிய (சுன்னத்ஜாஅத்து) கொள்கைகளைப் பிரசாரம் செய்வதாகக் கூறிக்கொண்டு 1912-ம் வருஷத்தில் இங்கிலாந்து சென்றகாலை, காலஞ்சென்ற போப்பால் பேகம்சாகிபா அவர்களின் தனசகாயத்தால் லண்டனுக்குப் பக்கத்திலுள்ள வோக்கிங் என்ற இடத்தில் டாக்டர் லெய்ட்னர் என்பவரால் கட்டப்பட்ட மஸ்ஜிதின் பொறுப்பையும் ஒப்புக்கொண்டார். அதுபோழுது "இஸ்லாமிக்ரிவ்யு" என்ற மாதப்பத்திரிகை ஒன்றை இவர் ஆரம்பித்தார்.

இங்கிலாந்தில் இஸ்லாத்துக்காக ஒரு பெரிய காரியம் கூடிய சீக்கிரம் நடைபெறப்போகிறது. அதாவது, டக்கான் ஹைதராபாத் நவ்வாப் ஹிஸ் எக்ஸால்டட் ஹைனஸ் அவர்களால் நிஜாமியா மஸ்ஜித் என்ற பெயரால் லண்டனில் புதிதாக ஒரு பெரிய மஸ்ஜிதுகட்ட ஏற்பாடாகி இருக்கிறது.

மகாயுத்தம் முடிவடைந்தவுடன் மிர்ஜா குலாம் அஹ்மது காதியானியைப் பின்பற்றிய லாகூர் பார்ட்டியாரால் அங்கு ஒரு பிரசாரசபை ஆரம்பிக்கப்பட்டது. கொஞ்சகாலத்திற்கு முன்னர் பெர்லினில் ஒரு மஸ்ஜிது கட்டுவதற்காகவும், அங்கு முஸ்லிம் சங்கமொன்று ஏற்படுத்துவதற்காகவும் முஸ்லிம் தேசங்கள் பலவற்றிலிருந்து பணந்திரட்டப்பட்டதானது அஹமதியர்களின் சதியோசனையால் அவர்களது பிரசாரசபையின் கையில்வந்து சிக்கிக் கொண்டது. பின்னர் அந்தப்பணம் துர் உபயோகப்படுத்தப்பட்டது என்பதை வருத்தத்துடன் குறிப்பிடுகிறோம். தக்க சமயத்தில் முஸ்லிம்கள் அதைக் கவனித்திருந்தால் துர்வினியோகத்திலிருந்து காப்பாற்றி இருக்கலாம்.

மொரோக்கோ, அல்ஜீரியா, டூனிஸ் ஆகிய தேசங்களிலிருந்து கல்வி பயிலுவதற்காக பிரான்சுக்குச் சென்ற முஸ்லிம் மாணவர்களுள் ஒரு பெருத்த தொகையினரை இஸ்லாத்தில் சேர்த்தனர். அத்துடன் பாரிஸ் நகரில் அழகிய மஸ்ஜிது ஒன்றும் கட்டப்பட்டது. பிரின்சஸ் கைருன்னிஸா கிலேடிஸ் பால்மர் என்ற சாரவாக் இளவரசியும் இஸ்லாம் மதப் பிரசார வேலையைப் பாரிஸ் நகரில் செய்துவருகிறார். சமீபகாலத்துக்குள் அவ்வனிதை "இன்பர்மேஷன்ஸ் முஸ்லிம்மானஸ்" என்ற பெயரால் ஒருபத்திரிகையையும் ஆரம்பித்து நடத்தி வருகிறார்.

போலண்டினும், லித்துவானியாவிலும்உள்ள முஸ்லிம் சமூகத்தினர், போலண்டு கிராண்டு முப்தி டாக்டர் ஷின்கிவிட்க், ருஷியாவிலிருந்து அத்தேசத்தில் குடியேறிய இயால்பேக் இஸ்ஹாக்கீ ஆகியவர்களின் முயற்சியால் புத்துயிர் பெற்றிருக்கிறார்கள். இவர் "மில்லியால்" என்ற ஒரு பிரபல பத்திரிகையையும் ஆரம்பித்தார். தற்போது இது ஜப்பானி

லிருந்து பிரசுரம் செய்யப்படுகிறது. எனவே தேசத்தில் இஸ்லாத்துக்காக இப்பத்திரிகை உழைத்துவருகிறது.

சென்ற 1932-ம் வருஷம் பிப்ரவரி மாதத்தில் ஸ்பெயின் தேசத்திலுள்ள கிரானடா என்ற பூர்வீக முஸ்லிம் நகரில் அராபியக் கல்வி ஸ்தாபனம் ஒன்று ஸ்பானியக் குடியரசால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. முஸ்லிம் உலகத்துடன் சிநேகப்பான்மை ஏற்படுத்திக்கொள்வதும், முஸ்லிம்களின் ஆட்சி காலத்தில் ஸ்பெயின் தேசத்துக்கு உலகில் இருந்த சரித்திரப் பூர்வமான உயர்ந்த அந்தஸ்துக்களை மறுபடி உயிர்ப்பிப்பதும் இந்த அரபிஸ்தாபனத்தின் நோக்கமாகும். கார்டோவாவில் கட்டப்பட்டுள்ளபிரசித்திபெற்ற மஸ்ஜிதை ஸ்பானியர்கள் மாதா கோவிலாக ஆக்கி இருந்தனர். இப்போழுது அது காலிசெய்யப்பட்டு முஸ்லிம்களிடம் ஒப்புவிக்கப்பட்டுள்ளது. இது காலஅது ஸ்பெயினில் தங்கியுள்ள சில அறபி மாணவர்களின் கையில் இருந்து வருகிறது. திமிஷ்கிலுள்ள ஸ்பானிய ராஜதூதர்இஸ்லாம் மதத்தைத் தழுவியதானது இஸ்லாத்துக்கு ஒரு பெரிய சக்தியைக் கொடுத்துள்ளது.

காலஞ்சென்ற முஹம்மது வெப் என்பவரால் வட அமெரிக்காவில் உண்டாக்கப்பட்ட இஸ்லாமிய இயக்கமானது லின்காலின் ஜி. கிலிக் என்பவருடையவும், ஹார்ஃ. ஹீன்கெல் என்பவருடையவும் சிறந்த முயற்சியால் மறுபடியும் உயிர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. இஸ்லாமிய சமூகச் சபை ஒன்று நியூயார்க் நகரில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இது லண்டனில் டாக்டர் காலித் ஷெல்டிரேக் அவர்களைத் தலைமையாகக் கொண்ட வெஸ்டர்ன் இஸ்லாமிக் அஸ்ஸோஸியேஷனுடன் சம்பந்தப்பட்டது. இந்தச் சபை, மஸ்ஜிதாக உபயோகிப்பதற்காக நியூயார்க்கில் 24 ஆயிரம் டாலருக்கு ஒரு கட்டிடத்தை விலைக்கு வாங்கி இருக்கிறது. அமெரிக்க ஐக்கிய நாட்டில் வசித்து வருகிற கீழ் நாட்டுமுஸ்லிம்களுடையவும், அமெரிக்க நௌ முஸ்லிம்களினுடையவும் கூட்டுறவின் பேரில் அமெரிக்காவில் மதப்பிரசார வேலை நன்கு செய்யப்பட்டுவருகிறது. அறபி முதலிய பாஷைகளில் பல முக்கிய பட்டணங்களிலிருந்து பல பத்திரிகைகளும் இத்தேசத்தில் பிரசுரிக்கப்படுகின்றன.

தென் அமெரிக்காவில் இஸ்லாமிய இயக்கம் ஆச்சரியகரமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது. சிலகாலத்திற்கு முன் சிரியா, துருக்கி ஆகிய தேசங்களிலுள்ள வியாபாரிகள் பிரேஜிலிலும், அர்ஜன்டைனிலும் குடியேறினராதலின் இவர்களது பிரசாரவேலையானது இஸ்லாம் மதப்பிரசார சரித்திரத்தில் தனக்குள்ள முக்கிய ஸ்தலத்தைத் தேடிக்கொண்டது. அறபியர்களாலும் ஆப்பிரிக்க வியாபாரிகளாலும் ஆப்பிரிக்காக் கண்டத்தில் இஸ்லாத்தைப் பரவச்செய்த உதாரணத்தைப் பார்க்கினும் இது மிகவும் ஆச்சரியகரமானதாகஇருக்கிறது. தென் அமெரிக்காவுக்குச் சென்றஇவ்வியாபாரிகள் மிகவும் வெற்றிகரமான மதப்பிரசார்கர்களாகவு மிருக்கிறார்கள். இவர்கள் மிகவும் குறுகிய காலத்துக்குள் ஒரு லக்ஷத்துக்கதிகமான ஜனங்களை இஸ்லாத்தில் சேரும்படிச் செய்துவிட்டனர். தென் அமெரிக்காவிலுள்ள முஸ்லிம் சமூகத்தார் தற்போது முக்கியமாக பிரேஜில், அர்ஜன்டைன், பிரஞ்சு பிரிட்டிஷ் டச்சு கயானாக்களில் வசித்து வருகிறார்கள். அன்றியும் அக்கண்டத்திலுள்ள அதிக செல்வாக்குள்ள சமூகத்தாருள் ஒருவராகவுமிருக்கிறார்கள். மார்க்க விஷயத்திலும், ராஜீய விஷயத்திலும், சமுதாய விஷயத்திலும், பொருளாதார விஷயத்திலும், கல்வி விஷயத்திலும் முஸ்லிம் சமூகத்தாருக்கு இங்கு நிலையான ஒரு அந்தஸ்து மிருந்துவருகிறது. "அல் இக்கார்" என்ற பத்திரிகையின் கீர்த்திபெற்ற ஆசிரியரான டாக்டர் ஸயீத அபூ கம்ரா இங்குள்ள செல்வாக்கு வாய்ந்த தலைவர்களில் ஒருவராவார். இக் கண்டம் முழுவதிலும் நல்ல வேலைப்பாடுகளுள்ள அநேகம் மஸ்ஜிதுகள் கட்டப்பட்டிருக்கின்றன. ரையோ டீ ஜானீரா விலுள்ள மஸ்ஜிதுதான் இதில் மிகவும் சிறந்த வேலைப்பாடுள்ளதாகும். தவிரவும் தென் அமெரிக்காவில் அநேகம் இஸ்லாமியப் பத்திரிகைகளும் பிரசுரமாகின்றன. பிரேஜிலுள்ள பிரசித்திபெற்ற பத்திரிகைகள் வருமாறு:— (1) "அல் இக்கார்" வாரம் இருமுறை. (2) "அல் அத்து" தினசரி, (3) "டெய்லி அமெரிக்கா" தினசரி. (4) "அல்ஹதீது" வாரம் ஒருமுறை. (5) "அல்பரீத்" வாரம் ஒருமுறை "பத்யாலெனன்" வாரம் இருமுறை.

ஐரோப்பாவிலுள்ள சில முஸ்லிம் பெரியார்களைப்பற்றி நாம் இதுவரை இங்கு குறிப்பிடவில்லையாயினும், அவர்களில் இரண்டொருவரைப்பற்றி குறிப்பிடாதிருக்கமுடியவில்லை. முஹம்மது மர்மாடியூக் பிக்தால் என்பவர்

முஸ்லிம் மதபக்தரும் கீழ்நாட்டுப் பாஷை வல்லுனரும் உலகக் கீர்த்திபெற்றவர்களுள் ஒருவருமாவர். இவர் தமது வாலிபப் பருவத்தைப் பாலஸ்தீனத்தில் கழித்துக்கொண்டு அங்கிருக்கும்போது இஸ்லாத்தின் வசியசக்தியால் மயக்கப்பட்டு இங்கிலாந்துக்குத் திரும்பினர். அங்கு இவர் ஒரு பெரும் நாவலாசிரியர் என்று பெயர் வாங்கியபின் இஸ்லாமிய தேசங்களில் மற்றொரு சுற்றுப்பிரயாணம் செய்துவருவதற்கிடையே 1921-ம் வருஷத்தில் எகிப்து தேசத்தில் இஸ்லாத்தைத் தழுவினர். இவர் அஹ்மதீ பிரசாரகர்களுடைய செல்வாக்கினாலோ அல்லது அஹ்மதி இயக்கத்தாலோ இஸ்லாத்தைத் தழுவினர் என்று கூறுவது சுத்தத்தவறு. இவ்வியக்கத்தின் மூலமாகவோ, அல்லது இவ்வியக்கப்பிரசாரகர் மூலமாகவோ தாம் இஸ்லாத்தைத் தழுவவில்லை என்பதை இவர் குறிப்பிட்டுக் கூறியும் இருக்கிறார். அக்காலத்திலிருந்து இவர் இஸ்லாத்துக்காகத் தமது வாழ்நாட்களை அற்பணஞ் செய்ததுடன், முஸ்லிம் ராஜீயவிஷயங்களிலும் முஸ்லிம்கலைகளிலும், முஸ்லிம் மதவிஷயங்களிலும் மிகவும் நிறமையாக ஊழியம் புரிந்திருக்கிறார். இவர் இஸ்லாத்தைப்பற்றி அநேகம் நூல்களை எழுதி இருக்கிறார். ஆனல், The Meanigs of the Glorious Kuran, என்ற பெயரால் திருகுர்ஆனுக்கு இவர் மொழி பெயர்ப்புச் செய்து வெளியிட்டிருக்கிற ஆச்சரியமும் அழகும் ஒருங்கே அமைந்துள்ள திருகுர்ஆன் மொழி பெயர்ப்பானது இவர் இஸ்லாத்துக்குச் செய்த மகா பெரிய ஊழியமாகும். "The Islamic Culture" என்ற பெயரால் தக்கன் ஹைதராபாத்திலிருந்து தற்போது 3 மாதத்துக் கொருமுறை ஒரு பத்திரிகையை இவர் வெளியிட்டு இஸ்லாத்துக்கு மகத்தான தொண்டு புரிந்துவருகிறார். இவர் ஆற்றிய இஸ்லாமிய ஊழியமும், இவருடைய பாண்டித்துவமும்உலகிலுள்ள சிறந்த முஸ்லிம்களுள் இவரையும் ஒருவராக ஆக்கிவிட்டது.

திருப்போலி முஸ்லிம்களுடன் பழகியதன் மூலமாக டென்மார்க்கு தேசத்தாராகிய அஹ்மதுரைட் ஹோப்போ என்பவரும், ஜாவா முஸ்லிம்களுடன் பழகியதன் மூலமாக ஹங்கேரி ஜெனரல் முஹம்மது தௌபீக் கிலிங்கர் என்பவரும், இங்கிலாந்து, இந்தியா, ஆஸ்டிரேலியா முஸ்லிம்களுடன் பழகியதாலும், இஸ்லாம் மதப்புத்தகங்களைப் படித்ததன் மூலமாகவும் இங்கிலிஷ் பாரனட்டுகளான ஸர் எல்லிஸ் அஷ்மீத் பார்லட், ஸர் ஆர்ச்பீல்ட் ஹாமில்டன், ஸர் ஜலாலுத்தீன் லாடர் பிரன்டன், ஸர் உமர் ஹுபர்ட் ரைஸ் ரான்கின் ஆகியவர்களும், துருக்கி முஸ்லிம்களுடன் பழகியதால் ஆஸ்டிரியா தேசத்தாராகிய பாரன் உமர் எஹ்ரன் பெல்ஸ் என்பவரும், மாகூமை தங்கிய சுல்தான் இப்னு சுஊது அவர்களின்கரத்தினல் கீர்த்திபெற்றஅறிஞரும் ஆசிரியருமான அப்துல்லா ஜான்பில்பீ என்பவரும், ஆப்பிரிக்காவிலுள்ள அறபிகளுடன் பழகியதன் பயனக பிரசித்திபெற்ற ஹாலிவுட் பில்ம்கம்பெனியின் டைரக்டரான ரெக்ஸ் இங்ராம் என்பவரும், பில்ம் ஸ்டாரான அவரது மனைவி அல்லீஸ் என்பவரும், கொளும்பிலுள்ள சில முஸ்லிம்களின் மூலமாக இங்கிலாந்து ராயல் கடற்படையைச் சேர்ந்த அப்துல்காதிர் பாட்டன் என்பவரும், எகிப்திலுள்ள தன்தாவின் முப்தியின் மூலம் புரொபஸர் முஹம்மது கிராபிட்டில் என்பவரும், அறபியர்களுடன் பழகியதன் மூலமாக அல்ஹாஜ் அப்துல்லா பாதில் வில்லியம் ஸன் என்பவரும், எகிப்திலுள்ள அறபி இமாம் ஒருவர் மூலமாக அல்ஹாஜ் லேடி *எவிலின் கப்போல்ட் என்ற ஸீமாட்டியும், மதத்தைப் பற்றி வெகுகாலம் ஆராய்ச்சி செய்த பின்னர் கான்ஸ்தாந்தி நோபிலிலுள்ள ஷெய்குல் இஸ்லாம் அவர்கள் கையின் மூலமாக செவசென்ட் டாக்டர்டேவிட் பெஞ்சமின் பி.டி. என்பவரும், மர்மாடியூக் பிக்தாலுடன் பழகியதன் பலனக பிரசித்திபெற்ற பத்திராதிபரான டேவிட் அப்ஸான். †(டைம்ஸ ஆப் இந்தியா இல்லஸ்டிரேட்

* இவர் 66-வது வயதில் இஸ்லாத்தைத் தழுவி ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்றியதுடன் "பில்கிரிமேஜ் ஆப் மக்கா" என்ற புத்தகத்தின் பிரசித்திபெற்ற ஆசிரியையாகவு மிருக்கிறார்.

† இவர் லாகூரில் நடைபெற்ற முஸ்லிம் ஒளட்லுக் என்ற ஆங்கில தினசரி பத்திரிகைக்கு ஆசிரியராக இருந்து ராஜ்பால் எழுதிய ரங்கேலா ரஸூல் என்ற பிரசுரம் சம்பந்தமாக நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது கண்ணியத்தை காப்பதற்காக, லாகூர் ஹைகோர்ட் ஜட்ஜ் தலிப் சிங் செய்த தீர்மானத்தை ஆக்ஷேபித்து சிறைவாசமும் அனுபவித்தார். பின்னர் சிறைவாச காலத்தில் அவருக்கேற்பட்ட நோய் குணமாகாமல் சிறையிலிருந்து விடுதலையடைந்த சிலநாட்களில் தாருல் பகா அளவில் சேர்ந்து விட்டார்.

டட் வீக்லி'' என்ற பம்பாய் பத்திரிகை நியூஸ் ஆசிரியரான ஹாமித்பால் எம். டேர் என்பவர் எகிப்தில் சிலகாலம் வாசஞ் செய்ததன் மூலமாக இஸ்லாத்தைத் தழுவினர். இவர்களது பெயர்கள் இஸ்லாமிய சரித்திரத்தின் முக்கிய இடத்தில் குறிப்பிடத் தக்கனவாகும்.

டாக்டர் ஜூலியஸ் ஜெர்மானுஸ் என்பவர் மற்றொரு பிரபல ஹங்கேரி முஸ்லிமாவார். இவர் புடாபெஸ்ட் நகரிலுள்ள கீழ்நாட்டு பாஷை ஸ்தாபனத்தில் ஊழியஞ் செய்தவர். சாந்தி நிகேதனத்தில் இஸ்லாமிய சாஸ்திரத்தைப் போதிப்பதற்காக இவர் டாக்டர் ரபீந்தரநாத் தாகூரால் அழைக்கப்பட்டிருந்தார். இவர் 1929 - ம் வருஷத்தில் இஸ்லாமியக் கல்விக்கு நிஜாம் அவர்களின் ஆசிரியர் என்ற முறையில் சாந்தி நிகேதனத்தில் சேர்ந்தார். 1932 - ம் வருஷத்தில் இவர் டெல்லியில் இஸ்லாம் மதத்தைத்தழுவி தம்முடைய தாய் நாட்டுக்குச் சென்று தமது பழைய உத்தியோகத்தில் அமர்ந்து கொண்டார். ஆனல், இவர் ஹங்கேரிக்குத் திரும்பியதானது பால்கன் முஸ்லிம்களின் சரித்திரத்தில் ஒரு யுகத்தைக் குறிப்பிடுவதாக இருக்கிறது. அல்பானிய அரசரான மாகூமை தங்கிய அஹ்மது ஸுகூவும், இதர செல்வாக்குள்ள முஸ்லிம்களும் பால்கல் நாட்டில் இருப்பது முஸ்லிம்களின் புத்துயிருக்கு அஸ்திவாரம் அடையாளமாக இருக்கிறது. வியன்னாவிலுள்ள அறபியரான டாக்டர் ஜக்கீ அலீ, உஸ்தாது அப்துல்லதீப்அப்தீ ஹங்கேரி பிரதம முப்தீ ஆகியவர்களின் ஒத்துழைப்பின் பேரில் கீழ் ஐரோப்பாவிலுள்ள முஸ்லிம்களிடம் முற்றிலும் ஒரு புதிய உணர்ச்சியைப் புகட்டிவிட்டார். இவர் தற்போது ஸெர்போ - க்ரோஷன் பாஷையில் திருகுர்ஆன மொழி பெயர்க்கவும், வியாக்யானம் செய்யவும் முயன்று வருகிறார். ஐரோப்பாவிலுள்ள அப்பாகத்தில் வசிக்கும் முஸ்லிம்களிடம் இந்தப் பாஷைதான் மிகவும் செல்வாக்குள்ள பாஷையாகும்.

ஆஸ்டிரியா தேசத்துப் பெரிய மனிதரான அல்ஹாஜ் முஹம்மது ஆஸாத் லியோபோல்ட் விஸ் என்பவரைப்பற்றிக் குறிப்பிடாமல் நாம் விட்டு விடுவோமாயின் இவ்வியாசம் அறை குறையாகவே நின்றுவிடும். இவர் முன்னம் யூதராக இருந்தவர். இவர் தமது வாழ்க்கையை ஒரு பத்திராதிபர் என்ற முறையில் ஆரம்பித்தாராதலின், இந்த முறையில் மகாயுத்தத்துக்குப் பிறகு முஸ்லிம் நாடுகளில் பிரயாணம் செய்தார். அதுகாலை இவர் முஸ்லிம்களுடன் அடுத்துப் பழகியதானது இவருக்கு இஸ்லாத்தின்பால் ஆழ்ந்த பற்றுதலை உண்டாக்கி விட்டது. இவர் ஆஸ்டிரியாவுக்குத் திரும்பச் சென்றபின் 1926 - ம் வருஷத்தில் இஸ்லாத்தைத் தழுவிக்கொண்டார். பிறகு ஹிஜாஸுக்கு வந்து மார்க்கக் கல்விகளையும் இஸ்லாமிய ஞானங்களையும் 6 - வருஷ காலம் கற்றார். இவர் மேனாட்டுக் கல்வியிலும் கீழ்நாட்டுக்கல்வியிலும் சிறந்த பாண்டித்துவமுள்ளவர். இஸ்லாமிய உணர்ச்சி இவருக்கு அதிகமாக ஏற்பட்டதன் பலனாக இவர் அகில உலக இயக்கத்தை ஆரம்பித்திருக்கிறார். இதன் மூலம் மேனாட்டுக் கல்விபயின்ற முஸ்லிம் வாலிபர்களின் ஊக்கத்தை இஸ்லாத்தின்பால் திருப்பிவிடவேண்டுமென்பது இவரதுநோக்கம். இவர் தற்போது இந்தியாவிலிருக்கிறார். இவ்வியக்கத்தை அது சரித்து "இஸ்லாம் ஆன் தி கிறுஸ் ரோட்ஸ்" என்ற பெயரால் இவர் முதல் முதலாக ஒரு புத்தகம் வெளியிட்டுள்ளார். இவ்விஷயமாக இந்த நூற்றாண்டில் எழுதப்பட்ட எல்லா புத்தகங்களைப் பார்க்கினும் இது சிறந்த புத்தகமாக இருப்பதுடன் இவருடைய ஆழ்ந்த அறிவையும் தத்துவஞானத்தையும் வெளிப்படுத்துவதாகவுமிருக்கிறது. தற்போது இவர் புகாரி ஷரீபை வியாக்யானக் குறிப்புகளுடன் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறார். இப்பணி முஸ்லிம் சரித்திரத்தில் இவருடைய பெயரை என்றுஞ் சிரஞ்சீவியாக இருக்கச் செய்யும் என்பதிலையமில்லை.

ஐரோப்பாவில் மொத்தம் 19,230,000 முஸ்லிம்கள் இருக்கின்றனர். இவர்களில் இங்கிலாந்தில் 30,000, அமெரிக்க ஐக்கிய நாடுகளில் 250,000, மெக்ஸிகோவில் 4,000, கியூபாவில் 3,000, பிரிட்டிஷ் கயானாவில் 17,000, பிரஞ்சு கயானாவில் 15,000, டச்சுகயானாவிலுள்ள மொத்த ஜனத்தொகையில் மூன்றில் ஒரு பங்கும், பெருவில் 6000, சிலியில் 150, பெர்காடியில் 7,000, பிரேகுவாவில் 200, மார்டினிக்குவெடலில் 2,000, காட்லோப்பில் 3,000, மேற்கு இந்தியதீவில் 15,196 பேர்களும் இருக்கின்றனர். இது கிறிஸ்துவ மதப் பாதிரிகளின் ஜனக் கணிதத் திட்டப்படியுள்ள விவரமாகும்.

மேனாட்டில் பரவியுள்ள இந்த முஸ்லிம்கள் எல்லோரும தற்போது தங்களை ஒழுங்குபடுத்

தித் தங்களுடைய அந்தஸ்தை இன்னும் மேன்மைக்குக் கொண்டுவருவதற்குப் பல திட்டங்களை ஒன்றன்பின் ஒன்றாக ஏற்படுத்திக் கொண்டு மேனாட்டு முஸ்லிம்களின் ஐக்கியக் கட்டுப்பாட்டை தற்போது விரும்புகிறார்கள். இந்த உத்தேசம் சமீபகாலத்தில் "The Musliam Culture Association" என்ற பெயரால் ஜினிவாவில் உருவாக்கப்பட்டிருக்கிறது. இது அமீர் ஷக்கேப் அர்ஸலான், முஹம்மது பேஸாலிம் அல்அராபத்தி ஆகியவர்கள் போன்ற முஸ்லிம் தலைவர்கள் மூலமாக உண்டாக்கப்பட்டிருக்கிறது. எனவே, உலக முஸ்லிம் சகோதரத்துவத்துக்கு முக்கிய அம்சமாக இருப்போம் என்பதை ஐரோப்பியா அமெரிக்கா முஸ்லிம்கள் கூடிய சீக்கிரம் ருஜூப் பித்து விடுவார்கள் என்று நாம் நம்புவோமாக. இறைவன் அவ்வாறு ஏற்பட அருள் புரிய வேண்டும்.

நண்பீர்! காதியானீ அஹ்மதியர்கள் தாம் மேனாட்டில் இஸ்லாத்தைப்பற்றி போதித்து அநேக பிரபலஸ்தர்களை இஸ்லாத்தின் பக்கல் கொண்டு வருகின்றார்கள் என்று பிதற்றியும் பிரசாரம் புரிந்தும்வரும் பொருப்பற்றவர்கள், மேனாட்டில் எவ்வாறு இஸ்லாம் பரவிற்று, பரவி வருகிறது என்பதை இதிலிருந்து நன்கு தெரிந்து கொள்வார்களாக.

மௌலானா ஸெய்யித் அத்தாவுல்லா ஷாஹ் புகாரிமீது வழக்கு

பஞ்சாபிலுள்ள அஹ்ரார் சபையினர் மிர்ஜா குலாம் அஹ்மதுவின் பிறப்பிடமாகிய காதியானில், சென்ற 1934ம்ஹு அக்டோபர்மீ 22, 23, 24, தேதிகளில் தங்கள் தப்லீக் பிரசார மகாநாட்டை நடத்தினர். இம்மகாநாட்டுக்கு பஞ்சாப் மாகாண அமீருஷ்ஷரீஅத் ஹஜ்றத் மௌலானா மௌலவீ ஸெய்யித் அத்தாவுல்லா ஷாஹ் புகாரீ அவர்கள் தலைமை வகித்து காதியானீ மதக்கொள்கைகளையும், அக்கொள்கைகள் இஸ்லாத்துக்கு எவ்வாறு முரண்பட்டிருக்கிறது என்தைபற்றியும் நீண்ட பிரசங்கம் புரிந்தார்கள். இவர்களது இப்பிரசங்கம் மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானியின் கண்ணியத்தைக் குறைப்பதாக இருப்பதால் இ. பி. கோ. 153-வது பிரிவுப்படி தண்டிக்கப்படக் கூடியதாக இருக்கிறதென்று மௌலானா அவர்கள் மீது 8-12-934-ல் போலீஸார் வழக்குத் தொடர்ந்தனர். குர்தாஸ்பூரிலுள்ள ஸ்பெஷல் முதல் கிளாஸ் மாஜிஸ்டிரேட் திவான் சுகானந்தரின் கோர்ட்டில் இவ்வழக்கு 12-12-34-ல் விசாரணைக்கு வந்தது. அன்று மௌலானா ஸெய்யித் அத்தாவுல்லா ஷாஹ் புகாரீ அவர்களுக்காக இந்தியா சட்டசபை அங்கத்தினரும் லாகூர் பாரிஸ்டருமான ஷெய்கு காலித் லத்தீப் கௌபா, முதலிய பல வக்கீல்கள் ஆஜராகி வழக்கை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டனர். அதன் பேரில் 15-12-34-க்கு வழக்கு ஒத்திவைக்கப் பட்டது.

பின்னர் 15-12-34-ல் டீ வழக்கு விசாரணைக்கு வந்தபோது பிராஸிகியூஷன் சார்பாக சர்க்கார் வக்கீல், பப்ளிக் பிராஸிகியூட்டர் ஆஜரானார்கள். மௌலானா அவர்களுக்காக ஷெய்கு காலித் லத்தீப் கௌபா, மௌலானா மஜ்ஹர் அலீசாகிப் அஜ்ஹர், பாபூஷரீப்ஹுஸைன்கான் சௌதரீ குலாம்பரீத் உள்பட ஹிந்து முஸ்லிம் பிரபலாயர்களிற் 12 பேர்கள் ஆஜரானார்கள்.

ஆரம்பமாக, காதியானில் பிரசுரமாகும் "அல்பஜ்லு" பத்திரிகையின் ஆசிரியரான குலாம் நபியென்பவர் பிராஸிகியூஷன் சார்பாக ஆஜராகி "மிர்ஜாயிக் கொள்கைகள் சென்ற 50 வருஷமாக இருந்து வருவதாகவும், மிர்ஜா குலாம் அஹ்மது அதன் ஸ்தாபகர் என்றும், அவரை நபியென்று தாங்கள் கருதுவதாகவும், 1908-ம் வருஷத்தில் அவர் மாணமடைந்தபின் நூருத்தீன் என்பவர் அவருக்கு கலீபாவாக இருந்ததாகவும், தற்போது மிர்ஜா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்து கலீபாவாக இருப்பதாகவும், பஞ்சாப் மாகாணத்தில் 56 ஆயிரம் அஹ்மதியர்கள் இருப்பதாக ஜனக்கணிதத்திலிருந்து தெரிய வருவதாகவும், தங்களுடைய உத்தேசத்தில் பஞ்சாப் மாகாணத்தில் 4 லக்ஷம் அஹ்மதிகளிருப்பார்களென்றும், காதியானியில் 8

ஆயிரம் அஹ்மதியர்கள் இருப்பதாகவும், தற் போதைய கலீபா வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (மிர்ஸா குலாம் அஹ்மது)க்குப் பிரதிநிதியாக இருப்பதால் இவருக்கு அவமதிப்பு ஏற்படு வதை எல்லா அஹ்மதிகளுக்கும் அவமதிப்பு ஏற்படுவதாகக் கருதுவதாகவும், அக்டோ பர் மீ 24உ பிரசுரமான "ஜமீந்தார்" பத் திரிகையில் தாம் ஸெய்யித் அத்தாவுல்லா ஷாஹ் புகாரீ அவர்களது பிரசங்கத்தைப் படித்ததாகவும், அப்பிரசங்கம் அஹ்மதீ ஜமா அத்துக்கு அவமதிப்பு உண்டுபண்ணுவதாக இருந்தது என்றும், இப்பிரசங்கத்தைப் படித்த பின் தமக்குக் கோபமேற்பட்டது என்றும் கூறி ஆக்ஷேபகரமான சில பாகத்தை "ஜமீந் தார்" பத்திரிகையின் பிரதியிலிருந்து படித் தும் காண்பித்தார்.

பிறகு, காதியானீ பிளீடரான பஜ்லுதீன், காதி யானில் பிரசுரமாகும் "அல்ஹக்கம்" என்ற பத்திரிகையின் ஆசிரியர் மஹ்மூது அஹ்மது, காதியான் இஸ்லாமியா ஸ்கூல் உபாத்தியாயர் மாஸ்டர் அப்துல்லா, ஆகியவர்களும் பிராசிகியூ ஷன் சார்பாக ஆஜராகி முதல் சாக்ஷி கூறிய வைகளுக்கு ஆதாரமாகவே சாக்ஷியங் கூறினர். ரிஸால்தார் ஸர்தார்சிங், பாவாசிங் ஆகியவர்கள் ஆஜராகி காதியான் தப்லீக் மகாநாட்டுத் தலை வரது பிரசங்கம் அஹ்மதியர்களுக்கு விரோத மான பிரசங்கமாக இருந்தது என்றும், அதில் ஆக்ஷேபகரமானவைகள் இன்னின்னவை என் றும் கூறினர்.

படாலா டிவிஷனல் மாஜிஸ்டிரேட் கான் சாகிப் சௌத்ரீ ஹுஸைன் அலீசாகிப் சாக்ஷி யங் கூறுகையில், "1934—மே மாதத்தி லிருந்து தாம் படாலாவில் உத்தியோகம் பார்த்து வருவதாகவும், தாமிருந்த காலம் வரை அஹ்ராார்களுக்கும் அஹ்மதியர்களுக்கும் திரு ப்திகரமான சம்பந்தமிருக்கவில்லை என்றும், அஹ்ரார் தலைவர்கள் அக்கான்பரன்சில் செய்த பிரசங்கத்தால் மனவருத்தம் அதிகமாகி விட் டது என்றும் கூறினர்.

லாகூர் அஹ்மதியா ஹாஸ்டல் சூப்ரன்டன்ட் முஹம்மது நதீர்கான் சாக்ஷியம் கூறுகையில், பஞ்சாப் மாகாணம் முழுவதிலும் 4 அல்லது 5 லக்ஷம் அஹ்மதியர்கள் இருக்கக் கூடுமென் பது தமது உத்தேசமென்றும், அல்லாஹ்வுக் குப் பிறகு கலீபாவின் அந்தஸ்துதான் எல்லா வற்றினும் அருமையும் மேன்மையுமானது என்று தாங்கள் கருதுவதாகவும், கலீபாவுக்கு அவமரியாதை செய்வதை அஹ்மதியர்களால் சகித்துக்கொண்டிருக்கமுடியாது என்றும், எதிரி யின் அக்கிராசனப் பிரசங்கத்தைப் படித்தது கொண்டு தமக்கு ஆத்திர முண்டாகி ரத்தம் கொதித்ததுஎன்றும், இப்பிரசங்கம் புரியுங்கால் தாம் அங்கிருந்தால் அரசாங்கம் என்ன செய் தாலும் செய்துகொள்ளட்டுமென்று அந்த இடத்திலேயே அவரைக் கொன்றிருப்பே னென்றும் கூறினர்.

இத்துடன் பிராசிகியூஷன் சாக்ஷி விசாரணை முடிந்தது. பிறகு மௌலானா செய்யித அத்தாவுல்லா ஷாஹ் புகாரீ அவர்கள் மாஜிஸ்டி ரேட் கேட்ட சில கேள்விகளுக்கு வாய்மொழி யாகப் பதில் கூறியபின் எழுத்து மூலமாகத் தங்களது ஸ்டேட்மென்டைத் தாக்கல் செய் வதாகத் தெரிவித்தார்கள். பிறகு மௌலானா அவர்களது வக்கீல் தமது கக்ஷிவாதத்தைஎடுத் துக் கூறியபின் மௌலானா அவர்கள் மீது மாஜிஸ்டிரேட் குற்றப் பத்திரிகை படித்தார்.

மௌலானா அவர்கள் இவ்வழக்கை வேறு கோர்ட்டுக்கு மாற்றவேண்டுமென்று மனுக் கொடுத்ததால், ஸ்பெஷல் மாஜிஸ்டிரேட் வழக்கு விசாரணையை ஒத்திவைத்திருந்தார். செஷன்ஸ் கோர்ட்டிலும், ஹைகோர்ட்டிலும் மௌலானா அவர்களது மனு நிராகரிக்கப்பட்டு விட்டதால் இவ்வழக்கின் விசாரணை மீண் டும் அதே கோர்ட்டில் 27-2-35-லிருந்து தொடர்ச்சியாக விசாரிக்கப்பட்டு வந்தது. முத லில் பிராசிகியூஷன் (வாதி தரப்பு) சாக்ஷிகளை மௌலானா அவர்களின் வக்கீல் குறுக்கு விசாரணை செய்தார்.

பஜ்லுதீன் என்பவரைக் குறுக்கு விசாரணை செய்தபோது, "மிர்ஸா குலாம் அஹ்மதுக்கு 'வஹீ' வந்ததாகஅஹ்மதியர்கள்கருதுவதாகவும் அஹ்மதியல்லாதார் வஹீ வரவில்லை என்று கூறுவதாகவும், இருகக்ஷியினரும் பல புத்தகங் களை எழுதி இருப்பதாகவும், எகிப்து பிர்ஔ னின் செய்கையைப்போல் ஒருவருடைய செய் கை இருக்குமாயின் அவரை பிர்ஔன் மனப் பான்மையுள்ளவர் என்று உருதுபாஷையில் கூறுவது வழக்கமென்றும், பிர்ஔனின் ஆச னம் தலைகீழாக்கப்படுகிறது என்பதற்கு, அஹ் மதியா வகுப்பு ஒழிக்கப்படும், தலைகீழாக்கப் படும்என்பது கருத்து என்றும், மிர்ஜா குலாம் அஹ்மது பரம்பரை வைத்தியர் என்றும்,

வைத்தியத்தொழில் செய்து அவர் பணம் சம்பாதிக்கவில்லை என்றும், தனக்கு மாறு செய்பவர்கள் காட்டுப்பன்றிகளாகி விட்டனர் என்று மிர்ஜா சாகிப் எந்தப் புத்தகத்திலும் எழுதவே இல்லை என்றும், அவரது வாக்கியம் அரை குறையாக எடுத்துக் காண்பிக்கப்படுகிறது என்றும் கூறினர். உடனே 'நஜ்முல்ஹுதா'' என்ற புத்தகத்தையும் 'நூறுல் ஹக்' என்ற புத்தகத்தையும் சாக்ஷியிடம் காட்டி அவ்வாறு எழுதி இருக்கிற வாக்கியத்தைப் படிக்கும்படி சொல்லப்பட்டது.

பாவாசிங் என்பவரைக் குறுக்கு விசாரணை செய்தபோது, குற்றவாளி (மௌலானா) பிரசங்கம் செய்கையில், சில புத்தகங்களிலிருந்து மேற்கோள்கள் எடுத்துக்காட்டி, இவைமிர்ஜாயிகளுடைய புத்தகங்கள் என்றும், மிர்ஜா சாகிப் உண்மையான நபியாக இருந்தால் மிர்ஜாயிகள் என்னிடம் வந்துவிவாதம் செய்யட்டும் என்றும் கூறியதுடன், மிர்ஜா காதியானியை நீங்கள் ஒப்புக்கொள்ளாதீர்கள்; அவர் நபியல்ல; அவர் காபிர்; மிர்ஜா நபியாகிவிடமுடியாது என்றும், மிர்ஜாயிகள் சீக்கியருக்கு விரோதமாகப் பேசி வருவதுடன் கூட்டமும் போடுகிறார்கள்; காதியானிக்குப் பக்கத்திலுள்ள தேகெலான் என்ற கிராமத்து ரஸ்தாவிலிருந்த ஹிந்துக்கோவிலை மிர்ஜாயிகள் இடித்ததனால் இந்து முஸ்லிம் பிணக்கு ஏற்பட்டது; விவகாரமும் நடந்தது என்றும், காதியானில் மிர்ஜாயிகளுக்கு செல்வாக்கு அதிகமாக இருப்பதுடன் மிர்ஜாவுடைய வாழ்க்கைமுறை பிரபுக்களுடையதைப் போன்றிருக்கிறது; நபியுடைய கலீபாவாக இருந்துகொண்டு பிரபுக்களைப்போல் வாழ்க்கை நடத்துவது கூடாது என்றும், அஹ்மதியல்லாதாரை மிர்ஜாயிகள் பகிஷ்காரம் செய்திருக்கிறார்கள் என்றும் கூறினர் என அறிவித்தார்.

இதற்குப்பின் மௌலானா அவர்கள் தாங்கள் குற்றவாளியல்லவென்பதை ருசுப்பிப்பதற்காக அநேகரை சாக்ஷிகளாக டிபன்ஸ் தரப்பில் விசாரிக்கவேண்டுமென சுமார் 113 பெயர்களடங்கிய ஜாபிதா ஒன்றை நியாயாதிபதியிடம் சமர்ப்பித்தார்கள். அதில் அநேகரை மறுத்தும் சிலர் சாக்ஷியங் கூறுவதற்கு அனுமதியளிப்பதாகவும் மாஜிஸ்ரேட் தெரிவித்தார். அதன்மீது பிரதிவாதி தரப்பு டிபன்ஸ் சாக்ஷிகள் விசாரிக்கப்பட்டனர். இவர்களில் சுன்னத்து ஜமாஅத்தைச் சேர்ந்தவர்களும், மிர்ஜாயிகளும், அஹ்மதியர்களுமிருக்கின்றனர். அந்த சாக்ஷிகளின் வாக்குமூலங்கள் வருமாறு :—

நூறுத்தீன் என்பவர் சாக்ஷியங் கூறுகையில், தமக்கு 4 புதல்வர்களிருப்பதாகவும், தமது மூத்த மகனைச் சீர்திருத்தும்படி காதியான் சீர்திருத்த ஒழுங்கு இலாக்காவுக்கு மனுக்கொடுத்திருப்பதாயும், அம்மனுவுக்கு என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டதென்பது தமக்குத் தெரியாதென்றும், தமது புதல்வன் 2-3 மாதகாலம் வரை காதியானுக்கு வெளியில் அனுப்பட்டதாகவும், அக்காலத்தில் அவன் காதியானுக்குள் வர அனுமதிக்கப்படவில்லை என்றும், யாக்கூப் அலியின் புதல்வர் இப்ராஹீமை அஹ்மதியா ஜமாஅத்து காதியானை விட்டு வெளியேற்றியதாகவும் கூறினர்.

"நூர்" பத்திரிகையின் ஆசிரியரான ஷேய்கு முகம்மது யூசுப் சாக்ஷியங் கூறுகையில், தமது மூத்த குமாரனை யாரோ கத்தியால் குத்திவிட்டதாகவும், அது விஷயத்தை தாம் போலிசில் ரிப்போர்ட் செய்யாமல் காதியான் பப்ளிக் இலாக்காவில் வழக்கு தொடர்ந்ததாகவும், முப்தி முஹம்மது சாதிக் என்பவர் இவ்வழக்கை விசாரணை புரிந்ததாகவும், ஸ்டேஷன் மாஸ்டரின் புதல்வரான மஹ்மூது அலீ என்பவரை காதியான் பப்ளிக் இலாக்கா காதியானை விட்டுப் பிரஷ்டம் செய்திருப்பதாகவும், மிர்ஜாயி அல்லாதவர் எவரும் காதியானில் இருக்கப்படாதென்று தாங்கள் விரும்புவதாகவும், பிரிட்டிஷ் நீதி மன்றத்தில் வழக்குத் தொடரப்படாதென்ற தடையுத்தரவெதுவும் தங்களுக்கு விதிக்கப்பட்டில்லை என்றும் கூறினர்.

சௌதரீ இமாமுத்தீன் சாக்ஷியங் கூறுகையில், "6 அல்லது 7 வருஷங்களுக்கு முன் காதியானில் முஸ்லிம் மகாநாடு நடைபெற்றபோது மிர்ஜாயிகள் கலவரம் செய்து விளக்குமுதலியவைகளை உடைத்து விட்டதாகவும், பலரை அடித்துக் கலகம் செய்ததாகவும் முஸ்லிம்கள் மகாநாடு நடத்தினால் காதியானை விட்டு வெளியேற்றப்படுவார்களென்று கூறப்பட்டதாகவும், மிர்ஜாயி அல்லாதாரை அவர்கள் பகிஷ்கரித்திருக்கிறார்கள் என்றும், மிர்ஜாயிகளின் பிரசங்கம் எல்லா மதத்தாரையும் புண்படுத்தக் கூடியதாக இருப்பதாயும், மிர்ஸாயிகள் வாலண்டியர்படை ஏற்படுத்தி வைத்துக் கவாத்தும்

கற்பித்துக்கொடுக்கிறார்களென்றும், தம்மையும் மிர்ஜாயிகள் பகிஷ்கரித்தனர் என்றும், ஏற்கனவே நடைபெற்ற முஸ்லிம் மகாநாட்டில் காதியானிகள் கலகஞ் செய்தது சம்பந்தமாக நடந்த வழக்கில் 2 மிர்ஜாயிகளுக்குத் தண்டனை கிடைத்தது என்றும் கூறினர்.

அஹ்மதுநூர் என்பவர் சாக்ஷியம் கூறுகையில், தமக்கு இல்ஹாம் வருவதாகவும், தமக்கு நபிப்பதவி உண்டு என்று தாம் தாவாச் செய்வதாகவும், தாம் "ஹக்கீக்கத்தூர் ரிஸாலத்" என்ற புத்தகத்தை இயற்றியதாகவும், "அஹ்மதுநூர் காபுலி அல்லாஹ்வின் நஸூலாக இருக்கிறார்" என்று தமக்கு இல்ஹாம் வந்ததாகவும், 18-10-25-முதல் தமக்கு இல்ஹாம் வருவதாகவும், தமக்கு 300-400 மூரீதுக்காரர்கள் இருப்பதாகவும், இதர நபிமார்களை தாம் நபியென்று ஒப்புக்கொண்டிருப்பது போல மிர்ஜா குலாம் அஹ்மதுவையும், தம்மையும் நபியென்று தாம் ஒப்புக்கொண்டிருப்பதாகவும், தமது சகோதரரின் குமாரர் குல்நூர் என்பவர் ஏதோ குற்றம் செய்ததால் அவரை அஹ்மதியா அஞ்சுமன் 5 வருஷ காலத்துக்குக் காதியானைவிட்டுப் பிரஷ்டம் செய்திருப்பதாகவும், குற்றத்துக்குத் தக்க தண்டனை விதிக்கும்படி அஹ்மதியா அஞ்சுமனுக்கு அவர்கள் அதிகாரமளித்து இருப்பதாகவும், அஞ்சுமன் விதிக்கும் தண்டனைக்குட்பட மறுத்தால் அதற்காக வேறு தண்டனை இல்லை என்றும், அஹ்மதியரல்லாதாரிடம் கொடுக்கல் வாங்கல் செய்யப்படாதென்னும் நிர்பந்தம் யாதொன்றுமில்லையென்றும், "லாஇலாஹஇல்லல்லாஹு அஹ்மதுநூர் நஸூலுல்லாஹி" என்று தாம் கலிமா சொல்லுவதாகவும் கூறினர்.

ரஹீம்ஷாஹ் என்பவர் சாக்ஷியம் கூறுகையில், தமக்கு இல்ஹாம் வருவதாகவும், தமக்கு ஹிஜ்ரீ 1339-ம் வருஷத்தில் முதல் முதலாக இல்ஹாம் வந்ததென்றும், மிர்ஜா மஹ்மூதுவை கலீபா என்றும், மிர்ஜா குலாம் அஹ்மதுவை நபியென்றும் தாம் நம்புவதாகவும் கூறினர்.

மீர்முஹம்மது இப்ராஹீம்:—என்பவர் சாக்ஷியம் கூறுகையில், "முபாஹலா" பத்திராதிபர் மௌலவீ அப்துல்கரீம் 19-4-1930-ல் தம்மை காதியானுக்கு அனுப்பியதாகவும், அப்துல்கரீமுடைய உயிருக்கு ஆபத்துவரும்என்ற பயமேற்பட்டு அவர் காதியானுக்கு வராமல் தம்மை அனுப்பியிருப்பதால், அவருடைய வீட்டிலுள்ள சாமான்களையெல்லாம் தம்மிடம் ஒப்புவிக்க வேண்டுமென காதியான் போலீஸாரிடம் தாம் அறிவித்துக் கொண்டதாகவும், அதுபொழுது மிர்ஸாயிகள் தடி முதலிய ஆயுதங்களுடன் வந்து போலீஸ் தாணுவைச்சுற்றி வளைந்து கொண்டிருக்கும் நிலைமையில் இரவு சுமார் 11-மணிக்கு போலீசார் பாதுகாவல் செய்து அப்துல் கரீமின் சாமான்களையெல்லாம் கொடுத்து போலீஸ் பந்தோபஸ்துடன் தம்மை மோட்டாரில் அனுப்பிவைத்ததாகவும், அன்று தம்முடன் இருந்த மௌலவீ முஹம்மது ஹுஸைன் 23-4-30-ல் கொலை செய்யப்பட்டதாகவும் கூறினர்.

காதியான் "அல்பஜ்லு" பத்திரிகையின் அஸிஸ்டென்ட் எடிட்டரான ஷெய்கு றஹ்மத்துல்லா ஷாக்கிர் என்பவர் சாக்ஷியம் கூறுகையில், "துர்ரியத்துல் பகாயா" என்பது மார்க்க வரம்பை மீறியவர்களுக்குச் சொல்லப்படும் வார்த்தைகள் என்றும், முக்கியமாக மௌலவிகளைக் குறித்துத்தான் இவ்வார்த்தை உபயோகிக்கப்படுகிறது என்றும், பொதுஜனங்களைக் குறித்து இதனை உபயோகிப்பதில்லை என்றும் கூறினர்.

மஹ்தீ என்று தன்னை தாவாச்செய்த கோக்கு குலாம் முஹம்மது:—சாக்ஷியங் கூறுகையில், 1931-ம் வருஷத்துக்கு முன்பு வரை தாம் லாகூர் அஹ்மதியா சங்கத்தாருடன் சம்பந்தம் வைத்திருந்ததாகவும், ஹக்கீம் நூருத்தீன் காலத்திலேயே அஹ்மதியா ஜமாஅத்தார்கள் இரண்டாகப் பிரிந்து விட்டதாகவும், லாகூர் பார்ட்டிக்கு மிஸ்டர் முஹம்மது அலியும், காதியான் பார்ட்டிக்கு மிர்ஜா பஷீருத்தினும் தலைவர்கள் என்றும், இந்த ஜாமாஅத்தாரின் தவறுகளை தாம் உணர்ந்திருப்பதாகவும், தற்போதைய கலீபா சாயபு பணம் சம்பாதிப்பதற்கு இம்மார்க்கத்தை ஒரு வழியாக ஏற்படுத்தி வைத்திருப்பதாகவும், 'ஸாலிஹீன்'கள் 'ஸாதிகீன்'கள் ஆகியவர்களின் சிறந்த தன்மைகளை தற்போதைய கலீபாவிடம் காணமுடியாது என்றும், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்குப்பின் ஒருவர் தன்னை நபியென்று தாவாச் செய்வாராயின் அவர் பொய்யர் என்றும், இறைவனால் சபிக்கப்பட்டவர் என்றும், உலகம் முழுவதிலும் அஹ்மதியர்களுக்கு ராஜீய ஆதிக்கம் கிடைக்குமென்று தற்போதைய

கலீபா அபிப்பிராயங் கொண்டிருப்பதாகவும், தமது கிலாபத் பதவி, ஹஜ்றத் உமர் (றலி.) அவர்களது கிலாபத் பதவியைப் போலிருப்பதாக அவர் கருதி இருப்பதாகவும், இதனால் தமது மத உணர்ச்சி பாதிக்கப்படுவதாகவும், மிர்ஜா குலாம் அஹ்மதுவின் ஜீவியம் பரிசுத்தமான குற்றமற்ற தென்று தாம் கருதவில்லை என்றும், 1931-ல் தாம் (சாக்ஷி) மஹ்தீயாக இருப்பதாய் தாவாச்செய்ததாகவும் கூறினர்.

ஹபீபுர் ரஹ்மான் காபுலி சாக்ஷியம் கூறுகையில், காதியானீ ஜமா அத்தார்கள் தங்களுக்குள் கிரிமினல் வழக்குகளையும் நடத்திக்கொள்வதாகவும், பஜாரில் நடந்தஉற்சவத்துக்கு,அஹ்மதீ ஜமாஅத்து கட்டளையை மீறி வேடிக்கை பார்க்கச் சென்ற வாலிப அஹ்மதியர்கள் இருவருக்கு காதியான் ஜமாஅத்து தண்டனை விதித்ததாகவும், 19 பையன்களுக்குப் பலதரப்பட்ட தண்டனை கொடுக்கப்பட்டதாகவும், காதியானில் அஹ்மதியா வாலண்டியர் படை இருப்பதாகவும், இவர்களுக்கு ராணுவப்பயிற்சி அளிக்கப்படுவதாகவும், ஒருவருக்கு அஹ்மதிய ஜமா அத்து தண்டனை கொடுத்து அதை அவர் ஒப்புக்கொள்ள வில்லையாயின் அவரை அந்த ஜமாஅத்து பகிஷ்காரம் செய்வதுண்டு என்றும் கூறினர்.

லாகூர் "பகாயி மாக்ஸீன்" பத்திரிகையின் ஆசிரியர் மௌலவீ மஹ்பூஜுல்ஹக் சாக்ஷியம் கூறுகையில், 1917 லிருந்து-1924 வரை தாம் காதியானில் வசித்து வந்ததாகவும், 1924-ல்தமது கொள்கையில் மாறுதலேற்பட்டதன் பலனாகத் தாம் காதியானைவிட்டு வெளியேற்றப்பட்டதாகவும், தமது மனைவியை 2 மாதகாலம்வரை தம்முடன் அனுப்பாமல் தடுத்து வைத்துக் கொண்டார்களென்றும், முஹர் முஹம்மது, கார்உமர் என்பவரும் காதியானைவிட்டு வெளியேற்றப்பட்டதாகவும், தன்னைக் கொலைசெய்து விடுவதாக மிர்ஜாயிகள் பயங்காட்டினார்கள் என்றும் கூறினர்.

காதியானி கலீபா மிர்ஜா பஷீருத்தீன் முஹம்மது அஹ்மதுவின் சாக்ஷியம். காதியானி கலீபா சாக்ஷியம் கூறுகையில் கூறியதாவது:—"பெஹிஷ்தி மக்பரா" வில் அடக்கம் செய்யப்பட விரும்புகிறவர்களின் வலியத்துகளை அஞ்சுமன் றத்துச்செய்துவிட முடியும். பெஹிஷ்தி மக்பராவில் அடக்கம் செய்ய வேண்டும் என்று வலியத்துச் செய்து தம் முடைய சொத்தில், அல்லது பூஸ்திதியில் பத்திலொரு பாகத்தை வக்புச் செய்பவர்களைத் தான் அதில் அடக்கம் செய்யமுடியும். முகம்மது ஹுஸைனை கொலைசெய்த முஹம்மது அலியின்மீது வழக்கு நடந்துகொண்டிருந்த போது அந்த முஹம்மது அலீ இது சம்பந்தமாக எவ்வித வலியத்தும் செய்யவில்லை. இவ்விதமான வேண்டுதல் எனது அங்கீகாரத்துக்கு வரவுமில்லை. அஹ்மதியா ஜமாஅத்து அந்த குற்றவாளியான முஹம்மது அலியை ஆதரித்ததா இல்லையா? என்பதைப்பற்றி எனக்கு நேரடியாக யாதொன்றுந் தெரியாது. மிர்ஜா அப்துல்ஹக், பீர்அக்பர் அலீ ஆகியவர்கள் கொலைக்குற்றம் செய்தவர் சார்பாக வழக்கில் ஆஜரானார்கள் என்பது எனக்குத் தெரியும். மிஸ்டர் பஜ்லுதீன் என்பவர் எங்கள் ஜமாஅத்துக்கு சட்ட ஆலோசனை கூறுபவர். மிர்ஜா அப்துல்ஹக் குர்தாஸ்பூரிலுள்ள அஹ்மதியர்களுக்கு அமீர். கொலைக் குற்றம் செய்தவருக்காக அஹ்மதீ ஜமாஅத்தார்கள் ஹைக்கோர்ட்டில் அப்பீல் செய்து பணஞ்செலவழித்தார்களா என்பது எனக்குத் தெரியாது. கொலைக் குற்றம் செய்தவருக்குக் கருணை காட்ட வேண்டுமென்னும் விண்ணப்பம் யார் சார்பாகச்செய்யப்பட்டது என்பதும் எனக்குத்தெரியாது. அந்த முஹம்மது அலீ எல்லிப்புர மாகாணவாசி. அவர் கொலைச்சம்பவம் நடைபெறுவதற்குச் சில தினங்களுக்கு முன் அஹ்மதியா கான்பரன்சில் கலந்து கொள்வதற்காக காதியான் வந்து பிரசங்கம் செய்தாரா இல்லையா? என்பது எனக்குத் தெரியாது. குற்றவாளியான முஹம்மது அலீ ஜெயிலில் இருந்த போது அவரிடமிருந்து 2 அல்லது 3 கடிதங்கள் எனக்கு வந்தன. அதில் அவருடைய இச்செய்கை அஹ்மதிய்யா போதனைக்கு மாறுக இருப்பதாகவும், தாம் பாவத்தைச் செய்துவிட்டதாகவும் ஒப்புக்கொண்டெழுதி இருந்தார். இது நடந்து 3 அல்லது 4 வருஷங்களாகிவிட்டன. ஷேர் அலீ என்பவர் எங்கள் ஜமாஅத்தின் நூல்களியற்றும் இலாக்காவின் தலைவராக இருக்கிறார். நான் இல்லாத காலத்தில் இமாமத்துச் செய்யும் கடமைகளையும் அவர் நிறைவேற்றிவருகிறார். 18-7-31 "அல்பஜ்லு" பத்திரிகையில் எனதுகுத்பாவெளியாகி இருக்கிறது. ஒரு முஸ்லிமைக் கொலைசெய்துவிட்டு, அப்புறம் 'தௌபாச்' செய்யாமலிருக்

கும் முஸ்லிம் நரகவாதி என்பது எனது மதக் கொள்கை. தன்னுடைய இச்செய்கை பாபமானது என்று கருதி, அதற்காகப் பச்சாதாபப் படுவதுதான் தௌபா என்பதின் கருத்து. குற்றவாளியான முஹம்மது அலீ என்னிடத்தில் தனது கடிதங்கள் மூலமாகவும், இதர ஜனங்களிடம் நேரிலும் இச்செய்கைக்காகத் தமது வருத்தத்தைத் தெரிவித்துக்கொண்டார்.

கேள்வி:-அல்லாஹ்வையும் அவனது றஸூலையும் ஒப்புக்கொண்ட ஒரு முஸ்லிம், ஹஜ்றத் முஹம்மது முஸ்தபா (ஸல்.) அவர்களைக் கடைசி நபியென்றும் ஒப்புக்கொள்கிறார். ஆனால், மிர்ஜா குலாம் அஹ்மதுக்கு விரோதமாக ஒன்றுங் கூறுவதில்லை. ஆனால், அவர் நபியாக இருக்கிறார் என்பதை மறுக்கிறார். அப்படிப்பட்டவரைத் தாங்கள் என்னென்று கூறுவீர்கள்?

பதில்:—அந்த மனிதர் முஸ்லிமாக இருக்க முடியாது என்பது எனது மத நம்பிக்கை. ஏனெனில், மிர்ஜா குலாம் அஹ்மதுவின் நுபுவ்வத்தை அங்கீகரியாதவர் உண்மையான முஸ்லிமாகவும், திருகுர்ஆனை ஒப்புக்கொள்பவராகவுமில்லை என்பது எனது விசுவாசமாகும்.

கேள்வி:—அல்லாஹ் தஆலாவின் தௌஹீதையும், ஹஜ்றத் முஹம்மது (ஸல்.) அவர்கள் நபிமார்களில் கடைசியானவர்கள் என்பதையும் ஒருவர் ஒப்புக்கொண்டு தொழுகையையும் நிறைவேற்றுகிறார். அப்படிப்பட்டவர் முஸ்லிமா? அல்லவா?

பதில்:—இஸ்லாம் மதத்தின் இதர அக்கீதாக்களை நிராகரிப்பவர் காபிர்.

கேள்வி:—மிர்ஜா குலாம் அஹ்மதுவின் நுபுவ்வத்தை ஒப்புக்கொள்ளாதவர்களைத் தாங்கள் முஸ்லிம் என்று கூறுவீர்களா? அல்லவா?

பதில்:—மிர்ஜா குலாம் அஹ்மதுவின் நுபுவ்வத்தை அங்கீகரிக்காதவர் முஸ்லிமாகவும் இருக்கமுடியும் காபிராகவும் இருக்கமுடியும்.

இச்சமயத்தில் மௌலானு லெய்யித் அத்தாவுல்லா ஷாஹ்புகாரீ அவர்கள், மிர்ஜா பஷ்ருத்தின் மஹ்மூது அஹ்மது விடத்தில்:—நான் மிர்ஜாசாகிபின் நுபுவ்வத்தை ஒப்புக்கொள்கிறதில்லையாதலால் என்னை எவ்வாறு கருதுகிறீர்கள்? என்று கேட்டார். அதற்கு மிர்ஜா பஷ்ருத்தின்:—மிர்ஜா சாகிபின் இல்ஹாம்கள் அல்லாஹ்த ஆலாவினிடமிருந்து வந்தவைகள் என்று நம்புகிறவர்களைத்தான் நான் முஸ்லிம் என்று மதிக்கிறேன். அவர்கள் மிர்ஜாசாகிபின் நுபுவ்வத்தை மறுத்தாலும் சரியே.

கேள்வி:—இல்ஹாம் என்று எதற்குச் சொல்லப்படுகிறது?

பதில்:—கத்தஈ (சரி)யான இல்ஹாம்கள் நபிமார்களைத் தவிர வேறு எவருக்கும் வராது.

(இச்சமயம் மிர்ஜாசாகிபின் இல்ஹாம்களைப் பற்றிக் கேள்வி கேட்கப்பட்டது. அதை கோர்ட்டார் அனுமதிக்கவில்லை.)

கேள்வி:—மதப்பிரசாரம் செய்ய எல்லோருக்கும் உரிமையுண்டா?

பதில்:—1934-ல் நடைபெற்ற அஹ்ரார் கான்பரன்சின் நோக்கத்தை நானறியமாட்டேன். ஆனால், ஏற்கனவே நான் கூறியபடி அக்கான்பரன்சின் நோக்கம் மதப்பிரசாரம் செய்யவேண்டும் என்பதாக இல்லை. காதியானில் அஹ்மதீ அல்லாதாருமிருக்கிறார்கள். நான், குற்றவாளி (மௌலானு லெய்யித் அத்தாவுல்லா ஷாஹ் புகாரி)யின் பிரசங்கத்தைப் பத்திரிகைகளில் படித்தேன். குற்றவாளியின் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளவில்லை என்பதே எனது ஞாபகம்.

கேள்வி:—அஹ்மதியல்லாதாரைத் தாங்கள் "ஹறுமி" என்று கருதுகிறீர்களா?

பதில்:—நான் "ஹறுமி" என்ற வார்த்தையை அஹ்மதியல்லாத எவருக்கும், அவர் எங்கள் ஜமாஅத்துக்கு மாறு செய்துகொண்டிருக்கிறார் என்பதற்காகக் கூறியதில்லை. எனது தகப்பனாரும் இவ்வார்த்தையை உபயோகித்ததில்லை.

கேள்வி:—"தர்ரிய்யத்துல் பகாயா" என்பதற்கு அர்த்தமென்ன?

பதில்:—"பகிய்யத்" என்ற வார்த்தைக்கு "பகாயா" என்பது பன்மைப்பால். "பகிய்யத்" என்பதற்கு வியபிசாரி என்பது பொருள்.

கேள்வி:—ஹஜ்றத் முஹம்மது (ஸல்.) அவர்களுக்கும் மிர்ஜா குலாம் அஹ்மதுவுக்கும் இடையிலுள்ள காலத்தில் எவரேனும் நபியாக வந்திருக்கிறார்களா?

பதில்:—இந்த இடைக்காலத்தில் எவரும் நபியாக வரவில்லை. ஆனால், அநேக ஜனங்கள்

தங்களுக்கு நபிப்பதவி கிடைத்திருப்பதாகத் தாவாச் செய்தார்களாயினும் அவர்கள் பொய் யர்களாகும்.

கேள்வி :—தாங்கள் லார்டு வெல்லிங்ட னிடம் தூதுவக் கூட்டத்தை அழைத்துச் சென்று "எங்களை சர்க்கார் ஒற்றர்கள் என்று ஜனங்கள் கூறுகிறார்கள்" எனச் சொல்லிக் கொண்டீர்களா ?

(இக்கேள்வியைக் கோர்ட்டார் அனுமதிக்க வில்லை.)

பிர்ஔன் என்ற வார்த்தை பல அர்த்தங் களில் உபயோகிக்கப்படுகிறது. ஒருவர் அர சாங்கம் செய்யும்போது அவர் அக்கிரமும் கொடுமையும் செய்வாராயின் அவர்மீதும் இவ் வார்த்தை உபயோகிக்கப்படுகிறது. மிர்ஜா சாகிபு பிர்ஔன் என்று சொல்லப்பட்டாரா என்பது எனக்கு ஞாபகமில்லை. பிர்ஔனிய ஆசனம் என்ற வார்த்தை உபயோகிக்கப்பட்ட தைப்பற்றிய கருத்து இன்னதென்று நான் கூறமுடியாது.

குற்றவாளியின் பிரசங்கத்தை நான் படித்த போது அவருக்கு விரோதமாக வெறுப்பு எது வும் எனக்கு உண்டாகவில்லை. ஆனால், ஆத்தி ரத்தை தூண்டிவிடக்கூடியனவாக இருந்த அவ ருடைய செய்கைகள் என்னிடத்தில் வெறுக்கத் தக்கனவாயிருந்தன. இந்த அவருடைய பிரசங் கத்தில் கோபமூட்டக்கூடிய வார்த்தைகள் உப யோகிக்கப்பட்டன. ஆனால் என்னுடைய மன உணர்ச்சியை அடக்கிக்கொள்ளக்கூடிய சக்தி எனக்கு இருப்பதால், குற்றவாளியின் பிரசங் கத்தைப் படித்தபின் அவர்மீது எனக்கு எவ் வித வெறுப்பும் உண்டாகவில்லை. இந்தப் பிர சங்கத்தின் எவ்விஷயம் ஆக்ஷேபிக்கத்தக்கது என்று நான் அப்பிரசங்கத்தைப் பார்க்காமல் கூறமுடியாது. (இதன் பேரில் மௌலானா அத்தாவுல்லா ஷாஹ் புகாரியின் பிரசங்கத்தை அவரது கையில் கொடுத்து நீங்கள் ஆக்ஷேபனை யானதென்று கருதுவதை அடையாளமிடுங்கள் என்று கூறப்பட்டது. அதுபொழுது அவர் அவைகளை அடையாளமிட்டுப் பின்வரும் 12 வாக்கியங்களைப் படித்துக் காண்பித்தார் :—

1. பிர்ஔனிய ஆசனம் புறட்டப்படுகிறது.

2. சில முஸ்லிம்கள் மிர்ஜாயியத்தை நிரந்தர மான லஃனத் என்று கருதுகிறார்கள்.

3. அவர் முகமூடியை எடுக்கட்டும். முக் காட்டைத் திறக்கட்டும். பர்தாவை நீக்கி வெளியில் வரட்டும். மூக்கைப் பிடித்துக் கொள்ளட்டும். வீர அலியின் திறமையைக் காண்பிக்கட்டும். குஷ்தி செய்யட்டும். எந்த விதத்திலானலும் வரட்டும். அவர் மோட்டா ரில் வரட்டும். நான் வெறுங்காலில் வருகி றேன். அவர் தேபா, ஹரீர் ஆகிய பட்ட ணிந்து வரட்டும். நான் கத்தர் அணிந்து வரு கிறேன். அவர் அம்பரி உணவு உண்டு குங்கு மப்புத் தேநீர் அருந்தி, யாக்கூத்தியும், பிளோ மிர் கம்பெனியின் ஓய்ன் டானிக்கும் உபயோ கித்துத் தமது அப்பா ஜானின் சுன்னத்துப்படி வரட்டும். நான் என்னுடைய நானுவின் சுன் னத்துப்படி வயிற்றின்மீது கல்லைக்கட்டிக் கொண்டு வருகிறேன். டிப்டி கமிஷனர், கவர் னர், போலிஸ் அதிகாரிகள் வரட்டும். 5 நிமி ஷத்தில் முடிந்து விடுகிறதா இல்லையா என் பதை அவர்கள் பார்க்கட்டும். அவர் வெளியில் வரட்டும். இம்மட்டுடன் போதுமாக்கிக் கொள்ளவேண்டாம். அரசாங்கம் 5 நிமிஷ நேரத்துக்கு நடுநிலைமையாக இருந்து விடு மாயின் பிறகு புகாரியின் தோற்றத்தைப் பார்க்கட்டும்.

4. இந்தக் கெட்ட பூமியில் என் வந்தோம் என்பது தெரியவில்லை.

5. இங்கு "காத்தமுன்னபிய்யீன்" (ஸல்.) அவர்களுக்கு அவமதிப்பு உண்டாகிறது.

6. 'ஸுப்ஹா' வேளை ஆகுவதற்குள் இங்கு நெருப்புப் பற்றிக்கொள்ளும் என்பது அவ ருக்குத் தெரியட்டும்.

7. என்னைத் தனியே விட்டு விடுங்கள். மிர்ஜா பஷீருத்தீனை என்ன செய்கிறேன் என்று பாருங்கள்.

8. அவருடைய கஃபா லண்டனாகிவிடும்.

9. யத்ரிப் (மதீனா) நகரத்து எஜமானரின் கண்ணியத்துக்காக நான் வெட்டுண்டு இறக் காதவரை என்னுடைய ஈமான் பரிபூரணமாக வில்லை என்பதற்கு இறைவன் சாக்ஷியாக இருக்கிறான்.

10. இதுதான் முஸ்லிம்களின் அக்கீதா. ஆனால், இந்த மிர்ஜாயிகள் "யத்ரிப்" நகரத்து எஜமானருக்கு அவமதிப்புச் செய்கிறார்கள்.

11. இப்னுசுஊது மிர்ஜாயிகளின் கொள் கைப்படி கொல்லப்படத்தகுந்தவராக இருக் கிறார்.

42. "என்னை ஆக்ஷேபிப்பவர்கள் காட்டுப் பன்றிகள். அவர்களுடைய ஸ்திரீகள் நாயி னும் கடையர்."

(இது மிர்ஸா கூறிய வார்த்தையை எடுத்துக் காண்பித்தல்.)

பிறகு மிர்ஜா பஷீருத்தின் மேலும் கூறிய தாவது :—

பிளேமிர்கம்பெனியின் ஒய்ன் டானிக் அஹ் மதியா ஜமாஅத்தின் ஸ்தாபகரான மிர்ஜா குலாம் அஹ்மதுக்குச்சம்பந்தப்பட்டது. மிர்ஜா சாகிப் இருமலுக்காக ஒய்ன் டானிக்கை மருந்து என்ற முறையில் உபயோகிப்பதற்காக அவர் தருவித்தார் என்பது எனக்குத் தெரியும். நான் சமயா சமயத்தில் நண்பர்களைத் திருப்திப் படுத்துவதற்காக யாக்கூத்திகள் உபயோகித் துக்கொள்வதுண்டு. என் வயதில் ஒருமுறை குங்குமப்பூ தேநீர் அருந்தி இருக்கிறேன். ஷெய்கு இப்ராஹீம் குற்றம் செய்ததற்காக, ஸ்கூலில் உபாத்தியாயர்கள் பிள்ளைகளைத் தண் டிப்பதுபோல அவரை பிரம்பால் தண்டிக்கப்பட் டிருக்கிறது. 100 ரூபாய்க்கு மேலேயுள்ள தக ராறுகளை எங்கள் அஞ்சுமன் விசாரித்து முடிவு கூறுவதுண்டு. அப்பீல் செய்பவர்களிடம் கொஞ்சம் பிரதி பிரயோஜனமும் வாங்குவ துண்டு. நாங்கள் மூலைக்கல்லாக இருப்பதால் எங்களில் வந்து மோதுபவர்கள் உடைந்து போவார்கள் என்று எனது பிரசங்கத்தில் கூறி இருக்கிறேன். மிர்ஜா சாகிப் 1890-ம் வருஷ இறுதியிலும், 1891-ம் வருஷ ஆரம்பத்திலும் தமக்கு நபிப்பதவி வருவதாகத் தாவாச் செய் தார். நபிமார்களைத் தவிர வேறு யாருக்கும் இல்ஹாம் வரமாட்டாது என்றும், இன்னும் அநேக விஷயங்களைக் குறிப்பிட்டும் சாக்ஷியங் கொடுத்தார்.

பிறகு அப்துல் லத்தீப் என்பவர் சாக்ஷியம் கூறுகையில், 1902-ம் வருஷத்தில் மிர்ஜா குலாம் அஹ்மதுவிடத்தில் தாம் பைஅத்துச் செய்த தாகவும், 1921-ம் வருஷம் மே மாதத்தில் தமக்கு தானே நபிப்பதவி வந்ததாகத் தாம் தாவாச் செய்ததாகவும், 500 பக்கங்கொண்ட "கிஷ்தியே நூவ்வத்" என்ற புத்தகத்தை தாம் இயற்றி இருப்பதாகவும், கலீபா மிர்ஜா பஷீருத்தீன் தம்முடைய தாவாக்களைக் கேட்டதாகவும், ஆனால் அவர் தம்மை நபியென அங்கீகரிக்கவில்லை என்றும், இது சம்பந்தமாக மிர்ஜா பஷீருத்தீனை "முபாஹலா"ச் செய் வதற்காகத் தாம் அழைத்ததாகவும், அதற்கு அவர் வரச் சம்மதிக்கவில்லையென்றும் கூறி முபாஹலாச் செய்வது சம்பந்தமாகத் தாம் பகிரங்கமாக அழைத்த சாலன்ஜ் நோட்டீசைக் கோர்ட்டில் தாக்கல் செய்தார். மேலும் மிர்ஜா குலாம் அஹ்மதுவின் புத்தகங்களைத் தாம் படித்திருப்பதாகவும், டில்லி பிரபல உலமாக்க ளான மௌலவீ முஹம்மது ஹுஸைன், மௌலவீ நதிர் ஹுஸைன் ஆகியவர்களை அவர் பிர்ஔன் ஹாமான் என்றுகூறி இருப்பதாக வும், மௌலவீ நதீர் ஹுஸைன் ஷம்ஸுல் உலமா பட்டம் பெற்றவர் என்றும், இன்னும் தாம் நபியென்று தாவாச் செய்வதாகவும், தமக்கு 70—80 முரீதுகள் இருப்பதாகவும் கூறினர்.

ஸர்தார் லாபாசிங் என்பவர் சாக்ஷியம் கூறுகையில் :—காதியானில் அஹ்மதியர்கள் கூறும் நிபந்தனைகளை ஒப்புக்கொள்பவர்கள் தாம் சுகமாக வாழ முடியுமென்றும், அவைகளை ஒப்புக்கொள்ளாதவர்களுக்கு நெருக்கடி ஏற்படு மென்றும், இவ்வித நிலைமை காதியானில் அஹ் ரார் தப்லீக் மகாநாடு நடைபெறும் வரை இருந்தது என்றும், அஹ்மதியர்கள் தம்மை பஹிஷ்கரித்து தமது மில்லில் மாவு அரைப்ப தில்லை யென்றும், அதனால் அவர்கள் விதிக்கும் நிபந்தனைகளை தாம் ஒப்புக்கொள்வதாகக் கூறியும் ஷர்த்துகளை ஒழுங்கு செய்வதற்காக 100 ரூபாய் கொடுக்கவேண்டு மென்று அவர் கள் கேட்டதால் ஷர்த்துகளை ஒழுங்குசெய்து கொள்ள முடியவில்லை என்றும், காதியானில் சீக்கியர்கள் கூட்டம் கூடியபோது அஹ்மதியர் கள் கூச்சல்போட்டு அதை நடைபெறவிடாமற் செய்து விட்டனர் என்றும், சீக்கியர்களுக்கும் அஹ்மதிகளுக்கும் 6—7 வருஷங்களாகப் பகை இருந்து வருவதாகவும் கூறினர்.

காதியானீ கலீபா மிர்ஜா பஷீருத்தீன் மஹ் மூது அஹ்மதுவின் இளைய சகோதரரான மிர்ஜா ஷரீப் அஹ்மது சாக்ஷியம் கூறுகையில் :— தம்முடைய அனுமதியின்பேரில் முபாஹலா ஆசிரியர் அப்துல்கரீமின் தகப்பனார் ஷாமி லாத்தில் ஒரு வீட்டைக் கட்டியதாகவும், அவர்கள் 1930-ம் வருஷத்தில் அவ்வீட்டை விட்டுப்போய் விட்டதால், 1933-ம் வருஷத்

தில் அதைத்தாம் கைபற்றிக் கொண்டதாகவும், தம்மிடம் இந்த மனையிடத்தை அவர்கள் இரவலாக வாங்கி இருந்ததாகவும், தம்முடைய ஏஜெண்ட் அவ்வீட்டுச் சுவர்களை இடித்ததாகவும், இதுபோது அந்த இடத்தை அஞ்சுமனை அஹ்மதியாவுக்குத் தாம் கொடுத்துவிட்டதாகவும், அஹ்மார் கான்பரன்சு நடைபெற்ற காலத்தில் தாம் அஹ்மதியா அஞ்சுமனின் சார்பாக நாஜிராக (மேன்பார்வையாளராக) நியமிக்கப் பட்டிருந்ததாகவும், கலீபா அவர்கள் காரியாலயத்திலிருந்து கிடைத்த உத்தரவுப்படி தாம் ஒரு சுற்றறிக்கையைத் தபால் மூலம் அஹ்மதியர்களுக்கு அனுப்பியதாகவும், அஹ்மார் கான்பான்சு நடைபெற்றபோது சுமார் 100-150 அஹ்மதியர்கள் காதியானுக்கு வந்ததாகவும், காதியானில் வாலண்டியர் பட்டாளம் இருப்பதாகவும், இப்பட்டாளத்தாருக்கு இன்ஸ்பெக்டர் நிஃமத்துல்லா என்பவர் டிரில் பழக்கிக் கொடுத்ததாகவும், அஹ்மதியா பட்டாளத்துக் கவாத்துச் சட்டங்களைத் தாமே இயற்றியதாகவும், இவைகள் 22-12-1932-ல் "அல்பஜ்லு" பத்திரிகையில் வெளியாகி இருப்பதாகவும், 16 வயது முதல் 40 வயதுவரை யுள்ளவர்களை அந்தப் பட்டாளத்தில் சேர்த்துக் கொள்ளப் படுவதாகவும், இதைக் கற்றுக் கொள்வதற்காக அஹ்மதியர்கள் வெளியிலிருந்தும் வந்து கொண்டிருந்தனர் என்றும் கூறினர்.

பர்ஜந்து அலீ என்பவர் சாக்ஷியம் கொடுக்கையில், காதியான் "தாருல்குலாத்தில்" (நீதிஸ்தலத்தில்) குலாம் நஸூலின்மீது மௌலா பக்ஷ் வழக்குத் தொடுத்ததாகவும், அவ்வழக்கில் கொடுக்கப்பட்ட தீர்ப்புப்படி குலாம் நஸூலுடைய வீட்டை ஏலத்தில் விற்று மௌலா பக்ஷுக்குக் கடன் தொகை கொடுக்கப்பட்டதாகவும், ஒரு அணு கிரயமுள்ள முத்திரைக் காகிதம் தான் காதியானில் விற்கப்பட்டதாகவும், டாக்டர் முஹம்மது இஸ்மாயீலைப் பகிஷ்கரித்து விடும்படி அவரது தகப்பனார், தாயார், சகோதரி ஆகியவர்களுக்கு எழுதப்பட்டதாகவும், அவர்கள் அதற்கு இணங்காததால் அவர்களை ஜமாஅத்தை விட்டு நீக்கிவிட்டதாகவும் கூறினர்.

அமிர்தசரஸில் பிரசுரமாகும் "அல்பை" பத்திரிகையின் ஆசிரியர் மௌலானா முஹம்மது சுலைமான் பாரூக்கி என்பவர் சாக்ஷியம் கொடுக்கையில் பின்வருமாறு கூறினர்:—"நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் கடைசி நபியாக இருந்தார்கள் என்பது உலக முஸ்லிம்களின் ஏகோபித்த கொள்கை. நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்குப் பின் ஒருவர் தமக்கு நபிப்பதவி இருப்பதாக தாவாச் செய்வதானது நாயகம் (ஸல்.) அவர்களை அவமதிப்பதற்குச் சமமாகும். மிர்ஜா குலாம் அஹ்மது தம் முடைய "அர்பயீன்" என்ற புத்தகத்தின் 4-வது வால்யூம் 7-வது பக்கத்தில் "தாம் புதிய ஷரீஅத்தைக் கொண்டு வந்திருப்பதாக தாவாச் செய்திருக்கிறார். (இது கோர்ட்டில் ரிக்கார்டாகத் தாக்கல்செய்யப்பட்டிருக்கிறது). ஜிஹாது செய்வதை அவர் மன்ஸூகாக்கி (மாற்றி) விட்டதாக "தரேதமீன்" என்ற புத்தகம் 64-ம் பக்கத்தில் எழுதி இருக்கிறார். கஷ்தி புத்தகம் பக்கம் 63-ல் காதியானை "ஹரம் பூமி"யாக ஆக்கி இருப்பதாக எழுதி இருக்கிறார். "தமக்குப் பின் உலகில் 30 பேர்கள் நபித்துவத்தைத் தாவாச் செய்வார்கள்; இவர்கள் அனைவரும் தஜ்ஜால்கள் பொய்யர்கள்; நான் கடைசி நபி; எனக்குப் பின் எந்த நபியும் வரமாட்டார் என்று ஹதீது ஷரீபில் வந்திருக்கிறது. இன்னும் நபுவ்வத்துடைய தொடர்பு என்றென்றைக்குமாக முடிவுபெற்று விட்டது என்றும் ஹதீதில் வந்திருக்கிறது. நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் அம்பர் சாப்பிடவில்லை; வாசனைக்காக அதை உபயோகித்திருக்கிறார்கள்."

அமிர்தசரஸ் மௌலானா பஹாவுல் ஹக் கூறிய சாக்ஷியம் வருமாறு.—நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களை அவமதிப்பவரைக் காபிர் என்று நானும் உலக முஸ்லிம்கள் அனைவரும் கருதுகிறோம். நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்குப் பின் தமக்கு நபிப் பதவி வந்திருப்பதாக ஒருவர் கூறுவாராயின் அவர் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களை அவமதித்ததாகவே முஸ்லிம்கள் கருதுவார்கள். மிர்ஜா குலாம் அஹ்மது "அஞ்சாமே ஆத்தம்" அனுபந்தத்தின் 4-வது பக்கம் முதல் 7 வது பக்கம் வரையிலும், தாபிஉல்பலா என்ற புத்தகத்தின் கடைசிப் பக்கத்திலும் ஹஜ்ரத் ஈஸா (அலை.) அவர்களை இழிவுபடுத்தி எழுதி இருக்கிறார். மேலும் நுஜூலுல் மஸீஹ் என்ற புத்தகம் 96-ம் பக்கத்திலும், இஃஜாஸே அஹ்மதீ என்ற புத்தகம் 8-ம் பக்கத்திலும் ஹஜ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி.) அவர்களை இழிவு படுத்தி "என்ஜோபினுள் நூறுஹுஸைன்க

ளிருக்கின்றனர்'' என்றுகேவலமாகக் கூறி இருக்கிறார்.

மிர்ஜா குலாம் அஹ்மது தம்மை நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களைப் பார்க்கினும் உயர்ந்தவர் என்பதற்குக் காரணம் கூறுகையில், ''நஜூலுல்வஹீ'' என்ற புத்தகத்தின் அனுபந்தம் 71-ம் பக்கத்தில் ''நாயகம் (ஸல்.) அவர்களது காலத்தில் சந்திரகிரணம் மாத்திரம் உண்டாயிற்று. ஆனால், எனக்காக சந்திரன் சூரியன் ஆகிய இரண்டு கிரணங்களும் முண்டாயின'' என்று எழுதி இருக்கிறார்.

''அல்பாரூக்'' பத்திராதிபர் மீர் காஸிம் அலீ:—''நான் மிர்ஜா குலாம் அஹ்மது சாகிபிடம் பைஅத்துச் செய்தவனுகையால் நான் அவருடைய ஸஹாபிகளில் ஒருவன். நான் உள்ளூர் அஞ்சுமன் அஹ்மதியாவின் தலைவனுக இருந்தேன். உள்ளூரிலுள்ள அந்த அஞ்சுமன் வழக்குகளை விசாரித்து முடிவு செய்கிறது. இதற்காக காஜியையும் ஏற்படுத்தி இருக்கிறது. விண்ணப்பங்கள் செய்துகொள்வதில் ஜனங்களுக்குக் கஷ்டமில்லாதிருப்பதற்காக நான் 1 அணு முத்திரைக் காகிதத்தை ஜனங்களின் இஷ்டத்தின்மீது ஏற்படுத்தினேன். அதன் நமூனு என் இஷ்டப்படி அச்சிடப்பட்டது.''

குர்தாஸ்பூர் ஸி. ஐ. டி. இன்ஸ்பேக்டர் ஸர்தார் தேவந்தர்சிங்:—தங்களுடைய உயிருக்கு அபாயம் நேரும் என்று 'முபாஹலா' பத்திரிகாலயத்தைச் சேர்ந்தவர்கள் வாய்மொழியாக என்னிடம் கூறியது ஞாபகமிருக்கிறது. அது பொழுது நான் முபாஹலா பத்திரிகாலய கட்டிடத்திற்குச் சென்றபோது அதன் தலைவாசலும் ஜன்னலும், மேல் முகடும் எரிந்துகொண்டிருந்ததைப் பார்த்தேன். அது சமயம் ''முபாஹலா'' பத்திராசிரியர் அப்துல் கரீமோ அவருடைய பந்துக்களில் வேறு யாருமே அங்கில்லை.''

லாஹூர் அஹ்மதிய பத்திரிகையான ''பைகாமே ஸுல்ஹு'' வின் ஆசிரியர் முஹம்மது இன் ஆமுல்ஹக்:—''நாங்கள் மிர்ஜா சாகிபை 'முஜத்திது' என்று கூறுகிறோம். காதியானிப் பார்டிக்காரர்கள் அவரை ''நபி'' யென்று கூறுகிறார்கள். நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்குப்பின் ஒருவர் நபியாக வரலாம் என்று நம்புபவர்களை நாங்கள் தவறில் இருப்பவர்கள் என்று கருதுகிறோம். திருகுர்ஆனையோ அல்லது அதில் சொல்லப்பட்ட ஒரு ஹுக்மையோ ஒப்புக்கொள்ள மறுப்பவர் காபிராகி விடுவர். நாங்கள் மிர்ஜா குலாம் அஹ்மதுவை வாக்களிக்கப்பட்ட மஸீஹ்* என்று ஒப்புக் கொள்கிறோம்.

ஸர்தார் பகத்சிங்:—எங்கள் கிராமத்துக்கு அஹ்மதிப் பிரசாரகர்கள் 6 மாதத்துக்கொரு முறை வருவதுண்டு. அவர்கள், குரு நானக் முஸ்லிமாக இருந்ததால் நீங்களும் முஸ்லிமாகி விடுங்கள் என்றும், குரு நானக் பசுவின் மாமிசம் புசித்ததால் நீங்களும் புசியுங்கள் என்றும் கூறுகிறார்கள். இதனால் எங்களது மத உணர்ச்சி புண்படுகிறது. இவ்வாறு கூறிய அஹ்மதி பிரசாரகருடன் ஒரு தடவை சச்சரவும் ஏற்பட்டது. இது நடைபெற்ற 3, 4 நாட்களுக்குப் பிறகு நான் காதியான் சென்றேன். அங்கு அஹ்மதியர்கள் என்னைத் தாக்கினர்கள் என்று கூறினர்.

மௌலவீ நூர் அஹ்மது:—''மிர்ஜாயிகள் பிரசாரம் செய்யும் முறை மனத்தைப் புண்படுத்துவதாக இருக்கிறது. நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்குப் பின் ஒருவர் தமக்கு நபிப்பதவி கிடைத்திருப்பதாகக் கூறுவாராயின் அவரை முஸ்லிம்களாகிய நாங்கள் 'தஜ்ஜால்' என்றும், பொய்யர் என்றும் கருதுவோம். ஹஜ்றத் ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்களை இழிபடுத்தக்கூடிய முறையில் மிர்ஜா குலாம் அஹ்மது தம்முடைய அஞ்சாமே ஆத்தம், தாபிஉல் பலா, இஜாலயே ஔஹாம், ஜங்கே முகத்தஸ், கிஷ்தியே நூஹ் முதலிய புத்தகங்களில் எழுதி இருக்கிறார். மேலும், ஹஜ்றத் ஈஸா (அலை.) அவர்கள் சாராயம் குடித்ததாக ''கிஷ்தியெ நூஹ்'' என்ற புத்தகம் 65-வது பக்கத்திலுள்ள தமது குறிப்பில் எழுதிவைத்திருக்கிறார்'' எனக்கூறினர்.

மியான் முஹருத்தீன்:—நான் முபாஹலா பத்திராதிபர் மௌலவீ அப்துல் கரீமுடைய வீட்டைப் பார்த்திருக்கிறேன். முபாஹலா கட்டிடங்கள் சென்ற வருஷத்தில், இராத்திரி 12 மணி வேளையில் இடிக்

*தறிப்பு:—மர்யமுடைய மகனான ஹஜ்ரத் ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் கடைசி காலத்தில் வருவார்கள் என்று ஹதீதில் கூறப்பட்டிருப்பதால், அவர்களுக்கு மஸீஹ் என்று ஹதீதில் கூறப்பட்டிருப்பதை இந்த காதியானிகள் திரித்துப்புரட்டி மிர்ஸா குலாம் அஹ்மதுக்கு மஸீஹ் என்ற அந்த பெயரைக் கொடுத்திருக்கிறார்கள்.

கப்பட்டன. இக்கட்டிடம் இடிக்கப்படுவதற்கு ஒருநாளைக்குமுன் அதைப் பார்த்திருக்கிறேன். இந்த போட்டோவில் இருப்பதுபோல் அதனைப் பார்த்திருக்கிறேன். காதியானிலுள்ள அஞ்சுமனே இஸ்லாமியாவுக்கு நான் காரியதரிசி. 1925-ம் வருஷத்தில் நடைபெற்ற எங்கள் மகாநாட்டை அஹ்மதியர்கள் தாக்கிக் கலகஞ் செய்தனர். அதுபொழுது அவர்கள்மீது வழக்குத் தொடரப்பட்டு அவர்களுக்குத் தண்டனையும் கிடைத்தது. 1930-ல் அஹ்மதியர்கள் என்னை வீட்டைவிட்டு வெளியேற்றிவிட்டனர். என்னை வெளியேற்றுவதற்கு முன் என் மனைவியையும் புதல்வியையும் அவர்கள் ரொம்ப அடித்துத் தொந்திரை செய்தனர். அதனால் நாங்கள் 6 மாத காலம் காதியானைவிட்டு வெளியிலிருந்தோம். என் கடை நெருப்பால் எரிக்கப்பட்டது. பிறகு நான் அஹ்மதியர்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டதால் என்னைக் காதியானில் இருக்க அனுமதித்தனர். அதிலிருந்து நான் மத சம்பந்தமான எக்காரியங்களிலும் கூட்டங்களிலும் சம்பந்தப் படுவதேயில்லை. முஹம்மது அமீன்கான் பட்டான் முஜாஹித் புகாரா என்பவர் என்னை அழைத்துக்கொண்டுபோய் ஒரு வீட்டில் வைத்து அடிக்க ஆரம்பித்தார். உடனே யான் சுவர் ஏறிக் குதித்து ஓடிவிட்டேன். அஹ்ரார்களின் தப்லீக் மகாநாடு காதியானில் நடைபெறுவதற்குமுன் அஹ்மதியல்லாதாரின் உயிர் அபாயத்திலிருந்தது." எனக் கூறினர்.

ஷாதி என்பவனின் மகன் இஸ்மாயீல் வண்ணான் :—சுமார் 1½ வருஷங்களுக்குமுன் முபாஹலா பத்திராதிபர் வீட்டை இடிப்பதை நான் பார்த்தேன். 400 அல்லது 500 பேர்களைக் கொண்ட ஒரு கூட்டம் இரவு 2 மணி சுமாருக்கு அவ்வீட்டை இடித்துக்கொண்டிருந்தது. அப்பொழுது நான் துணி தோய்ப்பதற்காக அவ்வழியே சென்றேன்.

மௌலவீ முஹம்மது யாக்கூப் :—எங்கள் கிராமம் பக்கம்பிடி. அங்கு இரண்டு அஹ்மதியர்களிருக்கின்றனர். அஹ்மதிப் பிரசாரகர்கள் எங்கள் கிராமத்துக்குப் பிரசாரம் செய்ய வருவதுண்டு. மூன்றுமுறை அஹ்மதியர்களில் 600 அல்லது 700 பேர் ஆயுதந்தரித்துக் கொண்டு வந்தார்கள். அதுபொழுது இரு முஸ்லிமை அடிக்கவும் செய்தனர்.

"முபாஹலா" பத்திராதிபர் மௌலவீ அப்துல் கரீம்:—1914-ம் வருஷத்தில் காதியானுக்கு வந்து 2 வருஷம் வாடகை வீட்டிலிருந்தோம். அப்பால் ஷாமிலாத்திலுள்ள ஒரு பள்ளத்தை மோடாக்கி வீடுகட்டிக்கொண்டிருந்தோம். நாங்கள் காதியான் வருவதற்கு முன்பே அஹ்மதியர்களாக இருந்தோம். நான் காதியானிலுள்ள அஹ்மதியா ஸ்கூலில் வாசித்த பின்னர் பஞ்சாப் சர்வகலாசாலையில் மௌலவீ பாஜில் பட்டம் பெற்றேன். 1927-ம் வருஷம் வரை அஹ்மதீ ஜமாஅத்தின் கௌரவப் பிரசாரகராகவுமிருந்தேன். அதுபொழுது மிர்ஜா குலாம் அஹ்மதுவின் சில புத்தகங்களைப் படித்தபின் அஹ்மதியா ஜமாஅத்தை விட்டு விலகிவிட்டேன். என்னுடைய சில கேள்விகளுக்கு பதில் கூறுமாறு மிர்ஜா பஷீருத்தினிடம் நேரில் கேட்டு அவரை முபாஹலாவுக்கும் அழைத்தேன். அவர் அதற்கு இணங்கவுமில்லை ; பதில் கூறவுமில்லை. ஆனால் என்னைக் கொன்று விடுவதாகப் பயங்காட்டப்பட்டது. அதற்குப்பின் பகிரங்க நோட்டீசுகள் வெளியிட்டேன். பின்னர் "முபாஹலா" பத்திரிகையையும் ஆரம்பித்தேன். முஹம்மது அமீன் பட்டான் முஜாஹித் புகாரீ என்னைத் தாக்கியதால் அதன்பேரில் வழக்கு நடந்து அவர் தண்டிக்கப்பட்டார். என்வீட்டின் சுவரில் மோட்டை கடிதங்களை ஒட்டிவைப்பார்கள். என் வீட்டைப் பெட்ரோல் ஊற்றி எரித்து விட்டுக் கலகம் செய்து என்னையும் என்னைச் சேர்ந்தவர்களையும் கொலை செய்யப்போவதாகவும் கேள்விப்பட்டோம். அதன்பேரில் 7-3-30-ல் வீட்டைக் காலி செய்துவிட்டு காலிஸா போர்ட்டிங் ஹௌஸில் இரவெல்லாம் தங்கி இருந்து மறுநாள் குர்தாஸ்பூர் எஸ். பி. யிடம் ஆஜராஞ்சும். காதியானுக்கு நாங்கள் செல்லக்கூடாதென்றும் அவ்வாறு மீறிச் சென்றால் அதிகாரிகள் பொறுப்பாளிகளாக மாட்டார்கள் என்றும் அவர் கூறினர். 5-6 நாட்களுக்குப் பின் எங்கள் வீடு நெருப்பால் எரிக்கப்பட்டது தெரியவந்தது. அப்புறம் மற்றொரு முறை நெருப்பால் எரிக்கப்பட்டதாகவும் எங்களுக்குத் தகவல் கிடைத்தது. என்மீது 153-வது பிரிவுப்படி ஒரு வழக்கும் நடத்தப்பட்டது. அதில் நான் தண்டனை அடைந்தேன். அவ்வழக்கு ஆரம்பமான போது எனக்கு ஜாமின் கொடுப்பதற்காக முன்ஸிபி முஹம்மது ஹுஸைன் கோர்ட்டுக்குக்

வந்தார். அதுசமயம் காதியானி பிளீடர் மௌலவீ பஜ்லுதீனும், இஸ்மாயிலும் எங்களைச் சுட்டிக்காட்டி முஹம்மது அலீ என்பவரிடம் என்னவோ கூறிக்கொண்டிருந்தனர். மாலை 6-மணி சுமாருக்கு நாங்கள் மோட்டார் காரில் பட்டாலாவுக்குச் சென்றோம். அந்த முஹம்மது அலியும் நாங்கள் ஏறி இருந்த காரில் வந்தார்.பட்டாலா-காதியான் ரயில்வே கிராசிங் ரோட்அண்டை கார் வந்தவுடன் முஹம்மது அலீ என்னைக் கத்தியால் குத்தினர். மறுமுறை குத்த ஆரம்பித்தபோது என் தகப்பனார் முஹம்மது அலியைப் பிடித்துக் கொண்டார். கார் நின்று விட்டது. நான் மோட்டாரை விட்டோடினேன். முஹம்மது அலீ என்னைத் துரத்திக்கொண்டு வந்தார். நான் தப்பி விட்டேன். அதுபோது எதிரில் வந்த மௌலவீ முஹம்மதுஹுஸைனை நான்தான் என மதித்து முஹம்மது அலீ அவரைக் குத்திவிட்டதினால் அவர்மாண்டார். இதன்பேரில் வழக்கு நடந்து முஹம்மது அலிக்குத் தூக்கு தண்டனை கிடைத்தது. இக்கொலை மாலை 7-மணிச் சுமாருக்கு நடந்தது. அதுபொழுது இருட்டாக இருந்தது. 1933-ம் வருஷத்தில் எனக்குக் காதியானிலிருந்து ஒரு நோட்டிஸ் கிடைத்தது. அதில், "உங்கள் வீடு இடிந்து விழும் நிலைமையிலிருக்கிறது; நீங்கள் வந்து அதை இடித்து விடுங்கள்" என்றெழுதி இருந்தது. உடனே நான் குல்ஜார் ஹுஸைன் என்ற போட்டோகிராபரை அனுப்பி எனது வீட்டைப் புகைப்படம் எடுக்கும்படி செய்தேன். அந்தப் புகைப்படம் தான் கோர்ட்டில் ரிக்கார்டாகத் தாக்கலாகி இருப்பது.

குர்தாஸ்பூர் வக்கீல் மிர்ஜா அப்துல்ஹக்:— டிபன்சு தரப்பு சாக்ஷியான ரஹ்மத்துல்லா இக்கோர்ட்டில் D. W./13 என்ற ரிக்கார்டை தாக்கல் செய்திருக்கிறார். குலாம் ரஸூலின் மீது மௌலா பக்ஷ் 575 ரூபாய்க்கு வழக்குத் தொடுத்தார். இதை மௌலவீ அப்துர் ரஹ்மான் விசாரித்து பைசல் செய்தார். 575 ரூபாய்க்கும், அதன் லாபத்துக்கும், கோர்ட்டு பீஸ் ரூ. 1-4-0-க்கும் டிக்ரீ செய்திருப்பதாக ரிக்கார்டிலிருந்து தெரிய வருகிறது. இந்த டிக்ரிப்படி கடன்பட்டவர் வீட்டை ஏலம் போட்டுக் கடன் கொடுத்தவருக்குப் பணம் பட்டுவாடாச் செய்யவேண்டும் என்று எழுதி இருக்கிறது. இதை ஆக்ஷேபனை செய்து அப்பில் செய்யப்பட்டது. குலாம் நபியும், ஜுபர்முஹம்மதுவும் அப்பில் விசாரணை புரிந்து மௌலா பக்ஷுக்குச் சாதகமாகத் தீர்ப்புச் செய்தனர். இதன்பேரில் மிர்ஜா பஷீருத்தீனிடம் அப்பில் செய்யப்பட்டது. அவர் அசல் தொகையில் ரூ. 500-ரை ஊர்ஜிதம் செய்து லாபத்தைத் தள்ளி விட்டார். கோர்ட்டுச் செலவு ரூ. 1-4-0 கீழ்க்கோர்ட்டிலேயே வசூலாகிவிட்டது.

லாகூர் அஹ்மதியா பார்ட்டித் தலைவர் பாதரி முஹம்மது அலீ, எம்.ஏ., எல்.எல்.பி. யின் சாக்ஷியம்.

நான் அஹ்மதீ ஜமாஅத்தைச் சேர்ந்தவன். 1897-ம் வருஷத்தில் நான் மிர்ஜாகுலாம் அஹ்மதுவினிடத்தில் பைஅத்துச் செய்தேன். மிர்ஜாகுலாம் அஹ்மது 1908-ல் மரித்தார். இவருடைய ஜீவியகாலத்திலும் இவரது கலீபா நூருத்தீன் காலத்திலும் நான்தான் சென்ட்ரல் அஹ்மதியா அஞ்சுமனுக்குக் காரியதரிசியாக இருந்தேன். 'ரிவ்யூ ஆப் ரிலிஜியஸ்' என்ற பத்திரிகைக்கு ஆசிரியராகவுமிருந்தேன். திருகுர் ஆனுக்கு 1909-ம் வருஷத்தில் ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பும் செய்தேன். சென்ற 35-36 வருஷகாலத்தில் அநேக புத்தகங்களை எழுதியுள்ளேன். மிர்ஜா குலாம் அஹ்மது நபியல்ல வென்பது என் அபிப்பிராயம். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப்பின் ஒருவர் தன்னை நபியென்று தாவாச் செய்வாராயின், அவர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அவமதிப்புச் செய்கிறார் என்பது என் அபிப்பிராயம். நாயகம்(ஸல்) அவர்களுக்குப் பிறகு பழைய நபியோ, புதிய நபியோ எவரும் வரவேண்டிய அவசியமில்லை. கத்தமுன் நுபுவ்வத்தை (நபிப்பட்டம் முடிந்து விட்டது என்பதை) அங்கீகரிப்பவர்கள் பைத்தியக்காரர்கள் என்றும், 'மர்தூத்' என்றும் 'லஃனத்தீ' என்றும் மிர்ஜாபஷீருத்தீன் எழுதி இருக்கிறார். ஹறம் பூமி என்பது கஃபாவைச் சுற்றியுள்ள குறிப்பிட்ட இடத்துக்குப் பெயர். 'இஸ்திஆரா' என்ற வழக்கின்படி இதர இடத்துக்கும் "ஹறம்பூமி" என்று சொல்லலாம். மிர்ஸா வேறு இடத்துக்கு கஃபா என்று எழுதி இருப்பது எனக்கு ஞாபகமில்லை. "உம்முல் முமீனின்" என்ற வார்த்தைகள் திருகுர் ஆனில் ஹஜ்றத் முஹம்மதுர் ரஸூலுல்லாஹி (ஸல்.) அவர்களின் வாழ்க்கைத் துணைவிகளுக்கு மட்டும்தான் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. மிர்ஜாகுலாம் அஹ்மதுவின் மனை

விக்கு காதியானிகள் "உம்முல்மூமீனின்" என்ற வார்த்தைகளை உபயோகிக்கின்றனர். "கத்தமுன்நுபுவ்வத்து" ஈமானின் முக்கிய மான அம்சம். நான் வீடுகட்டுவதற்காக காதி யானில் இடம் வாங்கி இருந்தேன். எனக்கு அங்கு பயமேற்பட்டிருந்ததால் வீடுகட்ட வில்லை. உடனே என் ஜமாஅத்துடன் நான் லாகூருக்குவந்துவிட்டேன். ஒரே இடத்தில் இரண்டு ஜமாஅத்துகள் இருந்தால் ஒருவருக் கொருவர் பிணக்குதான் உண்டாகும்; நிர்மாண வேலை ஒன்றும் நடைபெறாது. தவிரவும், காதி யானில் என்மீது பொடிக்கற்கள் எறியப்பட் டன. நான் லாகூருக்கு வந்து விட்டதற்கு இதுவும் காரணமாகும். "தாப்பத்துல் அர்லு" என்பதற்கு மிர்ஜா சாகிப் பிளேக் கிருமி என்று அர்த்தம் செய்திருக்கிறார்.

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்குப் பின் தன்னை நபியென்று தாவாச் செய்பவர் போய் யர் காபிராகி விடுவோர், "30 பொய்யர்கள் தோன்றுவார்கள்; ஒவ்வொருவரும் தன்னை நபியென்று தாவாச் செய்வார்கள், ஆனால் அவர்கள் நபியல்ல" என்பதாக ஹதீது ஷரீ பில் வந்திருக்கிறது. ஆனால் நான் மிர்ஜா சாகிபை வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்றும் மஹ்தீ என்றும் கருதுகிறேன். மிர்ஜா குலாம் அஹ்மது இமாமாக இருந்ததால் அவர் எழுதிய வைகளையும் அவரது பிரசங்கங்களையும் உண்மை என்றும் மதிக்கிறேன் .மிர்ஜா குலாம் அஹ்மதுவின் மனைவியை நான் "உம்முல்மூமி னீன்" என்றழைத்தது எனக்கு ஞாபக மில்லை. "இஸ்திஆரா" என்ற முறையில் நான் அவ்வாறு அழைத்திருக்கக்வும்கூடும். மிர்ஜா குலாம் அஹ்மதுவை வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்று நம்பாதவரை நான் முஸ்லிம் என்று கருதமாட்டேன். மிர்ஜாசாகிபுடைய மனை விக்கு 'இஸ்திஆரா" என்ற வழக்குப்படி "உம் முல்மூமீனின் என்று எழுதலாம். ஆனால், குர் ஆனின் கருத்துப்படி எழுதக்கூடாது. என்று கூறினர் இத்துடன்சாக்ஷிவிசாரணை முடிந்தது. ஏப்ரல்மீ 8உ ஆர்டுமென்ட் நடைபெற்று 25-ந்உ முடிவும் கூறப்பட்டுப்போயிற்று.

சோதரீர்!

காதியானீ லாகூர் பார்ட்டியார் இவ்வழக்கில் எவ்வாறு சாக்ஷியங் கொடுத்திருக்கின்றனர் என் பதை ஊன்றி கவனிப்பார்களாக!! மிர்ஸாயிகள், குலாம் அஹ்மதுவை ஒப்புக்கொள்ளாத முஸ் லிம்களையெல்லாம் காபிர்களென்று பகிரங்க மாய்க் கூறுகின்றார்கள். அஹ்மதியர்கள், மிர்ஜா, தான் நபியென்று தாவாச்செய்தபோதிலும் அவரை 'மஸீஹ மவ்ஊது' அதாவது பிற்காலத் தில் வருவார்களென நபிகள் பெருமானர் (ஸல்.) அவர்களால் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்று கூறுகின்றார்கள். இக்கூற்றிலிருந்து மிர் ஸாயிகள் உலகிலுள்ள முஸ்லிம்கள் அடங்களை யும் காபிர்களென்கின்றனரென்பது நன்கு புல னாகின்றன. இவர்களின் இக்கூற்றை நம் நேயர்கள் நன்கு கவனித்துப்பார்த்து மிர்ஸாயி கள் முஸ்லிம்களாகிய நம்மை எவ்வாறு கருதி இருக்கின்றனரென்பதை நன்கு தெரிந்து கொள்வார்களாக.

முந்துங்கள்! கொஞ்சம் பிரதிகளே யுள்ளன! முந்துங்கள்!

திருமறைத் தமிழுரை

தென்னிந்திய முஸ்லிம்கள் நீண்ட நாளாய் வெகு ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த திருகுர்ஆன் தமிழ் மொழிபெயர்ப்பு, கூத்தாநல்லூர் சாந்தி பிரகடன சபையாரின் நன்முயற்சியால் (தென்னிந்திய உலமாக்களால் பரிசீலனை செய்யப்பட்டு, உலமாக்கள் மகாநாட்டில் அங்கீகாரமாகி) 10 ஜுஸ்உக்கள் அடங்கிய முதல் பாகம் வெளி வந்து விட்டது. ஆண்டவனின் திரு வசனத்தைப் படித்து அதன் கருத்துக்களை உணர்ந் தொழுகவேண்டியது ஒவ்வொரு மானிடர் மீதுமுள்ள முக்கியக் கடமையாகும்.

இது ஒவ்வொரு ஆயத்தையும் ஓதி அதற்குள்ள அருத்தத்தை நல்ல விதமாய்த் தெரிந்துகொள்வதற்கு ஹேதுவான முறையில் அமைக்கப்பட்டு, நேர்த்தியான பைண்டும் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, ஒவ்வொருவரும் வாங்கிப்படித்துப் பயன் பெறுவார் களாக. கிரயம் ரூ. 4-0-0. போஸ்டேஜ் வேறு.

கிடைக்குமிடம்:— O. S. சதக்தம்பி மரைக்காயர்,
36, அர்மீனியன் தெரு, ஜி. டி., மதராஸ்.

ஹஸ்ரத் அப்துல்லா ஹிப்னு அப்பாஸ் (ரலி.)

தங்களது பெயர் அப்துல்லாஹ் வாகும். ஹஸ்ரத் அவர்களுக்கு 'அமீனுல் உம்மா" என்னும் காரணப் பெயருமுண்டு. தாங்கள் நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்களது பெரிய தந்தையாகிய ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி.) அவர்களின் புதல்வராகும். அல்லாஹ்தஆலா ஹஸ்ரத் அவர்களின் தற்சுபாவத்திலேயே தைரியத்தையும் கூர்மையான அறிவையும், உறுதியான எண்ணத்தையும் பிரத்தியேகமாக அளித்திருந்தான் எனவே, ஹஸ்ரத் அவர்களின் அறிவாற்றல் பிரத்தியேக ஆழ்ந்த சிந்தனை புரிவதான மேன்மையுடையதாக இருந்ததால் அதி துட்பமான விஷயங்களையுங்கூட அதி சீக்கிரத்தில் கிரகித்துக்கொள்ளும் கல்விக் கடலாக இருந்ததென ஹஸ்ரத் அப்துல்லா ஹிப்னு உமர் (ரலி.) அவர்கள் கூறுகின்றார்கள்.

ஆரம்ப விஷயம்

குரைஷியர்கள், பனூஹாஷிம்களிடத்தில் எவ்வாறான சம்மந்தமும் வைத்துக்கொள்ளக் கூடாதென்று முடிவு செய்து அன்னோரை சிரைக் கைதிகளைப்போல் நடத்தி வந்தகாலை ஹஸ்ரத் அவர்களின் திருஜனனமேற்பட்டது. பயங்கரத்தைக் கொடுக்கத்தக்க இச்சம்பவத்தின் விபரம் வருமாறு :—

நபிப்பதவி கிடைத்த ஏழாம் ஆண்டு முஹற்றம் மாதம் 2-ந் திகதியன்று குரைஷித் தலைவர்களெல்லாம் "பைத்துல் ஆமீர்" என்னுமிடத்தில் ஒன்று கூடி இஸ்லாத்தை அழித்து விடுவதற்கான சதியாலோசனையிலீடுபட்டு ஒவ்வொருவரும் தம் தம் அபிப்பிராயங்களைக் கூற முற்பட்டனர். அதுபொழுது அபூஜஹ்ல் என்பான் மிக்க ஆத்திரத்தோடு ஆவேசம் தளும்பும் பிரசங்கமொன்று புரிந்தான் அதாவது,

"சோதரீர்! இஸ்லாம் எவ்வாறான சுறுசுறுப்போடு முன்னேற்றமடைந்து பரவிச் செல்கிறதென்பதை உற்றுணர்ந்து பாருங்கள்! இன்னும் முஹம்மது (ஸல்.) உடைய போதனைகள் எவ்வாறு ஒப்புக்கொள்ளப்படுகிறது என்பதையும் கவனியுங்கள்!!, ஆகவே, இதனை நாம் நன்காலோசித்து, பனூஹாஷிம்களுடன் எவ்வாறான சம்மந்தமும் வைத்துக்கொள்ளலாகாதென்றும், முழுப் பிரயாசையோடு இஸ்லாத்தை அழித்து நசுக்கி விடுவதற்கு அபார முயற்சி செய்யவேண்டுமெனவும் அபிப்பிராயங் கூறுகின்றேன்" எனத் தெரிவிக்கவே, அபூஜஹ்லின் இவ்வாலோசனையை யாவரும் முழுமனதோடு அங்கீகரித்துக்கொண்டு பனூஹாஷிம்கள், முஹம்மது (ஸல்.)வை கொலைசெய்து விடுவதற்கு சம்மதித்து, தங்கள்வசம் முஹம்மதுவை (ஸல்.) ஒப்புவிக்கும்வரை அவர்கள் பனூஹாஷிகளுடன் எவ்வித கொள்வினை கொடுப்பினையும் செய்யக்கூடாது; அவர்களிடம் கொடுக்கல் வாங்கல் செய்யவுங்கூடாது; அவர்களுக்கு எவ்வித உதவியும் செய்யக் கூடாது; அவர்களைச் சந்திக்கவுங்கூடாது; தீன் சாமான்களை அவர்களுக்குக் கொடுக்கவும் கூடாது என்னும் ஓர் அறுதிமான பத்திரத்திரம் ஏற்படுத்தி யாவரும் அதில் கையெழுத்துச் செய்துவிட்டனர்.

இந்த அறுதியானப் பத்திரம் நுபுவ்வத்தின் ஏழாம் ஆண்டு முஹற்றம் மீ 5ஆ நடைபெற்று 6-ந் தேதி அது கஃபா ஷரீபின் தலைவாயலில் தொங்கவிடப்பட்டது. ஹஸ்ரத் அபூதாலிப் (ரலி.) அவர்களுக்கு இச்செய்தி தெரியவே, யாது செய்வதெனத் தோன்றுமல் பனூஹாஷிடம் கூட்டத்தினர் யாவரையும் அழைத்து *'ஷஃபயே அபூதாபிபு'க்குச்சென்றுகார்மானந்தேடிக்கொண்டார்கள். பிறகு மூன்றுவருட காலம்வரை அந்த இடத்திலேயே மிக்க கஷ்டத்தோடு காலங் கழித்துவந்தார்கள். இது, உண்மை-சத்திய அடியார்கள் மரங்களிலுள்ள இலைகளைச் சாப்பிட்டு காலங்கழிக்கும் நேரமாகவும், சிறுசிறு பிள்ளைகள் பசி, தாகத்தின் மேலீட்டால் பரிதபிக்கும் சந்தர்ப்பமாகவும், அக்குழந்தைகளின் மாதாக்கள் அன்னோருக்கு நிகழ்ந்துள்ள இச் சம்பவத்தைக்கண்டு அழுது கண்ணீர்விடும் காட்சியாகவும் இருந்தது.

* இஃது மக்காவுக்குச் சமீபமாக மலை அடிவாரத்திலுள்ள ஒரு இடத்தின் பெயர்.

ஆனல்விக்கிரக ஆராதனையையுடைய நயவஞ்சக க்கூட்டத்தினரான அபூஜஹ்ல் கோஷ்டியின ருக்கு இதனைக்கண்டு சற்றேனும் இரக்கமேற் படவே இல்லே. இக்கஷ்ட சங்கடமுடைய காலத்தில்தான் ஹஸ்ரத் அப்துல்லா ஹிப்னு அப்பாஸ் (ரலி.) அவர்கள் ஜனனமானர்கள்.

யாவரும் கஷ்டத்தை சகித்துக்கொண்டு அந்த இடத்தில் வாசஞ்செய்துகொண்டிருக் குங் காலே, ஒருநாளன்று ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி.) அவர்கள், பெருமானர் (ஸல்.) அவர் களது முன்னிலேயில், தங்கள் மனேவி கேர்ப்ப வதியாய் இருப்பதைத் தெரிவித்துக்கொண்ட போது பெருமானர் (ஸல்.) அவர்கள், "அல்லாஹ்த ஆலா தங்களுக்கு சீதேவித்தன முடைய குழந்தையை தந்தருள்புரிவானுக" என்னும் சுபச்செய்தி கூறினர்களென்றும், பின்னர் ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி.) ஜனன மானவுடன் தங்கள் உமிழ்நீரை அவரது வாயில் போட்டு இருகாதுகளிலும் பாங்கு, காமத்துக்கூறி நல் துஆ செய்தார்களென்றும் ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்கள் கூறியிருக் கின்றார்கள்.

கல்வி ஒழுக்கம்

ஹஜ்ரத் அவர்கள் ஏழு பிராயத்தையடைந்த போது, ஹஸ்ரத் அலீ (ரலீ.) அவர்கள் குர் ஆன்ஷரீப் முதலிய கல்வியை கற்பித்துக் கொடுத்து எழுதவும் படித்துக்கொடுக்கவே, ஹஸ்ரத் அவர்கள் 10 வயதில் நிகரற்ற ஆசிரிய ராய் அமைந்துவிட்டார்கள். ஹஸ்ரத் அப் துல்லாஹிப்னு அப்பாஸ் (ரலி.) அவர்கள், கூர் மையான அறிவாற்றலுடையவர்களாக இருந்த தன் காரணமாக பெருமானர் (ஸல்.) அவர் களிடமிருந்து கேட்கும் ஹதீதுகளேயெல்லாம் அப்படியே மனதில் கொள்பவர்களாக இருந் தார்களென்றும், பெருமானர் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களுக்குப்பின் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), ஹஸ்ரத் உமர் (ரலி.), ஹஸ்ரத் உதுமான் (ரலி.), ஹஸ்ரத் அலீ (ரலி.) இவர்களின் பிரசங் கங்களே மனனஞ் செய்தவர்களாயும், குர்ஆன் ஷரீபுக்கு மனம் கவரும் விதத்தில் வியாக் கியானம் கூறுபவர்களாயும் இருந்தார்களென் றும், பெரும்பெரும் சஹாபிகள் அவர்களின் கல்வித்திறமையை மெச்சி ஹஸ்ரத் அவர் களுக்கு கல்விக்கடல் என்னும் பட்டமளித்தார் கள் என்றும் ஹஸ்ரத் அப்துல்லா ஹிப்னு உமர் (ரலி) அவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

ஹஸ்ரத் அவர்களின் கல்வித்திறமை பிரக் யாதி பெற்று விளங்கியதன் பயனுக தூர தேசங்களிலிருந்தெல்லாம் மகாஜனங்கள் இவர் களிடம் வந்துகொண்டிருந்தார்களென்றும், ஹஸ்ரத் அவர்கள்பால் எவ்வாறான பெருமை யின் அடையாளமோ, தர்ப்புகட்சியின் தோற்ற மோ காணப்படவில்லே என்றும், ஹஸ்ரத் அவர்களேப் பார்க்கினும் தப்ஸீர், ஹதீதுக் கலே களே நன்கு தெரிந்தவர் யாருங்கிடையாதென் றும், ஹஸ்ரத் ஜைதிப்னு அர்கம் (ரலி.) அவர் கள் கூறியிருக்கிறார்கள்.

ஹஸ்ரத் அவர்களிடம் ஏதாகிலுமொரு விஷயத்தைக் கேட்டால், ஆரம்பமாக குர்ஆன் ஷரீபைக் கொண்டே பதில் கூறுவார்கள். அந்த விஷயம் குர்ஆன் ஷரீபில் தென்பட வில்லேயானல் ஹதீது ஷரீபைக்கொண்டு பதில் கூறுவார்கள். ஹதீதிலும் காணப்படவில்லே யாயின் ஹஸ்ரத் லித்தீக் அக்பர் (ரலி.) அல் லது உமரபாரூக், உதுமான், அலீ (ரலி,ம்) ஆகியோர் தீர்ப்பளித்த விஷயங்களே எடுத்துக் கூறுவார்கள். அவைகளிலும் விஷயம் புலனுக வில்லேயாயின் தாங்கள் சுயமே ஆலோசனே புரிந்து பதில்சொல்லிவிடுவார்கள் என, ஹஸ்ரத் அப்துல்லா ஹிப்னு மஸ்ஊத் (ரலி.) அவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

"என்பார்வை ஹஸ்ரத் அவர்கள்மீது ஏற் பட்டபோது எம்மை அறியாமலே "இவர் மானிடரில் மேலானவராக இருக்கும் என்னும் வார்த்தை என் வாயிலிருந்து வெளி யானதென்றும், ஹஸ்ரத் அவர்கள் பிரசங்கம் புரிவதற்காக எழுந்து நிற்பார்களாயின் யாவரை யும்விட நாகரீகமாய்ப் பேசுவார்களென்றும், குர்ஆன் ஷரீபின் கட்டளேகளே எடுத்துக் கூறுங் கால், கஷ்டமில்லாமல் துயர்படியாக வாக்கியங் கள் வெளியாகிக் கொண்டிருக்குமென்றும் ஹஸ்ரத் மஸ்ரூக் (ரலி.) அவர்கள் கூறியிருக் கின்றார்கள்.

ரஸூல் (ஸல்.) மீது பிரீதி

ஹஸ்ரத் அவர்களுக்கு, நபிகள் பிரான் (ஸல்) அவர்கள் மீது அளவற்ற பிரீதி ஏற்பட்டிருந்த தால், சத்தியத் தூதர் (ஸல்.) அவர்கள் எந் தெந்த இடத்தில் நின்று தொழுகின்றார் களோ ஆங்கெல்லாம் ஹஸ்ரத் அவர்கள் தொழுகை நிறைவேற்றுவார்கள். எந்த மரத் தடியில் பெருமானர் (ஸல்) அவர்கள் தங்கு

வார்களோ அந்த மரங்கள் காய்த்து போகாதிருப்பதற்காக ஹஸ்ரத் அவர்கள் அவைகளுக்கு தண்ணீர் ஊற்றுவார்கள். பெருமான் (ஸல்) அவர்கள் வியாதிஸ்தர்களைக் காண்பதற்குச்செல்லும்போதெல்லாம் இவர்களும்கூடவே செல்வார்கள். சுருங்கக்கூறுமிடத்து, நபிகள் திலகம் (ஸல்) அவர்களது சொல், செயல் இவைகளைப் பின்பற்றியொழுகுவதை ஹஸ்ரத் அவர்கள் தங்கள்முக்கிய கடமையாகக் கொண்டிருந்தார்களெனக் கூறலாம். "பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் குளித்தோ, அல்லது ஒளுச்செய்தோ மீதப்படும் தண்ணீரை ஹஸ்ரத் அப்துல்லாஹிப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் உபயோகப்படுத்திக்கொள்வதை தங்களுக்குள்ள பெரியதோர் பாக்கியமெனக் கருதியிருந்தார்களென ஹஸ்ரத் ஆயிஷா (ரலி.) அவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

வணக்கத்தின்மீது சுவை :—ஹஸ்ரத் அவர்களுக்கு வணக்கம் புரிவதன்மீது அபரிமிதமான பிரீதி ஏற்பட்டிருந்ததால், ஒரு இராப் பகலுக்குள் சுமார் 200 ரக்கஅத்து நபில் தொழுகையை நிறைவேற்றி விடுவார்கள். அநேக இரவுகளின் மத்தியில் விளித்து சிரசை பூமியில் வைத்து அல்லாஹ் தஆலாவின் தூய்மையை எடுத்துக் கூறிக்கொண்டிருப்பார்கள்.

ஹஸ்ரத் அவர்கள் தங்களது அந்திய காலத்தில் சதாவும் அல்லாஹ்வின் தியானித்தில் மனதை திருப்பியவர்களாகவும், சதாவணக்கம் புரிபவர்களாகவுமாய் விட்டார்க ளென்றும், இரவு பகலில் 250 ரக்கஅத்து தொழுகையை நிறைவேற்றுபவர்களாகவும், 3000 சலவாத்து ஓதுபவர்களாயும், சிலகால் குர்ஆன் ஷரீபின் சில ஆயத்துகளை ஓதி அதன்மீது பிரக்ஞை யற்ற ஒரு சம்பவம் நிகழ்பெற்று, அதனால் கண்ணீர் விடுபவர்களாய் விடுவார்களென்றும், அநேக இரவுகளில் ஊருக்கு வெளியிற் சென்று சிரசை சஜ்தாவில் வைத்தவர்களாய் அல்லாஹ் தஆலாவின் தூய்மையை எடுத்துக்கூறிக்கொண்டிருப்பார்களென்றும் ஹஸ்ரத் நூஃமானிப்னு பஷீர் (ரலி.) அவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

ஹஸ்ரத் அவர்கள் தங்கள் வருவாயின்மிகுத பாகத்தை அகதிகளுக்குப் பங்கிட்டுக் கொடுப்பவர்களாக இருந்தார்கள். எனவே, ஒருநாளன்று தங்களுக்காக குருமா—இரச்சிக்கறி தயார் செய்யப்பட்டு, சாப்பாட்டு இடத்தில் கொணர்ந்து வைக்கப்பட்டது. அதுபொழுது விபரீத கோலத்தையுடைய பகீர் ஒருவர் வந்து தாம் பசியாக இருப்பதைத் தெரிவித்துக் கொள்ளவே ஹஸ்ரத் அவர்கள் அங்கு வைக்கப்பட்டிருந்ததை அந்த பகீருக்குக் கொடுத்து விட்டு தாங்கள் மாலைவரை பசியுடனிருந்தார்கள் என, ஹஸ்ரத் நூஃமானிப்னு பஷீர் அறிவித்தார்கள்.

கடைசி உபதேசம் :—ஹிஜ்ரீ 68-ம் ஆண்டு ரபீஉல் ஆகிர்மீ 5-ந்தேதியில் ஹஸ்ரத் அவர்கள் கடைசியாக ஓர் உபதேசம் புரிந்தார்கள். அதன் சாராம்சம் வருமாறு :—

மகாஜனங்களே! நாம் நேர்வழி பெறுவதற்காக நபிகள் பெருமானார் (ஸல்) அவர்களை அனுப்பிவைத்த அல்லாஹ் தஆலாவுக்கே புகழ் அடங்கலும் உரித்தாகும். நாம் நேர்வழி பெற்றுய்வதற்கு பெருமானார் (ஸல்) அவர்களின் தூய்மையான வாழ்க்கையில் அழகிய முன்மாதிரி இருந்து கொண்டிருக்கிறது. சோதரீர்! நம்முடைய எஜமானரான நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் கடைசிநபியாகும்; அவர்களுக்குப்பின் எவ்வித நபியுங் கிடையாது. அவர்களுடைய போதனையானது பலவகையிலும் நிறை பூர்ணமுடையதாகும். அவர்கள் ஆத்மார்த்த வழிகாட்டியாக இருப்பது போலவே உலகக்காரியாதிகளுக்கும் முதன்மையானவர்களாகும். அவர்களது வாழ்க்கை எவ்வகையிலும் சம்பூர்ணமுடையதாகும். அவர்கள் நியாயம்-ஒழுங்குக்கு எஜமானராக இருந்ததால் அல்லாஹ் தஆலாவின் கட்டளையை மானிடர்பால் செலுத்துவதில் யாருடைய தயவையும் எதிர்பாராதவர்களாக இருந்தார்கள். அவர்கள் ஏழைகள் பால் அன்புகொண்டவர்களாதலின், அன்னோரின் சுகதுக்கத்தில் பங்கெடுத்துக் கொள்பவர்களாயிருந்தார்கள். அவர்களின் அமானிதத்தன்மையை, இன்றுவரை அவர்களின் விரோதிகளுங்கூட மறுத்துக் கூறியதுகிடையாது. ஆழ்ந்து சிந்தனை செய்வதில் உலகிலுள்ள யாரும் அவர்கள்முன் நிற்க முடியாது. அவர்களுடைய பத்தினித்தனத்தில் இதுகாலவரையிலும் யாரும் சந்தேகித்தது கிடையாது. உலகின்கண் ஆயிரக்கணக்கான வருடங்கள் வேர் ஊன்றிப்போயிருந்த வழிகேடுகளையெல்லாம் அகற்றிவிட்டார்கள். நண்பர்காள், இது, நான் சுகயீனமாக இருக்கும் காலமாகவும்,

என் வாழ்க்கையின் கடைசி நேரமாகவுமிருப்பதால், இனி யான் பிரசங்கம் புரியாதிருக்கலாம் ஆகவே, நீங்கள் உங்களது வாழ்க்கையின் ஒவ்வொரு விஷயத்திலும் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களது நடத்தையை முன்மாதிரியாக கொண்டு செல்லும்படி உங்களுக்கு உபதேசிக்கிறேன், எனக்கூறினார்கள்.

மரணம்:—பின்னர் ஹிஜ்ரீ 68-ம் ஆண்டு ரபீஉல் ஆகிர்மீ 22-ந் தேதி ஹஜ்ரத் அவர்களின் சுகக்குறைவு அதிகரித்து 6-நாட்கள் வரை கடுமையான ஜுரத்தினால் பீடிக்கப்பட்டு 28-ந் தேதி இவ்வுலக வாழ்க்கை நீத்தார்கள். அல்லாஹ்த ஆலா அவர்களுக்கு மேலான பதவி அளிப்பானாகவும்.

விஷயத்திரள்

"மிர்ஸாயிகள் இஸ்லாத்துக்குப் புறம்பானவர்களே"

பகவல்பூர் ஜில்லா ஜட்ஜ் முன்ஷீ முகம்மது அக்பர் சாஹிப் அவர்கள் தீர்ப்பு.

தேவ்பந்து மத்ரஸாவில் பகவல்பூர் ஜட்ஜுக்கு வாழ்த்து.

தேவ்பந்து அறபி மத்ரஸாவின் உப காரியதரிசியான மௌலானா முகம்மது முபாரக் அலீ சாஹிப் அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் மாபெரும் மகாநாடொன்று கூடிற்று. தேவ்பந்து அறபிமத்ரஸா உஸ்தாதுகளும், மாணவர்களும், உள்ளூர் வெளியூர்களிலிருந்து அநேக தலைவர்களும் பொது ஜனங்களும் பிரமுகர்களும் அம்மகாநாட்டுக்கு சமுகந் தந்தனர். திருகுர்ஆன் ஓதியபின் மகாநாடு ஆரம்பமாயிற்று. தலைவரது முகவுரை பிரசங்கத்துக்குப்பின் தேவ்பந்து மத்ரஸாவின் தலைமை பேராசிரியரும், மதீனாவில் வெகு காலம்வரை வசித்து அங்கு நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களின் ஹதீதுகளை போதித்துக் கொண்டிருந்தவரும், அலீ சகோதரர்களுடன் காச்சி வழக்கில் 2 வருடம் கிலாபத்துக்காக தண்டனை அடைந்தவருமான மௌலானா ஹுஸைன் அஹ்மது முஹாஜிர மதனீ அவர்கள் இம்மகாநாடு கூட்டப்பட்டதின் நோக்கத்தை மகாஜனங்களுக்கு எடுத்துக்கூறி அடியில் கண்ட தீர்மானத்தை பிரேரணை செய்தார்கள்:—"மார்க்கபக்திக் குறைவும், மதப்புரட்டும் சகஜமாகப் பரவிவரும் இக்காலத்தில் "மிர்ஸாயிகள் இஸ்லாம் மதத்துக்குப் புறம்பானவர்கள்" என்று பகவல்பூர் ஜில்லா ஜட்ஜான ஜனப் முன்ஷீ முகம்மது அக்பர் அவர்கள் தீர்ப்புச்செய்ததுகொண்டு அவர் இந்திய முஸ்லிம்களின் உள்ளத்தை கவர்ந்துவிட்டார்; இந்த தீர்ப்பின் மூலம் நீதிபதி இஸ்லாமிய ஷரீஅத்துக்குப் பாதுகாப்பு அளித்து விட்டதால் அப்பாலிய்யா வம்சத்து நீதியை அவர் மறுபடியும் நிலைநிறுத்திவிட்டாரென்று இந்திய முஸ்லிம்கள் கருதுகிறார்கள்."

இத்தீர்மானம் ஏகமனதாய் நிறைவேறிற்று. பிறகு மௌலானா ஷபீர் அஹ்மத் உதுமானீ அவர்கள் பிரசங்கம் புரிகையில், காதியானிகளின் ஏமாற்றகரமான பிரசாரத்தையும், அவர்கள் தாங்கள் தாம் இஸ்லாத்துக்காகப் பாடுபட்டு இஸ்லாமியக் கொடியை நிலைநிறுத்துபவர்கள் என்று பிரசாரம் புரிந்து மக்களை ஏமாற்றி வருவதையும் விபரமாக எடுத்துக் கூறி, இவர்களது பிரசாரத்தின் ஏமாற்றகரமான காரியங்களை பொதுஜனங்களுக்கு அறிவிப்பதில் அஹ்ரார் சபையினர் செய்துவரும் அருந்தொண்டுகளை பாராட்டி அச்சபைக்கு உதவி செய்யும் விஷயத்தில் பொதுஜனங்கள் கவனம் செலுத்தவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். பின்னர் இத்தீர்மானம் பகவல்பூர் சமஸ்தான நவ்வாப் அவர்களுக்கு தந்தி மூலம் அறிவிக்கப்பட்டது. (ஜமீன்தார்)

ஹஜ்ஜுச் செலவில் நான்கிலொருபாகம் குறைவு.

மேன்மை தங்கிய சுல்த்தான் இப்னுஸுஊது அவர்கள் அடுத்த வருடமுதல் ஹிஜாஸுக்குச் செல்லும் ஹாஜிகளுக்கேற்படும் செலவின் நான்கிலொரு பாகத்தை குறைத்து விட்ட

தாக அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். அது வருமாறு :—"உலக முழுவதிலுமிருந்து ஹஜ் ஜுக் கடமையை நிறைவேற்றுவதற்காக ஹிஜாஸுக்கு வரும் ஹாஜிகளின் சௌகரியத்தை உத்தேசித்து இப்னுஸுஊது கவர்ன்மெண்ட் ஹஜ் ஜுக்கட்டியானது தீர்க்காலோசனை புரிந்து, ஹஜ்ஜை நாடியும், எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களது முபாரக்கான "ரவ்லா" ஷரீபை தரிசிக்கவும் வருபவர்களுக்கு ஏற்படும் கஷ்டங்களை நன்கு ஆலோசனை செய்துபார்த்து அடுத்த ஹிஜ்ரீ 1354 முதல், வரி, முஅல்லிம்கள் பீஸ், ஒட்டகம் மோட்டார் வாடகை முதலிய சகல செலவுகளிலும் நான்கிலொரு பாகத்தைக் குறைத்துவிடவேண்டுமென்னும் தீர்மானத்துக்கு வந்திருக்கிறது. ஸுஊதி கவர்ன்மெண்டானது வழக்கம்போல் வருஷ அறிக்கை வெளியிடும்போது கூடிய சீக்கிரம் இச்சௌகரியங்களை யெல்லாம் வெளியிட்டுவிடும். எனவே, ஹாஜிகள் சென்ற வருடங்களில் எவ்வளவு ரூபாய் செலவிட்டனரோ அதில் நான்கில் மூன்று பாகம் செலவிடுவது போதுமாகும்"

சுல்த்தான் இப்னுஸுஊது அவர்கள் ஹாஜிகளின் சௌகரியத்தைக் கருதி இவ்வாறான வசதி செய்துகொடுத்ததற்காக அவர்களுக்கு நன்றி செலுத்துகிறோம்.

நாகப்பட்டணம் காமலியா முஸ்லிம் லீக்

4-4-35 வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு சங்க உப சபாநாயகர் ஜனாப் எஸ். எஸ். செய்கு தாவூத் ருவுத்தர் தலைமையில் கூடிய நிருவாக சபை கூட்டத்தில் வரவு செலவு கணக்குகள் வாசிக்கப்பட்டதுடன் சில தீர்மானங்களுக்கிடையே அடியிற்கண்ட தீர்மானமும் ஏகமனதாய் நிறைவேறியது.

தீர்மானம்

சங்க மெம்பரும், அசஹான் ஏஜண்டுமான ஜனாப் ஹ. முகம்மது இமாம் அவர்கள் கீழ்கண்ட கனவான்களை மெம்பர்களாகச் சேர்த்து மனமுவந்து அனுப்பிய சந்தா பிரவேச கட்டணம் ரூ. 40-ஐயும் இச்சபை பெரிதும் பாராட்டி வந்தனத்துடன் பெற்றுக்கொள்வதுடன், சங்கத்தின்மீது அபிமானங்கொண்டு மெம்பர்களாகச் சேர்ந்த கனவான்களின் அப்ளிகேஷன்களையும் சந்தோஷத்துடன் ஏகமனதாய் ஒப்புக்கொண்டு புதிய மெம்பர்களை தஆவுடன் பாராட்டுகிறது.

அசஹான் மெம்பர்கள்

நாகப்பட்டணம்

ஜனாப். சு. மீரான்லெப்பை மரைக்காயர்.
" கு. காதர் சாயபு மரைக்காயர்.
" மு. முகம்மது இஸ்மாயில் மரைக்காயர்.

நாகூர்

ஜனாப் ஈ. ஏ. அப்துற்றஹீம் மரைக்காயர்.
" பி. சின்னத்தம்பி மரைக்காயர்.
" மெ. ஷெய்கு தாவூது மரைக்காயர்.

கல்லார்

ஜனாப் மெ. ப. ஹபீபு மரைக்காயர்.

அடியக்கமங்கலம்

ஜனாப் கா. அப்துற்றஜாக் மரைக்காயர்.

கூத்தானல்லூர்

ஜனாப் வெ. மு. முகம்மது இப்ராஹீம் அவர்கள்

பரங்கிப்பேட்டை

ஜனாப் மு. அப்பாஸ் மரைக்காயர்.

உபன்னியாசம்

16-4-35 புதன்கிழமை இரவு 9-மணிக்கு சங்க ஆதரவில், ஹஜ்ரத் ஸெய்யிது முபாரக் ஒலியுல்லா அவர்கள் தர்காவில், சென்னை ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்க பிரதிநிதி ஜனாப் மௌலவீ முஹம்மது மியான் சாஹிப் (பாகவி) அவர்கள் "இஸ்லாத்தின் கொள்கையும் அதன் கடமையும்" என்பதைப்பற்றி அரியதோர் உபந்நியாசம் புரிந்தார்கள். அவ்வமயம் முஸ்லிம் சகோதர சகோதரிகள் சுமார் ஆயிரம் பேர்கள் வரை விஜயஞ்செய்து மௌலவீ அவர்கள், இஸ்லாம் மார்க்கத்திற்காக முஸ்லிம்கள் செய்யவேண்டிய தியாகத்தையும், ஊழியத்தையும் தலீல், ஹதீது முதலிய ஆதாரங்களைக் கொண்டு உருக்கமாகவும், தெளிவாகவும் சொற்பொழிவாற்றியதைக் கேட்டு கற்பனைடைந்தனர். பின்பு 10 மணி சங்க செக்ரிடேரி அவர்களால் வந்தனோபசாரம் புரிந்து துஆ ஓதி தபரக் வழங்கப்பெற்று மஜ்லிஸ் இனிது முடிவுற்றது.

பிறமதத்தார் காதியானிக் கொள்கைக்குப் பலங்கொடுப்பதேன்?

லாகூர் டாக்டர் சங்கர தாஸ், பி. எஸ். ஸி., எம். பி. பி. எஸ்.

காதியானீ இயக்கத்தால் தேசிய இயக்கத்துக்கு ஏற்படக்கூடிய கன்மைகள் சம்பந்தமாய் டாக்டர் சங்கரதாஸ் "வந்தே மாதரம்" பத்திரிகையில் எழுதியிருந்தவியாசத்தை லாகூர், வஜீர்கான் மஸ்ஜித கத்தீபான ஜனப் மௌலானு அபுல்ஸ்ஹனத் முஹம்மது அஹ்மது சாகிப் காதிரீ அவர்கள் துண்டுப் பிரசுரமாக வெளியிட்டிருக்கிறார்கள். இப்பிரசுரத்துக்கு இதுவரை காதியானிகள் யாதுபதில் கூறினர் என்பது தெரியவில்லை. ஆயினும், அவர்கள் தற்போது நடந்துகொள்ளும் மாதிரியிலிருந்து இவ்வியாசத்தில் கூறப்பட்ட விஷயம் தவறல்லவென்பதை வாசகநேயர்கள் உணர்வார்களாக.—(ப. ர்.)

டாக்டர் சங்கர தாஸ் எழுதிய வியாசம்.

இந்தியாவின் துர்அதிஷ்டத்தாலும், ஹிந்துக்கள் தங்களுக்குள் பிளவுபட்டுக்கொண்டிருந்த காரணத்தாலும் அறபிகளின் ஒரு கூட்டத்தார் இந்தியாவின்மீது படையெடுத்து சில பிரதேசங்களைக் கைப்பற்றிக்கொண்டனர். இந்தியாவில் தங்கள் அரசாங்கத்தை எற்படுத்திக்கொள்ள அஸ்திவாரமும் இட்டுக்கொண்டனர். இந்தியர்களை அவர்கள் முஸ்லிம்களாகவும் ஆக்கினர். இந்தியர்களும் முஸ்லிம்களாக ஆயினர். இஸ்லாம் மதத்தை தழுவிய இந்தியர்கள் தங்களுடைய பழைய நாகரீகத்தைத் துறந்து புதிய நாகரீகத்தைக் கைக்கொண்டனர். அன்னேர் ஸ்ரீராமர், கிருஷ்ணபரமாத்மா, ஸ்ரீபுத்தர் ஆகியவர்களின்மீது பக்தி விசுவாசங்கொள்வதற்குப் பதிலாக ஹஜ்ரத் முஹம்மது (ஸல்.), அலீ (றலி.) ஆகியவர்கள்மீது பக்தியும் விசுவாசமுங்கொள்வதை ஸ்வீகாரம் செய்துகொண்டனர். கங்கா, யமுனை, இந்தியா ஆகியவைகளுக்குப் பதிலாக நிஜலா, புராத், மக்கா, மதீனு ஆகியவைகளைத் தங்களது புண்ணிய தீர்த்தமாகவும், புண்ணிய பூமியாகவும் கொண்டனர். இந்தியாவின்மீது ஒரு ஆபத்து வந்தெய்துமாயின் அவர்களுக்கு அக்கரை வருவதில்லை. ஆனால், மக்கா, மதீனுவிலுள்ள ஒரு செங்கல் அசைந்துவிடுமாயின் அவர்களது ரத்தம் கொதிப்படைந்துவிடுகிறது. இந்தியா அவர்களது பிறப்பிடமாக இருந்தும் அவர்களுள்ளத்தில் இந்தியாவுக்காக எவ்விதப்பற்றும் இல்லை. இவ்வித மனப்பான்மை பொதுவாக இந்திய முஸ்லிம்களனைவரினும் காணப்படுகிறது. இவர்களிலுள்ள பெரும்பான்மையான ஜனங்கள் அந்நிய தேசங்களிலிருந்து இந்தியாவில் வந்து குடியேறியவர்களல்லர்; இவர்கள் இந்தியாவின் இரத்தமும், தோலும், சதைபுமாவார்கள். இவர்களுடைய மூதாதையர் இந்தியாவின் பூர்வீகக் குடிகளாவார்கள். அவ்வாறிருந்தும் இவர்களுக்கு இந்தியாவின் எந்தத்துக்கத்திலும் அனுதாபமில்லை. அவர்கள் அந்நியருக்கு ஆயுதமாக உதவுகிறார்கள். தங்கள் தாய் நாட்டை அந்நியர்களின் நித்திய அடிமைப் பிடியில் சிக்கவைக்க விரும்புகிறார்கள்.

இந்திய முஸ்லிம்களுள் தேசிய இயக்கம்.

தற்போது நமது தேசத்தில் மிகவும் முக்கியமான பிரசினை என்னவென்றால், இந்திய முஸ்லிம்களுக்குள் எவ்விதமாக தேசிய உணர்ச்சியை உண்டுபண்ண வேண்டும் என்பதுதான். சிலசமயங்களில் அவர்களிடம் ஒப்பந்தம், உடன்படிக்கை ஆகியவைகள் செய்யப்படுகின்றன; சில சமயம் அவர்களுக்கு ஆசைவார்த்தை கூறி நம்முடன் சேர்த்துக்கொள்ள முயற்சி செய்யப்படுகிறது; சில சமயம் அவர்களது மத சம்பந்தமான பிரசினைகளுக்கு ராஜீய முக்கியாம்சம் கொடுத்து ராஜீய ஒற்றுமை ஏற்படுத்தப்படுகிறது. ஆனால், இவ்விதமான உபாயங்களெதுவும் பிரயோசன முள்ளவைகளாகக் காணோம். இரவு பகல் எந்நேரமும் அவர்கள் அறபிகளின் கீதங்களையே பாடிக்கொண்டிருக்

கிறார்கள். அவர்களது முயற்சி பலிக்குமாயின் இந்தியாவுக்கு அறபிப் பாஷையில் அவர்கள் பெயரும் வைத்து விடுவார்கள்.

இருளுக்குள் ஒளி

இவ்வாறான இருள் சூழ்ந்து, நம்பிக்கை இழந்து தவிக்கும் இச்சமயத்தில், இந்தியாவி லுள்ள தேசாபிமானிகளுக்கும் தேசபக்தர் களுக்கும் நம்பிக்கையூட்டக்கூடிய ஒரே ஒரு ஒளிதான் கண்ணுக்குத் தோன்றுகிறது. அந்த ஆசைப் பிரகாசம் அஹ்மதீ இயக்கம்தான். முஸ்லிம்களில் எத்தனைபேர் அஹ்மதீ இயக் கத்தில் சேருவார்களோ அத்தனைபேரும் காதி யானைத் தங்களது மக்காபுரியாகக் கருத ஆரம் பித்துவிடுவார்கள். கடைசியாக அவர்கள் இந் திய தேசபக்தர்களாகவும், இந்திய விசுவாசிக ளாகவும் ஆகிவிடுவார்கள். முஸ்லிம்களிடம் அஹ்மதியா இயக்கம் வலுவடைவது ஒன்று மட்டும்தான் அறபி நாகரீகத்தையும் இஸ்லா மிய இயக்கத்தையும் ஒழிக்கவல்லது. ஆகவே வாருங்கள் ! நாம் தேசியம் என்ற முறையில் அஹ்மதியா இயக்கத்தைப்பற்றிக் கவனம் செலுத்துவோம்.

பஞ்சாப் புண்யநாட்டில் மிர்ஜா குலாம் காதி யானீ என்ற ஒருவர் உதித்தார். அவர் முஸ் லிம்களை நோக்கி "முஸ்லிம்களே ! இறை வனின் வேதத்தில் எந்த நபியின் வருகை யைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறதோ அந்த நபி நான்தான் ; வாருங்கள் ! என்னை விசுவாசி யுங்கள் ; என்னுடைய கொடி நிழலில் ஒன்று கூடுங்கள் ; நீங்கள் அவ்வாறு வராவிட்டால், இறைவன் உங்களை நியாயத்தீர்ப்பு நாளில் மன் னிக்கமாட்டான் ; நீங்கள் நரகவாதிகளாவீர் கள் " என்று உபதேசித்தார்.

மிர்ஜா சாகிப் இவ்வாறு உபதேசிப்பதுசரியா தவறு என்பதைப்பற்றி விவாதிக்க நான் விரும்பவில்லை. ஆனால், முஸ்லிம்கள் மிர்ஜாயிக ளாக மாறுவதால் முஸ்லிம்களில் எவ்வித மாறு தல் ஏற்படமுடியும் என்பதைத்தான் நான் இங்கு எடுத்துக் கூற விரும்புகிறேன். மிர்ஜாயி களின் மதநம்பிக்கை வருமாறு :—

1. இறைவன், சமயாசமயத்தில் ஜனங் களுக்கு வழிகாட்டுவதற்காக ஒரு மனிதரைச் சிருஷ்டிக்கிறான் ; அம்மனிதர் அந்தக்காலத்து நபியாக இருக்கிறார்.

2. இறைவன் அறபிதேசத்து ஜனங்களில் அவர்களின் ஒழுக்கங்கள் படுமோசமாகி இருந்த சமயத்தில் ஹஜ்றத் முஹம்மது (ஸல்.) அவர்களை நபியாக ஆக்கி அனுப்பினான்.

3. ஹஜ்றத் முஹம்மது (ஸல்.) அவர்களுக் குப்பின் இறைவனுக்கு ஒரு நபியை அனுப்ப வேண்டுமென்ற அவசியம் தோன்றிற்று. ஆகவே, முஸ்லிம்களுக்கு வழி காண்பிப்பதற் காக மிர்ஜா சாகிபை அனுப்பினான்.

காதியான் இயக்கத்தாலேற்படும் பயன்

இந்தக் கொள்கைகளில் இந்தியாவின் தேசி யத்துக்கு என்ன சம்பந்தமிருக்கிறது என்று என்னுடைய தேசபக்த சகோதரர்கள் வினவக் கூடும். அதற்கு பதில் வருமாறு :—

ஒரு ஹிந்துமுஸ்லிமாக ஆகிவிடுவதால் அவ ருடைய அகம் ராமர், கிருஷ்ணர், வேதம், கீதை, ராமாயணம் ஆகியவைகளை விட்டு மாறி குர்ஆன், அறப் பூமி ஆகியவைகள்பால் திரும்பிவிடுவதுபோல, ஒருமுஸ்லிம் அஹ்மதி யாக ஆகிவிடுவதால் அவருடைய நோக்கம், சித் தம், எண்ணம், கருத்து ஆகியவைகளும் மாறி விடுகின்றன. ஹஜ்றத் முஹம்மது (ஸல்.) அவர்கள்பால் அவருக்குள்ள பக்தி குறைந்து விடுகிறது. இதனை அல்லாமல், இவர்களு டைய கிலாபத் முதலில் அறபி தேசத்திலும் அப்பால் துருக்கியிலும் இருந்தது. இப்போ ழுது அந்த கிலாபத் காதியானுக்கு வந்து விடு கிறது. மக்கா, மதீனா ஆகியவைகள் இப் படிப்பட்ட அஹ்மதியர்களுக்கு பூர்வகாலத்து இடங்களாக மாறிவிடுகிறது. எனவே, அஹ்மதி யாக வுள்ளவர் அறபி தேசத்திலோ, துருக்கி யிலோ, ஈரானிலோ, உலகத்தின் வேறெந்த நாட்டிலோ இருந்தபோதினும் அவருடைய ஆத்மசக்திக்காக அவர் காதியானீ பக்கம் முகம் திருப்பவேண்டிய தேற்படுகிறது. காதி யான் என்ற ஊர் அவரிடத்தில் புண்யபூமியாக இருக்கிறது. இதில்தான் இந்தியாவின் மேன் மைக்கான ரகசியம் மறைந்திருக்கிறது. எனவே, ஒவ்வொரு அஹ்மதிக்கும் இந்தியாவின்மீது பிரியம் உண்டாகிவிடும். ஏனெனில், காதியான் என்ற கிராமம் இந்தியாவில்தானிருக்கிறது. மிர்ஜா சாகிப் இந்தியர். இவ்வகுப்பிலிருந்து உண்டாகும் கலீபாக்கள் அனைவரும் இந்திய ராகவே இருக்கிறார்கள்.

அவர்கள் முஸ்லிம்களைவிட்டு நிச்சயமாகப் பிரிந்து விடுவார்கள்

மிர்ஜாயிகள் திருகுர்ஆனை இல்ஹாமிக்கித் தாபு என்று நம்பும்போது அவர்கள் இஸ்லாம்

மதத்தைவிட்டு எங்ஙனம் பிரிந்துவிடமுடியும்? என்ற கேள்வி எழாம். அதற்குரிய விடை வருமாறு :—

"சிக்கியர்கள் தற்போதைய ஹிந்துக்களைவிட்டுப் பிறிந்திருப்பதே இதற்கோர் சான்றாகும். குரு கிரந்த சாகிபில் ராமர், கிருஷ்ணர், இந்திரன், விஷ்ணு, ஹிந்துதேவிகள், தேவர் ஆகியவைகளின் வர்தனமிருக்கிறது. ஆனல், சீக்கியர் ராம, கிருஷ்ண மூர்த்திகளைக் கண்டனம் செய்யவில்லையா? குருத்துவாரத்தில் ராமாயணம், கீதை ஆகியவைகளின் பாடத்தை எடுத்துப் போடவில்லையா? அவர்கள் தங்களை ஹிந்து என்று சொல்லிக்கொள்வதை நிராகரிக்கவில்லையா? இதுபோல், அஹ்மதியர்களும் தங்களைப்பற்றி "நண்ப! நாங்கள் முஹம்மதீ முஸ்லிம்களல்ல; நாங்கள் அஹ்மதீ முஸ்லிம்களாக இருக்கிறோம் என்று பகிரங்கமாகக் கூறும் காலம் தூரத்திலில்லை. ஒருவர் அவர்களிடம் சென்று நீங்கள் ஹஜ்ரத் முஹம்மது (ஸல்.) அவர்களின் நுபுவ்வத்தை ஒப்புக்கொள்ளவில்லையா? என்று வினவுவாராயின், அதற்கு அவர்கள் நாங்கள் ஹஜ்ரத் முஹம்மது, ஈஸா, ராமர், கிருஷ்ணர், எல்லோரையும் அவரவர் காலத்தில் நபிமார்களாக இருந்தார்கள் என்று நம்புகிறோம்; நாங்கள் இவ்வாறு நம்புவதால், நாங்கள் ஹிந்துவாகவோ கிறிஸ்துவராகவோ, முஹம்மதியராகவோ இருக்கவேண்டும் என்ற அர்த்தமில்லை என்று பகிரங்கமாகக் கூறுவர்.

இந்த ஒரு காரணத்துக்காகத்தான் முஸ்லிம் பொது ஜனங்கள் அஹ்மதியா இயக்கத்தைச் சந்தேக நோக்குடன் பார்க்கின்றனர்; அஹ்மதியத்து அறபி நாகரீகத்துக்கும் இஸ்லாமுக்கும் விரோதியாக இருக்கிறது என்று உணருகிறார்கள். கிலாபத் இயக்கம் நடைபெற்ற போழ்து அஹ்மதியர் அவ்வியக்கத்தில் பங்கெடுத்துக் கொள்ளவில்லை. ஏனெனில், அவர்கள் கிலாபத் பதவியை அறபியிலும் துருக்கியிலும் ஏற்படுத்துவதற்குப் பதிலாக காதியானில் ஏற்படுத்த விரும்புகிறார்கள்.

எந்நேரமும் இஸ்லாமிய இயக்கத்தையும், அறபி சங்கடன்கொள்கைகளையும் பற்றிக் கனவு கண்டு கொண்டிருக்கிற முஸ்லிம்களுக்கு இவ்வியக்கம் எவ்வளவு இடைஞ்சலைத் தரவல்லதாக இருக்கும் என்பதை கவனியுங்கள்! ஆனல், இவ்வியக்கம் ஒரு தேசபக்தனுக்கு அளவற்ற ஆனந்தத்தைக் கொடுக்கவல்லதாக இருக்கிறது."

குறிப்பு :—சோதரீர்! நம்மவரிற் பலர் அறியாமையால் காதியானீ இயக்கத்துக்கு பலம் கொடுத்து வருகிறார்கள். படித்த அறிவாளிகளான ஹிந்துக்கள் முதலிய பிறமதத்தார் இவர்களது கொள்கையை ஆதரித்து அவர்களது கொள்கை யுக்திக்குப் பிடித்தமாக இருக்கிறது என்று கூறிவருகின்றனர். ஆனல், பிறமதத்தார் அவர்களது கொள்கையை ஆதரிப்பதற்கு யாது காரணம் என்பதை மேலே எடுத்தெழுதப்பட்ட வியாசம் ஓரளவு விளக்கி வைக்கக் கூடியதாக இருக்கிறது. ராமர், கிருஷ்ணர், புத்தர் ஆகியவர்களை காதியானிகளில்லாகூர் பார்ட்டியினரும், காதியானீ பார்ட்டியினரும் "நபிமார்கள்" என்று பகிரங்கமாகக் கூறுவது பொய்யா? முஹம்மதியர் என்று முஸ்லிம்களைக் கூறக்கூடாது என்று அவர்கள் தங்கள் பத்திரிகையில் எழுதி பிரசாரம் செய்து வருவது பொய்யா? என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்! காதியானிகளில் எந்தக் கக்ஷியாராக இருந்தால்தானென்ன? அவர்களிடம் மேற்படி வியாசத்தில் கூறப்பட்ட மனப்பான்மை அணுவளவும் குறையாமல் மிளிர்ந்து கிடக்கிறது என்பது வெளிப்படை. தற்போது அஹ்மதியர் தங்களை வேறுகப்பிரித்து முஸ்லிம்களுடன் கொள்வினை கொடுப்பினை செய்வதையும்கூட ஹராமாக்கிக் கொண்டிருக்கும் விஷயம் யாவருக்கும் தெரிந்ததே. ஆகவே, அவர்கள் நம்மைவிட்டு ஒதுங்கி விட்டார்கள்; ஆதலின், நாம் நமது மதத்தையும் நாகரீகத்தையும் காப்பாற்ற ஒன்றுகூடி நம்மை ஒழுங்கு பண்ணுவோமாக. எழுமின்! விழிமின்!

பாராட்டுகிறோம்.

நமது சபீர் மௌலானு மௌலவீ முகம்மது மியான் சாஹிப் அவர்கள் தஞ்சை ஜில்லாவின் சுற்றுப் பிரயாணத்திற் கிடையே நாகூர் சென்றிருந்த காலை, சபீர் அவர்களை ஆதரித்து உதவிபுரிந்த ஜனப்களான நாகூர் டவுன் காஜீ, தர்காஷரீப் நாட்டாமை மௌலானு மௌலவீ சு. சுல்தான் கலீபா சாஹிபு காதரி யுஷ்ஷத்தாரீ அவர்களையும், மௌலானு மௌலவீ அஹ்மத் இப்ராஹீம் காதரி யுஷ்ஷத்தாரீ காதி முஷ்ஷரீஆ அவர்களையும் நாம் பாராட்டுகின்றோம்.

யவ்முந்நபீ விழா

தன்னுடைய் தகப்பனையும், மகனையும், மற்றுமுள்ள எல்லா வஸ்துக்களையும்விட என்னை (நபிபெருமானரவர்களை) அதிகமாய் நேசிக்கும்வரை உங்களில் எவனும் ஈமான்கொண்டவனாக இருக்கமுடியாது. (ஹதீது).

சோதரீர்! எம்பெருமானர் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள்மீது பிரீதிகொண்டு அவர்களை நேசிக்கவேண்டியது முஸ்லிமாக வுள்ள ஒவ்வொருவர் மீதும் கடமையாகுமென் பதையும், அவ்வாறு நேசங்கொள்ளாதவரை நாம் மூமினாக இருக்க முடியாதென்பதையும் மேலே கூறப்பட்டுள்ள நாயகவாக்கியத்தி லிருந்து தெரிந்துகொள்கிறோம்.

நாம் அப்பெருமகர்மீது நேசங்கொண் டொழுகுவது வெறும் வாய்ப் பேச்சிலன்றி நமது செய்கையிற் காட்டித் தீரவேண்டும். அதற்கடையாளமாக நபிய்யகரீம் (ஸல்.) அவர் கள் நமக்கு போதித்த அரும்மொழிகளை சிர மேற்றுங்கி நடப்பதுடன் ஒவ்வொரு காரியத்தி லும் மகான் அவர்களின் செயல்களையும் பின் பற்றியொழுகவேண்டும். மேலும் சத்தியத் தூதர் (ஸல்.) அவர்கள் மீது நமக்கு அளவற்ற பிரீதி ஏற்பட்டிருக்கிறதென்னும் அடை யாளத்தை வெளியாக்குவான் வேண்டி அவ் வுத்தமத்தூதர் (ஸல்.) அவர்கள் இப்பூவுலகின் கண் திருஅவதாரம் புரிந்துள்ள புண்ணிய தினத்தை கண்ணியமாகக் கொண்டாடவேண் டும். அத்தினத்தன்று பெருமானர் (ஸல்.) அவர்களின் தூய்மை பொருந்திய வாழ்க்கை யின் மகத்துவங்களையும் சற்குண சத்திய ஒழுக்கங்களையும் மக்களுக்கு எடுத்து போதிக்க வேண்டும்.

நண்பீர்! உத்தமகுண சீலர், சத்திய சற்குணநாதர் நபிகள்பிரான் (ஸல்.) அவர் கள் இப்பூவுலகின் கண்ணே திருஜனனம் புரிந்த புண்ணிய காலமாகிய ரபீஉல் அவ்வல் மீ நம்மை நோக்கி வந்துகொண்டிருக்கிறது. அம் மாதத்தை எதிர்பார்த்து முஸ்லிம்களின் ஹிரு தயம் துடித்துக்கொண்டிருக்கிறது. இவ்வாறு எதிர் பார்க்கப்படும் இத்திருநாளை கொண்டாட வேண்டியது ஒவ்வொரு முஸ்லிம்களின்மீது முள்ள முக்கியக்கடமையாகும். ஆகவே, அப்புனித தினத்தன்று ஒவ்வொரு பேரூர் முதல் சிற்றூர்களிலும் மகாநாடுகூட்ட ஏற்பாடு செய்யுங்கள்! லாகூர் ஸீரத் கமிட்டியாரால் தயா ரிக்கப்பெற்று நம் "ஹிபாஜத்துல் இஸ்லாம்" சங்கத்தாரால் செந்தமிழில் மொழிபெயர்த்து அச்சிடப்பட்டிருக்கும் "ஸீரத்துந்நபீ"யை படித்துக்காட்டி ஜாதிமதபேதமின்றி யாவருக் கும் வினியோகஞ் செய்யுங்கள். பொதுவாக ஆலாபீ அவர்களின் குணாதிசயங்களும், போதனைகளும் சகல மானிடர்களின் ஹிரு தயங்களிலும் பதியும்படி செய்யுங்கள்!

இந்த 'யவ்முந்நபீ' விழா இயக்கத்தின் நோக்க மானது உலகிலுள்ள சகல மக்களிடையும் சகல பாஷைகளிலும் பெருமானர் (ஸல்.) அவர்களது வாழ்க்கை சரிதையை பிரசாரம் செய்யவேண்டு மென்பதேயாகும். ஆகவே, முஸ்லிம்கள் தங் கள் வாழ்க்கை முறையை பெருமானர் (ஸல்.) அவர்களது அடிச்சுவற்றைப் பின்பற்றுவதில் நடத்திச் செல்வார்களாயின் இஸ்லாம் சம்பந்த மாகவும், இஸ்லாத்தின் திருத்தூதர் (ஸல்.) அவர் கள் சம்பந்தமாகவும் உலகின்கண் பரவி இருக் கும் கெட்ட எண்ணங்களெல்லாம் தானே அக ன்று விடுமென்பது திண்ணம். ஆதலின் இவ் வாண்டு ரபீஉல் அவ்வல் விழாவை உலகின் சகல இடங்களிலும் கொண்டாடப்படல் வேண் டும். அன்றையதினம் ஒவ்வொரு இடத்திலும் கெம்பீரத் தோற்றமுடைய ஊர்வலங்கள் நடத் தப்படல்வேண்டும். மாபெரும் மகாநாடு கூட் டப்படல் வேண்டும். அம்மகாநாட்டின் மூலம் இஸ்லாத்தின் மேன்மை, பெருமானர் (ஸல்.) அவர்களது கீர்த்தி, இஸ்லாத்தின் சகோதரத் துவம் ஆகியவைகள் வெளியாகவேண்டும். முஸ் லிம்கள் தங்களுக்குள் ஏற்பட்டிருக்கும் மனஸ் தாபம், குரோத எண்ணம், சமூகச்சச்சரவு ஆகியவைகளை எல்லாம் மறந்து நபிபெருமானர் (ஸல்.) அவர்களது கண்ணியத்தை முன்னிட்டு ஒரேஒற்றுமையான தோற்றத்தில் காணப் படல்வேண்டும். சத்தியத் தூதர் (ஸல்.) அவர்களது சற்குணம், வாழ்க்கை சரிதை, காருண்யம் முதலியவைகளை பிரமத நண்பர்

களுக்கும் எடுத்துக் கூறவேண்டும். ஒவ்வொரு இடத்திலும் நடைபெறும் மகாநாடுகளும் இராஜதர்பார் போன்று திகழவேண்டும். அம் மகாநாடுகளில் சகல சமுகத்தினரும் கலந்து கொண்டு சகலரும் ஓரேமேடையில் பிரசங்க மாற்றுவதற்கு வசதி செய்துகொடுக்கவேண் டும். அல்லாஹ்வின் கிருபையால் சென்ற சில ஆண்டுகளுக்குமுன் ஆரம்பிக்கப்பட்ட தூய்மை பொருந்திய இவ்வியக்கத்தால் அபரிமித மான பிரயோசன மேற்பட்டிருக்கிறதென்பது கண்கூடு. இதுவரை 6 ஸீரத்து பிரசங்கங்கள் 22 பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டு, பதி னான்கு லக்ஷம் பிரதிகள் வரை பங்கிடப்பட் டிருக்கிறது. ரபீஉல் அவ்வல் மாதம் 12-ந் தேதி ஒரே கட்டுப்பாடுடன் தேசத்தின் பல பாகங்களிலும் மகாநாடு நடைபெறுவதன் பய னாக கணக்கற்ற முஸ்லிம்கள், முஸ்லிம் அல்லா தாரின் வாழ்க்கையில் விசேஷ மாறுதலேற்பட் டிருக்கின்றன. உலகிலுள்ள சகல சங்கங்களும், அஞ்சுமன்களும் ஸபையோர்களும் இந்த ஒரு காரியத்தில்தான் ஒற்றுமையுடன் பங்கெடுத் துக்கொள்ளுகின்றார்கள். அநேக இடங்களில் 'ஸீரத்' சம்மந்தமான போட்டி வியாசங்கள் எழுதும் சந்தர்ப்பமும், மௌலித் மஜ்லிசு களில் 'ஷிர்னீ' பங்கிடுவதற்குப் பதிலாய் ஸீரத் பிரசங்க புத்தகம் இனாமாய் பங்கிடப்படுவதன் சந்தர்ப்பமும் ஏற்பட்டுப் போயிற்று. உலகின் கண்ணுள்ள மாபெரும் உலகமாக்களும் பெரி யார்களும் இவ்வியக்கத்திற்கு உதவி புரிந்து வருகின்றனர். முஸ்லிம் சுல்தான்கள் தாங் களே யவ்முந்பி விழா மகாநாட்டிற்கு விஜயஞ் செய்து சொற்பெருக் காற்றுகின்றனர். இன் னும் அநேக கெளரவ பிரசாரகர்கள் இந்தியாவி லும் இந்தியாவுக்கு வெளியிலும், இவ்வியக்கத் தினாலேற்படும் பயன்களை மக்கட்டு எடுத்துக் காண்பிக்கின்றனர். ஆகவே, தங்கள் முயற்சியை தளரவிடாது இவ்வியக்கத்தில் ஈடுபட்டுழைப் பது இந்திய முஸ்லிம்கள் மீது கடமையாகுமென் பதை தெரிவித்துக்கொள்ளுகின்றோம். சென்ற ஆண்டுகளைபோல் இவ்வருடத்திலும் நமது சங்கம் ஸீரத் பிரசங்கத்தை அச்சிட்டு வெளி யிட முயற்சித்து வருகிறது. தமிழ்நாடு, பர்மா, சிலோன், மலாய்நாடு முதலிய இடங்களிலுள்ள சங்கங்களும், பொதுஸ்தாபனங்களும் தலைவர் களும் போதிய காலத்தோடு தங்கள் தங்கள் ஆடர்களைப் பதிவு செய்துகொண்டு குறிப்பிட் டுள்ள தினத்திற்கு முந்தியே காப்பிகளைப் பெற்று அந்தந்த இடங்களில் வினியோகஞ் செய்வதற்கு ஏற்பாடு செய்துகொள்வார்களாக. நம் நண்பர்களி லனேகர் போதிய காலத்தோடு ஆடர் செய்யாமல் மிகநெறுக்கமான காலத் தில் தந்தி மூலமாகவும், கடிதவாயிலாகவும் ஆடர்களை அனுப்பிவைக்கின்றனர். சில இடங் களுக்கு, கப்பல் வசதிக் குறைவினாலும், சில இடங்களுக்கு குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற் குள் போய்ச்சேராது என்னும் காரணத்தினா லும் பிரதிகள் அனுப்ப முடியாது போய் விடு வதுகொண்டு அன்பர்களாகிய அபிமானிகளும் நாமு வருந்தும்படி நேரிடுகிறது. ஆகவே, காலத் தோடு ஆடர்களைப் பதிவு செய்து தேவை யான பிரதிகளைப்பெற்று பிரயோசனம் பெறு வார்களாக. இவ்வாண்டில் ரபீஉல் அவ்வல் 12-ந் திகதி, அநேகமாய் 14-6-35 வெள்ளிக் கிழமையன்று வரலாமென எதிர்பார்க்கப்படு கிறது. மற்றும் அன்று நடத்த வேண்டிய மற்ற விபரங்களை அடுத்த ஸபர்மீ இதழில் வெளியிடுவோமாகையால் நண்பர்கள் விஷயங் களைத் தெரிந்து அப்புண்ணிய தினத்தை கண் ணியமான முறையில் கொண்டாடி இகபர பாக்கியங்களை இறைஞ்சுவார்களாக.

இங்ஙனம்
காரியதரிசிகள்
ஹிபாஜத்துல் இஸ்லாம்.

முக்கிய கவனிப்பு.

எங்களிடம் குர்ஆன்ஷரீப், அறபுத்தமிழ், சுத்தத்தமிழ், உர்து முதலிய பற்பல பாஷைகளிலுமுள்ள அநேக கித்தாப்கள் சகாயமான விலைக்கு அழகானயும் சுத்தமுடையதுமான வைகளாயும் கிடைக்கும். விபரம் தெரிந்துகொள்ள விருப்பமுடையோர் தபால் செலவுக்காக ஒரு அணா ஸ்டாம்பு அனுப்பி எங்களது விபரமான கேட்லாக்கை பெற்று பயன்பெறுவார்களாக.

K. M. மௌலவீ சுல்தான் அஹ்மது ஆலிம் சாஹிப்,
1/222, அங்கப்ப நாய்க்கன் தெருவு, மதராஸ்.

சென்னை ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்க அறிவிப்பு

சோதரீர்!

சென்னையம்பதியின்கண் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் உங்கள் "ஹிபாஜத்துல் இஸ்லாம்" சங்கம், சத்திய இஸ்லாத்திற்கு ஆற்றி வரும் தொண்டுகளை தாங்கள் நன்குணர்ந்தே இருக்கிறீர்கள். சத்திய இஸ்லாம் பலவகையிலும் தாக்கப்பட்டு வருகிறது. ஒரு பக்கல் கிறிஸ்தவர்கள் எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள்மீது வீணே அபவாதங்களைச் சுமத்துகின்றனர்; ஆரியர்கள் இஸ்லாத்தை நன்குணராது அதைப்பற்றி விபரீத முறையில் உண்மைக்கு மாறுக என்னென்னவோ எழுதத் துணிந்து விடுகின்றனர். இவைகளுக்கெல்லாம் தக்க பரிகாரஞ் செய்யவேண்டியது நம்மவரின் கடமையாக இருந்துவருகிறது. மற்றொரு பக்கல், நம்மிடையே ஒரு சிலர் தோன்றி வழிகெட்டதும் மறுக்கப்பட்டுப் போனதுமான காதியானிக் கொள்கைகளைத் தந்திரமாய்ப் பிரசாரம் புரிந்துவருகின்றனர். அதில் நம்மக்கள் சிக்கிக்கொள்ளாமலிருப்பான்வேண்டி, அக்கொள்கையின் கெடுதிகளையும் இஸ்லாத்தின் நற்போதனைகளையும் தக்க முறையில் எடுத்துக்கூறி பிரசாரஞ் செய்யவேண்டியதாயு மிருக்கிறது. இத்துறைகளில் நம் சங்கம் அரும் பிரயாசையோடு தீவிரப் பிரசாரஞ்செய்து வருகிறதென்பது உங்களுக்கெல்லாம் நன்கு தெரிந்து விஷயம். இன்னோக்கங்களைச் செவ்வனே நிறைவேற்றுவான் வேண்டியே "ஹிபாஜத்துல் இஸ்லாம் மாசிகை" நடத்தப்பட்டு வருகிறது. இதனை வாசிக்கும் மக்கள் மார்க்கபக்தியுடையவர்களாகவும், இஸ்லாத்தின் அரும்போதனைகளைத் தெரிந்துகொள்ளக் கூடியவர்களாகவும், காதியானிகளின் வலையில் சிக்காமல் அவர்களுக்குத் தக்க மறுப்புக் கொடுக்கின்றவர்களாயுமாய் விடுகின்றனர். இவ்வரும் அம்ஸங்கள் பொருந்திய மாசிகையை தாங்களெல்லீரும் வாங்கி வாசிப்பதுடன் தங்கள் நண்பர்களையும் சந்தாதாரர்களாகச் சேர்க்க முயற்சிப்பீர்களாக. இதுவே நீங்கள் இஸ்லாத்திற்குச் செய்யும் பேருபகாரமாகும். எனவே, நமது சங்கத்தின் நோக்கங்களைப் பிரசாரம் புரிவதற்காக, ஜனப்களான மௌலானா மௌலவீ முஹம்மது மியான் சாஹிப், மௌலானா மௌலவீ முஹம்மது ஷர்புத்தீன் சாஹிப் இவ்விருவர்களையும் சங்கப் பிரதிநிதிகளாக தென் ஜில்லாக்களுக்கு அனுப்பியிருப்பதால், ஆங்காங்குள்ள நண்பர்கள் பிரசாரத்திற்கு வேண்டிய வசதிகளைச்செய்து, மௌலானாக்களின் அரும் உபந்நியாஸங்களைக் கேட்டு பயன் பெறுவதுடன் நூற்றுக்கணக்கில் மாசிகைக்குச் சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுக்குமாறும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

காரியதரிசிகள்,

ஹிபாஜத்துல் இஸ்லாம்.

சந்தா நேயர்கட்கு!

ஒவ்வொரு ஆண்டுக்குமுள்ள சந்தாப் பணத்தை வருட ஆரம் பத்திலேயே கொடுத்து, அரும் மாசிகையை அன்போடு ஆதரிக்க வேண்டு மென்பது உங்களெல்லோருக்கும் தெரிந்த விஷயமே. இந்நிலைமையில் அநேக சந்தாதார்கள் சென்ற 1934-ம் ஆண்டுக்குரிய சந்தாப் பணத்தை இதுவரை அனுப்பிக் கொடுக்காமலே அசட்டையாக இருந்து வருகின் றனர். ஆகவே, அன்பர்கள் அன்போடு தங்கள் பழைய பாக்கிகளையும், நிகழும் புதிய வருடத்திற்குரிய சந்தா ரூபாயையும் தாமதமின்றி அனுப்பி வைப்பார்களென எதிர்பார்க்கிறோம். மேலும், சென்ற வருடத்திற்கு ஏற் கனவே சந்தா செலுத்தியிருப்பவர்கள், 1935-ம் ஆண்டுக்குள்ள சந்தா ரூபாயை முன் பணமாக அனுப்பி ஆதரவு புரிவார்களென எதிர்பார்க் கிறோம்.

நமது சந்தாதார்களில் சிங்கை வாசிகள்

ஜனாப் மு. முகம்மது ஷரீப் சாஹிப் அவர்கள்,

(439, நார்ட் பிரிட்ஜ் ரோடு) இடமும்

பினாங் வாசிகள்

ஜனாப் N. K. முகம்மது கௌஸ் சாஹிப் அவர்கள்,

(117, சோலியா ஸ்ட்ரீட்) இடமும்

சிலோன் வாசிகள்

ஜனாப் A. M. K. ஆலிம் சாஹிப்,

(220, 2-ம் குறுக்குத் தெருவு) இடமும்

தங்கள் சந்தாக்களை செலுத்திவிடுமாறு கோருகிறோம்.

Printed at the Kesari Printing Works & Edited & Published by Moulvi A. R. Abdur Rahim Saheb, Manager, Hifazath-ul-Islam, 43-A, Post Office St., G.T., Madras.

420 1420

Regd. No. M. 2569

நாயகமலர்

ஹிஜ்ரி 1354 ஸபர், ரபீஉல்அவ்வல்மீ, 1935 ஜூன்மீ

1. திரு குர்ஆன் ... 201
2. நாயக வாக்கியம் ... 204
3. மீலாதுன்னபீ (ஸல்.) ... 205
4. உலகரெட்சகர் (ஸல்.) அவர்கள் பிறக்குங் காலத்தில் உலகமிருந்த நிலைமை ... 207
5. பெருமானர் (ஸல்) அவர்களிடம் குறைஷியர்களின் வேண்டுகோள் ... 211
6. சத்தியத்தூதர் (ஸல்.) அவர்களது பிரசார முறை ... 213
7. மதீனவுக்கு ஹிஜ்ரத் செய்தல் ... 218
8. ஹிஜ்றத்தக்குப் பிந்திய சம்பவம் ... 223
9. பெருமானர் (ஸல்.) அவர்களது முக்கிய வேலை ... 225
10. காத்தமுந்நபீ (ஸல்) ... 228
11. விஞ்ஞானவாதம் பேசும் அஞ்ஞானி ... 235
12. பெருமானர் (ஸல்.) சற்குணம். ... 238

சென்னை
ஹிபாஜத்துல்இஸ்லாம் சங்கத்தாரின்
வெளியீடு

K.R. SARMA

ஹிபாஜுத்துல் இஸ்லாம்

சந்தா விபரம்

இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய உள் நாடுகளுக்கு ...	ரூபா	3	0	0
பினாங்கு, சிங்கப்பூர், மலாயா முதலிய வெளிநாடுகளுக்கு...	,,	4	0	0
தனிப் பிரதி ...	,,	0	4	0

ஒரு வருஷத்திற்கு குறைந்து பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

நிபந்தனைகள்

1. சந்தாதாரர்களாகச் சேருகிறவர் முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

2. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும், மணியார்டர் அனுப்பும்பொழுதும் தங்கள் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிடவேண்டும். பதிலறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

3. ஒரு வருஷத்திற்கு இடையில் சந்தாதாராராகச் சேருவோர் இஷ்டப்பட்டால் முந்திய மாதங்களின் சஞ்சிகைகளையும் கிரயங்கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

4. விஷயதானஞ் செய்ய விரும்புங் கனவான்கள் எளிய நடையில் ஒரே பக்கத்தில் மிகத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

5. மததூஷணையான விஷயங்களும், வீண் தர்க்கங்களையுண்டு பண்ணும் வியாசங்களும், ஆளைக்குறித்துத் தாக்கி எழுதும் வியாசங்களும், பத்திரிகையின் நோக்கத்திற்கு மாறுபாடான வியாசங்களும் பிரசுரிக்கப்படமாட்டா.

6. எந்த வியாசத்தையும் நிறுத்திக்கொள்ளவும், திருத்திக்கொள்ளவும், சுருக்கிக்கொள்ளவும் ஆசிரியற்கு உரிமையுண்டு.

மானேஜர்,

"ஹிபாஜுத்துல் இஸ்லாம்" ஆபீஸ்,

43-A, போஸ்டாபீஸ் தெரு,

G T., மதராஸ்.

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நீச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம். [குர்ஆன்

ஆசிரியர்:—மௌலவீ A. R. அப்துர்றஹீம் ஷாஹிப் (பாக்கவி)

மலர் 6	ஹிஜ்ரி 1354 ஸபர், ரபீஉல் அவ்வல் மீ 1935 ஸ்ரு ஜூன் மீ	இதழ் 6

திரு குர்ஆன்

"(ஜனங்களே) உங்களுக்கு (அதாவது உங்களில் அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நாடி, அல்லாஹ்வை அதிகமாக ஞாபகிப்பவர்களுக்கு) அல்லாஹ்வின் தூதரில் நிச்சயமாக அழகிய முன்மாதிரி இருக்கிறது." (குர்ஆன்).

சோதரீர்! திருமறையாம் புருக்கானுல் ஹமீது எனும் வேத வசனத்தின் மேலே கூறப்பட்டுள்ள ஆயத்தில் நம்முடைய மறுமைப் பேற்றின் வெற்றிக்கும், அல்லாஹுத ஆலா நம்மீது கருணைகாட்டி நமக்கு அருள் புரிவதற்கும் எம்பிரான் ஹஜ்றத் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலஹி வஸல்லமவர்களில் சிறந்த முன்மாதிரி இருப்பதாக அல்லாஹ்கூறி இருக்கிறான். மற்றொரு வசனத்தில் "நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பீர்களாயின் என்னைப் பின்பற்றுங்கள் (அப்போழுது) உங்களை அல்லாஹ் நேசிப்பான்" என்று நமக்குக் கூறும்படி எம்பிரான் நபிகள் திலகம் (ஸல்) அவர்களுக்குக் கட்டளை யிட்டிருக்கிறான்.

இவ்விரு வேதவசனங்களுக்கு மிடையில் எவ்வளவு ஒற்றுமை இருக்கிறது என்பதைக் கவனியுங்கள்! இவ்விரு வேதவசனங்களும் எவ்வளவு அருத்த புஷ்டியுள்ளனவாக இருக்கின்றன என்பதைச் சிந்தியுங்கள்!! தற்காலத்தில் உலகினில் முன்னேற்றமடைந்த பல லௌகீக வாதிகளையும் கவனித்துப் பாருங்கள்!!! இவர்கள் முன்னேற்ற மடைந்ததற்கு யாது காரணம் என்பதற்கும், மேலே கண்ட வேதவசனங்கள் வற்புறுத்திக் கட்டளையிடும் விஷயத்துக்கும் உள்ள பொருத்தம் நன்கு தெரியவரும். தற்காலே முன்னேற்ற மடைந்த பல லௌகீக வாதிகளையும் இவ்வளவு பெரிய அந்தஸ்தில் கொண்டுவந்து விட்டதற்கு முக்கிய காரணம், அவர்கள் முற்காலத்திலிருந்த பல பெரிய மனிதர்களின் ஜீவிய சரித்திரங்களைப் படித்து, அவர்களுடைய உழைப்பு, விடாமுயற்சி, அதைரியமடையாமை, தூணிச்சல் போன்ற அநேகம் அருங்குணங்களை யுணர்ந்து, அவர்களிலுள்ள இத்தன்மைகளைத் தங்களிடமும் உற்பத்தி செய்துக்கொண்டு, அத்துறையில் ஈடுபட்டதேயாகும் என்பது யாவருக்கும் தெரிந்த விஷயம்.

நம்மைப்போல் சாமான்ய மனிதர்களாக உள்ள ஜனங்களிலிருக்கிற ஒரிரு தன்மைகளைக் கடைப்பிடிப்பதே நம்மை உயர்ந்த அந்தஸ்துக்குக்கொண்டு வருவதாக இருந்தால், உலகமனைத்துக்கும் தலைவராகவும், கருணையாகவும், வழி காட்டியாகவும் வந்த வள்ளல் நபீப்றசூல் (ஸல்) அவர்களது ஜீவிய சரித்திரம் நம்மை முன்னேற்ற மடையச் செய்வதற்கு முக்கிய தூண்டுகோலாக இருக்குமென்பதில் ஐய முண்டோ? நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது ஜீவிய சரித்திரமும் திருகுர்ஆனும் ஒரே லக்ஷியத்தைப் போதிக்கும் இரு பிரிவுகளாக இருக்கின்றன. திருகுர்ஆன், கட்டளைகள் நிறைந்த வேதமாக இருக்கிறது. இக்கட்டளைகள் வெறும் ஏட்டுச் சுரக்காயாக இல்லாமல் மனிதர்களால் கடைப்பிடித் தொழுகத்தக்க மிக எளிய சட்டங்களேயாகும் என்பதை நபியே கரீம் (ஸல்.) அவர்களது ஜீவிய சரித்திரத்திலிருந்து எவரும் சுலபமாக அறிந்துகொள்ள முடியும்.

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது வாழ்க்கை முறை முற்றிலும் திருகுர்ஆனின் கட்டளையைப் பின்பற்றி நடந்த கிரியைகள் அடங்கிய ஜாப்தாவாகவே இருக்கிறது. நாயகம் (ஸல்.) அவர்கள் அல்லாஹுதஆலாவின் கட்டளையை அணுப்பிரமாணமும் கூடப்பிசகாமல் தழுவி நடந்ததால் இவ்வுலகில் சம்பவிக்கக்கூடிய சகல கஷ்டங்களும் நாயகம் (ஸல்.) அவர்களுக்கு வந்தும், அவைகளெல்லாம் நாயகம் (ஸல்.) அவர்களைப் பாதிக்காதனவாக ஆகிவிட்டன. நாயகம் (ஸல்.) அவர்கள் தங்களது குழந்தைப் பருவத்தில் அனுதையாக இருந்தார்கள்; பெற்றோர்களல்லாமல் மற்றோர்களால் வளர்க்கப் பட்டார்கள்; கல்வி படிப்பதற்காக ஒரு பள்ளிக்கூடமோ அல்லது ஒரு ஆசானிடமோ சென்று கல்வியறிவைத் தேடிக்கொள்ளும் சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. பள்ளிக்கூடத்தில் பயிலக்கூடிய காலம் கடந்து ஏதேனும் தொழில் முறைகளைச் செய்யக்கூடிய வயது வந்த காலத்தில் தங்களுடைய பெற்றோர்களால் தொழில் முறைகளில் பழக்கப்படவோ, அல்லது தொழில் முறை செய்வதற்கான மூலதனம் தேடிக்கொள்ளவோ இல்லை.

ஒருவர் முன்னேற்ற மடைவதற்கு அவருடைய பெற்றோர்கள் வெகு காலம் வரை ஜீவித்திருந்து தமது புதல்வர்களுக்கு நல்லொழுக்கம், கல்வி, தொழில் முதலியவைகளில் பயிற்சியளித்து அப்பால் அவர்களுக்கு மூலதனமும் கொடுத்து முன்னேற்றத்துக்கான மார்க்கங்களைக் காண்பிப்பது எங்குமுள்ள வழக்கமாக இருக்கிறது. இவ்வழக்கத்திற்கேற்ப நாயகம் (ஸல்.) அவர்களுக்கு எவ்விதவாய்ப்பும் கிடைக்கவில்லை. ஆயினும், எல்லாரையும் பார்க்கினும் அதிக முன்னேற்றமுள்ளவர்களாகவும், சிறந்த ஒழுக்கவானுகவும், மக்காவிலுள்ள ஜனங்கள் யாவரினும் போற்றப்படுபவர்களாகவும், திரண்ட செல்வங்களுள்ளவர்களெல்லாம் அவர்களிடம் தங்கள் திரவியங்களை மூலதனமாகக் கொடுத்து வியாபாரம் செய்யச் செய்வதற்கு தகுதியுடையவர்களாகவும் இருந்தார்கள்.

எனவே, ஒருவர் முன்னுக்கு வருவதற்கும், தலைவராவதற்கும், செல்வந்தராவதற்கும், சிறந்த வியாபாரம் முதலிய தொழில் செய்வதற்கும் இற்றைநாளில் முக்கியமாக இருக்க வேண்டிய அம்சங்கள் என்று கருதப்படுபவைகளல்லாமலே சத்தியசீலர் (ஸல்.) அவர்கள் முன்னுக்கு வந்திருக்கிறார்கள். ஆகவே, முன்னேற்றமடைவதற்கு நாம் சாதாரணமாக நினைத்துக் கொண்டிருக்கிற உபகரணங்களில்லாமல், தம்முடைய சுயஒழுக்கங்களாலும், திறமைகளாலும் முன்னுக்கு வரமுடியும் என்பதும், அள்ளிக்கொடுத்த சோறும், சொல்லிக்கொடுத்த புத்தியும் வெகு நாளைக்கு நிற்காது என்ற பழமொழி உண்மை என்பதும் நன்கு விளங்குகிறது. இவ்விபரங்கள் நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்களுக்கு நுபுவ்வத்து வருவதற்கு முன்பே நடைபெற்றவைகளாகும். நுபுவ்வத்துக்குப்பின் நடைபெற்ற விபரங்களை ஒவ்வொன்றாக நாம் விவரிப்பதாயின் இச்சிறு வியாசத்தில் இடமிருக்காது. ஆயினும், இரண்டொரு முக்கிய விஷயங்களை மேல் எழுந்தவாரியாக இங்கு சுட்டிக்காட்டுவது அவசியமெனக் கருதுகின்றோம். நாயகம் (ஸல்.) அவர்கள் பிறக்கும்போது அனுதையாகஇருந்தார்கள். இளமையில் ஆதரிப்புச் செய்வதற்குத் தந்தையுடன் பிறந்தவர்களைத் தவிர்த்து வேறுயாரும் இருந்ததாகக் காணப்படவில்லை. ஆனல், அவர்களுடைய முதிய வயதில் அதாவது 60—61 வயது நடைபெற்ற காலத்தில் அறபிதேசம் முழுவதும் அவர்களுக்கு அடிபணிந்து, அவர்களுடைய எந்தக்கட்டளையையும் ஒருக்ஷண நேரம் கூடத்

தாமதம் செய்யாமல் நிறைவேற்றி வைப்பதற் காகக் காத்துக் கொண்டிருந்தது. உலகில் ஒரு வருக்குத் தீர் அதிர்ஷ்டம் ஏற்படுவதாயின் அவர் அனுதையாக இருப்பதைப் பார்க்கினும் பெரும் தீர்அதிர்ஷ்டம் வேறொன்றும் இருக்க முடியாது. இதுபோல், ஒருவருக்கு யோகம் வருவதாயின் அவர் நினைத்தகாரியம் கொஞ்ச மும் ஆலோசனையோ, எதிர்ப்போ இல்லாமல் உடனே நிறைவேற்றப்படுவதைப் பார்க்கினும் பெரியயோகம் வேறொன்றுமில்லை. இவ்விரு விதமான நிலைமையையும் நாயகம் (ஸல்.) அவர் கள் சம்பூரணமாக அடைந்திருந்தார்கள். இதற்கிடையில் ஒருவர் முன்னேற்றமடை வதற்குத் தடை முறைகள் எத்தனை விதத்தில் எந்தெந்த மாதிரியில், எந்தெந்த ரீதியில் சம்ப விக்கமுடியுமோ அந்தமாதிரியிலெல்லாம் சகல தடை முறைகளும் நாயகம் (ஸல்.) அவர் களுக்கு வந்து வழிமறித்தன. ஆனால் இவை கள் ஒன்றும் நாயகம் (ஸல்.) அவர்களை வெற் றிக்கொள்ளாமல் தோல்வியே யடைந்தன. சத்தியசீலர் (ஸல்.) அவர்களைக் கொன்றுவிட வேண்டுமென்று சதியாலோசனை செய்தனர்; அவர்கள் மீதுள்ள கோபத்தின் காரண மாக அவர்களது குடும்பத்தைச் சேர்ந்தவர்க ளனைவரையும் பகிஷ்காரம் செய்து 3 வருஷ காலம்வரை கஷ்டப்படுத்தினர்; பெருமானார் (ஸல்.) அவர்களைக் கஃபாவுக்குள் செல்லவிடா மற் தடுத்தனர்; அதைப் பூட்டிவைத்தனர்; அவர்களைக் கொன்று தலையைக் கொண்டுவரு வர்களுக்கு அல்லது உயிருடன் பிடித்துவரு வர்களுக்கு இனம் கொடுப்பதாகப் பிரகட ன மும் செய்தனர்; வெகுமதிக்கு ஆசைப்பட்டு அவர்களைப் பிடிப்பதற்காகப் பலர் புறப்பட்ட னர். இறுதியாக உத்தமத்தூதர் (ஸல்.) அவர் கள் பிறந்த ஊரைவிட்டு இறைவனின் உத்தர வுப்படி அயலூர் செல்லவும் நேர்ந்தது. ஆயி னும், சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள் அதைரிய மடையாது சத்தியத்தை உரைப்பதிலும், நீதியாக நடந்து கொள்வதிலும் பின்வாங்க வில்லை.

பெருமானார் (ஸல்.) அவர்களுக்குகஃபாவைத் திறந்துவிட மறுத்துப் பூட்டிக் கொண்ட அதே ஆசாமிகள், இறுதியாக ஹுஜூர் (ஸல்.) அவர்களிடம் கஃபாவின் சாவியை ஒப்புவித்து விடவேண்டியதாயிற்று. இனம்வாங்க ஆசைப் பட்டு பெருமானர் (ஸல்.) அவர்களைக் கொல்வ தற்காக வந்த அதே ஆசாமி, அவர்களிடம் அப யச் சீட்டு எழுதி வாங்கிக் கொள்ளவேண்டிய தேற்பட்டது. மக்காவைவிட்டு வெளியிற்செல் லும்படி முஸ்லிம்களை நிர்ப்பந்தப்படுத்திய அதே ஆசாமிகள் சத்தியத்தூதர் (ஸல்.)அவர்க ளிடம் மக்காவை ஒப்புவித்துவிட்டு தங்கள்உயி ரைக் காப்பாற்ற பிறநாடுதேடி ஓடவேண்டிய நிலைமை ஏற்பட்டது. பெருமானர் (ஸல்.) அவர்களைக் கொலைசெய்ய வேண்டுமென்று சதி செய்த அதே ஆசாமிகள் அவர்களிடம் மன் னிப்புக் கேட்க வேண்டிய சந்தர்ப்பமும் வாய்த் தது.

இவ்விதமான இருநிலைமையிலும் எம்பிரான் வள்ளல் அவர்கள் தங்களது நிலைமையைச் சிதற விடாமல் மிகவும் நேர்மையாக நடந்து கொண்ட உதாரகுணம் உலகம் பின்பற்றத் தகுந்தவையாகும். இதனால்தான் இறைவன், மனிதவர்க்கமாகிய நமக்கு நபிகள் திலகம் (ஸல்.) அவர்களின் வாழ்க்கை முறை சிறந்த முன்மாதிரியாகவும் வழிகாட்டியாகவும் இருக் கிறது என்று அறிவுறுத்தியுள்ளான். ஈங்கு முக்கியமாய் கவனிக்கத்தக்க விஷயமொன் றுளது, தரித்திரக் கொடுமையால் வழிதவறி விட்டோம் என்றும், செல்வப் பெருக்கால் இறைவனைப் பணிய நேரங்கிடைக்கவில்லை என்றும் எவரும் சொல்லிக்கொள்ள முடியாது என்பதையும், சத்தியமாக, சன்மார்க்கமாக இருக்க விருப்பமுள்ளோருக்கு அவர்களின் தரித்திர நிலைமையும், செல்வ நிலைமையும், செல் வாக்கில்லாத நிலைமையும், செல்வாக்கு மிகுத மாகவுள்ள நிலைமையும் எவ்விதத்திலும் பாதிக் காது என்பதையும் வள்ளல் நாயகம் (ஸல்.) அவர்களது வாழ்க்கை முறை சிறந்த படிப் பினையாக இருக்கிறது. ஆகவே, நம்மவர் நமது நாயகம் (ஸல்.) அவர்களது வாழ்க்கை முறை யினைப் படித்து அவைகளின்படி நடக்க இறை வன் தௌபீக் செய்து அருள்புரிவானாக. ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

யவ்முந்நபி

முஸ்லிம்காள்! கண்ணியமிக்க புண்ணிபம் பொருந்திய நாள் அதிசமீபத்தில் வரு கிறது. அன்றைய தினத்தை தக்க முறையில், கண்ணியமான விதத்தில் கொண்டாடி இகபர பாக்கியங்களை அடைவீர்களாக.

நாயக வாக்கியம்

உங்க (முஸ்லிம்க)ளில் எவரும் தன்னையும் இன்னும், தன்பிள்ளை முதலிய யாவர்களையும் பார்க்கினும் என்னை அதிகமாய் நேசிக்காதவரை அவர் முமினாக இருக்க முடியாது. என, நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

அதாவது, மானிடன் உலகிலுள்ள சகல ஆசாபாசம், சம்மந்தம், பந்தத்துவம் முதலிய வைகளைப் பார்க்கினும் நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் மீது அதிக அன்பும் பிரீதியும் கொள்ளும் வரை அவன் உண்மை முஸ்லிமாக இருக்க முடியாதென்பது திண்ணம். இந்த திருவாக்கியத்தில் உண்மை - பரிபூர்ண மூமின் இன்னார்தான் என பெருமானார் (ஸல்)அவர்கள் அறிவித்துவிட்டதால், ஹஸ்ரத் உமரபாரூக் (ரலி.) அவர்கள் சத்தியத்தூதர் (ஸல்.) அவர்களை நோக்கி, என்னைத்தவிர யுள்ளவைகள் யாவற்றைப் பார்க்கினும் தங்கள் மீது யான் அதிகப்பிரீதி கொண்டிருக்கின்றேன் எனத்தெரிவித்துக் கொண்டதை செவியுற்ற நபிகள் திலகம் (ஸல.) அவர்கள் "இன்னும் உங்கள் ஈமான் பரிபூர்ணமடையவில்லை" எனக்கூறினார்கள். உடனே ஹஸ்ரத் உமரபாரூக் (ரலி.) அவர்கள், சத்தியத்தூதர் (ஸல்.) அவர்களே! இதுபொழுது உலகிலுள்ளவஸ்துக்களென்ன? என்னை விடவும் தங்களை அதிகமாய் பிரீதி கொள்ளுகின்றேன் என அறிவித்துக் கொண்டார்கள். அதுபொழுது சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள், "இது பொழுது தான் நீங்கள் பரிபூரண மூமினாகிவிட்டீர்கள்" எனத்தெறிவித்தார்கள்.

நபிகள் பெருமானார் (ஸல்) அவர்களின் இந்த உபதேசமானது அவர்கள் மீது அதிகம் பிரீதி கொள்பவர்களின் மரியாதை, பதவியை எடுத்துக் காட்டுவதாகவும் அச்சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள் மீது பிரீதி கொள்ளாதிருப்பவர்களது ஈமானின் பலக்குறைவை விளக்குவதாகவுமிருக்கிறது. மேலே கூறப்பட்டுள்ள ஹதீதைத்தவிர குர்ஆன் ஷரீபின் அநேக ஆயத்துகளும் ஹதீதுஷரீபின் பற்பல வாக்கியங்களும், "மானிடன் நபிகட் திலகம் (ஸல்.) அவர்கள்மீது அதிகப் பிரீதிகொள்ளாதிருக்கும் வரை அவன் ஈமான் என்னும் ஐசுவரியத்தைக்கொண்டு நிம்மதியடைந்தவனாக இருக்க முடியாது" என அறிவித்துக் கொண்டிருக்கின்றன, எனவே, நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்களின்மீது பிரீதி மிகைத்து விடாதவரை ஈமானென்னும் ஒளி மானிடனது மனதில் பிரகாசித்து ஜொலிக்காதென்பது திண்ணம்.

நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் ஒருபக்கல் அடியார்களுடனும் மற்றொரு பக்கல் றப்புல் ஆலமீனாகிய அல்லாஹ் உடனும் சம்பந்தம் கொண்டவர்களாக இருப்பதால், அவர்கள் அல்லாஹ் தஆலாவுடன் சம்பந்தம் வைத்திருப்பதன் மகிமையை நாம் மனதில் தக்க முறையில் அமைத்துக் கொள்ளாதவரை நாம்அல்லாஹ்தஆலாவின் ஏகத்துவத்தை வாயளவில் கூறிக் கொண்டிருப்பது ஒப்புக்கொள்ளப் பட்டதாகி விடுவதற்கில்லை. சத்திபவான்களான ஸஹாபாக்களின் திருவாழ்க்கையில் சத்திய இஸ்லாத்தின் உண்மை ஒளி வீசிக்கொண்டிருந்ததற்குக் காரணம் அவர்கள் பெருமானார் (ஸல்.) அவர்கள்மீது பிரீதிகொண்டிருந்ததேயாகும். ஆனால் அந்த சஹாபாக்களவில் சேர்த்து பார்ப்பது கொண்டு நம்மை பேரளவிலுள்ள முஸ்லிம்களென்றே கூற வேண்டும். நம்முடைய அமல், செய்கை, ரஸூலுல்லாஹி (ஸல்.) அவர்கள்மீது பிரீதிகொள்ளுவது ஆகியவைகளுக்கும் அவர்களின்இச்செய்கைகளுக்கும்அளவற்றவித்தியாசமிருக்கின்றது. நாம் உண்மை மூமின்களென பெயரளவில் மட்டும் கூறிக்கொண்டிருப்பதால் நம்மில் பலவாறான பிரிவினைகள் ஏற்பட்டு, ஒவ்வொருவரும் தம்மை அதிக மேலானவராக மதிப்பதும், யாவரும் தனக்கே கெவர்ந்தி அளிக்க வேண்டுமெனக் கருதுவதும் சகஜமாக ஏற்பட்டுவிட்டது. மேலும்,சிலவழிகேடர்கள் நபித்துவத்தை தாவாச்செய்து எம்பெருமானார் நபிய்யகரீம் (ஸல்) அவர்கள் காத்த முன்னபிய்யாக இருப்பதை மறுப்பதானது அவர்கள் மீது மானிடர் பிரீதி கொள்வதை மறுக்கக்கூடியதாக இருக்கின்றது. இது வெல்லாம் காலத்தின் கோலமல்லவா?

ஆகவே, நாம் பரிபூரண ஈமானையுடையவர்களாக ஆகுவதற்கு எம்பெருமானார் நபிய்யகரீம் (ஸல்.) அவர்கள்மீது இதரவஸ்துக்களைவிட அதிகப் பிரீதி கொள்வதே பிரதான காரணமாக இருப்பதால் நாம் அவ்வாறு பூரண பிரீதி கொண்டவர்களாய்த் திகழ்வோமாக.



மீலாதுன்னபீ (ஸல்.)

"மனிதன் புரிந்துள்ள உபகாரத்துக்கு நன்றி செலுத்தாதவர்கள் அல்லாஹ்தஆலாவுக்கு நன்றி செலுத்தமாட்டார்கள்" என்பது நாயக வாக்கியமாகும். அல்லாஹ் தஆலா நமக்களித்துள்ள நன்மைகளுக்கும், அனுக்கிரகங்களுக்கும், பாக்கியங்களுக்கும் நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோமென்பதை இந்நாளிலென்ன? என்னாளிலும் மக்களில் எவரும் மறுக்கமாட்டார்கள். நன்றி மறந்திருப்பவர்களைத் தான் அனைவரும் வெறுப்பார்கள். ஆயினும், ஒருவர் அல்லாஹ் தஆலாவுக்கு நன்றி செலுத்துகிறாரா? இல்லையா? என்பதை நாம் எவ்விதம் தெரிந்துகொள்வது என்றபிரசினை வரும்போது அதைக் கிரியாம்சையில் செய்து காட்டினால்தான் நாம் அவரை நன்றி செலுத்துபவர் என்று தெரிந்துகொள்ள முடியும். அல்லாஹ் தஆலாவுக்குப் பிறகு மனிதவர்க்கத்தாரில் ஆண், பெண், அடிமை, அரசன் முதலிய யாவரும் ஏகமனதாக நன்றி செலுத்தப்பட உரிமையுள்ளவர் ஹஜ்றத் காத்தமுல் அன்பியா, தாஹா றஸூல் (ஸல்.) அவர்களேயாவார்கள். ஏனெனில், மனிதவர்க்கத்தார் மிகவும் சீர்கேடான நிலைமைக்கு வந்து, மிருகங்களிலும் கேவலமான தன்மைகளையடைந்து, ஒழுக்கமில்லாதவர்களாகவும், தங்களைத் தாங்களே நாசம் செய்து கொள்பவர்களாகவுமிருந்தார்கள். இவ்வாறு பாதாளத்தில் கிடந்த மனிதவர்க்கத்துக்கு ஒழுக்கம், நியாயம், சத்தியம், ஆகியவைகளைப் போதித்து மலக்குகளின் அந்தஸ்தை அடையும்வரை அவர்களை உயர்த்திய தனிப் பெறும் பேறு ஹஜ்றத் றஸூலே அக்ரம் (ஸல்.) அவர்களுக்கே உண்டு. படைத்தவனை, ரக்ஷிப்பவனை, போஷிப்பவனை மறந்து கல்லையும், மண்ணையும், சூரியனையும், சந்திரனையும், மிருகங்களையும், பாம்பையும், ஜலத்தையும், அக்கினியையும் வணங்கி மறுஉலகப் பேற்றை யடைவதற்கான வழியை முற்றிலும் மறந்து, உலகம் முழுவதும் அஞ்ஞானம் என்ற அந்தகாரத்தில் மூழ்கிக் கிடந்தது. இந்த அஞ்ஞானத்தை அகற்றி மெஞ்ஞானத்தை நிலைநிறுத்திய பெருமை ஹ்ஜூர் (ஸல்.) அவர்களுக்கே உரித்தானதாக இருக்கிறது.

இவ்வற்ப உலக வாழ்வைத்தள்ளி விடுங்கள். நித்திய வாழ்க்கையாகிய மறு உலக வாழ்க்கையைப்பற்றி உலகத்தைக் கண்டித்துணர்த்திய ஹ்ஜூர் (ஸல்.) அவர்கள் செய்த இந்த ஒரு நன்றிக்காக இவ்வுலகத்தார் அனைவரும் உலகம் உள்ளளவும் ஹ்ஜூர் (ஸல்.) அவர்களுக்கு நன்றிசெலுத்திப்போற்றினாலும் அதுமிகக் குறைவென்றே சொல்லலாம்.

ஸ்திரீகளுக்கு உயிர் இருக்கிறதா? உணர்ச்சி இருக்கிறதா? அவர்கள் மனித வர்க்கத்தைச் சேர்ந்தவர்களா? என்ற விஷயத்திலேயே ஆடவர்கள் சந்தேகங்கொண்டு அவர்களை மிருகத்திலும் கேவலமாக நடத்திவந்தனர். ஆடுமாடு ஒட்டகம்போன்ற பிராணிகளையும், வீடுவாசல் தோட்டம் துறவு,

நஞ்செய் புஞ்செய் போன்ற சொத்துச் சுகங்களையும் பங்காளிகள் பாகம் செய்துகொள்வதுபோல் ஸ்திரிகளையும் பாகம் வைத்து எடுத்துக்கொண்டிருந்தனர். இவ்விதம் இழி நிலையிலிருந்த ஸ்திரிகள மனிதவர்க்கத்துக்கு முக்கிய தூண் என்று கருதப்படும் நிலைமைவரை உயர்த்தி, அவர்களுமேலான அந்தஸ்துக்குக் கொண்டுவந்தவர்கள் ஹஜ்ரத் (ஸல்.) அவர்களேயாவார்கள். இதற்காக ஸ்திரீ உலகம் அவர்களுக்காக சகலத்தையும் அற்பணம் செய்துவிடுவது கூட மிகக் குறைவென்றே கூறலாம்.

அடிமை, எஜமான் என்ற பிரசினையை எடுத்துக்கொள்வோம்: மனிதனுக்கு இறைவன் கால், கை, மூக்கு, கண், வாய், முதலிய அவயவங்களைக் கொடுத்திருக்கிறான். இவ்வவயவங்களின் மூலமாக தனக்குவேண்டிய சகல காரியங்களையும் செய்துகொள்கிறோம். இதுபோல் விருப்பு, வெறுப்பு, இன்பம், துன்பம், ஆசை, பாசம், சுகம், துக்கம் ஆகியவைகளையும் உணர்வதற்குள்ள உணர்ச்சிகளையும் கொடுத்திருக்கிறான். இவ்வுணர்ச்சிகளின் மூலமாக நாம் சகலத்தையும் அறிந்துகொள்கிறோம். இதில் மனிதராகப் பிறந்தவர்கள் யாவரும் சமமாகவே இருக்கின்றனர். ஆயினும், சில வல்லவர்கள் எளியார் பலரை அடிமைகள் என்றேறப்படுத்தி மிருகங்களைப் போல் அவர்களைக் கேவலமானவர்களாக்கி, உழைப்பது அடிமையும், உண்பது எஜமானும் என்ற நிலைமைக்குக் கொண்டுவந்து, இன்பம் துன்பம், சுகம் துக்கம் ஆகியவைகளைக் கூட அவர்கள் இஷ்டம்போல் அனுபவிக்க விடாமல் தடுத்து வைத்திருந்தனர். இப்படிப்பட்ட கொடுமையை ஒழிப்பதற்காக முதல் முதலாக முயற்சிசெய்து, அடிமைகள் அரசர்களாகவும், இமாம்களாகவும், எஜமானர்களாகவும் ஆகுவதற்குத் தக்க வழியைத் திறந்துவிட்டவர்கள் எம்பிரான் (ஸல்.) அவர்களே யாவார்கள். இம்முறையைக் கவனிக்குமிடத்து சமத்துவம், சுதந்திரம் என்ற உணர்ச்சியை உண்டுபண்ணியமைக்காக இவ்வுலகம் முழுவதும் ஹஜ்ரத் (ஸல்.) அவர்களைக் கொண்டாடிப் போற்றிப் புகழக் கடமைப்பட்டுளது.

இவ்வாறு உலகம் முழுவதற்கும் அநேகம் அரும்பெரும் தொண்டுகளை ஆற்றி மக்களை மக்கள் நிலைமைக்குக் கொண்டுவந்த உத்தமத் தூதர் (ஸல்.) அவர்களுக்கு மனிதவர்க்கம் நன்றி செலுத்துவது எங்ஙனம்? இவ்விதம் நன்றி செலுத்துவதால் அவர்களுக்கு மனிதவர்க்கத்தால் ஏதேனும் புதிய தொரு நன்மையோ உதவியோ எற்படப்போகிறதா? அல்லது அவர்களே மனிதவர்க்கம் தமக்கு நன்றி செலுத்த வேண்டும் என்பதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்களா என்பதை நாம் கவனிப்போமாயின், ஹஜ்ரத் (ஸல்.) அவர்களுக்கு இஃதொன்றும் தேவையுமில்லை; இவைகளை அவர்கள் எதிர்பார்க்கவுமில்லை என்று துணிந்து கூறலாம். ஆனல், நாம், அந்த வள்ளல் அவர்கள் செய்த நன்றியைப் போற்றிக் கொண்டாடுவது நமக்குத்தான் இன்னும் பல நன்மைகளை அளிப்பதாக இருக்கிறது.

எவ்விதமெனில், வள்ளல் ரஸூல் (ஸல்.) அவர்கள் செய்த நன்றியை நாம் நினைவு கூர்ந்து, அதிலுள்ள நன்மைகளை மறுபடியும் ஞாபகப்படுத்திக் கொள்வோமாயின் நமது ஞாபகக் குறைவினலும், உலகப்பற்றினலும் தவறிச் செய்த ஒரிரு அநியாய அக்கிரமங்களை அகற்றி ஏகனை அல்லாஹ்த ஆலாவின் பாதையில் செல்வதற்கான புத்துணர்ச்சியும் புத்துயிரும் நமக்கு உண்டாகிறது. இதனல் இறையருள் நமக்கு மென்மேலும் உண்டாகும். இறையருள் கிடைப்பதைப்பார்க்கினும் பெரியதொரு பாக்கியம் இப்புவியில் வேறொன்றுமில்லை.

இவ்வாறு மனிதவர்க்கம் அனைத்தும் ஏககாலத்தில் வள்ளல் ரஸூல் (ஸல்.) அவர்களுக்கு நன்றி செலுத்தித் தங்களது அன்பையும் கண்ணியத்தையும் சமர்ப்பிப்பதற்காகப் பெரியார்கள் வருஷத்திலொருநாளைத் தெரிந்தெடுத்திருக்கிறார்கள். அதாவது, ஹுஜூர் (ஸல்.) அவர்கள் பிறந்த தேதியை உலகம் முழுவதிலுமுள்ள மக்கள் அப்பெரியாரின் திருநாளாகக் கொண்டாடி, அன்றையதினம் ஆங்காங்கு கூட்டம் கூடி வள்ளல் நாயகம் (ஸல்.) அவர்கள் இவ்வுலகுக்குச் செய்த அரும்பெரும் தொண்டுகளைப் பொதுஜனங்களுக்கு எடுத்துக்கூறி அவைகளின்படி நடக்கப் பொதுமக்களைத் தூண்டவேண்டும் என்றும், அன்றையதினம் இவ்விஷய சம்பந்தமாக எழுதப்பட்ட பல புத்தகங்களை ஜாதிமதபேதமின்றி யாவருக்கும் இனமாக வழங்கி எல்லாரையும் படித்துணரச் செய்யவேண்டும் என்றும் திட்டம்போட்டு அதன்படி சென்ற சில வருஷங்களாகச் சேவைபுரிந்து வருகின்றார்கள்.

அத்திருநாள் அதி சமீபத்தில் வருகிறது. அன்றையதினத்தில் இவ்வுலகிலுள்ள சகலதேசங்களிலுமுள்ளசகலரும் சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள் மனிதவர்க்கத்துக்குச் செய்த பேருபகாரங்களை நினைத்துத் தங்களது நன்றியறிதலைச் சமர்ப்பித்துக்கொள்வர். தமிழ்நாட்டின் கண்ணே மார்க்கபக்தியிலும், நன்றி மறவாமையிலும் பிரசித்திபெற்றுவிளங்கும் நம்மவர்களும் இத்திருநாளைக் கொண்டாடுவதில் மற்றவருக்குப்பின் வாங்கமாட்டார்களென்று நம்புகிறோம். சென்ற சில வருஷங்களில் இத்திருநாளைக் கொண்டாடியதைப் பார்க்கினும் அதிக விமரிசையாக இவ்வருஷத்தைய இத்திருநாளைக் கொண்டாடி ஹுஜூர் (ஸல்.) அவர்கள் பால் தங்களுக்குள்ள விசுவாசத்தைத் தெரிவித்துக்கொள்வது நமது கடமையாகும் என்பதை மிக அழுத்தமாக அறிவித்துக் கொள்கிறோம். இறைவன் இத்திருநாளைப் பெரு நாளாகக் கொண்டாட நம்மவருக்கு நல்லுதவி புரிவானாக. ஆமீன், ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

உலகரெட்சகர் (ஸல்.) அவர்கள் பிறக்குங் காலத்தில் உலகமிருந்த நிலைமை.

நுபுவ்வத் என்ற ஞானசூரியன் உதயமாகும் காலத்தில் உலகம் பாவக்கடலில் மூழ்கி இருந்தது. எங்கு பார்த்தாலும் பாவம், பழி என்ற சண்டமாருதம் வீசிக்கொண்டிருந்தது. இந்த நிலைமை திடீரென உண்டாகிவிடவில்லை. மனிதவர்க்கம் தோன்றிய அன்று முதல் இப்பாவக்காரியங்கள் கொஞ்சங் கொஞ்சமாக வேரூன்றிக் கொண்டிருந்தன. முதல் முதலாக ஹாபீலுக்கும் காபீலுக்குமிடையில் மனஸ்தாபமுண்டாகிக் கொலையில் வந்து முடிந்தது. அதற்குப்பிறகு ஹஜ்ரத் ஷீது அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு ஞாபகச் சின்னம் ஏற்படுத்தும் பிரசினை கிளம்பி, விக்கிரக ஆராதனைக்கு முதல்முதலாக அஸ்திபாரம் ஏற்படுத்தப்பட்டது. இந்த ஜனங்களுக்கு அறிவு புகட்டுவதற்காக ஹஜ்ரத் நூஹ் (அலை) அவர்கள் அனுப்பப்பட்டார்கள். ஆனால், அந்த ஜனங்களின் நிலைமை விக்கிரக ஆராதனையிலும் இதர பாவச் செய்கையிலும் அதிக ஆழமாகப் பதிந்திருந்தமையால் 950 வருஷகாலம் ஹஜ்ரத் நூஹ் (அலை.) அவர்கள் பிரசாரம் செய்தும், அவர்களில் எண்பதின்மர்தான் இஸ்லாத்தைத் தழுவி நேர் வழிக்கு வந்தனர்.

ஹஜ்ரத் தாவூத், (அலை.) ஹஜ்ரத் மூஸா (அலை.) ஆகியவர்கள் காலம் முதல் ஹஜ்ரத் ஈஸா (அலை.) அவர்கள் காலம் உள்பட இதே

நிலைமைதான் ஜனங்களிடை இருந்துவந்ததால் இவர்களுக்கு நேர் வழி காட்டுவதற்காக அல்லாஹ் தஆலா இவர்களிடம் நபிமார்களை அனுப்பிக்கொண்டே இருந்தான். நபிமார்கள் அனுப்பப்படாத மனித வர்க்கமோ நாடோ தேசமோ பாக்கியில்லை. எல்லா வகுப்பினரிடமும் அவன் நபிமார்களைத் தவறாமல் அனுப்பியதனால் ஒரு சொற்படி 124 ஆயிரம் நபிமார்கள் இக்குவலயத்தில் நுபுவ்வத்தைக் கொண்டு வந்ததாக ஹதீதுஷரீபில் வந்திருக்கிறது. இத்தனை நபிமார்கள் வந்தும் ஜனங்கள் நேர் வழிக்கு வரவேண்டிய அளவுக்கு வராமல் அடியார்கள் வழக்கம்போல் தங்களது பாவக் கடலில் மூழ்கிக்கொண்டே இருந்தனர். தன்னுடைய சிருஷ்டிகள் கேவலமான இந்நிலைமையில் நாடோறும் போய்க்கொண்டிருப்பது கருணாகரனான ஹக்கு சுப்ஹானஹுவ தஆலாவுக்குத் திருப்தியாயில்லை. ஆகவே, அவர்கள்பால் அவனுக்குக் கருணையும், அன்பும், இரக்கமும் ததும்பின. தன்னுடைய சட்டங்கள் உலகில் அமல் நடத்தப்படவேண்டும், ஜனங்கள் பாவம் என்ற படுகுழியிலிருந்து மீட்கப்பட்டு க்ஷேமமாகவும் சுகமாகவும் வாழ்ந்து இம்மை மறுமைப் பேற்றுக்காளாக வேண்டுமென்று விரும்பினன்.

பற்பல சமூகத்தாருக்கும் தனித்தனியே பல நபிமார்களை அனுப்புவதை இனி நிறுத்திவிட்டு, உலகத்திலுள்ள எல்லா சமூகத்தாருக்கும் ஒருபொது நபியை அனுப்பி, நபிமார்களை அனுப்புவதை அதோடு முடித்துவிடவேண்டுமென்று நாடினன்; ஒரே வேதத்தை அருளி மனிதவர்க்கத்துக்குச் செய்யவேண்டிய அருட்கொடைகளையும் சம்பூரணமாக அளித்துவிடவேண்டும் என்று விரும்பினன். ஆகவே, இருலோகத்துக்கும் ஸர்தாரான ஹஜ்ரத் முஹம்மது முஸ்தபா றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களை, தன்னுடைய இறுதி வேதத்துடன் அனுப்புவதற்காக இப்புவியினில் உதிக்கச் செய்தான். அக்காலத்தில் உலகம் இருந்த பொதுவான நிலைமையைக் கவனிப்போம்.—

உலக நிலைமை

ஹஜ்ரத் அக்ரம் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் பிறக்கும் காலத்தில் உலகத்தில் அநேக மதங்கள் இருந்து கொண்டிருந்தன. புத்த மதம், ஹிந்துமதம், கன்பூஷியஸ்மதம், யூத மதம், கிறிஸ்துமதம், ஸரியமதம், மஜூஸிய மதம் என்பனவாகிய மதங்களெல்லாம் இருந்தன. எல்லா மதத்தாருடைய நிலைமையும் மிகவும் கீழ்தரமாகவே இருந்தது. அறபி தேசத்தில் விக்கிரக ஆராதனை குடிகொண்டிருந்தது. அத்தேசத்தின் நிலைமை உலகத்திலுள்ள மற்றைய தேசங்களைப் பார்க்கினும் மிகவும் மோசமாக இருந்தது. அறப் தேசத்தின் வடபாகத்தில் யூதமதமும் கிறிஸ்து மதமும் பரவி இருந்தது. கிழக்குப் பிரதேசத்தில் மஜூஸிய மதம் ஏற்பட்டிருந்தது. மக்கா முகர்ரமா முதலிய மத்தியபாகத்தில் விக்கிரக ஆராதனை என்ற விருக்ஷம் வேரூன்றி உரம் பெற்றிருந்தது. அறபிதேசத்தின் தென்பாகத்திலும் கிறிஸ்துவ மதத்துக்குச் செல்வாக்கிருந்து வந்தது.

இவைகளையல்லாமல் அறபி தேசத்தில் "தீனே ஹனீப்" என்னும் ஹஜ்ரத் இப்ராஹீம் (அலை.) அவர்களது மார்க்கமும் பெயரளவில் இருந்தது. அதாவது, ஹஜ்ரத் இப்ராஹீம் (அலை.) அவர்களது மார்க்கக்கிரியைகள் என்று நினைத்துக்கொண்டும் சொல்லிக்கொண்டும் சில அறபிகள் விக்கிரக ஆராதனையைக் கலந்து குழப்பி வைத்திருந்தனர். மக்காவிலுள்ள குறைஷியர்களும், இதரஅறபிகளில் பெரும்பாலரும் ஹஜ்ரத் இஸ்மாயில் (அலை.) அவர்களின் சந்ததியினராக இருந்தமையான் தங்களது மூலப்பிதாவான ஹஜ்ரத் இப்ராஹீம் (அலை.) அவர்களது மார்க்கத்தையே பின்பற்ற வேண்டுமென்ற உணர்ச்சி மேலீட்டவர்களாக இருந்தனர். ஆயினும், அந்த மார்க்கத்தை உள்ளது உள்ளபடி எடுத்துரைக்க அவர்களிற் தக்கவர் இல்லாததால், அந்த மார்க்கம் விக்கிரக ஆராதனையுடன் கலக்கப்பெற்று பெயரளவிலேயே இருந்து வந்தது.

என்றாலும், ஹஜ்ரத் முஹம்மதுர்ரஸூலுல்லாஹி (ஸல்.) அவர்கள் பிறப்பதற்குக் கொஞ்சம் முன்னர், அறபிகளிலுள்ள சிலருக்கு இவ்வுண்மை வெளியாகி சுத்தமான, மாசற்ற, கலப்பில்லாத இப்ராஹிமீ மார்க்கம் எதுவென்பதைக்கண்டுபிடிக்க வேண்டும் என்ற உணர்ச்சியுள்ளவர்களாக இருந்தனர். இதனால் ஷாம் முதலிய தேசங்களுக்கும்கூடச் சிலர் சென்று ஆராய்ச்சிசெய்ய முயன்றனர். அப்துல்லாஹிப்னுஜஹ்ஷ், வரக்கத்துப்னு நௌபல், உதுமானுப்னுல் ஹுவைரத், ஜைதுப்னு

உமர், ஹத்துப்னுதுகைல் முதலியவர்கள் இவ்வித முயற்சியில் ஈடுபட்டவர்களில் முக்கியஸ்தராவார்கள். இவர்களேயல்லாமல் சூரியனே வணங்குபவர்களிலும், நக்ஷத்திரங்களே வணங்குபவர்களிலும் சிலர் அறபிதேசத்தில் இருந்து கொண்டிருந்தனர். அதாவது, சருங் கக்கூறுமிடத்து அறபிதேசத்தில் உலகிலுள்ள சகலவிதமான மதஉணர்ச்சியும் பரவி ஆங் காங்கு வேரூன்றி இருந்தது என்று கூறுவது மிகைப்படுத்திக் கூறியதாகாது.

அறபி நாகரீகம்

அறபி தேசத்தில் நாகரீகமும் முற்போக் கும் எப்படி இருந்ததென்பதைக்கவனிப்போம்: அறபிதேசத்தின் வடவண்டை கிறிஸ்துவ அரசாங்கமிருந்ததால், கிறிஸ்துவ அரசாங் கத்தின் ஆதிக்கத்தின் கீழிருந்த கஸ்ஸானீ முதலிய அறபிக் கபீலாக்கள் கிறிஸ்து மதத்தைத் தழுவி இருந்தனர். ஆதலால், அவர்களுடைய நாகரீகம் அங்கு கொஞ்சம் பரவி இருந்தது. கிழண்டையில் ஈரானிய அரசாங்கத்தின் செல்வாக்கு ஏற்பட்டிருந்த தால் கிழக்கு எல்லைப்புறத்தில் ஈரானிய நாக ரீகமும் பரவி இருந்தது. தவிரவும் உரோம நாகரீகமும், ஈரானிய நாகரீகமும் சிறந்த முற்போக்கான நாகரீகம் என்று ஒரு காலத் தில் கருதப்பட்டு ஜனங்களால் போற்றப்பட்டு வந்தன. இவ்விரு நாகரீகமும் அறபிதேசமெங் கும் பூரணமாய்ப் பரவிவிட்டதாக நாம் கூறு வதற்கில்லே. என்றாலும் வடக்கு, கிழக்கு எல் லைப்புற தேசங்களில் அவைகளுக்குச் சிறிது செல்வாக்கிருந்தன வென்பதில் ஐயமில்லே.

அறப் தேசத்தில் ஆதிகாலத்தில் யமனி லேற்பட்ட அரசாங்கம் அதிகமாக வியாக மடைந்து ஸமர்க்கந்து வரையும் பரவி இருந்தது. அவ்வரசாங்கம் உலகிலுள்ள மிகவும் செல்வாக்கான அரசாங்கங்களில் ஒன்று என் பதாகவும் சரித்திரங்கள் கூறுகின்றன. அவ் வரசாங்கம் பின்னர் அழிந்துபோயிற் றாயினும் அதன் நாகரீக முதிர்ச்சிக்குறிய சின்னங்கள் இன்னமும் கொஞ்சங் கொஞ்சம் இருந்துவரு கிறது.

அக்காலத்தில் வீடுகளில் கக்கூஸ் முதலிய வைகள் கிடையாது. ஸ்திரி, புருஷர் இருவரும் மலஜல உபாதைகளைக் கழிக்க வீட்டுக்கு வெளியிலுள்ள மந்தைக்குத்தான் செல்வர். சல்லடை, முறம் முதலியவைகள் இருந்த தில்லேயாகையால் கோதுமையிலுள்ள குப்பை களேயும் கற்களேயும் அப்புறப்படுத்தி அவை களேச் சுத்தஞ்செய்துகொள்ளத்தக்க சௌகரி யம் அவர்களிடமிருக்கவில்லே. இக்காலத்தில் கோதுமையை நல்லவிதமாக அறைத்து மாவாக்கிக் கொள்ளுவதுபோல் அக்காலத் திலிருந்தவர்களுக்குச் செய்யத் தெரியாது. அறைகுறையாகவே உடைத்துக் கொள்வர். பாதி அரிசியும் மாவுமாகவுமே இருக்கும். இவைகளே வாயால் ஊதித்தான் அதிலுள்ள குப்பை கூழங்களே அகற்றுவர். இராக்காலங் களில் வீடுகளில் விளக்கேற்றிவைத்து வெளிச் சம் உண்டுபண்ணிக்கொள்ளும் யுக்தியும் அவர் களுக்குத் தெரியாது. ஆதலால், பொழுதிருந் தும்போதே இராப்போஜனத்தை அருந்திவிட வேண்டும். அல்லது இருளில் இருந்துகொண்டு பூச்சி புழுக்களுடன் தங்களது ஆகாரத்தை அருந்தவேண்டும். தன்னுடன் பிறந்த சகோ தரியை விவாகம் செய்துகொள்வர். இத்தனே பெண்களேத்தான் விவாகம் செய்யவேண்டும் என்ற கட்டுத்திட்ட மிருக்கவில்லே. மாற்றாந் தாயைப் பங்குவைத்துப் பாகமாக எடுத்துக் கொள்வர். மதுபானம் அருந்துவதற்கு எல்லே யில்லே. மதுபானம் இல்லாத நன்மை தீமைகள் அறபிநாட்டில் கிடையாது. எனவே, அங்கு நன்மை தீமை, பெருநாள், விவாகம், விருந்து என்று ஏற்பட்டால் மதுபானம்தான் முதலில் தயார் செய்யப்படும். இதற்குப் பிறகுதான் மற்றைய சாமான்களேத் தயார் செய்வர். சூதாட்டம், வியபிசாரம் முதலியவைகளுக்கும் தேசம் பிரக்கியாதி பெற்றிருந்தது.

"பைத்துல்லா"விற்கு ஆணும் பெண்ணும் நிர்வாணமாக வந்து அதை வலம்வருவார்கள். பகைவர்களேக் கொன்று அவர்களது ரத்தத்தை அருந்திவிடுவார்கள். கொல்லப்பட்டவரின் கை, கால், ஆண்குறி, மூக்கு, கண், நா முதலிய அங்க அவயவங்களேயும் கூடச் சின்னு பின்னப் படுத்துவார்கள். ஏழை எளியோருக்கு அங்கு நீதி கிடைக்காது. பெண் குழந்தைகள் உயி ருடன் புதைக்கப்படுவர். அவர்களுக்கு எவ் வித உரிமையுமில்லாது அடிமைகளிலும் கேவலமாக அவர்கள் நடத்தப்பட்டு வந் தனர். அடிமை வியாபாரம் மிகப்பலமாக நடை பெற்றுவந்தது. ஆடுமாடுகளேப்போல் அடிமை களும் வேலே செய்ய வேண்டிய திருந்தது. திருட்டு, கொள்ளே, கொலே முதலிய காரியங் கள் அங்குள்ள சில கூட்டத்தார்களுக்கு ஜாதித்

தொழிலாக இருந்தது. இவ்விதக் காரியங்களில் பிரக்கியாதி பெற்றவர்களைத்தான் சில கபீலாக்கள் வீரன் என்றும் கெட்டிக்காரன் என்றும் கருதி வந்தன.

ரஸ்தாவில் பாதுகாப்பில்லையாகையால் வியாபாரத்துக்காக வெளியில் செல்பவர்கள் க்ஷேமமாக வீடுவந்து சேர முடியாது. ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்துக்குச் செல்லத்தக்க ரஸ்தாக்கள் இருக்கவுமில்லை. யூதர்கள், கிறிஸ்துவர்களிடம் மாத்திரம் சிறிது கல்வியிருந்தது. மற்றவர்களிடம் கல்வி வாசனைகூட இல்லை என்று கூறலாம். அத்தேசத்தில் எந்தச் சட்டமும், ஒழுங்குமிருக்கவில்லை. முறைப்படியான அரசாங்கமும் இருக்கவில்லை. அறபியர்களுக்குள்ளாகவும் கூட மதிக்கத்தக்க, யாவராலும் ஒப்புக்கொள்ளத்தக்க தலைவர் இருக்கவில்லை. எனவே, எவர் சொல்லுக்கும் அவர்கள் அடங்கி நடக்கமாட்டார்கள். அவர்களிடம் விவசாயம், கைத்தொழில் முதலிய எதுவுமில்லை. அறபிகளிலுள்ள பெரிய பெரிய தலைவர்கள் எனப்படுபவர்கள் ஆடு, ஒட்டகம் இவைகளை மேய்த்து வயிறு வளர்க்கும் தொழிலைச் செய்துவந்தனர். சில கபீலாக்கள் நாடோடியாக வாழ்ந்து வந்தனர். எங்கேனும் பசும்புற்றரையும், நீர்வளமும், நில வளமும் இருக்குமாயின் அங்கு சென்று கூடாரமடித்துச் சிலகாலம் வாழ்வர். அதற்கப் புறம் வேறொரு இடந்தேடிப் போய்விடுவர். ஒவ்வொரு கபீலாவுக்கும் தனித்தனித் தலைவர்களிருந்தனர். அத்தலைவர் கூறுவதை அந்தந்தக் கபீலாக்காரர்கள் கேட்டுக் கொள்வார்கள். ஆதலால், அறபிநாட்டில் தலைவர்களுக்கு எல்லையே இல்லை. குறைஷிக் குலத்தாருக்கு வியாபாரம் செய்யும் தொழில் இருந்தது. ஆயினும் அது அவ்வளவு முக்கியமான தொழிலாக அக்காலத்தில் கருதப்படவில்லை.

ஆசியா, ஐரோப்பா நிலைமை

அறபி தேசத்தில்தான் இந்த நிலைமை இருந்தது என்பதில்லை. உலக மெங்கும் கிட்டத்தட்ட இதே நிலைமை வெவ்வேறு முறையில் இருந்துவந்தது. ஐரோப்பாவில் அக்காலத்தில் அதிக முன்னேற்றமாகவும், செல்வாக்காகவும் இருந்த அரசாங்கம் உரோம ஏகாதிபத்தியம்தான். அவ்வரசாங்கம் ஐரோப்பா மட்டுமில்லாமல், ஆசியாக்கண்டத்திலுள்ள ஷாம், பலஸ்தீன் சின்ன ஆசியா, ஆப்பிரிக்காக்கண்டத்தில் எகிப்து, திருப்போலி, சூடான் முதலிய தேசங்களிலும் பரவி இருந்தது. ஆயினும், ஒழுக்க விஷயத்தில் இருந்த நாகரீக அரசாங்க எல்லைக்குட்பட்ட தேசங்கள் அறபிதேசத்தைப் பார்க்கினும் மேலான நிலைமையிலிருக்கவில்லை. அங்கு பிரஜைகள் குறையைக்கேட்டு நியாயம் வழங்குவதற்குத் தக்க ஏற்பாடிருக்கவில்லை. கிறிஸ்து மதமும், திரித்துவக்கொள்கையும் விக்கிரக ஆராதனையின் நிலைமையை அடைந்திருந்தது. சந்நியாசங் கொள்வது மிகப்பலமாக வியாபித்திருந்தது. போப்புகளுக்கும் பாதிரிகளுக்கும் ஆதிக்கமிருந்ததால், இவர்களால் அநேகம் அநியாய அக்கிரமங்கள் நிகழ்ந்து வந்தன.

ஈரான் தேசத்திலும் அக்காலத்தில் பெரிய தோரசாங்கம் இருந்து கியானி வம்சத்தார் அக்காலத்தில் அரசு செலுத்தி வந்தார்கள். இவர்களது அரசாட்சி மிகப்பலமாக இருந்ததால், மத்திய ஆசியா முதலிய தேசங்களெல்லாம் இவர்களுக்குக் கீழ்ப்பட்டிருந்தன. ஆனால், பிரஜைகள் நிலைமை அதோகதியாகத் தானிருந்தது. சர்தார்கள் அமீர்களிஷ்டப்படி நடந்து கொண்டிருந்தனர். அவர்களிட்ட சட்டத்துக்கு ஆக்கினை எதுவும் கிடையாது. இங்கு மஜூஸியமதமும் பரவி இருந்ததால் ஜனங்கள் அக்கினியை ஆராதனை செய்து கொண்டிருந்தனர்.

இந்தியாவில் புத்தமதம் பரவி இருந்ததால் இவர்களுக்கு ஆதிக்கமும் செல்வாக்குமிருந்தது. இவர்களுக்குக் கடவுள் என்பதே தெரியாதாகையால், புத்தரின் விக்கிரகத்தை இவர்கள் வணங்கிவந்தனர். எனவே, வீடுகள்தோறும் விக்கிரகங்களுக்குப் பஞ்சமில்லை. நாட்டில் போக்குவரத்துக்குத் தகுந்த நல்ல சாலைகளும், ரஸ்தாக்களுமிருக்கவில்லை. கல்விமுதலியவைகளைப் பரவச்செய்வதற்கான ஏற்பாடுகள் ஒழுங்கான முறையில் இருக்கவில்லை. பிராமணர்களிடமும், பங்கிகளிடமும் மாத்திரம் சிறிது கல்வி இருந்தது. ஸ்திரீகளுக்கு எவ்வித அந்தஸ்துமில்லை. பிரஜைகள் அடிமைகளைப்போலவே நடத்தப்பட்டனர். எங்கும் அறியாமையும், ஒழுக்க ஹீனமும் குடிகொண்டிருந்தது.

சீன, ஜப்பான் தேசங்களில் புத்தமதம் பரவி இருந்தது. அங்கும் கிட்டத்தட்ட இந்தியாவின் நிலைமைதான் இருந்து வந்தது. சுமாத்ரா, ஜாவா, போர்னியோ முதலிய இடங்

களிலுள்ளவர்கள் காட்டுமிராண்டிகளாக இருந்தனர். எனவே, இவர்கள் மிருகங்களிலும் கேவலமான நிலைமையில் இருந்தனர் என்று கூறுவது பொருந்தும். அப்பிரிக்காவில் அஞ்ஞான இருள் சூழ்ந்திருந்தது. இவ்வாறு ஹுஜூர் (ஸல்.) அவர்கள் பிறந்தகாலத்தில் உலகமெங்கும் ஒரேவிதமான மோச நிலைமையிலேயே இருந்ததால் ஒழுக்கம், ஞானம், ஏகதெய்வ வணக்கம், சன்மார்க்கம் என்பவைகளை உலகத்தார் உணராமலே இருந்தனர். இவர்களது நிலைமை நாளுக்குநாள் கீழ் நோக்கிக் கொண்டே இருந்தது. ஆதலால், இறைவனின் கருணை என்னும் கடல் கொந்தளித்தது; உலகத்தைச் சீர்திருத்தி மக்களின் விமோசனத்திற்கான வழியைக் காட்ட ஸர்வலோக ஆலம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களை இறைவன் உலகுக்கு அனுப்பினன்.

பெருமானர் (ஸல்.) அவர்களிடம் குறைஷியர்களின் வேண்டுகோள்

அபிசினியா சென்ற தூதுவக் கூட்டம் தோல்வியுற்றுத் திரும்பியபின் குறைஷியர்கள் மறுபடியும் ஆலோசனை செய்ததன்பயனாக மக்கத்துக் குறைஷியர்கள்சார்பாக 'அத்பா இப்னு ரபிஉ' என்பவர் ஹுஜூர் அக்ரம் (ஸல்) அவர்களிடம் வந்து "சகோதரரின் புதல்வ! உமக்குப் பொருளின் பேரிலும் செல்வத்தின் பேரிலும் ஆசையிருந்தால் கூறிவிடும்; நாங்கள் உமது பாதத்துக்கீழில் மக்காவிலுள்ள செல்வங்களையெல்லாம் கொண்டுவந்துகுவித்து விடுகிறோம். உமக்கு கெளரவம் வேண்டுமென்ற விருப்பமிருந்தால் அதைக் கூறிவிடும்; நாங்கள் உம்மை எங்களது தலைவராக ஏற்படுத்தி விடுகிறோம். அரசாங்கம் வேண்டுமென்று நாடினால் அறப்தேசத்துக் கிரீடம் தயாராக இருக்கிறது. மூளையில் ஏதேனும் கோளாறு இருந்தால் கூறும் அதற்குச் சிகிச்சை செய்கிறோம். பெண்ணாசையிருந்தால் கூறிவிடும்; குறைஷியர்களில் பரிகளைபோலிருக்கிற பெண்களில் எத்தனை பேர்களை வேண்டுமானாலும் உமக்கு விவாகம் செய்துகொடுத்துவிடுகிறோம். இவைகளுக்கெல்லாம் பிரதிபலனாக நீர் செய்துவரும் மதப் பிரசாரத்தை நிறுத்திவிடவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

ஹுஜூர் அக்ரம் (ஸல்.) அவர்கள் இவைகளுக்கு உத்தரமாக "எனக்கு எதுவும் தேவை இல்லை" என்று கூறிவிட்டு திருகுர் ஆனிலிருந்து சில ஆயத்துகளை அவருக்கு ஓதிக் காண்பித்தார்கள். அவர் விரலைக் கடித்துக்கொண்டு வீடுபோய்ச் சேர்ந்தார். மக்கத்துக் குறைஷியர்கள் அத்பாவின் நிலைமையை அறிந்து தங்களுடைய ஜபம் சாயவில்லை என்பதையுணர்ந்தார்கள். பிறகு, ஹஜ்றத் அபூதாலிப் அவர்களிடம் சென்று "உமது சகோதரரின் புதல்வருக்குப் புத்திசொல்லித் தடுத்து வைத்துக்கொள்ளுங்கள் இல்லையேல் நாங்கள் என்னசெய்யவேண்டும் என்பதை முடிவு செய்துகொண்டோம்" என்று இறுதியறிவிப்புக்கொடுத்தனர்.

ஹஜ்றத் அபூதாலிப் அவர்கள் தம்முடைய அருமைச் சகோதரரின் பாலகரை அழைத்து மக்கத்துக் குறைஷியர்களின் வேண்டுகையைத் தெரிவித்து, ஹுஜூர் அக்ரம் (ஸல்.) அவர்களது அபிப்பிராயத்தை அரிய விரும்பினர்கள். அதற்கு ஹுஜூர் (ஸல்.) அவர்கள் "இந்த ஜனங்கள் எனது வலதுகையில் சூரியனையும், இடதுகையில் சந்திரனையும் கொண்டுவந்து வைத்தாலும் சரியே என்னிடம் ஒப்புவிக்கப்பட்ட எனது கடமையை நான் செய்யாமல் விடப்போவதில்லை இதனால் உயிருக்கு ஆபத்து வரினும் அதை யான் லக்ஷியம் செய்யப்போவதில்லை" என்று பதில் கூறிவிட்டார்கள்.

பின்னர், மக்கத்துக் குறைஷியர்கள் முஸ்லிம்களை வெகுபாடுபடுத்தினர். எனவே, உச்சிப் பொழுதில் ஏழை முஸ்லிம்களைப் பிடித்து சுடுமணலில் படுக்கவைத்து மார்பின்மீது கல்லையும் வைத்துவிடுவர். சிலரின் கழுத்தில் கயிற்றைக்கட்டி இழுப்பர். சிலரை நையப்புடைப்பர். இவ்வாறெல்லாம் தொந்தரை செய்யப்

பட்டதால் இரண்டொருவர் இவ்வுலகை விட்டு மறையவேண்டிய நிலைமையு மேற்பட்டது; ஒருவரின் கண்பார்வை கழன்றது. ஹுஜூர் அக்ரம் (ஸல்.) அவர்களுக்கும் பல தொந்தரை செய்தனர். இறுதியாக யாவரும் ஒன்றுகூடி ஹுஜூர் (ஸல்.) அவர்களையும், அவர்களது குடும்பத்தாரையும் 'ஷுஅபே அபூதாலிப்' என்ற இடத்தில் பாதுகாப்புக்குட்படுத்தினர். அன்னோர் மூன்று வருஷகாலம் வரை ஜனங்களால் பகிஷ்கரிக்கப்பட்டிருந்ததால் இலைகளையும்குளைகளையும் கூடப் புசித்து வயிற்றுப் பசியைத் தணிக்கவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. அப்பால், அப்பாதுகாப்பும் பகிஷ்காரமும் நீங்கிற்று.

இது நீங்கிய சிலகாலத்திற்குள் ஹஜ்றத் அபூதாலிப் அவர்களும், உம்முல் மூமினீன் ஹஜ்றத் கதீஜத்துல் குப்ரா (றலி.) அவர்களும் ஒருவர்பின் ஒருவராக இவ்வுலகை விட்டகன்றனர். ஹஜ்றத் அபூதாலிப் அவர்கள் பணக்காரராக இல்லாவிடினும் முக்கிய தலைவராக இருந்தார்கள். ஹஜ்றத் கதீஜாநாயகி (றலி.) அவர்கள் ஸ்திரியாக இருந்தாலும் பணம் படைத்திருந்தார்கள். ஆதலால், இவ்விருவரின் தாட்சண்யத்தைக் கருதி ஹுஜூர் (ஸல்.) அவர்களுக்கு குறைஷியர்கள் கொஞ்சம் தயவு காண்பிக்க வேண்டியதாக இருந்தது. இவ்விருவரும் இவ்வுலகை விட்டகன்றதால் இனி யாருடையதயவையும் அவர்கள்லக்ஷியம் செய்ய வேண்டியதாக இருக்கவில்லை. எனவே, ஹுஜூர் அக்ரம் (ஸல்.) அவர்களைப் பல வழியிலும் தொந்தரை செய்தனர்; மார்க்கப் பிரசாரத்துக்கு இடங்கொடுக்காமல் முட்டுக்கட்டை போட்டனர். ஆதலால், ஹுஜூர் (ஸல்.) அவர்கள் தாயிபுக்குச் சென்று அங்கு இஸ்லாமியப்பிரசாரம் செய்ய முயன்றார்கள்.

கிணறு வெட்டப்பூதம் வெளிப்பட்டது என்ற பழமொழிக் கேற்ப தாயிப் வாசிகள் மக்கத்துக்குறைஷியர்களைப் பார்க்கினும் கொடும் பாவிகளாயினராதலின் பெருமானர் அவ்வூரை விட்டுத் திரும்பவருவதற்கும்கூட இயலாமலாய் விட்டது. இறுதியாக 'முத்இமுப்னுஅதீ' என்பவர் ஹுஜூர் அக்ரம் (ஸல்) அவர்களுக்கு அபயம் கொடுத்து உறுவிய வாளுடன் அவர்களை மக்காவுக்கு அழைத்து வந்தார்.

இவ்வாறு 10 வருஷகாலம் கழிந்தது. ஆயினும், ஹஜ்றத் நபிய்யேகரீம் (ஸல்.) அவர்கள் தங்கள் கடமைகளைச் செய்வதில் கொஞ்சமும் பின்வாங்கவில்லை. சந்தைகள், திருவிழாக்கள், ஹஜ்ஜுடைய காலங்கள் ஆகிய இப்படிப்பட்ட சமயங்களில் தங்களது மதப்பிரசாரவேலையைத் தவறாமல் செய்து கொண்டே இருந்தார்கள். அக்கம்பக்கத்து கபிலாக்களிடம் சென்று இஸ்லாத்தின் சத்திய திருமறை வசனங்களைப் போதித்தல், அவர்களை நேர்வழிக்கு அழைத்தல் ஆகிய காரியங்களைச் செய்து கொண்டே இருந்தார்கள்.

'பனூதுஹலுப்னுஷைபான்' என்ற கபிலாவிடம் ஹுஜூர் (ஸல்.) அவர்கள் செல்லுங்காலை ஹஜ்றத் அபூபக்ர் ஸித்தீக் (றலி.) அவர்களும் கூடச்சென்றிருந்தார்கள். அதுபொழுது அந்த கபிலாவின் தலைவரான மப்றூக் என்பவரிடம் சென்று "அல்லாஹ் ஒருவன், நான் அவனுடைய தூதுவன்" என்றுகூறி திருகுர் ஆனிலிருந்து சில ஆயத்துகளை ஓதிக்காண்பித்தார்கள். அக்கபிலாவின் தலைவர்களான மப்றூக், முதன்னு, ஹானி ஆகிய மூவரும் அவ்வேதவசனங்களைப் பாராட்டினர்கள். ஆயினும், வெகு காலமாக எங்கள் குடும்பத்தார் அனுஷ்டித்து வரும் குடும்ப மதத்தை நாங்கள் திடீரென விட்டுவிட முடியாது. தவிரவும், நாங்கள் கிஸ்ராவுக்குக் கப்பம் கட்டுபவர்கள் அவருடன் உடன்படிக்கை செய்திருக்கிறோம்" என்று கூறிவிட்டார்கள். இவர்கள் தங்களது மனப்பான்மையை இவ்வளவு தெளிவாக எடுத்துக் கூறியதைப்பற்றி ஹுஜூர் (ஸல்.) அவர்களும் அத்தலைவர்களைப் பாராட்டி, இறைவன் தன்னுடைய மதத்துக்கு உதவிபுரிவான் என்று கூறினர்கள்.

'பனூஆமிர்' என்ற கபிலாவிடம் சென்றகாலை அக்கபிலாவிலுள்ள பர்ராஸ் என்ற ஒருவர் ஹுஜூர் (ஸல்.) அவர்களைப்பற்றி "இந்த மனிதர் எனக்கு வசப்பட்டிருப்பாராயின் அறபிதேசம் முழுவதையும் நான் கீழ்ப்படுத்திவிடுவேன்" என்று கூறினர். இவ்வாறு பற்பல கோத்திரங்களிலும் ஹுஜூர் (ஸல்.) அவர்கள் மார்க்கோபதேசம் புரிந்து கொண்டே இருந்தார்கள்.

பிறகு ஹுஜூர் (ஸல்.) அவர்கள் மக்காவுக்குஹஜ்ஜுக்கு வந்த ஔஸ், கஜ்றஜ் கபிலாக்காரர்களிடமும் மதப் பிரசாரம் செய்தார்கள். இந்தக்கபிலாக்காரர்கள் மதீனாவில் வசிப்பவர்கள். இவர்களுக்கு இறைவன் ஈமா

னின் ஒளியை அளித்தான். எனவே, முதலாவது வருஷத்தில் 6 பேர்கள் இஸ்லாத்தைத் தழுவினர்கள். பிறகு 3 வருஷங்களுக்குள் 80 பேர்கள் வரை இஸ்லாத்தில் சேர்ந்தார்கள். பின்னர் இவர்கள் ஹுஜூர் (ஸல்.) அவர்களை மதீனாவுக்கு வந்து விடுமாறு அழைத்தார்கள். ஹுஜூர் (ஸல்.) அவர்கள் இறைவனுத்தரவுப்படி மதீனாவுக்கு ஹிஜ்றத் செய்தார்கள். பிறகு அவ்வூர் இஸ்லாத்தின் தலைநகராக ஏற்பட்டதாதலால், அந்த ஊர் ஜனங்கள் எவ்வாறு இஸ்லாத்தைத் தழுவினர்கள்; அங்கு ஹுஜூர் (ஸல்.) அவர்கள் எவ்விதம் சென்றார்கள் என்ற விபரத்தைச் சிறிது விளக்கமாகக் கூறுவாம்.

சத்தியத்தூதர் (ஸல்) அவர்களது பிரசார முறை

ஹுஜூர்நபியய்யகரீம் (ஸல்) அவர்கள், உலகம் சீர்கேடாக இருந்த காலத்தில் நபிப் பதவியைப் பெற்று தங்களது மதப் பிரசாரத்தின் மூலமாக உலகம் அனைத்துக்கும் புத்துயிர்கொடுத்ததால் உலகத்தின் நிலைமையையே தலைகீழாக மாற்ற வேண்டியதாக இருந்தது. ஆகவே, அப்பெருமானார் அவர்களின் போதனை முறையும் அதற்குத் தக்கவாறான முறையில் நிகரற்றவிதமாக இருந்துவந்தது. அன்று எம்முறையில் அப்பிரசாரம் ஆரம்பிக்கப்பட்டதோ அது இன்னமும் நிற்காமல் ஏதேனும் ஒரு அளவுக்கு இன்றளவும் நடைபெற்றுக் கொண்டே இருக்கிறது.

நிற்க, ஹுஜூர் (ஸல்.) அவர்களது நபித்துவம் இதர நபிமார்களுடைய நபித்துவத்தைப் பார்க்கினும் அதிகப்பொறுப்புவாய்ந்ததும், அதிகக் கடமைகளுள்ளதாகவுமிருந்தது ஹுஜூர் (ஸல்.) அவர்கள் ஏனைய நபிமார்களைப்போல் குறிப்பிட்ட ஒரு வர்க்கத்துக்கோ அல்லது ஒரு சமூகத்துக்கோ மாத்திரம் நபியாக வராமல் உலக மனிதத்திலுள்ள எல்லா மனித சமூகத்துக்குமே நபியாக வந்தவர்கள். ஹஜ்றத் மஸீஹ் (அலை.) அவர்களைப்போல் ஒரு சமூகத்தாரிடம் மட்டிலும் விஷயத்தைக் கூறும் பொறுப்பு மாத்திரம் ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. ஹஜ்றத்நூஹ் (அலை.) அவர்களைப்போல் தமது சமூகத்தாரின் 'நஜாத்' எனும் முக்தியை மட்டிலும் முக்கியமாகக் கவனிக்கவேண்டிய பொறுப்பேற்றப்பட்டிருக்கவில்லை. ஹஜ்றத் மூஸா (அலை.) அவர்களைப்போல் பனீ இஸ்ராயீல்களை எகிப்திலிருந்து விடுவித்து ஷாம்தேசம் கொண்டு வந்துசேர்க்கும் வேலையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. ஆகவே, எல்லா ஜனங்களுக்கும் சத்தியத்தை அறிவித்து அவர்களுக்கு நேர்வழியைக் காட்டுவதுமட்டுமில்லாமல் அவர்களுக்குச் சிறந்த ஒழுக்கத்தைப் போதிக்கும் வேலையும் சேர்ந்திருந்தது; பல சீர்திருத்தங்களைச் செய்து யாவருக்கும் அவரவருக்குத் தக்க உரிமைகளையும் அடையும்படிச் செய்ய வேண்டியதாகவுமிருந்தது.

ஆகவே, ஹுஜூர் (ஸல்.) அவர்கள் மிகவும் எச்சரிக்கையாகவும் முன் ஜாக்கிரதையாகவும் இப்பிரசார வேலையைத் திறம்படச்செய்யவேண்டியதிருந்தது. எனவே, இப்பிரசார வேலையை தங்களுடன் இருந்து மார்க்கவிஷயத்தை நன்கு தெரிந்திருந்தவர்களிடமும், தங்களுடைய ஒழுக்கம், பழக்கம், வழக்கம், நடை, உடை, ஆசாரம் முதலிய சகல விஷயங்களையும் தங்களுடன் இருந்து பார்த்துப் பயிற்சிபெற்றவர்களிடமும், மிகவும் பரிசுத்தவான்கள், அகத்தூய்மையுள்ளவர்கள், அமீன்கள் என்று தங்களுக்குநன்குபுலப்பட்டவர்களிடமுமே துவக்கினர்கள். எனவே, முதல்முதலாக தங்கள் வாழ்க்கைத் துணைவியரான உம்முல்மூமினீன் ஹஜ்றத் கதீஜத்துல் குப்ரா (றலி.) அவர்களிடம் தங்கள் பிரசாரத்தை ஆரம்பித்தார்கள். உடனே அவர் இஸ்லாம் மதத்தை ஒப்புக்கொண்டார். பிறகு தங்களால் வளர்க்கப்பட்ட ஹஜ்ரத் அலீ கர்ரமல்லாஹு வஜ்ஹஹு அவர்களிடமும், அப்பால் தங்கள் சொந்தப் பிள்ளையைப்போலிருந்த தங்கள் அடிமையான ஹஜ்றத் ஜைது (றலி.) அவர்களிடமும், தங்கள் உற்றநண்பரான ஹஜ்றத் அபூபக்ர் லித்தீக் (றலி.) அவர்களிடமும் பிரசாரம் செய்தார்கள். இவர்களனைவரும் முழுமனதுடன் இப்பிரசாரத்தை ஏற்றுக்கொண்டு தங்களது இருதயத்தில் ஞானச்சுடரைக் கொளுத்தி எடுத்துக் கொண்டனர்.

ஹஜ்றத் அபூபக்கர் ஸித்தீக் (றலி.) அவர்கள் குடும்ப பரம்பரையை அறிவதில் மிகவும் கைதேர்ந்த பண்டிதர், தர்மவான், சீமான். இவர்கள் இஸ்லாம் மதத்தைத் தழுவியபோது 40 ஆயிரம் திர்ஹம் சொக்கப்பணமாக இருந்தது. இதனால், அவர்களுக்கு மக்காவில் மிகுந்த செல்வாக்கிருந்தது. நகரத்தலைவர் பலரும் அவரிடம் சகலகாரியங்களிலும் ஆலோசனை கேட்க வருவார்கள். ஹஜ்றத் உதுமான், ஹஜ்றத் ஜுபைர், ஹஜ்றத் அப்துர் ரஹ்மானுப்னு ஔப், ஹஜ்றத் தல்ஹா, ஹஜ்றத் ஸஅது, வகாஸ் (பாத்திஹே ஈரான்) போன்ற முக்கிய ஸஹாபிகள் (ரில்) ஹஜ்றத் அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்களின் தூண்டுதலின் பேரிலேயே இஸ்லாத்தைத் தழுவினர்.

இப்பெரியார்கள் தங்கள் தங்கள் குடும்பங்களில் மிகவும் செல்வாக்கும், கண்ணியமும், அதிகாரமும் உள்ளவர்களாக இருந்தனர். ஆதலால், இவர்களனைவரும் இரகசியமாக மதப் பிரசாரம் செய்யும் வேலையை ஆரம்பித்ததால் இஸ்லாம் மிக அமைதியாகவும் இரகசியமாகவும் நாளுக்குநாள் பரவிக்கொண்டே இருந்தது. முஸ்லிம்களின் எண்ணிக்கையும் சரியாக வளர்ந்துகொண்டே இருந்தது. இஸ்லாத்தின் போதனையில் இறைவன் வசிகர சக்தியை வைத்திருந்தானகையால், குப்ரும், இல்ஹாதும் நிறைந்த அந்தக்காலத்திலும் கூட ஜனங்கள் இஸ்லாத்தில் குறைவில்லாமல் சேர்ந்துகொண்டே இருந்தார்கள். இவ்வாறு இஸ்லாத்தை முதன் முதல் தழுவிய பெரியார்களில், ஹஜ்றத் அம்மார், கப்பாப்புப்னுல்இர்த், அப்துர் ரஹ்மானிப்னுஔபு, தல்ஹா, அர்க்கம், ஸயீதுப்னுஜைத், அப்துல்லா ஹிப்னு மஸ்ஊத், உதுமானுப்னு மல்னூன், உபைதா, ஸஅது, வகாஸ், உதுமான்கனீ, ஸுஹைப், பிலால் முதலியவர்கள் பிரசித்திபெற்றவர்கள்.

இப்பெரியார்களெல்லாரும் இரகசியப் பிரசார காலத்தில் இஸ்லாத்தைத் தழுவியவர்கள். அக்காலத்தில் குறைஷிக் காபிர்களுக்கு அதிக வலிமை இருந்ததால் இவர்கள் பகிரங்கமாகத் தங்களது இஸ்லாமைக் காண்பித்துக்கொள்ள முடியாதவர்களாக இருந்தார்கள். இவர்களில் முக்கியமானவர்களைத் தவிர வேறு யாருக்கும் இவ்விஷயம் தெரியாது. தொழுகைக்கான நேரம் வந்தால் ஹஜ்ரத் றஸூல் (ஸல்.) அவர்கள் ஏதேனும் ஒரு மலைக்கணவாயின் பக்கமாகச் சென்று அங்கு தொழுகையை நிறைவேற்றிக்கொள்வார்கள். அக்காலத்தில் ஜுஹரு வுடைய நேரத்தில் தொழுவது மக்காவில் வழக்கமாக இருந்ததால், ஹுஜூர் (ஸல்.) அவர்கள் ஹறம் ஷரீபிலேயே அதனை நிறைவேற்றிக்கொண்டிருந்தார்கள்.

நிற்க, நபுவ்வத் வந்த முதலாவது காலத்தில் இஸ்லாத்தைத் தழுவிய பெரியார்கள் இயற்கையாகவே நன்மனத்தவராகவும், சிறந்த நற்குணமுள்ளவர்களாகவும், பரிசுத்தமான நடத்தையுள்ளவர்களாகவும் இருந்தார்கள். ஹஜ்ரத் உதுமான்கனீ (றலி.) அவர்கள் தர்மவானுகவும், இரக்கச்சித்தமுள்ளவராகவும், சீமானுகவும், ஏழைகளை ஆதரிப்பவராகவும் இருந்ததால், கஷ்டப்பட்ட முஸ்லிம்களுக்கு, இவர்கள் இஸ்லாத்தைத் தழுவியதுகொண்டு அதிகம் உதவி ஏற்பட்டது. ஹஜ்றத் அப்துர் ரஹ்மானுப்னு ஔப் (றலி.) மிகத்திறமையும் நிபுணத்துவமும் பொருந்தியவர். ஹஜ்ரத்ஜுபைர் (றலி.) அவர்களது அபிப்பிராயம் மிகச் சரியானதாகவும் நேரானதாகவுமிருந்தது. ஹஜ்ரத் ஸஅத் (றலி.) பிறவியிலேயே தனிவும் வீரமும் பொருந்தியவர். இவர்தான் பிற்காலத்தில் ஈரான் தேசத்தை ஜெயித்து வாகைமாலை சூடியவர். ஹஜ்றத் அபூபக்கர் ஸித்தீக் (றலி.) அவர்கள் இஸ்லாத்துக்கு முன்னரும் உண்மை, நாணயம், சத்தியம், ஒழுக்கம் முதலியவைகளிற் பிரசித்தி பெற்றிருந்தார்கள். ஹஜ்ரத் உதுமானுப்னு மதஊன் பிறவியிலேயே துறவிக்குணமுள்ளவராக இருந்தார். இஸ்லாத்தைத் தழுவுவதற்கு முன்பே இவர் மதுபானம் அருந்துதல் முதலிய கெட்டகாரியங்களை விட்டுவிட்டவர். இவர் இஸ்லாத்தைத் தழுவியபின் துறவரம் பூணவிரும்பினாராயினும், ஹுஜூர் (ஸல்.) அவர்கள் இதற்கு அனுமதி கொடுக்கவில்லை. ஹஜ்ரத் ஸுஹைப்றூமீ (றலி.) அவர்கள் அப்துல்லா ஹிப்னு ஜத்ஆன் அவர்களிடம் பயின்றவர். இவரும் இஸ்லாத்தைத் தழுவுவதற்கு முன்பே மதுபானம் அருந்துவதை விட்டொழித்திருந்தார்.

இப்படி இஸ்லாம் மதத்தைத் தழுவியவர்களில் ஹஜ்றத் அபூதர்ரு (றலி.) அவர்கள் 6-வது மனிதர். இவர் இஸ்லாத்தைத் தழுவுவதற்கு முன்பே விக்கிரக ஆராதனைசெய்வதை விட்டொழித்துவிட்டு நேரானதொருவழி எதிரில் இல்லாமல் திண்டாடிக்கொண்டு தமது இஷ்

டப்படி இறைவனை ஜபித்துக்கொண்டிருந்தார். ஹுஜூர் (ஸல்.) அவர்கள் நபியாக வந்திருக்கிறார்கள் என்ற விபரத்தை அவர் கேட்டமாத்திரத்தில் ஹுஜூர் (ஸல்.) அவர்களிடம் நேரில் வந்து திருகுர்ஆனிலிருந்து சில ஸூரத்துகளை அவர்கள் நாவால் ஓதக்கேட்டு இஸ்லாம் மதத்தைத் தழுவினார். பின்னர், தம்முடைய வாழ்நாள் முழுவதிலும் உலக சம்பந்தங்களில் அதிகம் சிரத்தை கொள்ளாது இறைவணக்கத்திலேயே அதிகம் கவனஞ் செலுத்திக் கொண்டிருந்தார். ஜைத் என்பவர் ஹுஜூர் (ஸல்.) அவர்கள் நபியாக வருவதற்கு முன்பே இப்ராஹீமீ மதத்தைத் தழுவி இருப்பதாக தாவாச் செய்துகொண்டிருந்தவர். இவரது புதல்வரான ஸயீது (ரலி.) என்பவர் இப்ராஹீமீ மார்க்கத்தைப் பற்றித் தமது தந்தை ஜைதினிடமிருந்து ஓரளவு தெரிந்து கொண்டிருந்தார். ஆதலால், ஹுஜூர் (ஸல்.) அவர்கள் இஸ்லாம் மதத்தைப் பிரசாரம் செய்ய ஆரம்பித்த உடனேயே இவர் இஸ்லாத்தில் சேர்ந்துகொண்டார்.

பந்துக்களிடம் பிரசாரம்

இவ்விதமாக 3 வருஷம் வரை இரகசியப் பிரசாரம் புரிந்து வந்தார்கள். இம்மூன்று வருஷப் பிரசாரத்தில் மொத்தம் 30 அல்லது 40 பேர்கள் வரை இஸ்லாத்தில் சேர்ந்திருந்தனர். பின்னர் இறைவன் "உமக்கு அறிவிக்கப்பட்டதைப் பகிரங்கப் படுத்தும்; உமது நெருங்கிய பந்துக்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கைசெய்யும்" என்று 'வஹீ' அறிவித்தான். இக்கட்டளைக்கேற்ப ஹுஜூர் (ஸல்.) அவர்கள் தங்களுடைய பந்துக்கள், சுற்றத்தார் அனைவரையும் ஒன்றுகூட்டிக் "குறைஷ் குலத்தாரே! இந்த மலைக்குப் பின்புறத்தில் ஒரு பட்டாளம் வந்து கொண்டிருக்கிறது என்று நான் உங்களிடம் கூறுவேனாயின் அதை நீங்கள் நம்புவீர்களா?" என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள் "நீர் எங்களிடம் எப்பொழுதும் உண்மையே பேசி வருவதை நாங்கள் பார்த்திருக்கிறோம் ஆதலின், நீங்கள் கூறுவதைச் சந்தேகமின்றி நம்புவோம்" என்று கூறினார்கள். அப்பொழுது ஹுஜூர் (ஸல்.) அவர்கள் அந்த ஜனங்களை நோக்கி "அவ்வாறாயின், நீங்கள் ஈமான் கொள்ளவில்லையாயின் உங்களுக்குக் கொடிய வேதனைவரும் என்று நான் கூறுகிறேன்" என்று தெரிவித்தார்கள். இவ்வார்த்தையைக் கேட்ட ஜனங்கள் கோபமடைந்து கலைந்துபோயினர். இந்த ஜனக் கூட்டத்தில் ஹுஜூர் (ஸல்.) அவர்களது சிறிய தந்தையான அபூலஹப் என்பவரும் இருந்தார்.

இது நடந்த சிலநாட்களுக்குப்பின் ஹுஜூர் (ஸல்.) அவர்கள் தங்களது நெருங்கிய பந்துக்களுக்கு விருந்தளிக்கவேண்டும் என்று முடிவு செய்து அதற்கான ஏற்பாட்டைச் செய்யும்படி ஹஜ்ரத் அலீ (ரலி.) அவர்களுக்குக் கட்டளையிட்டார்கள். இதன்படி விருந்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அப்துல் முத்தலிப் குடும்பத்தைச் சேர்ந்தவர்களனைவரும் அழைக்கப்பட்டிருந்தனர். ஹஜ்ரத் ஹம்ஜா, ஹஜ்ரத் அப்பாஸ், ஹஜ்ரத் அபூதாலிப்(ரில்) ஆகியவர்களும் இவ்விருந்துக்கு வந்திருந்தார்கள். சாப்பாடு முடிந்தபின் ஹுஜூர் (ஸல்.) அவர்கள் விருந்துக்கு வந்த யாவரையும் நோக்கி "தீன் துன்யா ஆகிய இரண்டிலும் உங்களுக்கு நன்மை செய்யக்கூடிய காரியத்தை நான் கொண்டு வந்திருக்கிறேன்; இப்பெரிய பொறுப்பை எடுத்துக் கொள்வதில் உங்களில் எனக்குத்துணை செய்பவர் யார்" என்று கூறினார்கள்.

சபை முழுவதும் நிசப்தமாகஇருந்தது. ஒருவரும் நாவசைக்கவில்லை. அப்பொழுது 17 வயதினராக இருந்த ஹஜ்ரத்அலீ (ரலி.) அவர்கள் எழுந்து நின்றுகொண்டு "நான் எல்லாரிலும் குறைந்த வயதுள்ளவன்; ஆயினும் நான் தங்களுடன் துணையாக நிற்பேன்" என்று கூறினர். இவ்வார்த்தையைக் கேட்ட மாத்திரத்தில் யாவரும் கொல்லென்று சிரித்து ஒரு ஸூமீலை அமீனும், 17 வயதுப் பையனும் கூடிக்கொண்டு உலகத்தின் நிலைமையை மாற்றப்போகிறார்களாம்?" என்று சொல்லிக் கொண்டுபோய் விட்டனர்.

இக்காலத்தில் மொத்தம் முஸ்லிம்கள் 40 அல்லது 50 பேர்கள்வரை ஆகிவிட்டனர். அல்லாஹுதஆலாவின் கட்டளையும் வந்துவிட்டது. ஆதலால், ஹுஜூர் (ஸல்.) அவர்கள் கஃபாஷரீபுக்குச் சென்று ஏக தெய்வ வணக்கத்தைப்பற்றிப் பகிரங்கமாகப் பிரசாரம் புரிந்தார்கள். 36 பகவக் கீதங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கும் கஃபாவிலேயே விக்கிரகங்களால் ஒன்றும் ஆகப்போகிறதுஇல்லை; அவைகளை வணங்குவதிற் பிரயோஜனமில்லை; ஏக நாயனை அல்

லாஹு சுப்ஹானஹு வதஆலா ஒருவனையே வணங்கவேண்டும் என்று போதித்தால், அதைக் குறைஷியர்கள் எவ்வாறு மதிப்பர். எனவே, கஃபாவுக்கு இப்பிரசாரம் அளவுகடந்த அவ மதிப்புச் செய்வதாகும் என்று அவர்கள் கருதினர். உடனே, பெருங் கலவரமேற்பட்டது. பல பக்கங்களிலிருந்தும் ஜனங்கள் பாய்ந்து வந்து தாக்கினர். ஹுஜூர் (ஸல்) அவர்களை வளர்த்தவரான ஹாரிதுப்னு அபீஹாலா என்பவர் அதுசமயம் வீட்டில் இருந்துகொண்டிருந்தவர் இக்கலவரத்தை கேள்விப்பட்டமாத்திரத்தில் கஃபாவுக்கு ஓடிவந்து ஹுஜூர் (ஸல்) அவர்களைக் காக்க முயன்றார். இதனால் ஜனங்கள் அவரையும் தாக்கினர். அவர் பலமான காயமடைந்து ஷஹீதானார். இவர்தான் இஸ்லாத்துக்காக முதல் முதல் ஷஹீதான பெரியாராவார்.

இச்சம்பவத்துக்குப் பிறகு ஹுஜூர் (ஸல்) அவர்கள் இஸ்லாத்தைப்பற்றிப் பகிரங்கமாகப் போதனை செய்து கொண்டே இருந்தார்கள். ஜனங்களும் தங்களாலானவரை ஹுஜூர் (ஸல்) அவர்களையும் இதரர்களையும் தொந்தரை செய்து கொண்டே இருந்தனர். ஹுஜூர் (ஸல்) அவர்களது தந்தையின் சகோதரர்களில் ஒருவரான ஹஜ்றத் ஹம்ஜா (றலி) அவர்கள் அறபி தேசத்தில் பிரசித்தி பெற்றவீரராக இருந்தார். ஒரு நாள் அவருடைய அடிமைப்பெண் அவரிடம், இன்று உமது சகோதரரின் புதல்வரிடம் அபூஜஹ்ல் மிகவும் அநீதியாக நடந்து கொண்டார் என்று கூறினள். இதைக்கேட்டவுடன் ஹஜ்றத் ஹம்ஜா (றலி.) அவர்களுக்கு மிகவும் கோபம் வந்துவிட்டது அம்பும் நாணும் எடுத்துக்கொண்டு அபூஜஹ்ல்வீடு சென்று "நான் இஸ்லாத்தைத் தழுவி விட்டேன்; நன்கு ஆலோசனை செய்தபின் இஸ்லாம்தான் சத்திய மதம் என்ற முடிவுக்கு வந்து அதனைத் தழுவி விட்டேன்" என்று கூறினர்.

சில நாட்களுக்குப் பிறகு ஹஜ்றத் உமர் (றலி.) அவர்கள் இஸ்லாம் மதத்தைத் தழுவினர்கள். இவர்கள் இஸ்லாத்தைத் தழுவியது மிகவும் ஆச்சரியகரமான சம்பவமாகும். இச்சம்பவம் மிகவும் விரிவான விஷயமாதலால் அதனை ஈண்டுகூற இடமின்மையால் விரிக்காமல் விடுத்தனம். ஆனால், ஹஜ்ரத் உமர் (றலி.) அவர்கள் இஸ்லாத்தைத் தழுவிய அந்த க்ஷணத்திலேயே முஸ்லிம்களுக்குப் புதிய உணர்ச்சியும் துணிவும் தைரியமும் வந்தது என்பதை நேயர்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

முஸ்லிம்களுக்குத் தொந்தரை

பின்னர், மக்கத்துக் காபிர்கள் முஸ்லிம்களில் பிரபலஸ்தர்களாக இருந்தவர்களை அதிகம் தொந்தரை செய்யாமல், ஏழைகளாக வுள்ளவர்களையே மிகவும் துன்பப்படுத்தினர். தங்களாலியன்ற மட்டும் அக்கிரமஞ் செய்தனர். இவ்விதமான துன்பம் நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே இருந்தது. முஸ்லிம்கள் இவைகளை எல்லாம் முழுமனதுடனும் சகித்துக்கொண்டிருந்தனர். இஸ்லாமும் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே இருந்தது. ஆயினும், முஸ்லிம்கள் இஸ்லாத்தின் கடமைகளைச் சுயேச்சையுடன் மக்காவில் செய்ய அந்தக் காபிர்கள் அனுமதிக்கவில்லை. இதுதான் முஸ்லிம்களுக்கு மிகவும் கஷ்டமாக இருந்து கொண்டிருந்தது. இக்காலத்தில் கஃபாவின் ஹறமில் திருகுர்ஆன ஓதுதல் சப்தமாகப் படிக்கவும் அனுமதித்தனரில்லை. அப்துல்லா ஹிப்னு மஸ்ஊத் (றலி.) ஹஜ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (றலி.) ஆகியவர்களுக்கு இந்த நிர்ப்பந்தம் மிகவும் கஷ்டத்தையும், மனவருத்தத்தையும் கொடுத்தது. என்றாலும், எதுவரினும் வரட்டும் என்று அவர்கள் ஹறம் ஷரீபில் திருகுர்ஆன ஓதுவார்கள். இப்படி ஓதியபோது ஒரு நாள் ஹஜ்ரத் அப்துல்லா ஹிப்னு மஸ்ஊத் (றலி.) அவர்கள் மக்கத்துக் குறைஷியரால் நன்கு புடைக்கப்பட்டார்கள்.

இவைகளை எல்லாம் சுவனித்து ஹுஜூர் அக்ரம் (ஸல்.) அவர்கள் முஸ்லிம்களுக்கு ஹிஜ்ரத் செய்ய அனுமதி கொடுத்தார்கள். இவ்வனுமதிக்கேற்ப 11 ஆடவர்களும் 4 ஸ்திரீகளும் நுபுவ்வத்துவந்த 5—ம் ஆண்டில் அபிஸினியா தேசத்திற்கு ஹிஜ்ரத் செய்தனர். இப்பதினைந்து பேர்களில் ஹுஜூர் (ஸல்.) அவர்களது புதல்வியான ஹஜ்ரத் ருக்கையா (றலி.) அவர்களும், அவரது கணவர் ஹஜ்ரத் உதுமான் (றலி) அவர்களும் சேர்ந்திருந்தனர். இவர்கள் ஹிஜ்ரத் செய்த விபரத்தை அறிந்த மக்கத்துக் குறைஷியர்கள் இவர்களை பிற நாட்டுக்கு விட்டுவிடக் கூடாதென்ற வஞ்சகக்கருத்தால் பின்தொடர்ந்து பிடிக்கவந்தனர். ஆயினும், அவர்கள் ஜித்தா வந்து சேர்ந்தபோது

முஸ்லிம் முஹாஜிர்கள் ஏறி இருந்தகப்பல் நங்கூரத்தை எடுத்துக்கொண்டு துறைமுகத்தை விட்டுப்புறப்பட்டு விட்டது. ஆதலால், மக்கத்துக்காபிர்களின் எண்ணம் பலிக்கவில்லை.

அபிசினியா தேசத்தை அக்காலத்தில் நஜ்ஜாஷி என்ற அரசர் ஆட்சி புரிந்து வந்தார். இவருடைய செங்கோல் சிறப்பும் நீதியும், அக்காலத்தில் பிரபலமடைந்திருந்தது. தவிரவும், இவ்வரசர் கிறிஸ்துமதத்தைச் சேர்ந்தவராதலின் முஸ்லிம்கள் அத்தேசத்தில் குடியேறினர். கருணையும் இரக்கச் சித்தமும் உள்ள அவ்வரசர் முஸ்லிம்களுக்குத் தமது தேசத்தில் இடங்கொடுத்து அவர்களை ஆதரித்தார். முஸ்லிம்கள் அங்கு சேர்ந்தபிறகு நிம்மதியாகத் தங்களது இறைவணக்கம் புரிந்துகொண்டிருந்தனர். என்றாலும், மக்கத்து குறைஷியர்கள் அவர்களை நிம்மதியாக இருக்கவிடவில்லை. இங்கு பற்பல கூட்டம் போட்டுப் பேசி முடிவாக ஒரு தூதுவக் கூட்டத்தை அனுப்ப வேண்டுமென்று, இத்தூவக் கூட்டத்தில் 'அம்ருப்னுல் ஆஸ்', 'அப்துல்லாஹிப்னு ரபீஆ' ஆகிய இருவர்களையும் அங்கத்தினர்களாகத் தெரிந்தெடுத்தார்கள். நஜ்ஜாஷீபாதுஷாவின் தர்பாரிலுள்ள பிரதானிகளை வசப்படுத்துவதற்காக அவர்களுக்கு இனம் கொடுப்பதற்கு அநேக காணிக்கைகளையும் வெகுமதிகளையும் தயார் செய்தனர். பின்னர், இந்த சாமான்களை எல்லாம் எடுத்துக்கொண்டு அபிஸினியா தேசம் சென்றனர்.

முதலில், நஜ்ஜாஷி அரசரின் தர்பாரிலுள்ளவர்களையும் பிரதானிகளையும் கண்டவுடன், தங்களிடமிருந்த வெகுமதிகளையும் இனம்களையும் கொடுத்து அவர்களைத் தங்களுக்குச் சாதகமாக இருக்கும்படி செய்துகொண்டனர். மறுநாள் நஜ்ஜாஷி அரசர் தர்பார் சென்று அரசரிடம் "எங்கள் குற்றவாளிகளை எங்களிடம் ஒப்புவிக்கவேண்டும்" என்று கேட்டுக்கொண்டனர். தர்பாரிகளும் மந்திரிகளும் இனம் வாங்கி இருந்தபடியால், இவர்களது வேண்டுகோளை ஆதரித்ததுடனிராது, "இந்தப் புது மதக்காரர்கள் விக்கிரக ஆராதனைக்கு விரோதமாக இருப்பது மட்டுமில்லாமல் கிறிஸ்துவ மதத்துக்கும் விரோதமானவர்கள்" என்று அரசரிடம் கூறினர்கள். இதன்பேரில் ஏகதெய்வ வணக்கக் காரர்களான முஸ்லிம்கள் தர்பாருக்கு அழைக்கப்பட்டு, அவர்களுடைய மதத்தின் கொள்கையைப்பற்றிக் கூறவேண்டும் என்று உத்தரவிடப்பட்டனர். அது பொழுது, முஸ்லிம்களின் சார்பாக ஹஜ்ரத் ஜஃபர் (ரலி.) அவர்கள் இஸ்லாத்தின் கொள்கைகளைப் பின் வருமாறு கூறினர்கள் :—

"அரசே! நாங்கள் அஞ்ஞானத்திலும் வீணை காரியங்களிலும் மூழ்கி இருந்தோம். விக்கிரகங்களை வணங்கினோம். வியபிசாரம் புரிந்தோம். பிணத்தைப் புசித்தோம். எளியோரை வலியோர் வாட்டினோம். சகோதரர்களுக்குள் கலகஞ் செய்து ஒருவரை ஒருவர் கொலைபுரிந்துகொண்டிருந்தோம். நன்மை தீமை என்பதை நாங்களறியாதிருந்தோம். எங்களை யாரும் மதிப்பதில்லை. காட்டுமிராண்டிகளாகவே இருந்தோம். இதுபொழுது அல்லாஹ்த ஆலாவுக்கு எங்கள் பால் கருணை யுண்டாயிற்று. எங்களைச் சீர்திருத்தி நேர் வழிக்குக் கொண்டு வருவதற்காக எங்களில் ஒருவரை நபியாக அனுப்பினன். அவர் நபியாக வருவதற்கு முன்பே உண்மை, சத்தியம், மேலான ஒழுக்கம், நாணயம் ஆகியவைகளில் பிரக்யாதி பெற்றிருந்தார். அவர் எங்களிடம் இஸ்லாத்தைப்பற்றிப் பிரசாரம் புரிந்தார். விக்கிரகங்களை வணங்குவதை நாங்கள் விட்டுவிட வேண்டும், கொலை செய்வதையும் கலகஞ்செய்து ரத்தம் சிந்துவதையும் விட்டுவிட வேண்டும், உண்மை சொல்ல வேண்டும், அக்கம் பக்கத்தாருக்கு உபகாரம் செய்ய வேண்டும், அனுதைகளின் முதல்களை அநியாயமாக அருந்தக் கூடாது, கற்புள்ள ஸ்திரிகளின் கற்பழித்து அவர்களுக்கு அவமானத்தை யுண்டாக்கக் கூடாது, தொழவேண்டும், நோன்பு வைக்க வேண்டும், ஜக்காத் கொடுக்கவேண்டும் என்று போதித்தார். நாங்கள் அவரை விசுவாசித்துக் கெட்ட காரியங்களை விட்டு மீண்டோம். விக்கிரகங்களை வணங்குவதை விட்டு விட்டோம். இது தான் நாங்கள் செய்த குற்றம். இதைக் குற்றமாக எங்கள் சமூகத்தார் நினைத்துக் கொண்டு எங்களை அழித்துவிடக் கங்கணங்கட்டிக்கொண்டிருக்கிறார்கள். நாங்கள் மறுபடியும் வழிகேட்டிலாகி விடவேண்டும் என்று எங்களை நிர்ப்பந்திக்கிறார்கள்."

ஹஜ்ரத் ஜஃபர் (ரலி.) அவர்கள் தெளிவாகவும் பட்டவர்த்தமானமாகவும் கூறிய இவ்வழுத மொழிகள் அரசரைப் பரவசப்படுத்தியதால் மக்காவிலிருந்து வந்த குறைஷித்

தூதுவர்களின் வேண்டுகோளை நிராகரித்து முஸ்லிம்களுக்கு அபயங்கொடுத்தார். எவ் விதத்திலேனும் முஸ்லிம்களை மக்காவுக்கு அழைத்துச்செல்ல வேண்டும் என்பதும், முஸ்லிம்கள் மீது அரசருக்கு ஆத்திரத்தை யுண்டாக்க வேண்டும் என்பதும் அவர்க ளுடைய நோக்கமாக இருந்ததால், மறு நாள் மீண்டும் அரசதர்பார் சென்று, கிறிஸ்து மதத் தைப்பற்றி முஸ்லிம்களின் கொள்கை என்ன வென்று விசாரித்துப் பார்க்கும்படி வேண்டி னர். இவ்வேண்டுகோளுக்கு அரசர் இசைந்து முஸ்லிம்களைக் கூப்பிட்டு ஆளனுப்பினர். நஜ்ஜாஷி அரசர் கிறிஸ்துவராக இருப்பதால் ஹஜ்றத் ஈஸா (அலை.) அவர்களைத் தெய்வ மென்று மதிப்பார் என்று நினைத்து, அரச தர் பாரில் உள்ளதைக் கூறினால் நமக்குத் துன்பம்; துன்பத்திற்காகப் பயந்து பொய்யுரைத்தால் ஆண்டவன் தர்பாரிலிருந்து துன்பம் வரும் என்று கருதி ஆரம்பத்தில் சிறிது கவலை யடைந்தார்கள். ஆயினும், சத்தியமே ஜெயம் என்ற முடிவுக்கு வந்து, நஜ்ஜாஷியின் தர்பாரில், கிறிஸ்து மதத்தைப்பற்றித் தங்களுக்குத் தெரிந்த உண்மையைக் கொஞ்சமும் மறைக் காமல் கூறவேண்டும்; அரச கோபத்தைப் பார்க்கினும் ஆண்டவனின் கோபம் அதிகத் துன்பம்தரும் என்று முடிவுசெய்து கொண் டனர்.

அரசர் கேட்ட கேள்விக்கு உத்தரமாக ஹஜ் றத் ஜஃபர் (றலி.) அவர்கள் ஸூரத்து மர் யமிலிருந்து சில ஆயத்துகளை ஓதினர். நஜ் ஜாஷியின் மனஉலகம் மாறிவிட்டது; தெய்வ வாக்கியத்தின் சக்தி அவரை உருகச்செய்துவிட் டது; அவரது கண்களில் நீர்த்தும்பின. உடனே அவர், "கடவுள்மீது சத்தியமாக இவ்வாக்கியங்க ளும் இஞ்சீலின் வாக்கியங்களும் ஒரே விளக்கி லிருந்து கொளுத்திய இரண்டுவிதப் பிரகாசங் கள்" என்று கூறியது மட்டுமில்லாமல், "நீங் கள் கூறியது சத்தியமாகும்; நீங்கள் கூறிய தைப்பார்க்கினும் ஹஜ்றத் ஈஸா (அலை.) இந்தத் தரும்பின் அளவுகூட அதிகமானவரல்லர்" என்று கூறி அவர்களை அனுப்பிவிட்டார்.

அங்குள்ள பாதிரிமார்களுக்கு நஜ்ஜாஷியின் இவ்வார்த்தைகள் வருத்தத்தைக் கொடுத்தன; கோபத்தை யுண்டாக்கின. ஆயினும் அரசரை யாது செய்தல் கூடும். இறுதியாகத் தங்களது கௌரவத்தைக் காப்பாற்றிக்கொள்ள வேண் டியதாயிற்று. மனக்கோட்டை கட்டிக்கொண் டிருந்த மக்கத்துக்கு குறைஷியர்கள் மறுபடி யும் ஒன்றுஞ் செய்ய வகையறியாமல் மக்கா திரும்பினர்.

மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்தல்

மக்காவிற்றோன்றிய ஊற்றுக்கண் மதீனாவிற் சென்றுதான் தன்னுடைய ஜலப்பிரவா கத்தை உலகுக்குக் காட்டமுடிந்தது. பாரான் மலைச்சிகரத்தில் உதயமான ஞான சூரியன் யத்ரிபுடை அடிவானத்தில் தனது கிரணங்களை வீசிற்று. ஹுஜூர் அக்ரம் (ஸல்.) அவர்கள் ஹிஜ்றத்செய்வதற்கு முன் மதீனாவுக்கு 'யதரப்' என்ற பெயர் இருந்தது. ஹுஜூர் (ஸல்.) அவர்கள் ஹிஜ்றத் செய்து இங்குவந்து குடி யேறியதால் "மதீனத்துர்ரஸூல்" (ரஸூல் (ஸல்.) அவர்களது பட்டணம்) என்றதற்குப் பெயர்வந்தது. பிறகு இப்பெயர், மதீனா என்ற ஒரு வார்த்தையில் பிரக்கியாதி பெற்று இன் றும் விளங்கிவருகிறது.

ஹுஜூர் அக்ரம் (ஸல்.) அவர்கள் மதீனா விற்கு வந்தகாலத்தில் யூதர்களும் அன்ஸார்க ளும் மதீனாவில் வாழ்ந்து வந்தனர். யூதர் களிடம் பணமும் செல்வாக்கும் இருந்ததால், மதீனாவைச் சுற்றிலும் பல கிராமங்களில் ஆங் காங்கு கோட்டைகளை கட்டிக்கொண்டு, தங்கள் வியாபாரச் சாமான்களையும், யுத்தளவாடங் களையும் அவைகளில் வைத்துப் பாதுகாத்துக் கொண்டிருந்தனர். அன்ஸார்கள் ஆதியில் யமன் தேசத்திலுள்ள 'பனூகஹ்தான்' என்ற கபீலா வைச் சேர்ந்தவர்கள். பூர்வகாலத்தில் யம னில் ஏற்பட்ட பிரளயத்தினால் அவர்கள் யமன் தேசத்திலிருந்து மதீனாவிற்குக் சென்று குடி யேறினர்கள். இவர்கள் புதுக்குடியாகச் சென்ற மையால், இவர்கள் ஆதியில் ஏழைகளா யிருந் தனர். அக்காலத்தில் யூதர்கள் அங்கு விசே ஷச் செல்வாக்கும் ஆதிக்கமும் பெற்றிருந்த னர். ஆயினும், அன்ஸார்களுக்கு இறைவன்

அபிவிருத்தியையும், ஆள்பலுக்குவத்தையுங் கொடுத்தான். ஆதலால், இவர்கள் பலுகிப் பெருகி யூதர்களை எதிர்க்கும் நிலைமைக்கு வந்தனர். ஒரு முறை யூதர்களிலுள்ள ஒரு கொடுங்கோலன் ஏற்படுத்தி வைத்திருந்த அக்கிரமத்தை ஒழிப்பதற்காக இவர்கள் தந்திரமாக வேலைசெய்து, நேருக்கு நேராக யுத்தம் செய்யாமல், யூதர்களின் தலைவர்களையும், வீரர்களையும், மல்லர்களையும், வித்தைக்காரர்களையும் கொன்று அவர்களது பலத்தை அடியுடன் ஒடுக்கிவிட்டனர். அப்பால், அவர்கள் அன்ஸாரிகளுடன் உடன்படிக்கை செய்துகொண்டு நேசமாக வாழத் தலைப்பட்டனர். ஆயினும், அடிக்கடி யூதர்களுக்கும் அன்ஸாரிகளுக்கும் மனஸ்தாபமும் சிறுசிறு சச்சரவுகளும் நேராமல் இருப்பதில்லை.

அன்ஸாரிகள் பூர்வத்தில் 'கஹ்தான்' என்ற ஒரே கோத்திரத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தும் இவர்கள் இருகூட்டத்தாராகப் பிரிந்தனர். ஔஸ், கஜ்ரஜ் என்று இவ்விரு கூட்டத்துக்கும் பெயர்களுண்டு. இவ்விரு கூட்டத்தாரும் ஒற்றுமையாக இருந்தவரை யூதர்கள் ஒடுக்கப்பட்டிருந்தனர். இவர்களுக்குள் இருகக்ஷிகள் உண்டாகி ஒருவரை ஒருவர் வெல்லவேண்டுமென்ற ஆசைகொண்டதால் இவர்களுடைய பலம் குன்றுவதற்கு ஹேதுவாயிற்று. ஒருவரை ஒருவர் வெட்டி வீழ்த்திக்கொண்டனர். யூதர்கள் துணையை இருகக்ஷியினரும் விரும்பினர். மாற்றானுக் கிடங்கொடேல் என்ற பழமொழியை மறந்து அன்ஸார்கள் தங்கள் பகைவர்களான யூதர்களுக்கு இடங்கொடுத்துவிட்டனர். யூதர்கள் பழிதீர்ப்பதற்கான காலத்தை எதிர்பார்த்திருந்ததால் அவர்கள் ஒரு கூட்டத்தாருக்கு உதவிபுரிந்தனர். இறுதியாக ஔஸ், கஜ்ரஜ் கபீலாக்காரர்கள் "புஆத்" என்ற இடத்தில் செய்த சண்டையில் இருகக்ஷித்தலைவர்களும் கொல்லப்பட்டு இருகக்ஷியினரும் பலத்த சேதமடைந்தனர். பலம் மிகக் குறைந்தது. இறுதியாக ஔஸ் என்ற கோத்திரத்தார் தோல்வியுற்றனர்; கஜ்ரஜ் என்ற கோத்திரத்தார் வெற்றிக் கொண்டனர். ஆதலால், ஔஸ் என்ற கோத்திரத்தார் மக்காவுக்கு ஆள் அனுப்பி குறைஷியர்களைத் தங்கள் துணைவர்களாக ஏற்படுத்திக்கொள்ள முயன்றனர்.

இவ்வாறு தூது வந்த கூட்டத்தாரிடம் ஹுஜூர் அக்ரம் (ஸல்.) அவர்கள் சென்று இஸ்லாமியப் பிரசாரம் செய்தார்கள். அன்ஸார்கள் மதீனவிலுள்ள யூதர்களின் அண்டையில் இருந்ததால், கடைசிகாலத்தைய நபியொருவர் வருவார் என்று யூதர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதையும், அவர் வருவதற்கான காலம் நெருங்கிவிட்டது என்று அவர்கள் கூறிக்கொண்டிருப்பதையும் கேள்விப்பட்டிருந்தார்கள். ஆதலின், மக்கத்துக்குத் தூது வந்த ஔஸ் கூட்டத்தாரின் பிரதிநிதிகளில் ஒருவரான "இயாஸ்" என்பவர் தமது சகாக்களிடம் "நாம் எந்தக் காரியத்துக்காக இங்கு வந்தோமோ அதனைப் பார்க்கினும் இந்தக் காரியம் மிகவும் மேலானது" என்று கூறி, இஸ்லாம் மதத்தைத் தழுவும் விஷயமாக எச்சரிக்கை செய்தார். ஆயினும், அத்தூதுவக் கூட்டத்துத் தலைவர் அதற்கு இடங்கொடுக்காமல் "அவர் மீது பொடிக் கற்களை எடுத்து எரிந்து, நாம் இந்தக் காரியத்துக்காக வரவில்லை" என்று கண்டித்துக் கூறி அவரது நோக்கத்தை அலக்ஷியம் செய்துவிட்டார். பிறகு, அபூஜஹ்லுடைய மூட்டுக்கட்டையால் குறைஷியருக்கும் ஔஸ் கூட்டத்தாருக்கும் உடன்படிக்கை ஏற்படமுடியாது போய்விட்டது. ஆதலால், அவர்கள் வந்த காரியம் கைகூடாமற் றிரும்பினர். எனினும், ஹுஜூர் (ஸல்.) அவர்கள் மதீனவிற் குடியேறுவதற்கு முன்னர் 'இயாஸ்' இறந்து போனர். அவர் இறக்கும்போது அவருடைய நாவில் தக்பீர் முழங்கிக்கொண்டிருந்தது.

தவிர, "புஆத்" என்ற இடத்தில் ஔஸ், கஜ்ரஜ் கூட்டத்தார்கள் யுத்தம் செய்வதற்கு முன் 'ஸுவைதுப்னு ஸாமித்' என்பவர் மக்காவுக்கு விஜயம்செய்து ஹஜ்ரத்சுலைமான் (அலை) அவர்களுடைய சில நீதிமொழிகளை யூதர்களிடமிருந்து கற்றுக் கொண்டாராதலின் இவைகளை இவர் வேதம் என மதித்திருந்தார். இதனால், இவருக்கு அன்ஸாரிகளுக்குள் விசேஷ மதிப்பும் இருந்தது. இவர் மக்காவுக்கு வந்த செய்தியை ஹுஜூர் அக்ரம் (ஸல்.) அவர்கள் அறிந்து அவரிடம் சென்றார்கள். அதுபொழுது 'ஸுவைதுப்னு ஸாமித்' தமக்குத் தெரிந்த சுலைமான் (அலை.) அவர்களின் நீதிமொழிகளை ஹுஜூர் (ஸல்.) அவர்களுக்குப் படித்துக் காண்பித்தார். பிறகு ஹுஜூர் (ஸல்.) அவர்கள் திருகுர்ஆனிலிருந்து சில வசனங்களை அவருக்கு ஓதிக் காண்பித்தார்கள். 'ஸுவைத்துப்னுஸாமித்' இதனால் அதிகம் உணர்ச்சி

யடைந்து ஹுஜூர் (ஸல்.) அவர்கள் மீது ஈமான் கொண்டார். பிறகு இவர் மதீனுவுக்கு வந்து ஷி "புஆத்" சண்டையில் அடிபட்டு இறந்துபோனர். இவர்தான் மதீனுவிலுள்ள முதலாவது முஸ்லிம். இவர் யுத்த வீராகவும், புலவராகவும் இருந்ததால் இவருக்கு விசேஷ மதிப்பும் செல்வாக்கும் இருந்தது. இவர் இஸ்லாமைப் பரவச் செய்வதற்காகப் போதிய முயற்சி செய்யத்தக்க காலம் வாய்க்கவில்லை. ஆயினும், அவருடைய நோக்கமும் விருப்பமும் என்னவென்பதை அன்ஸாரிகள் முதலிலேயே ஓரளவு உணர்ந்து அதற்கு ஆதரவு மளித்திருந்தனர். இவ்வகையில் இஸ்லாத்தின் கிரணம் மதீனுவின் மீது வீச ஆரம்பித்திருந்தது.

ஹுஜூர் அக்ரம் (ஸல்.) அவர்கள் பற்பல கோத்திரங்களிலும், உற்சவங்களிலும், திருவிழாக்களிலும், ஹஜ்ஜுடைய காலத்திலும் இஸ்லாம் மதத்தைப் போதித்தார்கள் என்று முன்னர் ஓரிடத்தில் கூறியிருக்கிறோ மல்லவா? அதன்படி நுபுவ்வத் வந்த 10-ம் வருஷத்தில் ஹஜ்ஜுடைய காலத்தில் கஜ்றஜ் கபீலாவைச் சேர்ந்தவர்கள் மக்காவுக்கு வந்தபோது "உக்பா" என்ற இடத்தில் ஹுஜூர் (ஸல்.) அவர்கள் அந்த ஜனங்களுக்கு திருகுர்ஆனை ஓதிக் காண்பித்து இஸ்லாமியப் பிரசாரம் புரிந்தார்கள். இக்கூட்டத்தார் யூதர்களிடம் நெருங்கிப் பழகி கடைசி காலத்து நபியைப்பற்றி உணர்ந்துகொண்டுள்ளார்க ளாதலால், "யூதர்கள் இந்தப் பாக்கியத்தில் நம்மை முந்திவிடக் கூடாது என்பதைக்கவனித்துக்கொள்ளுங்கள்' என்று ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டு இஸ்லாம் மதத்தைத் தழுவினர். இவ்வாறு இஸ்லாம் மதத்தைத் தழுவியவர்களின் மொத்தம் அறுவரேயாகும்.

இண்டாவது வருஷத்தில் மதீனுவாசிகளில் வேறு பன்னிருவர் இஸ்லாம் மதத்தைத் தழுவினர். ஆகவே, மதீனுவில் இஸ்லாத்தை போதிப்பதற்காக ஹுஜூர் (ஸல்.) அவர்கள் 'முஸ்அப் இப்னு உமைர்' (றலி.) அவர்களைப் பிரசாரகராக இப்பன்னிருவருடன் மதீனுவுக்கு அனுப்பினர்கள். இவர் மதீனுவில் 'ஸஅதுப்னு லாரா' (றலி.) அவர்களது வீட்டில் தங்கி இருந்துகொண்டு இஸ்லாமியப் பிரசாரம்செய்து கொண்டிருந்தார். ஸ்திரீ புருஷர் வயோதிகர் வாலிபர் உள்படப் பலர் தினசரி இஸ்லாத்தைத் தழுவிக்கொண்டே இருந்தனர். ஆகவே, மதீனுவிலுள்ள அன்ஸாரிகளின் வீடு தவராமல் இஸ்லாம் பரவிவிட்டது. ஆனல், வாயில், கத்மா, வாக்கிப் ஆகிய சில குலத்தார் மாத்திரம் இஸ்லாத்தைத் தழுவாமல் இன்னமும் எஞ்சி இருந்தனர்.

ஔஸ் கபீலாவில் ஸஅதுப்னுமஆத். (றலி.) அவர்களுக்கு விசேஷ செல்வாக்கும் அந்தஸ்து மிருந்தது. அவர் இன்னமும் இஸ்லாத்தைத் தழுவாமலிருந்தார். அவரிடம் முஸ்அபுப்னு உமைர் (றலி.) அவர்கள் சென்று இஸ்லாத்தைப் பற்றி உபதேசித்தார்கள். அவர் அதனை லக்ஷியம் செய்யாமல் கொஞ்சம் வெறுப்பாகப் பேசினர். ஆகவே, ஹஜ்றத் முஸ்அப் (றலி.) அவர்கள் திருகுர்ஆனிலிருந்து சில வசனங்களை ஓதிக் காண்பித்தார்கள். திருகுர்ஆன் வசனங்கள் அவரது இருதயத்தை மெழுகுபோல் உருக்கி விட்டதால் உடனே அவர் இஸ்லாத்தைத் தழுவிவிட்டார். இவர் இஸ்லாத்தைத் தழுவிய பின் அந்த கபீலாவில் எஞ்சி இருந்த பாக்கி ஜனங்களும் இஸ்லாத்தைத் தழுவினர். பிறகு மூன்றுவது வருஷத்தில் மதீனுவிலிருந்து 82 பேர்கள் ஹஜ்ஜுக்கு வந்தார்கள்.

இவர்கள் 'உக்பா' என்ற இடத்தில் ஹுஜூர் (ஸல்.) அவர்களிடம் இரகசியமாக பைஅத்துச் செய்தனர். அது சமயம் ஹுஜூர் (ஸல்.) அவர்களது சிறிய தந்தை ஹஜ்றத் அப்பாஸ் (றலி.) அவர்களும் ஹுஜூர் (ஸல்.) அவர்களுடன் இருந்தார்கள். இவர்கள் இன்னமும் இஸ்லாத்தைத் தழுவாவிடினும் மதீனுவாசிகள் பைஅத்துச் செய்வதைப் பார்த்து அவர்களை நோக்கி "கஜ்றஜ் கூட்டத்தாரே! முஹம்மது (ஸல்.) எங்கள் குடும்பத்தில் மிகவும் கண்ணிய மும் அருமையும் மதிப்பும் பெற்றவர்; நாங்கள் அவரது விரோதிகளை எதிர்த்து அவருக்கு எப்பொழுதும் ஆதரவு புரிந்துகொண்டே வந்திருக்கிறோம். இனி அவர் உங்களிடம் வருவதற்குள்ள நோக்கமாயிருக்கிறார். ஆகவே, நீங்கள் சாகும்வரை அவருக்கு உதவிபுரிய முடியுமானல் பைஅத்துச் செய்யுங்கள், இல்லையேல் இப்பொழுதே சொல்லி விடுங்கள்" என்று கூறினர்கள்.

இவ்வார்த்தைகளைக் கேட்ட மாத்திரத்தில் ஹஜ்ரத் பராஉ (றலி.) என்ற அன்ஸாரி அவர்கள் "நாங்கள் வாள்களுக்கு இடையில் வளர்ந்தவர்கள்" என்று கூறினர். அபுல் ஹுஷைம்

(ரலி.) அவர்கள் அவருடைய பேச்சை நிறுத்திவிட்டு ஹுஜூர் (ஸல்.) அவர்களை நோக்கி, "யாரஸூலல்லாஹ்! தற்போது எங்களுக்கும் யூதருக்குமிடையில் உடன்படிக்கை இருந்து வருகிறது; இந்த பைஅத்துக்குப்பின் அவ் வுடன்படிக்கை முறிந்துவிடும், தாங்கள் பல மடைந்து அதிகாரம் பெற்றபின் எங்களை விட்டுவிட்டுத் தங்கள் பிறப்பிடம் திரும்பி வந்துவிடக்கூடாது" என்று கேட்டுக்கொண் டார். அப்போது ஹுஜூர் (ஸல்.) அவர்கள் புன்னகைபுரிந்து "இல்லை, இல்லை. உங்களுடைய உதிரம் எனது உதிரமாகும்; நீங்கள் என்னுடை யவர்கள்; நான் உங்களுடையவன்" என்று கூறினர்கள். பிறகு "ஷிர்க்கு, வியபிசாரம், சிசு கொலை, படர்கூறல் ஆகியவைகளை விட்டு முற்றி லும் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்றும், ஹுஜூர் (ஸல்.) அவர்கள் கூறும் ஒவ்வொரு நல்ல காரியத்தையும் நிராகரிக்கக்கூடாது என் றும் பைஅத்துச் செய்தார்கள்.

இந்த பைஅத்துக்குப் பிறகு ஹுஜூர் (ஸல்.) அவர்கள் முஹாஜிர்களை மதீனாவுக்குச் செல்ல அனுமதி கொடுத்தார்கள். ஆயினும், தாங்கள் இறைவனின் உத்தரவின்றி மதீ னாவுக்குச் செல்ல மனமில்லாமல் மக்காவி லேயே இருந்துவந்தார்கள். மக்காவிலுள்ள முஸ்லிம்கள் ஹிஜ்றத்துச் செய்துகொண் டிருந்ததால், நாளுக்கு நாள் மக்காவில் முஸ் லிம்களின் எண்ணிக்கையும் குறைந்து கொண்டே இருந்தது. குறைஷித்தலைவர்கள், ஹுஜூர் (ஸல்.) அவர்களைக் கொன்றுவிட வேண்டும் என்பது சம்பந்தமாகக் கூடிப்பேசிச் சதியாலோசனைகள் செய்துகொண்டிருந்தனர். இறுதியாக எல்லாக்கூட்டத்து ஜனங்களிலிருந் தும் முக்கியமானவர்களைத் தெரிந்தெடுத்து, அவர்களனைவரும் ஏககாலத்தில் ஹுஜூர் (ஸல்.) அவர்கள்மீது வாளைப் பிரயோகித்துக் கொலைசெய்துவிட்டால், ஹாஷிம்குடும் பத்தார் எல்லா ஜனங்களையும் எதிர்த்து வெற்றிபெற முடியாது என்ற முடிவுக்கு வந்து அவ்விதமே செய்வதாகத் தீர்மானித்து அதற்காக ஒரு தினத்தை நிர்ணயித்துக்கொண்டனர். இதன் மத்தியில் இறைவன் ஹுஜூர் (ஸல்.) அவர் களை மதீனாவிற்கு ஹிஜ்றத் செய்யும்படி கட் டளையும் பிறப்பித்துவிட்டான். ஹுஜூர் (ஸல்.) அவர்கள் ஹிஜ்ரத் செய்வதாக நிர்ண யித்திருந்த இரவும், குறைஷியர் ஹுஜூர் (ஸல்.) அவர்களைக் கொலை செய்வதற்காக நிர்ண யித்த இரவும் ஒரே சமயமாக ஏற்பட்டிருந் தது. ஆகவே, ஹுஜூர் (ஸல்.) அவர்களது வாசஸ்தலத்தைச் சுற்றி அன்றைய இரவில் குறைஷியர்கள் காவல் காத்து ஹுஜூர் (ஸல்.) அவர்களது வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆயினும், ஹுஜூர் (ஸல்.) அவர்கள் இவர்களது இக்காவலுக்கு அஞ்சாமல் தங்களது படுக்கையில் ஹஜ்ரத் அலீ(ரலி.) அவர்களைப் படுத்துக்கொள்ளும்படி செய்துவிட்டு, தாங்கள் வெளியேறினர்கள். குறைஷித் தலைவர்களும் ஹுஜூர் (ஸல்.) அவர்களைப் பார்க்கமுடியாதபடி குருடாயினர். அதாவது, அவர்கள் காவல்புரிந்தும் ஹுஜூர் (ஸல்.) அவர்கள் வெளியில் வந்ததைப் பார்க்க முடியவில்லை.

ஹுஜூர் அக்ரம் (ஸல்.) அவர்கள் வீட்டை விட்டு வெளியேறி நேராக கஃபத்துல்லாவின் பக்கல் சென்று கண்களில் நீர்வடிய "மக் காவே! நீ எனக்கு இவ்வுலகமனைத்தினும் அதிகம் அருமையாயிருக்கின்றனை, ஆனால், யான் யாது செய்தல்கூடும்? நினது புதல்வர் கள் என்னை இங்கு தங்கவிடவில்லையே" என்று கூறிவிட்டு, ஏற்கனவே முன்னேற்பாடாகச் செய்திருந்த இடத்துக்கு நேராகச் சென்றார் கள். அங்கு ஹஜ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி.) அவர்களும் வந்துசேர்ந்தார்கள். இருவருமாக "காரேதெளர்" என்ற குகைக்கு வந்து மூன்று நாட்கள்வரை மறைந்திருந்து அப்பால் மதீனமா நகரை நோக்கிச் சென்றார்கள்.

மக்கத்துக் குறைஷியர்கள் இராமுழுதும் காத்திருந்தும் காலையில் ஏமாற்றமடைந்தனர். ஹுஜூர் அக்ரம் (ஸல்.) அவர்கள் மதீனாவிற் குத்தான் சென்றிருக்க வேண்டும் என்று நினைத்து மதீனாவிற்குச் செல்லும் பாதைகளை முக்கியமாகவும் வேறிடங்களைப் பொதுவாக வும் தேடினர். ஹுஜூர் அக்ரம் (ஸல்.) அவர் களையும், ஹஜ்றத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி.) அவர்களையும் பிடித்துக்கொண்டு வருபவர் களுக்கு 100 ஒட்டகை இனம் தருவதாகப் பறையறைவித்தனர். இவ்வெகுமதிக்குஆசைப் பட்டுப் பலரும் பல இடங்களில் ஹுஜூர் (ஸல்.) அவர்களைத் தேடிப் புறப்பட்டனர். இறுதியாக 'சுராக்கத்துப்னு ஜஷும்' என்பவர் ஹுஜூர் (ஸல்.) அவர்களையும் ஹஜ்றத் அபூ பக்ர் ஸித்தீக் (ரலி.) அவர்களையும் கண்டு தமது குதிரையை வேகமாகத் தட்டிக்கொண்டு

அவர்களே தெருங்கினர். அவரது குதிரையின் கால்கள் பூமிக்குள் பதிந்துவிட்டபடியால், குதிரை நடக்கமுடியாமலாகி விட்டது. இவ்வாறு மூன்றுமுறை முயன்றும் மூன்று முறையிலும் குதிரையின் கால்கள் பூமிக்குள் பதிந்து விட்டதுமல்லாமல், அவர் பால்கள் போட்டுப் பார்த்ததிலும் அவருடைய இஷ்டத்துக்கு விரோதமாகவே குறிவெளியாயிற்று. ஆதலால், அவர் பயந்து குதிரையை விட்டிறங்கி ஹுஜூர் (ஸல்.) அவர்களைப் பணிந்து விஷய மனைத்தையும் விளக்கியதுடன் தனக்கு "அபய மூரி" எழுதித் தரவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். ஹஜ்றத் அபூபக்ர் ஸித்தீக் (றலி.) அவர்களது குலாம் ஆமிறுப்னு புஹைரா (றலி.) என்பவர் ஹுஜூர் (ஸல்.) அவர்களது கட்டளைப்படி தோலில் அபயமூரி எழுதிக் கொடுத்தார். அதனைப் பெற்றுக்கொண்டு சுராக்கா தமது இருப்பிடம் திரும்பினர். பிறகு சுராக்கா இஸ்லாம் மதத்தைத் தழுவி ஸஹாபியாக இருக்கும் பாக்கியத்தையும் அடைந்தார். ஹஜ்றத் உமர் (றலி.) அவர்கள் கலீபாவாக இருந்த காலத்தில் ஈரான் தேசம் பிடிபட்டு அசாபரணங்கள் மதீனுவுக்கு வந்து சேர்ந்தபோது, அவைகளை இந்த சுராக்காவுக்கு அணிவித்து காலத்தின் மாறுபாட்டால் ஏற்படும் காட்சியை மக்களுக்கு விளக்கினர்கள்.

ஹுஜூர் (ஸல்.) அவர்கள் மக்காவை விட்டுப் புறப்பட்டதிலிருந்து மதினுவாசிகள் தினந்தோறும் ஹுஜூர் (ஸல்.) அவர்களது வருகையை எதிர்பார்த்து மக்காவின் ரஸ்தாவிற் காத்திருப்பதும் பிறகு வீடுதிரும்புவதுமாக இருந்தார்கள். ஒருநாள் ஒருயூதர் தமது கோட்டைக்கு மேலிலிருந்து பார்த்தபோது தூரத்தில் சவாரி வருவதைக்கண்டு ஹுஜூர் அக்ரம் (ஸல்.) அவர்களது வாகனமாக இருக்க வேண்டுமென்று அனுமானித்துக்கொண்டு, "அறபிகளே! நீங்கள் எதிர்பார்த்தவர் வந்தார்" என்றறிவித்தார். உடனே பக்தர்களின் தக்பீர் முழக்கம் வானைப் பிளப்பதுபோலிருந்தது. ஜனங்கள் ஹுஜூர் (ஸல்.) அவர்களைத் தரிசிக்க ஆவலுடன் ஓடி வந்தனர்.

நகரத்துக்கு 3 மைல் தூரத்திலுள்ள மேட்டுப் பாங்கான ஒரு இடத்தில் அன்ஸாரிகளின் பலகுடும்பத்தார் வசித்து வந்தனர். அந்த இடத்துக்கு 'குபா' என்று பெயர். ஹுஜூர் (ஸல்.) அவர்களுக்கு முன்னர் ஹிஜ்ரத் செய்துவந்த முக்கிய ஸஹாபிகளும் இவ்விடத்திலேயே ஹுஜூர் (ஸல்.) அவர்களது வருகையை எதிர் பார்த்து வசித்து வந்தனர். ஹுஜூர் (ஸல்.) அவர்கள் இங்கு வந்து தங்கினர்கள். பிறகு, ஹஜ்றத் அலீ (றலி.) அவர்களும் இவ்விடத்திற்கு வந்து ஹுஜூர் (ஸல்.) அவர்களுடன் சேர்ந்து கொண்டார்கள். இங்கு ஹுஜூர் (ஸல்) அவர்கள் 14 நாட்கள் தங்கி இருந்த காலத்தில் மஸ்ஜித கட்டுவதற்காக அஸ்திபாரமிட்டார்கள். இந்த மஸ்ஜித கட்டும்போது ஹுஜூர் (ஸல்.) அவர்களும் கற்கள் முதலியன எடுக்கும் வேலையையும் செய்தார்கள். ஹுஜூர் (ஸல்.) அவர்கள் குபாவில் வந்து சேர்ந்ததானது, இஸ்லாத்தின் சரித்திரத்தில் முக்கியமான சம்பவமாக இருப்பதால், அந்த தேதி யாவராலும் ஞாபகப் படுத்தப்பட்டிருக்கிறது. ஹிஜ்ரி சகாப்தமும் அந்த தேதியிலிருந்துதான் கணிக்கப்பட்டிருக்கிறது.

குபாவிலிருந்து ஹுஜூர் (ஸல்.) அவர்கள் மதீனுவுக்கு புரப்பட்டபோது அன்ஸாரிகளுக்கும் முஹாஜிர்களுக்கும் சகோதரத்துவத்தை ஏற்படுத்தினர்கள். அப்பால், மஸ்ஜித நபவி கட்ட ஏற்பாடு செய்யப்பட்டது. மஸ்ஜித நபவி கட்டப்பட்டு ஹுஜூர் (ஸல்.) அவர்களது பீவிமார்கள் வசிப்பதற்காக அதைச் சுற்றிலும் அறைகள் தயாரானபின் ஹுஜூர் (ஸல்.) அவர்கள் ஹஜ்றத் அபூ அய்யூப் அன்ஸாரி (றலி.) அவர்களது வீட்டிலிருந்து புதிய வாசஸ்தலத்துக்கு வந்துவிட்டார்கள்.

ஹுஜூர் (ஸல்.) அவர்கள் தாங்கள் வீட்டிலேயே விருந்தாளியாக இறங்கவேண்டும் என்று ஒவ்வொருவரும் விரும்பினர்கள். அதற்கு ஹுஜூர் (ஸல்.) அவர்கள், என்னுடைய ஒட்டகத்தை விட்டுவிடுங்கள் அது அல்லாஹுத ஆலாவினுல் ஏவப்பட்டிருக்கிறது. அது எங்கு போய் நிற்கிறதோ அங்கு நான் இறங்கிக்கொள்கிறேன் என்று கூறினர்கள். ஹஜ்றத் அபூ அய்யூப் அன்ஸாரி (றலி.) அவர்களது வீட்டின் முன் வந்ததும் அவ்வொட்டகை நின்றுவிட்டது. ஆகவே, ஹுஜூர் (ஸல்.) அவர்களை உபசரிக்கும் பாக்கியம் ஹஜ்றத் அபூ அய்யூப் அன்ஸாரி (றலி.) அவர்களுக்குக் கிடைத்தது. இவர் ஹுஜூர் (ஸல்.) அவர்களின் பாட்டனாகிய ஹஜ்ரத் அப்துல் முத்தலிப் அவர்களது மாமனாரின் குடும்பத்திலுள்ளவர் என்பதை நேயர்களுக்கு அறிவித்துக்கொள்கிறோம்.

ஹிஜ்ரத்துக்குப்பிந்திய சம்பவம்

முஸ்லிம்கள் மக்காவைவிட்டு மதீனமாநகரம் வந்து விட்டார்கள். ஹுஜூர் (ஸல்.) அவர்களும் மதீனுவுக்கு வந்து சேர்ந்து விட்டார்கள். ஆதலால், முஸ்லிம்கள் பகைவர்களின் சங்கடமின்றி, மனக்கவலையின்றி நிம்மதியாக இறைவணக்கம்புரிந்துகொண்டு சந்தோஷமாகக் காலங்கடத்தியிருப்பார்கள் என்று வாசகர்கள் நினைக்கக்கூடும். இம்மாதிரியான எண்ணம் முஸ்லிம் அல்லாதாரிற் பலருக்கும் உண்டு. ஆயினும், உண்மை அப்படியன்று. பகிரங்கமாக, சர்வ சுதந்திரத்துடன் மக்காவில் முஸ்லிம்கள் இறைவணக்கம் செய்யத் தடுக்கப்பட்டிருந்தாலும், மக்கா வாசிகள் அனைவரும் இஸ்லாதத்தைத் தழுவிவிட்டால், அறபிதேசம் முழுவதிலும் இஸ்லாம் வெகு சுலபத்தில் பரவிவிடும் என்ற எண்ணம் முஸ்லிம்களின் உள்ளத்தில் ஒருவித ஆறுதலை யளித்துவந்தது. ஆனால், மதீனுவின் நிலைமை அவ்வாறில்லை. மதீனுவாசிகளுக்கு அறபி தேசத்தின் இதரபாகங்களில் அவ்வளவு செல்வாக்கிருக்கவில்லை. ஆதலால், மதீனுவாசிகள் அனைவரும் இஸ்லாத்தில் சேர்ந்து விட்டாலும் வெளியிடங்களில் இஸ்லாத்தைப் பரவச்செய்வதற்கு முஸ்லிம்கள் பிரத்தியேகமான முயற்சி செய்யவேண்டியதாகவே இருந்தது. ஆதலால், முஸ்லிம்கள் சுயேச்சையுடன் இறை வணக்கம் புரிந்தாலும் வெளியிடங்களில் இஸ்லாம் பரவுவதற்கான வசதியும் சௌகரியமும் காணப்படவில்லையே என்ற ஏக்கமும் கவலையும் முஸ்லிம்களின் உள்ளத்தை அலட்டிக்கொண்டே இருந்தது.

தவிரவும், மக்காவிலுள்ள குறைஷியர்கள் இரவில் கூடிப்பேசுவதை மறைத்து வைக்காமல் காலையில் அதனை பகிரங்கம் செய்து விடுவார்கள். ஆதலால், மக்கத்தார் முஸ்லிம்களுக்குப் பகிரங்க விரோதிகளாக இருந்தார்கள். இதனால் முஸ்லிம்கள் வருகிற தீன்பத்தை முன் ஜாக்கிரதையாக உணர்ந்தே இருந்தனர். மதீனுவின் நிலைமை அவ்வாறிருக்கவில்லை. இங்கு முனாபிக்குகள் என்ற ஒரு சிறு நயவஞ்சகக்கூட்டம் ஒன்றேற்பட்டது. இக்கூட்டத்தார் தங்களை முஸ்லிம்களென்று வாயால் கூறிக் கொண்டாலும் இரகசியத்தில் முஸ்லிம்களை ஒழிப்பதற்கான சூழ்ச்சிகளைச்செய்து கொண்டே இருந்தனர். ஆதலால், மதீனுவிலுள்ள கூட்டத்தாரால் ஏற்படப்போகிற தீன்பங்களை முஸ்லிம்கள் முற்கூட்டியே அறிய முடியாமலிருந்ததால், எத்தகைய கஷ்டம் எப்பொழுது எவரால் உண்டாகுமோ என்ற கலக்கம் முஸ்லிம்களுக்கு இருந்து கொண்டிருந்தது.

மூன்றுவதாக, முஸ்லிம்கள் மதீனுவுக்கு வந்த பின் மதீனுவிலும், மதீனுவுக்குப் பக்கத்திலும் செல்வாக்குடன் இருந்து வந்த யூதர்களுக்கு செல்வாக்கு குன்ற ஆரம்பித்தது. ஆதலின், அவர்களுக்கும் முஸ்லிம்கள் மீது உள்ளில் மனஸ்தாபமிருந்தது. ஆனால், "ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்" என்ற பழமொழிக்கேற்ப, அவர்கள் பகிரங்கமாக முஸ்லிம்களுக்கு விரோதஞ்செய்து மதீனுவாசிகளின் எதிர்ப்பை ஏற்றுக்கொள்ளத் துணியவில்லை. ஆதலால், அவர்கள் மதீனுவிலுள்ள முனாபிக்குகளான நயவஞ்சகக் கூட்டத்தாருக்கு உள்ளூற ஊக்கங்கொடுத்து வந்தனர்.

இதற்கிடையில் மக்கத்துக் குறைஷியரும் சும்மா இருக்கவில்லை. மதீனுவிலுள்ள தலைவர்களுக்குப் பயமுறுத்தல் கடிதங்களை எழுதி, முஸ்லிம்களை ஊரைவிட்டுத் துரத்தாவிடில் மதீனுவின்மீது படையெடுத்து வந்து மதீனுவாசிகளைக்கொன்று பெண்களை சிறைபிடிப்பதாக இறுதிக் கடிதங்கள் எழுதினர். எழுத்துடன் மட்டும் இருந்து விடாமல் சிலர் மதீனுவுக்கு வெளியில் வந்து ஒட்டகை முதலிய பிராணிகளைத் திருடிச்செல்லவும், தனிமையில் அகப்பட்டவரைத் தாக்கவும் செய்தனர். ஆகவே, முஸ்லிம்களுக்கு மக்காவில் ஒரு விரோதி என்றால் மதீனுவில் மூன்று விரோதிகள் ஏற்பட்டனர். இம்மூவருக்கும் ஈடுகொடுத்து முஸ்லிம்களைக் காக்கும் சிரமம் ஹுஜூர் (ஸல்) அவர்களுக்கு ஏற்பட்டது. ஆதலால், ஹுஜூர் அக்ரம் (ஸல்) அவர்கள், இராப்பொழுதில் பகைவர்கள் வந்து விடுவார்களோவென்று, நித்திரையில்லாமல் மதீனுவின் தெருக்களைச் சுற்றிவருவார்கள். ஒருமுறை ஹுஜூர் அக்ரம் ஸல்)

அவர்கள் "இன்று யாரேனும் ஷுஷ்யாரான ஒருவீரர் 'பாராக்கொடுப்பாராயின் அது நன்றாக இருக்கும்" என்று கூறினர்கள். இதைக் கேட்டவுடன் ஸஅதுவகாஸ் (றலி) அவர்கள் இக்காரியத்தைச் செய்ய முன் வந்து இரவு முழுவதும் மதீனுவைக் காவல் புரிந்தார்கள்.

மறுபக்கம் முஸ்லிம்களை ஒழிப்பதற்காகக் குறைஷியர்கள் செய்யும் சதியாலோசனை விவரங்களும், மக்காவுக்கும் மதீனுவுக்கும் இடையிலுள்ள கபிலாக்களைக் குறைஷியர்கள் தங்களுக்கு அனுகூலமாகச் சேர்த்துக்கொண்டிருக்கும் விபரமும் ஹுஜூர் அக்ரம் (ஸல்.) அவர்களுக்குக் கிடைத்துக்கொண்டே இருந்தது. பகைவர் செய்யும் ஆர்ப்பாட்டங்களும் முஸ்லிம்கள் சமாதானப் பிரியர்களாக இருப்பதும் இறைவனுக்குத் தெரியாத காரியமன்று. ஆகவே, இறைவனும் "உங்களுடன் யுத்தம் செய்பவர்களை எதிர்த்து நீங்களும் யுத்தம் செய்யுங்கள்" என்று கட்டளை யிட்டுவிட்டான்.

அதுபொழுது ஹுஜூர் (ஸல்.) அவர்கள் பட்டாளத்தைச் சேர்த்துக்கொண்டு குறைஷியர்கள் மீதோ அல்லது யூதர்கள் மீதோ யுத்தம் தொடுக்காமல் சமாதானமான வழியில் யுத்தம் வராமற்றடுத்து விடுவதற்கான முயற்சியை முதலில் ஆரம்பித்தார்கள். அதாவது, குறைஷியர்களுக்கு முக்கிய தொழில் வர்த்தகம். அதுவும் அவர்கள் ஷாம் தேசம் சென்று வர்த்தகம் செய்ய வேண்டியவர்கள். ஆகவே, குறைஷியர்கள் மதீனுவின் மீது படையெடுத்து வந்தால், அவர்களுடைய வர்த்தகக் கூட்டத்தாரை ஷாம்தேசம் செல்ல விடாமல் தடுக்கப்படும் என்று எச்சரிக்கை செய்தார்கள். இவ்வாறு தடுத்து விட்டால் தங்களது தொழில் முறை கெட்டு விடுமே என்று நினைத்து அவர்கள் யுத்தத்துக்கு வராமலிருக்கட்டும் என்பது ஹுஜூர் (ஸல்.) அவர்களது நோக்கம். இரண்டாவதாக மதீனுவைச் சுற்றியுள்ள அக்கம்பக்கத்து கபிலாக்களுடன் நேச உடன்படிக்கை செய்துகொள்வதுகொண்டு முஸ்லிம்களுக்கு அதிக பலம் இருக்கிறது என்று பகைவர்களும் உணருவார்கள். அல்லாமலும், யுத்தம் ஏற்பட்டாலும் அக்கம்பக்கத்திலுள்ளவர்களால் அபாயம் நேரிடாமலிருக்கவேண்டும் என்பதுமாகும். இதற்காக, ஹுஜூர் (ஸல்.) அவர்கள் 50 பேர்களைக் கொண்ட 3 கூட்டங்களை மக்காவின் திசையை நோக்கி அனுப்பினர்கள். இதன் பேரில் 'அப்வாஉ' என்ற இடத்திலுள்ள 'முஜ்னியா' கபிலாவுடனும், மதீனுவுக்கு 30 மைல் தூரத்துக் கப்பாலுள்ள மலைப்பிரதேச வாசிகளான 'ஜஹ்னியா' கபிலாவுடனும் 'பனூலம்ரா' கபிலாக்காரர்களுடனும் உடன்படிக்கை செய்யப்பட்டது.

பின்னர், ஹிஜ்ரீ 2-ம் வருஷத்தில் மக்கத்துக்குரைஷியர்கள் மதீனுவின்மீது படையெடுத்து வந்தனர். இவர்கள் வரும் விபரம் ஹுஜூர் (ஸல்.) அவர்களுக்குத் தவறாமல் கிடைத்துக் கொண்டே இருந்தது.

ஆகவே, ஹுஜூர் (ஸல்.) அவர்கள் ஹிஜ்ரீ 2-ம் ஆண்டு றமலான் மாதம் 12-ந் தேதி மதீனுவை விட்டு வெளியேறினர்கள். கொஞ்ச தூரம் வந்தபின் முஸ்லிம்களைக் கணக்கிட்டு சொற்ப வயதுள்ளவர்களைத் திரும்ப அனுப்பிவிட்டு, 313 பேர்களுடன் பத்ரு என்ற இடத்திற்குவந்து சேர்ந்தார்கள். பகைவர்களும் அங்கு வந்து சேர்ந்தனர்.

இறுதியாக யுத்தம் நிகழ்ந்தது. இந்த யுத்தத்தில் இறைவன் முஸ்லிம்களுக்கு மகத்தான வெற்றியை அளித்ததால், குறைஷியர்கள் தோல்வியடைந்தனர். பிறகு, பத்ருச் சண்டையில் கொல்லப்பட்ட குறைஷிகளின் பழியை வாங்குவதற்காக அவர்கள் பலமுறை படைதிரட்டி வந்தனர். இதனால், ஸவீக், உஹத் முதலிய யுத்தங்கள் ஏற்பட்டன. இறுதியாக அறபிக் கபிலாக்கள், யூதர்கள் உள்பட எல்லோரும் ஒன்றுசேர்ந்து ஒரு பெரும்படையைத் திரட்டினர். இதில் பகைவர்கள் மொத்தம் 24 ஆயிரம்பேர்களிருந்தனர். ஹுஜூர்(ஸல்.)அவர்கள் இப்படையெடுப்பைத் தடுப்பதற்காக மதீனுவுக்கு வெளியிற்செல்லாமல் அகழ் வெட்டிக்கொண்டு மதீனுவிலிருந்தே யுத்தத்தைச் சமாளித்தார்கள். அதுபொழுது பகைவர்கள் மதீனுவின்மீது பலமாக முற்றுகையிட்டனர். ஆயினும், இறுதியில் தங்கள் நோக்கம் நிறைவேறுமற் கலைந்தனர். இந்த யுத்தம் முடிவடைந்தபின் இதில் சம்பந்தப்பட்ட யூதர்கள் தண்டிக்கப்பட்டனர்.

பிறகு, ஹுஜூர் (ஸல்.) அவர்களுக்கும் குறைஷியர்களுக்கும் 'ஹுதைபிய்யா' என்ற இடத்தில் சமாதான உடன்படிக்கை ஏற்பட்டது. ஆகவே, இச்சமாதான காலத்தில் ஹுஜூர் (ஸல்.) அவர்கள், அறபிதேசத்திலும் வெளியிலுமுள்ள தலைவர்கள், அரசர்கள், கவர்னர்கள் முதலியவர்களுக்குக் கடிதமெழுதி இஸ்

லாத்தில் சேரும்படி அழைப்புவிடுத்தார்கள். சிலகாலம் சென்றபின் மக்கத்துக் குறைஷியர் கள் உடன்படிக்கையை மீறி ஹுஜூஆ (ஸல்.) அவர்களது கூட்டியைச் சேர்ந்த கோத்திரத்தா ரிற்சிலரை ஹறம்ஷரீபில் கொன்றுவிட்டனர். இதனால் உடன்படிக்கை முறிந்து அநீதியா கக் கொலைக் குற்றம் செய்த பகைவர்களைத் தண்டிக்கும் நோக்கத்துடன் மக்காவின்மீது படையெடுக்க வேண்டிய தாயிற்று.

மக்கமாநகரில் முக்கியமாகக் குறிப்பிடத்தக் கப் பெரும் யுத்தம் நடைபெறுமலே அந்நகர் முஸ்லிம்களால் கைப்பற்றப்பட்டதால் குறைஷி யர்கள் பணிந்து மன்னிப்புக் கேட்டனர். ஹுஜூஆ (ஸல்.) அவர்கள் யாவருக்கும் பொது மன்னிப்புச் செய்தார்கள்.

மக்கமாநகர் பிடிபட்டதால் குறைஷிக்காபிர் களின் பலம் முறிந்துவிட்டது. கைபர் பிடிபட் டதால் யூதர்களின் பலம் குன்றிவிட்டது. மதீனாவிலுள்ள நய வஞ்சகக் கூட்டத்தார்க ளான முனாபிக்குகள் தானாக அடங்கிவிட்ட னர். ஆகவே, இம்மூவகைப் பகைவர்களும் அடக்கப்பட்டதால் அறபி தேசத்திலுள்ள இதர கோத்திரத்தார் சுலபமாக இஸ்லாத்தைத் தழுவிக் கொள்ள ஆரம்பித்தார்கள். ஆகவே, மக்கா வெற்றிக்குப் பின் சுமார் 2 வருஷ காலத்துக்குள் அறபி தேசம் முழுவதும் இஸ் லாத்தைத்தழுவிற்று என்று கூறுவது பொருந் தும். எனவே, ஹுஜூஆ (ஸல்.) அவர்களை இறைவன் எந்தக் காரியத்துக்காக இவ்வுலகிற் கனுப்பினானே அக்காரியம் இனிது நிறைவேற் றப்பட்டது. கஃபத்துல்லாவிலிருந்த விக்கி ரகங்களெல்லாம் அடியுடன் நீக்கப்பட்டு இறை வணக்கம் புரிய எவரும் அஞ்சவேண்டாத நிலைமை வந்தது.

பெருமானர் (ஸல்.) அவர்களது முக்கிய வேலை

ஹுஜூஆ அக்ரம் (ஸல்.) அவர்கள் இவ்வுல குக்கு ஆற்றிய தொண்டுகளையும், அவர்கள், மறுமைப் பேற்றுக்காக மக்கள் விஷ யத்தில் எடுத்துக்கொண்ட சிரத்தையையும் பற்றி எழுதுவதென்பது சாமான்யமான விஷய மல்ல. எத்தனைப் பக்கங்க ளெழுதினாலும் அவைகளைப் பூரணமாக எழுதி முடியாது. இவ் வித நிலைமையில் ஒரு பத்திரிகையில் மூன்று நான்கு பக்கங்களுக்குள் எழுதி முடிப்பது என் பது சமுத்திரத்திலிருந்து சில துளி ஜலங்களை எடுப்பதற்கு ஒப்பாகவே இருக்கும். ஆத லால், இந்த வியாசத்தில் சில முக்கிய விஷயங் களை மட்டிலும் சுருக்கமாகவே கூறத் தீர்மா னித்துளோம்.

இறைவனின் கட்டளைப்படி இப்ராஹீம் களில் (அலைஹி) அவர்கள் மக்காவில் கஃபத் துல்லாவை ஆதியில் எடுத்துக்கட்டி முடித்த போது செய்த பிரார்த்தனைகளில், "எங்கள் றப்பே! உன்னுடைய ஆயத்துகளை அவர்க ளுக்கு ஓதிக்காண்பித்து, அவர்களுக்கு வேதத் தையும் விவேகத்தையும் கற்பித்து, அவர்க ளைத் தப்பறவு செய்பவரான ஒரு தூதரை அவர்களிலிருந்து அவர்களிடை அனுப்புவா யாக! நிச்சயமாக நீதான் மிகைத்தவன், விவேக முள்ளவன் என்று துஆச்செய்திருக்கிறார் கள். ஹுஜூஆ (ஸல்.) அவர்களும் இந்த துஆவைக் குறித்து, தங்களைப்பற்றி "அன துஆஉ இப்ராஹீம்" (நான் இப்ராஹீம் அலை ஹிஸ்ஸலாம் அவர்களின் துஆவினுண்டாகி இருக்கிறேன்) என்று திருவாய் மலர்ந்தருளி இருக்கிறார்கள்.

எனவே, ஹுஜூஆ (ஸல்.) அவர்கள், இந்த துஆவில் குறிப்பிடப்பட்ட காரியங்களைச் செய் யும் பொறுப்பேற்படுத்தப்பட்டவர்களா யிருந் தார்கள் என்று நாம் இதிலிருந்து தெரிந்து கொள்கிறோம். இந்த துஆவில் குறிப்பிடப் பட்ட வேலைகள் நபிமார்களின் முக்கியமான வேலைகள் என்பதையும் நாம் பொதுவாகத் தெரிந்துகொள்கிறோம். ஆகவே, இந்த துஆ வில் குறிப்பிட்ட வேலைகள் யாவை? அவை களை ஹுஜூஆ (ஸல்.) அவர்கள் எவ்வாறு நிறைவேற்றினார்கள் என்பதை மட்டிலும் சுருக்கமாகக் கூறிவிடுவதே போதுமான தென்று நினைக்கிறோம்.

இந்த துஆவில் பின்வரும் நான்கு முக்கிய அம்சங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

1. அல்லாஹு தஆலாவின் ஆயத்துகளை அறிவித்தல்.

2. வேதத்தைக் கற்பித்தல்.

3. விவேகமான விஷயங்களைக் கற்பித்தல்.

4. ஜனங்களைப் பாவத்தைவிட்டுச் சுத்தப் படுத்துதல். நபிமார்களுடைய வேலைகள் இன்னின்னவை என்பதை இதைப் பார்க்கினும் சுருக்கமாக எடுத்துரைத்தல் சாமான்ய மக்களால் முடியுமா? ஹஜ்றத்களில் (அலை.) அவர்கள் நபியாக இருந்தமையான், நபியின் முக்கிய வேலை இன்னதென்பதை நன்குணர்ந்திருந்தார் கதாதலால், அவைகளைச் சுருக்கமாகக் கூறமுடிந்தது. இந்நான்கு காரியங்களையும் ஹுஜூர் (ஸல்.) அவர்கள் நிறைவேற்றியதை இனிக்கவனிப்பாம் :

ஆயத்துக்களைச் சொல்லிக் காண்பித்தல்

'ஆயத்' என்ற பதத்துக்கு திருஷ்டாந்தம், ஆதாரம் என்பது பொருளாகும். வேறு ஒரு காரியத்துக்கு வழிகாட்டுகிற ஒவ்வொன்றுக்கும் ஆயத் என்று கூறலாம். ஆகவே, மறைவான செய்திகளையும் காரியங்களையும் மனிதன் அறிந்து கொள்ளச் சக்தியற்றவனுதலின், அல்லாஹுத ஆலாவின் உஜூதை உணர்ந்து கொள்வது அவனது சக்திக்குப் புறம்பான காரியம். ஆனால், அதை உணர்த்தக் கூடியவை அவனுடைய ஸிபாத்துகள்தாம். இதுபோலவே, மலக்குகள், ரிஸாலத், இறைவனின் வசனம், மரணத்துக்குப்பின் உயிர் பெறல் ஆகியவைகளையும் மனிதன் சாமான்யமாக அறிந்து கொள்ள முடியாது. இவை ஒவ்வொன்றையும் மனிதர் ஒப்புக்கொண்டு, அவைகளை நேருக்கு நேராகப் பிரத்தியக்ஷமாகப் பார்த்தது போல் அங்கீகரிக்கச் செய்வதற்கு மனிதனுச்குச் சரியான ஆதாரங்களையும் காரணங்களையும் காண்பிக்கவேண்டும். இத்தகைய ஆதாரங்களையும் காரணங்களையும் ஹுஜூர் அக்ரம் (ஸல்.) அவர்கள் இனியில்லா வண்ணம் நன்கு எடுத்தறிவித்திருக்கிறார்கள்.

வேதத்தை போதித்தல்

ஹுஜூர் அக்ரம் (ஸல்.) அவர்கள் இவ்வேலையையும் சம்பூரணமாகச் செய்தார்கள். மனிதன் தன்னுடைய இம்மை மறுமை வாழ்க்கையின் நன்மைக்காக ஒரு ஷரீஅத்தைப் பின்பற்றி நடக்கவேண்டும். அந்த ஷரீஅத்தை இறைவன் அங்கீகரித்திருக்கவும் வேண்டும். அந்த ஷரீஅத்து பார்ட்டையின்படி நடந்த மனிதன் இவ்வாழ்க்கைப் பிரயாணத்தை முடிவுசெய்ய வேண்டும். இவ்வழிதேரானவழி என்பதில் அவனுக்கு எள்ளத்தனையும் சந்தேகமோ ஐயமோ இருக்கலாகாது. இந்த ஷரீஅத்தின் வழியானது மனிதனுக்குக் கஷ்டத்தையும் சிரமத்தையும் கொடுக்கக் கூடிய வழியாக இருக்காமல், மிகவும் சுலபமானதானதும், யாவரும் எளிதில் அடைந்துகொள்ளத் தக்கதுமான வழியாக இருக்கவேண்டும். அதில் சொல்லப்பட்ட நியதிகள் மனிதனின் தேவைகளைப் பூர்த்திசெய்யக் கூடியனவாகவே இருக்கவேண்டும். இவ்வழியிற் செல்வதற்கு யாவருக்கும் உரிமை இருக்க வேண்டும். குறிப்பிட்ட ஒரு பிரிவினருக்கு மட்டும், அல்லது ஒரு ஜாதியாருக்குமட்டும், அல்லது ஒரு தேசத்தாருக்குமட்டும் இவ்வழி திறந்துவைக்கப்படாமல் யாவருக்கும் எச்சமயத்தும் திறந்துவைக்கப்பட்டிருக்க வேண்டும். மதம், ஆத்மீகம், ஒழுக்கம் ஆகியவைகள் சம்பந்தமான அபிவிருத்திக்கு அதில் இடமிருக்க வேண்டும். மனிதனின் அறிவு வளர்ச்சியையும் உண்டாக்கவேண்டும். இப்படிப்பட்ட விஷயங்களடங்கிய வழியையும், திட்டத்தையும் ஹுஜூர் (ஸல்.) அவர்கள் தாம் வெகு திறமையாகச் சமர்ப்பித்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட திட்டங்கள் அடங்கியவைகள் தாம் இறைவனுலனுப்பப்பட்ட 'வஹீ'யாகும். இவ்வஹியானது இன்னும் நமக்கு வேதமாக இருந்து வழிகாட்டிக் கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட லக்ஷணங்கள் யாவும் சம்பூரணமாக அமையப்பட்ட வேதம் இக்காசினியில் வேறொன்றுமில்லை என்பது உலகறிந்த உண்மையாகும்.

விவேகத்தை அறிவித்தல்

ஹுஜூர் அக்ரம் (ஸல்.) அவர்கள் இக்காரியத்தை நிகரற்ற வண்ணமாகச் சம்பூரணமாய் நிறைவேற்றினர்கள். அல்லாஹு தஆலாதான் சர்வசக்தன்; அவனுடைய மகத்துவத்துக்கும், தத்துவத்துக்கும், வல்லமைக்கும் எல்லையே இல்லை என்றவாறு அவனுடைய கம்பீரத்தை ஹுஜூர் (ஸல்.) அவர்கள் வெளிப்படுத்தினர்கள். அவன் வல்லவனுயினும் பிறரிடம் தேவையற்றவன்; அவன் ஏதேனும் காரியத்தைச் செய்யும்படி கட்டளை யிட்டாலும், அல்லது ஒன்றைச் செய்யவேண்டாமென்று விலக்கினாலும் அதில் தனக்கு ஏதேனும் ஒருலாபத்தையோ அல்லது கஷ்டத்தையோ சருதி

ஏவல் விலக்கலைச் செய்பவனல்லன்; அவன் ஹக்கீமாக இருக்கிறான்; ஆதலால், அவனுடைய கட்டளைகளில் விசேஷமில்லாத வீணான விஷயங்கள் எதுவுமில்லை; காரணமில்லாமல் எவ்வித ஏவல் விலக்கல்களையும் செய்யமாட்டான். என்ற விஷயங்களை ஹுஜூர்(ஸல்.) அவர்கள் தாம் முதல் முதலாகப் போதித்தார்கள். இவ்விஷயத்தை யாரும் இவ்வளவுதெளிவாக இதற்கு முன் விளக்கியதில்லை.

மேலும், திரு குர்ஆனிலும், ஹதீதுகளிலுமுள்ள எந்த விஷயத்தை எடுத்துப் பார்த்தாலும் ஒவ்வொரு ஏவலிலும் விலக்கலிலும் அதற்குரிய காரணங்கள் கூறப்பட்டிருப்பதைத் தவறாமல் பார்த்துக் கொள்ளலாம். ஆகவே, திருகுர்ஆன், ஹதீது முதலியவைகளில் சொல்லப்பட்ட ஏவல்களை எடுத்து நடப்பவர்களும், விலக்கல்களைத் தவிர்த்துக் கொள்பவர்களும் அதில் எவ்விதமான சங்கோஜத்தையோ வெறுப்பையோ அடையாமல், தனக்கு நன்மைதரும் காரியத்தையே செய்வதாக வெகு பக்தியுடனும், உற்சாகத்துடனும் செய்வதை நாம் அறிந்திருக்கிறோம். அக்காரியத்தைச் செய்து முடித்தவுடன் அதைச் செய்தவர் தன்னை யறியாமலே சந்தோஷத்தையும் இன்பத்தையும் அடைகிறார். இக்காரியத்தை நான் செய்ததால் முக்கியமாக எனக்கும் பொதுவாக உலகத்துக்கும் நன்மை செய்துவிட்டேன் என்றே உணர்கின்றார். ஆகவே, ஒவ்வொருவரும் ஷரீஅத்தின்படி நடப்பதை ஒரு முக்கியமான காரியமென்றே உணருகின்றனர். ஷரீஅத்தின்படி நடப்பதில் பிரயோஜனமில்லை யென்றும், ஜாதிக்கட்டுப்பாட்டுக்காகவே நடப்பதாகவும் எவரும் உணருவதில்லை. இதற்குக் காரணம் ஹுஜூர் (ஸல்) அவர்கள் ஒவ்வொரு காரியத்திலுமுள்ள நன்மை தீமைகளையும் பலாபலன்களையும் நமக்கு அறிவித்து, ஷரீஅத்தின் சட்டதிட்டங்களின் அகமிய நன்மையை உணரும்படியான விவேகத்தை நமக்குக் கற்பித்ததேயாகும். இப்படிப்பட்ட போதனை வேறெங்கும் நாம் காண்பதரிதாகும்.

பாவத்தைவிட்டுத் துப்பறவு செய்தல்.

மக்களின் மனப்பலகையிலுள்ள மாசுக்களை அகற்றி அவைகளைப் பளிங்குபோல் சுத்தம் செய்து அல்லாஹ் தஆலாவின் அருளாகிய மெஞ்ஞான ஒளியை அவ்விருதயக் கண்ணாடியில் இலங்கச்செய்வது நபிமார்களுக்குரிய வேலைகளில் ஒன்றாகும். இப்பணியை ஹுஜூர் (ஸல்.) அவர்கள் எவ்வளவு திறமையுடன் செய்தார்கள் என்பதை ஹுஜூர் (ஸல்.) அவர்களின் பக்தர்கள் மட்டுமில்லாமல் அவர்களது விரோதிகளும்கூட இன்றும் போற்றுகிறார்கள். இனி என்றும் போற்றுவார்கள். ஹுஜூர் அக்ரம் (ஸல்.) அவர்கள் எந்த சமூகத்தாரின் மத்தியில் ஜனித்தார்கள் என்பதும் அவர்கள் ஜனிக்கும்போது அந்த ஜனங்களின் நிலைமை எவ்வாறிருந்தது என்பதும் உலகத்தாருக்குத் தெரியாமலில்லை. நம்முடைய இச்சஞ்சிகையின் பிரிதோரிடத்திலும் இதைப்பற்றிச் சிறிது கூறப்பட்டிருக்கிறது. அக்காலத்தில் உலகெல்லாம் இருள்சூழ்ந்திருந்தது என்று கூறுவது பொருந்தும். மதசம்பந்தமான போதனைகள் பல அடியுடன் மாற்றப்பட்டும், புரட்டப்பட்டும், திருத்தப்பட்டும் போயின. எஞ்சிய சில போதனைகளும் அமல்நடத்தப்படாமல் விடப்பட்டிருந்தன. இங்கிலை அறபிதேசத்தில் மட்டுமில்லாமல் உலகம் முழுவதிலும் இருந்தன.

ஹுஜூர் அக்ரம் (ஸல்.) அவர்கள் வந்த பிறகு தான் ஜனங்களுக்கு இவ்வுண்மை தெரிய வந்தது. இதற்குமுன் எல்லோரும் தாங்கள் செய்வதே மிகச் சரியென்று கண்டிருந்தனர். பாவம் என்ற வார்த்தையே மனிதபாஷையில் இருந்து எடுக்கப்பட்டிருந்தது என்றுங் கூறலாம். இப்படிப்பட்ட நிலைமையிலுள்ள உலகில் பாவம், புண்ணியம், நன்மை, தீமை என்ற பாகுபாட்டை விளக்கி, ஒவ்வொருவரும் தத்தம் பாவச் செய்கைகளை உணரச்செய்து, தாங்களாகவே அந்தப் பாவங்களை விட்டு விலகி நன்மை புரியும் காரியத்தில் ஈடுபடச் செய்தது ஹுஜூர் அக்ரம் (ஸல்.) அவர்களேயாவார்கள். அஞ்ஞானம் என்ற ஆழக்கடலில் அமிழ்ந்து அரக்கர்களை போலிருந்த அவ்வறபியரைத் தட்டி எழுப்பி அறிவமுதத்தையூட்டி, மெஞ்ஞானத்தைப் புகட்டி அமரர்களை போலாக்கியது அஹ்மதுரஸூல் (ஸல்.) அவர்களைத் தவிர்த்து வேறுயாருமிலர். இத்தகைய பெருங்காரியத்தை நிறைவேற்றுவதற்கு ஹுஜூர் அக்ரம் (ஸல்.) அவர்களைத் தவிர்த்து வேறுயாராலும் முடியாது என்ற விஷயத்தை அவர்களது சரித்திரத்தைப் படித்தவர் ஒப்புக் கொள்ளாதிருக்க முடியாது. இதனைச் செய்ய முற்பட்டபோது அவர்களுக்கு ஏற்பட்ட எதிர்ப்பும் தடையும் இச்சஞ்சிகையின் மற்

ரொரு தலைப்பின் கீழ் ஒருவாறு சுருக்கமாக கூறப்பட்டிருக்கின்றன.

ஆகவே, ஹுஜூர் அக்றம் (ஸல்.) அவர்கள் இவ்வுலகுக்கு ஒரு விலையிலா மாணிக்கமாகவும், குறைவற்ற பெருந்திரவியமாகவும் இருந்து விளங்குகிறார்கள். ஹுஜூர் (ஸல்.) அவர்கள் இவ்வுலகுக்கே பொது நபியாக இருந்து உலக மதத்தையும் உலக வேதத்தையும் இனியில்லா வண்ணம் உலகத்தாருக்குச் சமர்ப்பித்தார்கள். வேதமும் பூர்த்தியாயிற்று, மார்க்கமும் பூர்த்தியாயிற்று. அதை இறைவனும் அங்கீகரித்துக் கொண்டான். அவனது அருட்கொடைகளும் சம்பூரணமாயிற்று. இனி நமக்குப் புதிய வேதமோ, புதிய மதமோ, புதிய நபியோ, எவ்விதத்திலும் தேவையில்லை. ஆதலால்தான் இறைவன் தனது திருமறையின் கண்ணே,

"முஹம்மது உங்களில் நின்றுமுள்ள ஆடவர் எவருக்கும் தந்தையாயில்லை. எனினும் அவர் அல்லாஹ்வின் தூதர். இன்னும் நபிமார்களின் கடைசியானவர். மேலும் அல்லாஹ் மிகைத்தவனுயிருக்கிறான். விவேகமுள்ளவனுயிருக்கிறான்.

என்று கூறியுள்ளான். ஆகவே, மக்களுக்கு உண்மையை யுணரும் ஆற்றலையளித்து அவனது சத்திய திருநபி (ஸல்.) அவர்கள் காட்டிய வழியினைப்பற்றி நடக்க எல்லாம்வல்ல பேரருளாளன் அருள் சுரப்பானாக. ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

காத்தமுந்நபீ (ஸல்.)

நபிகள் திலகம் எம்பெருமானுர் (ஸல்.) அவர்கள் முத்திராங்கமான கடைசி நபியாகுமென்பது திருமறை திருவாக்காகும். காதியானிகள் இதனை மறைமுகமாக மறுத்துக் கூறி வருகின்றார்களென்பது உலகறிந்த உண்மையாகும். இக்கூற்றை உலகிலுள்ள சகல முஸ்லிம்களும் மறுத்து, கபட காதியானிகளின் கள்ளத்தனத்தை உலகமக்களின் கவனத்திற்கு கொண்டு வருகின்றனர். இத்தோரணையில் அஹ்ரார் சபையினரால் காதியான் கிராமத்தில் நடத்தப்பட்ட மகாநாட்டில், அமீருஷ்ஷரீஅத் மௌலானு சையித் அதாவுல்லாஷாஹ் புகாரி அவர்கள் ஆற்றிய சொற்பெருக்கின்மீது மௌலானு அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டபோழுது மௌலானு அவர்கள் காதியானிகளின் பொய்க்கூற்றுகளை விளக்கியும், பெருமானுர் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் காத்தமுந் நபியாக இருக்குமென்பதை ஸ்திரப்படுத்தியும் ஓர் ஸ்டேட்மேண்டு தாக்கல் செய்தார்கள். அஃது மிகமிக ருசிகரமாய் இருப்பதால் அதனை இதன்கீழ் குறிப்பிடுகிறோம். இக்கேஸில் மௌலானு அவர்களுக்கு 6 மாதம் கடுங்காவல் விதிக்கப்பட்டு அதன்மீது அப்பீலும் நடைபெறுகிறது.

மௌலானு அவர்கள் ஸ்டேட்மேண்ட்

அஹ்ரார் சபையினரின் தப்லீக் கான்பரன்சில் தலைமைவகித்து நான்செய்த பிரசங்கத்தின் உண்மை இன்னும் இந்த கோர்ட்டுக்கு வரவில்லை. போலீஸார் செய்த ரிப்போர்ட்டை பிரசங்கமென மதித்து சாமான்யமாக, படித்த ஒரு மனிதர்மீது பொறுப்பேற்றுவது என் அபிப்பிராயத்தின்படி மிகவும் அநீதியாகும். இது அதாவுல்லாஹ்ஷாஹ் புகாரியின் பிரசங்கமென்று உலகில் பிரபல்யப்படுத்துவதைப் பார்க்கினும் எனக்கு அதிகக் கஷ்டத்தைக் கொடுக்கக்கூடியது வேறொன்றுமில்லை. ஆயினும், அரசாங்கம் இந்த ரிபோர்ட்டை ஆதாரமாக வைத்துக்கொண்டு என்னைக் கைதுசெய்து என்மீது வழக்கு நடத்திவிட்டது. எவ்வாறுயினும், உலகிலுள்ள ஒவ்வொருமுஸ்லிமும் மக்காமதீனு வாசியாயினும், எகிப்து ஷாம்தேசத்தவராயினும், ஈரான் ஆப்கனில் வாசஞ் செய்பவராயினும், நம் இந்திய மக்களாயினும் அவர்கள் இந்த மிர்ஸாயிகளின் தவறான மதக்கொள்கைகளையும் ஏமாற்றமான காரியங்களையும் உணர்ந்துகொள்வது கொண்டு இஸ்லாத்தின் எதிர்காலம் இந்த பித்னுவைவிட்டுப் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதே அஹ்ரார் சபையினரின் தப்லீக் பிரசார இலாக்காவின் முக்கி

யக் கடமையாக இருக்கிறதென்பதை அறிவித் துக்கொள்ளுகிறேன்.

வசை மொழிகள்

மார்க்கப் பெரியார்களான நபிமார்கள், வலி மார்கள், உலமாக்கள் ஆகியவர்களின் கண்ணி யத்தையும் பெருமையையும் பாதுகாக்கவேண்டு மென்பது அரசாங்கத்தின்நோக்கமல்லவென்று தெரியவருகிறது. இது அரசாங்கத்துக்கு நோக்கமாக இருக்குமாயின், இன்றைக்கு 50 வருஷங்களுக்கு முன் அரசாங்கத்தார் விதை த்த செடி (மிர்ஸாகுலாம் அஹ்மது) எல்லா நபிமார்களையும், வலிமார்களையும், பெரியார்களை யும் வசைமொழி கூற ஆரம்பித்தபோதே அவருக்கு ஏதேனும் கட்டுத்திட்டம் செய்து அவரது நாவை அரசாங்கத்தார் தடைசெய் திருப்பார்கள். மௌலானா ரஷீது அஹ்மது கங்கூஹீ, பீர் ஸையித் மெஹர் அலீஷாஹ் சாஹிப் கோல்டவீ, மௌலவீ ஸஅதுல்லா லுதியானவீ ஆகியவர்கள் தங்கள் காலத்தில் சாமான்யர்களாக இருக்கவில்லை. ஷெய்குல் ஹிந்து மௌலானா மஹ்மூதுஹஸன், சையித் அன்வர்ஷா ரயீஸுல்முஹத்திதீன் ஆகிய பெரி யார்கள் மௌலானாரஷீது அஹ்மது அவர்க ளது சிஷ்யர்களாகும். இவர்களது சிஷ்யர்களின் சிஷ்யர்கள் இவ்வுலகின் சகல கோணங்களிலும் பரவி இருக்கின்றார்கள். அரபிதேசத்திலும் அஜம் நாட்டிலும் இப்பெரியார்களின் சிஷ்யர் கள் மதபோதனையும், உபாத்திமையும் செய் யாத இடம் மிகக்குறைவென்றே கூற வேண்டும்.

ஹஸ்ரத் பீர்மெஹர் அலீஷாஹ் சாஹிப் அவர்கள் ரஹ்மான் கிருபையால் நுபுவ்வத், ரிஸாலத் என்ற ஸ்தானத்தைக் காவல்புரிவதற் காக இன்றளவும் ஜீவியம் என்ற சிறையில் இருந் துகொண்டிருக்கிறார்கள். இவர்களுடைய நூற் றுக்கணக்கான மாணவர்களும் பல்லாயிரக்கணக் கான சிஷ்யர்களும் பஞ்சாபிலும் பஞ்சாபுக்கு வெளியிலும் இந்தியாவின் பல மாகாணங்களி லும் பரவி இருக்கின்றார்கள். இந்நிலைமையில் அரசாங்கம் வளர்த்த இந்த செடி (குலாம் அஹ் மது) இப்பெரியார்களுக்கு விரோதமாகத் தன்னுடைய நாகரீகத்தின் காட்சியைச் செய்து கொண்டிருந்தபோது அரசாங்கம் ஏன் வாய் மூடிக்கொண்டிருந்தது? தன்னுடைய பிடியை ஏன் தளர்த்தி வைத்திருந்தது?

சிறந்த நற்குணங்களோபோதிப்பதற்காகவந்த நாவெனக் கூறப்படுபவர் (குலாம் அஹ்மது) தன்னுடைய 'அஞ்சாமெ ஆத்தம்' என்னும் புத்தகத்தின் அனுபந்தம் 252-ம் பக்கத்தில் மௌலானா அஹ்மது கங்கூஹி அவர்கள் சம் மந்தமாக "அவர்கள் யாவரிலும் அவர் கடைசி யான குருட்டு ஷைத்தானாக இருக்கிறார்; வழி கெட்டவராகவுமிருக்கிறார்; அவரை ரஷீது அஹ்மது கங்கூஹி என்று கூறுவர். இவரைப் போலவே முஹம்மது ஹஸன் அம்றாஹியும் மூதேவியாகவும் அல்லாஹ் தஆலாவால் "லஅன்த்து'ச் செய்யப்பட்டவராகவு மிருக்கி றார்" என்று எழுதிவைத்திருக்கிறது. பின்னர் இந்தகாதியானி 'மூத்தநபீ' 'நஜூமுல்மஸீஹ்' என்ற புத்தகத்தில் ஹஸ்ரத் பீர்மெஹர் அலீ ஷாஹ் அவர்களைப்பற்றி "அறிவு கெட்ட ஓநா யைப்போல் அலைந்து திரிகிறார்", "இவர் நர கலோகத்தான் சாப்பிடுகிறார். ஏ! மானங்கெட்ட வரே அவர் லஅனத்துச் செய்யப்பட்ட புழு; இதுபோன்ற அசுசை மனப்பான்மை கொண்ட வர்கள் எப்பொழுதும் இருந்துக்கொண்டிருக் கிறார்கள்" என்றும் எழுதியிருக்கிறார். மேலும், 'பீர்மெஹர் அலீஷாஹ்வின் செய்கை' என்ற புத்தகம் 64-ம் பக்கத்தில் "பீர்மெஹர் அலீ ஷாஹ் பச்சைப் பொய்யினால் தன்கோணல் மூலையின்மீது திரைபோட்டு வைத்திருக்கிறார்; அவர் பொய் சொல்பவர்மட்டுமன்று, கடுமை யான பொய் சொல்பவராகவுமிக்கிறார்" என் றும், ஷைபுத்தகம் 69, 70-வது பக்கங்களில் "இந்த மூதேவியின் பெயரைக்கூட நான் கூற விரும்பவில்லை. கபன் திருடுகிறவர்களைப் போல் மானக்கேடான திருட்டைச் செய்திருக் கிறார். திருடன் மட்டுமின்றி பொய்யனாகவு மிருக்கிறார்" என்றும், 71-ம் பக்கத்தில், "பீர்மெஹர்ஷாஹ் அதனுடைய பிணத் தைத் திருடி தன்னுடைய புத்தகத்தில் புசித்து விட்டார்; திருடனிலும் எம்மாதிரி திருடனென்றால் பிணம் முழுவதையும் முழு திதாபில் முழுங்கிவிட்டார்; இந்த ஆக்ஷேபணை யில் அந்தப் பிணத்தின் எச்சலைத் தின்றிருக் கிறார்" என்றும், 101-ம் பக்கத்தில் "என்ன அறிந்துக்கொண்டிருக்கிறாய்! இக்காலத்து இமா முக்குப் பகையான இருப்பவனுக்கு என்ன அடையாளமிருக்கிறது; இந்த நாய்கள் நம்மை பார்த்து 'வள் வள்' என்று குரைக்கின்றன; பயபக்தி இன்னதென்றே தெரியாதவர்கள்; அவர் நாய்தான்; மனிதனன்று. ஆகவே, நாயை

நாய்க்குட்டிகள்தான் பின்பற்றுவார்கள்; அவர்கள் நாயைப்போல் பிணத்தைத் தின்கின்றனர். அவர்கள்பேராசைக்காரர்கள்; உலகத்தில் பன்றி எல்லாவற்றையும் பார்க்கினும் அசங்கிதமும் மானங்கெட்டதுமாகும். ஆனால், தங்களுடைய மனவேகத்தால் சத்தியமும் நேர்மையுமான சாக்ஷியத்தை மறைப்பவர்கள் பன்றியினுங் கடையர்களாகும்; பிணத்தைத் தின்னும் மௌலவீகளே! ஆசூசையான ஆத்மாக்களே! அந்தோ நீங்கள் எனக்கு விரோதஞ்செய்து இஸ்லாத்தின் உண்மையான சாக்ஷியத்தை மறைத்துவிட்டீர்கள்''என்றும், ''மௌலவீ தனுவல்லா, மௌலவீ ஸைதுல்லா, மௌலவீ முஹம்மது ஹுஸைன் பட்டாலவீ இந்த ஜனங்கள் சத்தியஞ் செய்வார்களா? ஒருபோதும் செய்யமாட்டார்கள்; ஏனெனில் இவர்கள் பொய்யர்கள்; நாய்களைப்போல் பொய்யெனும் பிணத்தைப் புசித்துக்கொண்டிருக்கின்றனர்'' என்று 'அஞ்சாமெ ஆத்தம்' அனுபந்தம் 21-ம் பக்கத்திலும், ''இவர்களின் விகாரமான மூஞ்சிகளை குரங்கு பன்றிகளைப்போல் மாற்றிவிடுவோம்'' என்று அதேபுத்தகம் 25-ம் பக்கத்திலும் எழுதியிருக்கிறது. இவை உலமாக்களையும் வலிமாக்களையும்பற்றி காதியானி முத்த நபி கூறியுள்ள தூஷணைகளில் சிலவாகும். இவைகளை நமூனவுக்காக எடுத்துக் காண்பித்தேன்.

ஹஸ்ரத் ஈஸா (அலை.) அவர்களைப்பழித்தல்

திருகுர்ஆன், ஹஸ்ரத் ஈஸா (அலை.) அவர்களை ரூஹுல்லா, கலிமத்துல்லா, திருஷ்டாந்தம் என்னும் சிறப்புப்பெயர்களால் வர்ணித்திருக்கிறது. ஆனால், இந்த காதியானி முத்த நபி அஞ்சாம ஆத்தம்' 775-ம் பக்கத்தில், பின்வருமாறு கூறியிருக்கிறார்:—

''இவருடைய குடும்பத்தார் மிகவும் பரிசுத்தமாக இருந்திருக்கிறார்கள். ஆனால், தகப்பன் வழியைச் சேர்ந்த 3 பாட்டிமார்களும் தாய் வழியைச்சேர்ந்த 3 பாட்டிமார்களும் விபசாரிகளாக இருந்தனர். இவர்களுடைய உதிரத்திலிருந்து அவர் உற்பத்தியானர். தலைமுறை வழக்கத்திற்கேற்பதான் இவருக்கு தேவடியாள்களிடம் நேசமும் சார்புமிருந்தது. அவ்வாறில்லையாயின் பயபக்தியுள்ள ஒரு மனிதன், வாலிப தேவடியாள் அசுத்தமான தன்கையை தமது தலையின்மீது வைக்க சந்தர்ப்பமே அளித்திருக்கமாட்டார். வியபிசாரத்தொழில் சம்பாத்தியத்தின் முதற்பலன் அவருடைய தலைக்குக் கிடைத்தது. இன்னும் தன்னுடைய கூந்தல்களை அவள் கால்களுக்குக் கீழில் படவிட்டிருக்கமாட்டார். இம்மாதிரியான மனிதர் எவ்வித நடத்தையுள்ளவராக இருக்கவேண்டும் என்பதை உணரக்கூடியவர்கள் உணர்ந்து கொள்ளுவார்கள். ஆம்! இவருக்கு கெட்ட வார்த்தை பேசுவதிலும் தூஷணை கூறுவதிலும் நல்லபழக்கமிருந்தது. அற்ப விஷயங்களுக்கெல்லாம் கோபமடைந்து கொண்டிருந்தார். தன்னை பலவாறான உணர்ச்சிகளினின்று தடுக்க முடியாதவராக இருந்தார். ஆனால், இந்த செய்கைகள் என்னிடம் பரிதாபப்படுவதற்கானதாக இல்லை. ஏனெனில், அவர் திட்டிக்கொண்டிருந்தாரென்பதும், யூதர்களின் கையிலிருந்து பணம் வாங்கிக்கொண்டிருந்தாரென்பதும், இவருக்கு பொய் பேசும் வழக்கமிருந்தது என்பதும் ஞாபகமிருக்கட்டும். ஆண் பிள்ளைத் தன்மையும் புருஷதத்துவமும் மானிடனது புகழுக்குறிய லக்ஷணங்களிலுள்ளதென்பது உங்களுக்கு தெரியாமலில்லை. ஆண்தத்துவமில்லாத ஹிஜ்டாவாக இருப்பது நல்ல லக்ஷணமன்று; இந்த ஆக்ஷபனை மிகப் பெரிது. மஸீஹ் (அலை.) ஆண்பிள்ளைத்தனத்தின் மிகவும் உயர்ந்த தன்மையில் இல்லாதவராக இருந்ததன் காரணமாக கல்யாணஞ் செய்து கொண்டு நல்லவிதமாக குடும்பம் நடத்தி வருவதற்குக் கிரியாம்சையில் அவரிடம் எவ்வித நமூனவுமில்லாது போயிற்று.'' எனவே, அவர் இவ்வாறு உலமாக்களையும் நபிமார்களையும் தகாத வார்த்தைக்கொண்டு ஏசிப் பேசி இருக்கிறார்.

மிர்ஜாயிகளும், மிர்ஜாவும் சர்க்காரின் வாலறுந்த நாய்கள் என்று நான் கூறினேனென்பதுதான் என்மீது சுமத்தப்பட்டிருக்கும் பெரிய குற்றச்சாட்டாக இருக்கிறது. இந்த வார்த்தைகள் எனது பிரசங்கத்தில் இருந்தனவென்பதை நான் அங்கீகரிக்கின்றேன். ஆனால், தற்போது இந்தநீதிஸ்தலத்தில், கையில் வைத்துக்கொண்டு நான் படித்துக் காண்பிக்கிற ஸ்டேட்மெண்டில் குறிப்பிட்டுக் காண்பித்திருக்கிற மேற்கோள்களை, என்னுடைய பிரசங்கத்தை அன்று குறிப்பெடுத்த ரிபோர்ட்டர்கள் எழுதிக்கொள்ளவில்லை என்பதை அறிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இவர்கள் ஏன் இதை எழுதாமல் விட்டு விட்டார்களென்பதை இறைவன்தான் அறிவான். நான் எடுத்துக் காண்பித்த விஷ

யங்களில் பாதிக்கேனுமுள்ள மேற்கோள்களை அந்த ரிபோர்ட்டில் அவர்கள் எழுதி இருப்பார்களாயின், அந்த வார்த்தைகள் (வாலறுந்த நாய்கள் என்று கூறியது) என்னுடைய சொந்த வார்த்தையாகத் தோன்றி இருக்கமாட்டா. நான் எனது பிரசங்கத்தில் இந்த ஜமாஅத்தை முனபிக்குகளின் ஜமாஅத்து என்று நிர்ணயித்து அன்றுஎடுத்துக்காட்டிய மேற்கோள்கள் வருமாறு :—

"குர்தால்பூர் (பொய்) நய்யின் நபித்தனத்தை கவனியுங்கள்! அவர் அரசாங்கத்துக்கு முன் எவ்விதமாக தலை சாய்க்கிறார். அவர், 'நான் இக்காலத்து மஸீஹாக இருக்கிறேன், இன்னும் இறைவனின் கலீபாவாகவுமிருக்கிறேன்', 'நான் முஜ்தபாவாகவும் முஹம்மதாகவும் அஹ்மதாகவுமிருக்கிறேன்', 'கர்பலா இதோ இருக்கிறது. ஒவ்வொரு நிமிஷத்திலும் என்னுடைய சட்டப்பையில் நூறு ஹுண்டிகள் இருக்கிறார்கள்' என்று கூறியிருக்கிறார். இன்னும் 'தர்யாக்குல் குலூப்' என்ற புத்தகம் 15-ம் பக்கத்தில், 'நான் அரசாங்கத்துக்கு அடங்காத மனிதன்று; என் வயதின் பெரும்பாகம் இந்த இங்கிலீஷ் அரசாங்கத்தை ஆதரிப்பதிலும் அதற்கு உதவிபுரிவதிலும் சென்றிருக்கின்றன; ஜிஹாது செய்யக்கூடாதென்று விலக்குவதுசம்பந்தமாகவும், ஆங்கில அரசாங்கத்துக்குக் கீழ்படிவது சம்மந்தமாகவும் ஏராளமான புத்தங்களையும் விளம்பரங்களையும்நான்எழுதிவெளியிட்டிருக்கிறேன். அந்தப் புத்தகங்களையும் விளம்பரங்களையும் பிரசுரங்களையும் ஒன்று சேர்த்துவைத்தால் 50அலமாரிகள் நிறைந்துவிடும். இம்மாதரியான புத்தகங்களை நான்அரபி, எகிப்து, ஷாம், காபல்,ரூம் ஆகிய தேசங்களிலுங் கூடப் பரவச்செய்திருக்கிறேன். உண்மையாக முஸ்லிம்கள் இவ்வரசாங்கத்தின் நன்மையை நாடுபவர்களாக இருக்கவேண்டுமென்று நான் எப்பொழுதும் முயற்சி செய்துவந்திருக்கிறேன். இந்த அரசாங்கத்தின் கீழ் எங்களுக்குக் கிடைத்திருக்கிற இந்த அமைதி, எங்களுக்கு மக்கா முஅல்லமாவிலும் கிடைக்காது; ரூம் சுல்தானின் தலைநகரான கானிஸ்டாந்தி நோபியிலும்கிடைக்காது' என்று எழுதி இருக்கிறார். காதியானி முத்தநப்பி ஹறமைனிஷ்ஷரீபைனியை எவ்விதமாக அவமதித்திருக்கிறார் என்பதை பாருங்கள்! "அங்கு எவர் பிரவேசித்தாலும் அவர் அச்சந்தீர்ந்தவராகி விடுகிறார்" என்று திருகுர்ஆன் ஷரீப்ஹரம்ஷரீப் சம்மந்தமாகப் பயிரங்கமாய் அறிவித்திருக்கும் போது, காதியானி முத்தநப்பி 'அங்குஅமைதி இல்லை என்று கூறியிருக்கிறார். இதே தர்யாக்குல் குலூப்' என்ற புத்தகம் 15-ம் பக்கத்தில் 'ஆங்கிலேய அரசாங்கத்தின் அமைதியான நிழலின் கீழ் இஸ்லாம் மதத்திற்கு மறுபடியும் ஜீவியம் கிடைத்திருக்கிறதென்று நாம் சாக்ஷியம் கூறுகின்றோம். எல்லா முஸ்லிம்களைப் பார்க்கினும் நான் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நன்மையை முதல்தரமாக நாடுபவன் என்று நான் கூறமுடியும். இவ்வாறு நான் கருதுவதற்கு மூன்று விஷயங்கள் பிரதானமாகும். (1) காலஞ்சென்ற எனது தந்தை அவர்களிடமிருந்து கற்றுக்கொண்டது. (2) உயர்தரமான இந்த அரசாங்கம் எனக்குச் செய்துள்ள கிருபைகள். (3) அல்லாஹ் தஆலாவின் இல்ஹாம்கள். எனவே,இப்பொழுது நான்இந்த அரசாங்க நிழலின்கீழ் சகலவிதத்திலும் சந்தோஷமாக இருக்கிறேன்' என்றுகூறி இருக்கிறார்.இன்னும் அதே 'தர்யாக்குல் குலூப்'பில் அவர்கூறிஇருப்பதாவது:—'பிரதிவினையை உண்டுபண்ண விரும்புகிறவர்களுக்கு அல்லாஹ்த ஆலாவின் லஃனத்து உண்டாவதாக! அவர்கள் ஒரு அமீருடைய கட்டளைக்குக் கிழ் இருக்க விரும்புகிறார்களில்லை. அல்லாஹ்வுக்கும் அவனது ரஸூலுக்கும், உங்களில் அதிகாரப்பதவி வகித்திருப்பவர்களுக்கும் வழிப்படுங்கள் என்று இறைவன் கூறியிருக்கிறான். இந்த ஆயத்தில் கூறப்பட்டிருக்கிற உலுல் அம்று—அதிகாரப்பதவி வகிப்பர் என்ற வார்த்தை ஸ்தூல சம்மந்தமான அர்த்தப்படி அரசரையும், ஆத்மசம்மந்தமான அர்த்தப்படி அக்கால இமாமையும் குறிக்கும். எனவே, ஒருவர் ஸ்தூலவிஷயத்தில் நம்மை எதிர்க்காமல் மத சம்மந்தமான நன்மை அவரிடமிருந்து நமக்குக் கிடைக்குமாயின் அவர் நம்முடனிருக்கிறார். ஆதலால், என்னுடைய ஜமாஅத்தார்கள் ஆங்கிலேயர்களின் அரசாங்கத்தை 'உலுல்அம்று' என்ற கருத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்றும், இன்னும் அவர்கள் (ஆங்கிலேயர்) இருப்பதால் நமக்கு அநேக சௌகரியங்கள் ஏற்பட்டிருக்கின்றன வென்றும் எப்பொழுதும் நான் அவர்களுக்கு உபதேசம்செய்து கொண்டிருக்கிறேன்' (ஜரூரத்துல் இமாம். பக்கம் 23)

மேலே கூறப்பட்ட இந்த மேற்கோள்களை நான் படித்துக்காட்டி திருகுர்ஆன் போதனையிலிருந்து, அன்பியா அலைஹிஸ்ஸலாம்கள் மற்ற

வர்களால் பின்பற்றப்பட்டவர்களாகி வருகின் றார்களேயன்றி மற்றவர்களுக்குக் கீழ்படிவர் களாக வருவதில்லை என்றும், அவர்கள் உலுல் அம்ரு க இருக்கிறார்களென்றும், தங்களு டைய மதத்துக்கும் தங்களுடைய வேதத்துக் கும்மாறுகவுள்ள பாலிக்களுக்கும், பாவஞ்செய் பவர்களுக்கும் கீழ்ப்படிவதற்காக அவர்கள் வர வில்லை என்றுதெரிகிறதென்றும், 'நான்முஜ்தபா வாக இருக்கிற முஹம்மதாவும் இருக்கிறேன்' என்றுஅவர் (மிர்ஸா) தாவாச்செய்து கொண்டு, 'காம்பூர்வீகத்திருந்தே கவர்ன்மெண்டுக்கு ஊழி யஞ் செய்பவர்களிலும், கவர்ன்மெண்டின் நன் மையை நாடுபவர்களிலும் இருந்துவந்திருக்கி றோம்; எச்சமயத்திலும் அரசாங்கத்துக்கு மூழுபலத்துடன் சேவைபுரிந்து வந்திருக்கி றோம்; எனது தகப்பனார் அரசாங்கத்தாரால் நன்கு மதிக்கப்பட்டவராகவும், பாராட்டப் பட்டவராகவும் இருந்து வந்திருக்கிறார்; இந்த சர்க்காருக்கு எங்களுடைய ஊழியம் நன்கு தெரிந்திருப்பதால் கவர்ன்மெண்ட். அதை மறந்துவிடுமென்று நான் எண்ணமாட்டேன் என்றும் கூறுவது அவருடைய நிலைமையாக இருந்தது என, நான் பிரசங்கித்தேன்.

ஒருவர் தன்னை அல்லாஹ்வின் நபி என்று சொல்லிக்கொண்டு, ஒரு அரசாங்கத்தின் முன் னிலையில் இம்மாதிரி தன்னை ஊழியகாரன் என் றும், தொண்டன் என்றும், வேலைக்காரன் என் றும் இச்சகம் பேசி இணம்வாங்க முயற்சித்தார் என்று நான் அன்றுங் கூறினேன்; இன்றுங் கூறுகின்றேன். இத்தகைய மேலான ஒழுக் கத்துடன்தான் 'நானே அஹ்மதமாகவும் முஹம்மதாகவும் முஜ்தபாவாகவு மிருக்கிறேன் என்றும், 'நூறு ஹுஸைன்கள் (ரலி.) என் சட்டை ஜோபிக்குள்ளிருக்கின்றனர்' என்றும் கூறப்படுகிறது. இதைப்பார்க்கினும் அதிக மாக நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களை அவ மதிப்பது வேறு எதுதான் இருக்கமுடியும்? எந்த ஹுஸைன் (ரலி.) அவர்களைப்பற்றி இந்த காதியானி முத்தகப்பி 'நூறு ஹுஸைன்கள் என் சட்டைஜோபிக்குள்ளிருக்கிறார்கள்' என்று கூறினாரோ அந்த ஹுஸைன் (ரலி.) அவர்கள், நபிபெருமானார் (ஸல்.) அவர்களது ஸஹாபி களில் ஒருவருடைய புதல்வருக்கு, அவர் சுன் னத்தைப்பின் பற்றுபவராக இல்லை என்ற கார ணத்திற்காக கீழ்படியமறுத்தன் பயனாக கற் பலாவெளியின் மணற்பாங்கான இடத்தில் எவ் வாறான காஃபி ஏற்பட்ட தென்பதை உலகம் அறிந்திருக்கிறது என்று எனது பிரசங்கத் தில் குறிப்பிட்டேன்.

மேலும், அந்த காதியானி முத்தகப்பி 'ஆகவே, நான் இந்த ஊழியங்களில் தனிப்பட்டவன் என்று தாவாச் செய்யமுடியும்; அரசாங்கத் துக்கு உதவி செய்யும் விஷயத்தில் நான் ஒற் றையானவனென்று கூறமுடியும்; நான் இந்த கவர்ன்மெண்டுக்கு ஆபத்துகளை விலக்கும் குளி சங்களைப்போலிருக்கிறேன் என்று கூறமுடி யும். "நீ அவர்களின் மத்தியில் இருக்கும், போது அவர்களை இறைவன் துக்கப்படுத்துபவ னாகஇல்லை" என்று இறைவன் எனக்கு நல் மாராயம் சொல்லியிருக்கிறான். ஆகவே, கவர்ன் மெண்டின்மீது நல்லெண்ணங் கொள்வதிலும், அதற்கு உதவி செய்வதிலும் வேறெந்த மனிதனும் எனக்கு நெகிராக இருக்கமுடி யாது. கவர்ன்மெண்டுக்கு மனிதத் தன் மையை உணரக்கூடிய சக்தி இருக்குமாயின், கூடிய சீக்கிரத்தில் அரசாங்கம் உணர்ந்துகொள் ளும் (நூறுல்ஹக் 32-ம் பக்கம்) என்று கூறி யிருக்கிறார். இதற்குப் பிறகு அவர், 'இஸ்லாம் இரண்டு பாகமாக இருக்கிறதென்பது என் மத்ஹபாகு மென்பதை நான் அடிக்கடி வெளிப்படுத்திக்கொண்டிருக்கிறேன். ஒன்று அல்லாஹ்வுக்கு கீழ்படியவேண்டியது; மற் றொன்று அமைதியை நிலவச்செய்வதற்காக இந்த அரசாங்கத்துக்குக் கீழ்படிவது. எனவே, அநியாயக்காரர்களின் கையை விட்டு எனக்கு தன்னுடைய நிழலில் அபயங்கொடுத்திருப்பது இந்த பிரிட்டிஷ் அரசாங்கந்தான். ஆகவே, பிரிட் டிஷ் அரசாங்கத்தை நாம் மீறுவோமாயின் இஸ்லாத்துக்கும், தெய்வத்துக்கும், ரஸூலுக் கும்மாறு செய்தவர்களைப் போலாகிறோம். இந் நிலைமையில் நம்மைப்பார்க்கினும் அதிக உண் மையுள்ளவர் வேறுயார் இருக்கமுடியும்' என்று கூறியிருக்கிறார்.

இச்சந்தர்ப்பத்தில் நான் ஔரங்கஜேப் கால த்தில் நிகழ்ந்த ஒரு கதையைச் சபையினருக்கு சொல்லிக் காண்பித்தேன். அதுவருமாறு :— "பல வேஷங்களைப் போடுகிற ஒருவன் எவ்வி தத்திலேனும் ஔரங்கஜேபை ஏமாற்றி இனம் வாங்கிவிடவேண்டுமென்று பல முறைகளிலும் பலவாறு வேஷம் போட்டு இனம்பெற முயற் சித்தான். அவன் செய்த எல்லா முயற்சிகளிலும் வெற்றியடையவில்லையாகையால் கடைசியாக உடையைமாற்றி பகீர் வேடம் பூண்டு கானகஞ்

சென்று அங்கிருந்து கொண்டான். அதுபோழுது தற்செயலாய் தக்ஷணத்தின் யுத்த காரியார்த்தமாய் ஔரங்கஜேப் அக்கானகத்தின் வழியே செல்ல வேண்டியதேற்பட்டது. அதுகாலே அக்கானகத்தில் ஜனக்கூட்டம் அதிகமிருப்பதைக் கண்ட ஔரங்கஜேப் விசேஷம் யாதாகுமென வினவினர். அதற்கு ஜனங்கள் 'இங்கு பெரிய மகான் ஒருவர் வந்திருக்கிறார்' என்று கூறினர். உடனே அரசர் அப்பெரியாரைக் கண்டுகொள்வதற்காக அங்கு சென்று துஆச் செய்யும்படி வேண்டிக்கொண்டார். பிறகு அவரிடமிருந்து விடைபெற்றுத் திரும்பியபோது ஒரு பை நிறைய உள்ள தங்க அஷ்ரபிகளை அப்பெரியாருக்கு இனமளித்தார். ஆனால், அந்த பகீர் அந்தப் பணத்தை வாங்க மறுத்துவிட்டு மரியாதையாக எழுந்து நின்றுகொண்டு "அரசே! நான்தான் அந்த பலவேஷக்காரன்" என்று அறிவித்துக் கொண்டான். ஔரங்கஜேப் சக்கிரவர்த்தி மிகவும் ஆச்சரிமடைந்ததுடன் "நீர் எதற்காக தங்க நாணயங்களை வாங்கிக்கொள்ள மறுத்து விட்டீர்" என்று வினவினர். அதற்கு அந்த பகீர் "அரசரே! நான் பகீர்களின் கோலத்திலிருப்பதால் பகீர்களுக்கு பணம் தேவையில்லை ஆதலால், நான் அவைகளை வாபஸ் செய்தேன்" என்று கூறினன்.

நான் இந்த பலவேஷக்காரன் கதையையும் மேலே கூறப்பட்ட மேற்கோள்களையும் சபையினருக்கு எடுத்துக்கூறி, இவர் நபித்துவத்தின் தாவாச்செய்தால் ஆங்கிலேயர்களின் நாயாக ஆகி இருக்கமாட்டார்; ஆனால் இவர் பிரிட்டனின் வாலில்லாத நாயாக ஆகிவிட்டார் என்று கூறினேன்.

எந்த ஜனங்களின் கொள்கைகளும் கிரியைகளும் இம்மாதிரி இருக்கின்றனவோ, இன்னும் எந்த ஜனங்கள் மனிதர்களின் மனதைப் புண்படுத்தி இம்மாதிரி எதேச்சா அதிகாரம் செய்து வருகின்றார்களோ அந்த ஜனங்களின் விஷயங்களை நன்கறிந்த ஒருவரின் உள்ளத்திலிருந்து "பிரிட்டிஷாரின் வாலறுந்த நாய்" என்றும், அவர்கள் செய்யும் அநியாய அட்டூழியங்களால் நெருக்கப்பட்டு அவர்களைப் பார்த்து 'பிரஞ்சனிய ஆசனம் புறட்டப்படுகிறது; இனி அது நிற்காது' என்றும் கூறப்பட்டால் அதற்காக என் வருத்தப்பட வேண்டும். இந்த ஆசனத்தை 'றஹ்மானிய ஆசனம் என்று கூறவேமுடியாது. எனவே, இதனால் துவேஷம் ஏற்படுகிறதா என்பதைப் பற்றி நான் இவ்வளவு மட்டுந்தான் கூறவிரும்புகிறேன்.

மிர்ஸாயிகள் தங்களுடைய கிரியைகளின் காரணமாக உலகம் முழுவதிலும் இவ்வளவு பெரிய வெறுப்பை பரவச் செய்திருக்கிறார்கள். அதை நான் இங்கு சொல்வது கூறியது கூறல் என்பதில் வந்துவிடும். வழக்கு விசாரணை நடந்தபோது "பல்ஸபயே பலாஸபர்" என்ற புத்தகத்திலிருந்து சிலவரிகளைப் படிக்குமாறு கற்றறிந்த மாஜிஸ்டிரேட்டாகிய தங்களுக்கு யான் சிரமம் கொடுத்தேன் என்பது தங்களுக்கு ஞாபகமிருக்கலாம். அந்த (காதியானி) ஜமாஅத்தாரின் புத்தகத்தில் 'திரௌபதி, மர்யம்லித்திகா, சீதை, ஹஸ்ரத் பீபி பாத்திமா (ரலி.) ஆகியவர்களைப் பார்க்கினும் லாகூரிலுள்ள தேவடியாக்கள்—அந்த வயலில் உரம் அதிகமாக இருக்கிறது என்ற காரணத்தால்—மேம்பட்டவர்கள்" என்று எழுதப்பட்டிருக்கிறது. இந்நிலைமையில் அவ்வாறான ஜமாஅத்தாரிடம் உலகம் வெறுப்புக்கொள்ளாமல் நேசங் கொள்ளுமென்று எதிர்பார்க்க முடியுமா? மேலும், அந்த காதியானி முத்தநப்பி 'லத்தீபா' கெ. 5-ல், 'ஒரு முறை லாகூரிலுள்ள தேவடியாக்களுக்கு நான் புத்திமதி கூறினேன். அவர்களிற் பெரும்பாலர் ஹிந்துஸ்திரிகளாயிருந்தனர். அவர்களை நோக்கி நீங்கள் தௌபாச் செய்து விடுவீர்களாயின் திரௌபதி, மர்யம், சீதை, ஹஸ்ரத் பீபி பாத்திமாவைப் பார்க்கினும் நீங்கள் மேம்பட்டுவிட முடியும்' என்று கூறினேன். அதற்கு அவர்கள் அதெப்படி ஆகும் என்றுகேட்டதற்கு, "எந்த வயலில் உரம் அதிகம் விழுகிறதோ அது அதிகமாகப் பலன் தருகிறதென்பதை நீங்கள் பார்த்ததில்லையா? உங்களின் தெருக்களில் பற்பல தேசங்களுடையவும், நகரங்களினுடையவும் உரம் விழுகிறது" என்று பதிலளித்தேன்' என்று கூறியிருக்கிறார்.

அரசாங்கம் இந்த ஜமாஅத்தை ஆதரிப்பதற்காக இடுப்புக் கட்டிக்கொண்டு முஸ்லிம்களின் மதஉணர்ச்சியைப் பரீக்ஷிக்க விரும்புகிறதா? அவ்விதமாயின் அரசாங்கம் தன்னுடைய சமாதியைத் தன்னுடைய கைகளாலேயே தோண்டிக்கொண்டிருக்கிறது என்று நான் அபிப்பிராயப்படுகிறேன். நபிமார்கள், வலி

மார்கள், ஸாலிஹீன்கள், அஹ்லபைத்துகள், முக்கியமாக நபிகள் திலகம் (ஸல்.) அவர்களின் ஈரல் குலைத்துண்டாகிய ஹஸ்ரத்பிபி பாத்திமத் துஜ்ஜோஹரா (றலி.) ஆகியவர்கள் சம்பந்த மாக முஸ்லிம்கள் எவ்விதமான உணர்ச்சியுள்ள வர்களாக இருக்கிறார்கள் என்பதை அரசாங் கம் தெரிந்துகொள்ளவில்லை. நான் இவ்வர சாங்கத்துக்கு உபதேசம் செய்வது என் கட மையல்ல. தனக்குள்ள நன்மை இன்னதுதீமை இன்னது என்பதை அரசாங்கம் நன்கு அறிந் துக்கொள்ள முடியும்.

பிரிட்டிஷாரின் வாலறுந்த நாய் என்று நான் கூறிய வாக்கியத்திலிருந்து,அவரை (மிர்ஸாவை) நாய் என்று நான் சொன்னதாக பொருள் கொள்வது நீதியன்று. சர்க்காரின் வாலறுந்த நாய் என்று நான் கூறியது உண்மை. ஆனால் அதற்கு, அவருக்கு பஞ்சா இருக்கிறது, வால் இருக்கிறது, அந்த வால் அறுந்துவிட்டது என்பது கருத்தல்ல. நான் மேலே எடுத்துக் காட்டிய மேற்கோள்களிலிருந்து, நான் கூறிய இந்த வார்த்தைகளுக்கு, அவர்கள் பிரிட்டிஷா ரின் நிபந்தனையற்ற பக்தர்கள் என்பது தான் எனது கருத்தென்பது வெளிப்படை.

தற்போதைய கலீபாவின் காலத்தில் காதி யானியில் வசிக்கும் மிர்ஸாயீ அல்லாதாருக்கு சகல விதமான கொடுமைகளும் அக்கிரமங்க ளும் அட்டூழியங்களும் செய்யப்படுகின்றன. இதைப்பற்றிக் கேழ்ப்பார் யாருமிலர். அங் குள்ள ஜனங்கள் அதிகமாய்ப் பீதியடைந்திருப் பதால் அங்கு நடைபெறும் காரியத்தைப் பகி ரங்கமாகக் கண்ணால் பார்த்தாலுங்கூட சாக்ஷி சொல்லுவதற்கு யாரும்தயாராக இல்லை. ஏனெ னில், அவ்வாறு சாக்ஷிகூறினால் அவர்களுடைய முடிவு நன்மையாகாது என்பது அவர்களுக்குத் தெரியும். முபாஹலாக்காரர்களின்அபிப்பிராயங் களை ஆதரிப்பது நகரப்பிரஷ்டம் செய்யப்படு வதற்குக் காரணமாக இருக்கிறது என்பதை அங்குள்ளோர் காணும்போது, சத்தியத்தை ஆதரிப்பதற்கு அவர்களுக்கு துணிச்சலுண்டா குமா? அங்கு பலமான குற்றம் நடந்தாலும் கூட அவர்கள்மீது வழக்குத் தொடரமுடியாது. முபாஹலாக்காரர்களின் வீடு எரிக்கப்பட்டது. இடிக்கப்பட்டது. ஆனால், அரசாங்கம் குற்ற வாளிகளை கண்டு பிடிக்க முடியவில்லை. இது தான் தற்கால கலீபாசாயபின் அரசாங்கப் பலன். அநியாயஞ் செய்யப்பட்டவர்களின் இரு தயங்களிலும் அவர்களுக்கு அனுதாப முள்ள வர்களின் ஹிருதயங்களிலும் கலீபா சாயபைப் பற்றிய திடுக்கமும், காதியானில் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டின் அரசாங்கி இல்லை; கலீபா வின் அரசாட்சி இருக்கிறது; அவர் நினைத்த தைச் செய்ய முடியும் என்ற எண்ணமும் பூர்த்தியாக ஏற்பட்டிருந்தது. முஹம்மது ஹுஸைன் ஷஹீதை முஹம்மது அலீ கொலை செய்தபோது முஸ்லிம்களுக்கு ஏற்பட்டிருந்த திடுக்கம் இன்னும் அதிகமாய்விட்டது. முஸ் லிம்களின் ஹிருதயங்களில் இம்மாதிரி திடுக் கத்தை ஏற்படுத்திவிட்ட பின்னர் மிர்ஸாயிகள் தங்களது மதப் பிரசாரத்துக்குள்ள ரஸ்தா வைத் தெளிவுப்படுத்துகின்றனர். சாமான்ய முஸ்லிம்களை வழிதவறச் செய்து மிர்ஜாயிக் கொள்கையின் வலையில் அவர்களை சிக்க வைத்து விடுகின்றனர். ஆகவே, என்னுடைய பிரசங்கத்தின் நோக்கம் முஸ்லிம்களின் உயி ரற்ற உடலத்தில் ஜீவிய உதிரத்தை ஓடச் செய்யவேண்டும் என்பதுதான். அவர்கள் (மிர்ஸாயிகள்) செய்த கொலை, கொள்ளை, திடுக் கம் உண்டாக்குதல் இதுபோன்ற செய்கை களைப் பார்த்து இவர்களின் ஜீவாத்மா மரித்து விட்டது. ஆகவே, இவர்களுக்கு புத்துயிர் உண்டாக்குவதும், காதியானீ கலீபாவின் கொடுமையினால் இவர்களின் ஹிருதயங்களில் ஏற்பட்டிருந்த திடுக்கத்தை தூரமாக்குவதுமே எனது நோக்கமாக இருந்தது. மேலும், அவர் களுடைய ஈமான் ஆட்டங்கொண்டிருந்ததால் அதை பலப்படுத்துவதும், அவர்கள் அதைரிய மடைந்து மனமுடைந்த வாழ்க்கையை நடத் திக் கொண்டிருந்ததால் அவர்களுக்கு தைரிய மூட்டுவதும் எனது நோக்கமாக இருந்தது. மனித உயிரைப் பிள்ளைகளின் விளையாட்டுக் கருவியாக ஆக்கவேண்டாம் என்று அநியாயஸ் தர்களுக்கு நான் அறிவிக்க வேண்டியதும் எனது கடமையாக இருந்தது. அவர்களுடைய அகம்பாவம், தற்பெருமை ஆகியவைகள் நிலை நிற்காது என்பதையும், அவர்கள் நினைத்த காரி யங்களைச் செய்துகொள்ள முடியாது என்பதை யும் நான் அவர் (அஹ்மதியர்) களுக்குத் தெளிவுபடுத்தினேன். இன்னும் அனியாயஞ் செய்யப்பட்டவர்களுக்கு தைரிய மூட்டுவதற் காக, தன்னுடைய சக்தியின்மீதும் கட்டுப் பாட்டின்மீதும் அதிக நம்பிக்கையுள்ளவர் களிடம் நான் சாலஞ் செய்தேன். அவருக் குத் தன்னுடைய கிலாபத், நுபுவ்வத்தின்

மீது இறுமாப்பிருந்தது. இது அவர்கள் தங்களாகவே ஏற்படுத்திக் கொண்டதாகும். முகஸ்துதி செய்யும் வாடை இவர்களிட மிருந்து வருகிற தென்பதை நான் சபையின ருக்கு விளக்கினேன். அல்லாஹ் தஆலாவைத் தவிர மற்றவர்களுக்கு முன் தன்னை இம்மாதிரி வீழ்த்திக்கொள்வது நபுவ்வத்தின் அந்தஸ்த் துக்கு மாறுனது என்று நான் கூறினேன். 'இந்த பிர்ஔனிய ஆசனம் புறட்டப்படு கிறது; இனி அது நிற்காது; இனி அந்த ஆச னத்தை றஹ்மானிய ஆசனம் என்று கூறுவது தகாது என்றும் நான் கூறினேன்.

இப்பிரசங்கத்தின் மூலம் நான் துவே ஷத்தை வளர்க்க முயற்சி செய்தேன் என்று கூறுவதற்கு பதில் சொல்ல வேண்டியது தான் இனி எஞ்சியிருக்கிறது. மிர்ஸாயி உம்மத்து தனது கம்பீரமான காரியங்களின் பலனாக உலகில் இவ்வளவு துவேஷத்தை வளர்த்து வருகிறது. அதை நான் இங்கு திரும்பக்கூற முயற்சிப்பேனுயின், அது கூறியது கூறல் என்ப தாகவே யிருக்கும். முக்கியமாக, எனது நோக்கம் துவேஷத்தைப் பரவச் செய்யவேண் டும் என்பதன்று. என்னுடைய பிரசங்கத் தின் பற்பல இடங்களிலிருந்தும் இவ்விஷயம் நடுப்பகல் சூரியனைப்போல் பிரகாசமாக இருக் கிறது என்பதை மட்டிலும் நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

மிஞராவை வீழ்த்தும் விஷயமாய் என்னல் கூறப்பட்டதாகச் சொல்லப்படும் விஷயம் என் னுடைய் பிரசங்கத்துடன் அரசாங்கத்தாரிட மிருக்கிறது. அதில் மிஞராவை வீழ்த்து வதற்கு பதிலாக ஒரு டஜன் மிஞரா கட்டுவ தற்கு உபதேசம் செய்யப்பட்டிருக்கிறது. இவ்வாறு கட்டிவிட்டால் அந்த மிஞராவுக் குள்ள முக்கியாம்சம் போய்விடும். "துண்டு துண்டாக ஆக்கிவிடுதல்" என்ற விஷயம் என் னுடைய பிரசங்கத்தில் எங்கிருந்து வந்தது என்பது எனக்கு புலப்படவே இல்லை. நான் கூறியவார்த்தைகளை ஒப்புக்கொள்ளுகிறேன்; கூறுதவைகளை நிராகரித்து விடுவது எனது கடமையாகும்.

இவ்வழக்கின் ஆரம்பத்திலேயே நான் ஒரு ஸ்டேட்மெண்டை எழுதிவைத்திருந்தேன். அது தவறி விட்டதற்கு வருந்துகின்றேன். இந்தச் சிலவரிகளை நான் கூண்டில் நின்று கொண்டு எழுதினேன். அதுவும் அவசியமேற் படின் நான் எழுத்து மூலம் ஸ்டேட்மெண்டு தாக்கல் செய்வேன் என்று கோர்ட்டில் வாக் களித்திருந்ததை நிறைவேற்றுவதற்காகும்.

விஞ்ஞானவாதம் பேசும் அஞ்ஞானி

புரோபஸர் அபுல்பாரூக் (பாகவீ) வரைவது

"அது திருமறை, அதில் ஐயப்பாடொன்றுமில்லை. மறைவானவற்றை நம்பக்கூடியவர்களும் தொழுகையை ஸ்திரமாய் ஒழுகி வருபவர்களும், நாமவர்கட்கு அருளியவற்றிலிருந்து (சத்வழியில்) செலவு செய்பவர்களுமான பயபக்தியாளருக்கு வழிகாட்டியாயிருக்கிறது" (அல் குர்ஆன்.)

மனிதன் இகபரமிரண்டையும் செம்மைச் செய்துகொள்வதற்கு தெய்வாரணமொன்று தேவையென்பது முற்றிலும் உண்மை யாகும். எந்த சமூகத்தினர்பால் வேதம் ஓதப் படவில்லையோ அல்லது ஓதப்பட்டும் அதை உதாசினம் பண்ணிவிட்டனரோ அவர்களின் வாழ்க்கை முறை இம்மை மறுமை இரண்டி லும் சீர்கேடடைந்து கவலைக்கிடமாய் முடியு மென்பது யாவராலும் ஏற்கப்படும் எதார்த்த மாகும்.

எனவே, குர்ஆனுகிறது குறிப்பிட்ட ஒரு வகுப்பாருக்கு மட்டுமின்றி நாட்டுபேதம் நிற பேதம் எதுவுமில்லாது, மன்பதைகட்கு மோட்ச சாதனமாய், மனுகோடிகள் யாவருக் கும் பொதுவாய் அருளப்பெற்ற பொன்னுரை யாய் மின்னிக்கொண்டிருக்கிறது. அதைப் பின் பற்றுபவர்கட்கு என்றும் நல்லபெயர்உண்டும். அதை கைநழுகவிட்டவனும் குதர்க்கம்பண்ணு பவனும்கெட்டழிந்தேபோவான். நாம் படுகுழி யில் விழாது சத்வழி நடப்பதற்கு இவ்வுயரிய

ஆபரண மொன்றுதான் உண்மை வழிகாட்டியாய் உதவிபுரிந்துகொண்டிருக்கிறது. அக்கிரந்தத்தின் கருத்துகள் பிறழாது உள்ளது உள்ளவாறு உணர்ந்துகொள்ளும் அளவுக்கு மனிதன் பாரமார்த்திகத் துறையில் பெருமையடைய இலக்காகிறான்.

இத்தன்மை அந்தஸ்துவாய்ந்த அவ்வேதத்தின் ஓர் பகுதியான இவ்வாக்கியத்தில் கூறப்பட்டுள்ள—அதாவது, மறைவானவற்றை நம்பக்கூடியவர்கள் என்ற—ஆயத்தை ஊன்றி கருத்திலிறுத்திக்கொள்வது அவசியமாகும்.

ஆழமான அறிவில்லாத் ஒரு சில குருட்டு வாதக்காரர்கள் தங்கள் பஞ்சேந்திரியங்கட்கு புலப்படுபனவற்றையே நம்புகிறார்கள்; மறைவான மற்றவைகளை நிராகரிக்கின்றனர். இது முழுமுட்டாள் தனமாகும். ஏனெனில், மற்ற எல்லா விதண்டாவாதமும் ஒருபக்க மிருக்கட்டும். இப்பிரபஞ்சகர்த்தாவான தனிப்பெருஞ் சோதியாம் சாக்ஷாத் ஸுப்ஹான ஹூவை யாரேனும்ஐம்புலன்களிலொன்றின் உதவியால் நிதரிசனமாய்க் கண்டு கொண்டதுண்டா? இவ்விதம் இல்லையென்பதால் தெய்வமில்லாது அஸ்தமித்து விட்டதாய் நாஸ்திகம் பேசிவிட முடியுமா?

ஐயறிவுகட்கு எட்டியதை மட்டிலுந்தான் ஏற்பே னென்றால், இதர பிராணிகட்கும் இவனுக்கு மிடையே என்ன பேதம் காணக் கூடும்?

ஈமானென்ற அரபி பதத்திற்கு நம்பிக்கை யென்று பொருள் கொள்ளத் தெரிந்த பிரகஸ்பதிகள் முதன்முதல் நம்பிக்கையென்ற தமிழ் பதத்தின் தாத்பரியத்தைத் தெரிந்து வைத்திருந்தால் திறமாயிருந்திருக்கும்.

நம்பிக்கை யென்பது நிதரிசனமாய்க் காணக் கூடிய அல்லது நடந்துபோனவைகளை குறிக்கக்கூடியதாயிருக்க முடியாது. நப்பிக்கைக்கு வருங்காலமும், கண் காணுதலுந்தான் சம்பந்தமுள்ளதா யிருக்கிறது.

ஒருவன் இலக்ஷ ரூபாய்க்கு பணக்காரன்; கொடுக்கல், வாங்கல் விஷயத்தில் அவ்வளவுக்கும் நம்பலாமென்று சொல்லும்போது, அவனது பொக்கிஷப் பெட்டியையும் கையிருப்பையும் கண்ணால் காணுமலே, மெய்யாயிருக்குமென்று ஏற்பதற்குத்தான் நம்பிக்கை யென்னலாம். ஒருவனுக்கு பணமுடை ஏற்படும் பொழுது தனது நண்பனிடம் உதவி கோருகிறான். இன்னதேதியில் தருவதாய் நண்பன் வாக்களிக்கிறான். கொடுப்பானென்று திண்ணமாய் எண்ணி இருப்பதற்குத்தான் நம்பிக்கை என்னலாம். பொக்கிஷப் பெட்டியை அல்லது இவனது ஆஸ்திகளின் தஸ்தாவேஜீகளைப் பார்த்தபின்போ, குறிப்பிட்ட தேதியில் நண்பனிடம் பணம் பெற்றுக்கொண்ட பின்போ நம்பிக்கை யென்ற பதத்தைப் பிரயோகிப்பதற்குள்ள பொருத்தம் அற்றுப் போய்விட்டது.

எனவே, தெய்வவாக்கிலும் திலகவாக்கிலும் (குர்ஆன் ஹதீதில்) சுவர்க்கமென்றும், நரகமென்றும், கபர்குழி சங்கடம் அல்லது சுகமென்றும் இன்னும் இதுபோன்ற எண்ணற்ற காரியங்கள் பின்னல் நடக்கக்கூடியதும் அல்லது நடந்துபோய் மறைவாய் இருப்பனவுமான அனேக விஷயங்கள் கூறப்பட்டிருக்கின்றன. அதில் நம்பிக்கை யுள்ளவர்கள் நம்புகிறார்கள். அறிவிலிகள் எதிர்க்கின்றனர். முன்னவர்கள் மூமின்களாவர். பின்னவர் அவர்களின் விரோதிகளாவர்.

நம்பிக்கையிலும் பலதரமுண்டு. அது அந்தந்த ஆசாமியைப் பொருத்திருக்கிறது. ஒருவன்மீது இலக்ஷ ரூபாய்க்கு நம்பிக்கை ஏற்பட்டு விடுகிறது. மற்றொருவனை பரம்பைசாவுக்கும் நம்புவதற்கில்லை. இது அவனவனின் யோக்கியாம்சம், சக்தி சாதனை இவைகளைப் பொருத்திருக்கிறது.

உதாரணமாய், நம் கீழ்நாட்டு பஞ்சாங்க சாஸ்திரி யொருவன் நாளது யுவ வருஷம் மார்கழிமீ 24வ புனர்பூச நக்ஷத்திரம் கூடிய தினமான புதனன்று பூர்ண சந்திர கிரகணம் ஒன்று சம்பவிக்குமென்று சொல்லும்போது அவன் வார்த்தையில் அத்தனை நம்பிக்கை ஏற்படுவதில்லை. ஆனால் மேல் நாட்டு விஞ்ஞான சாஸ்திரி யொருவன் அடுத்த நூற்றாண்டில் அதாவது 2011-வது வருஷம் சூரியனை, செவ்வாய் கிரகம் மறைப்பதால் மூன்று நாள் தொடர்ந்தாப்போல் உலகம் இருண்டு கிடக்கும் என்று செல்லும்போது அவனது வாக்கில் நமக்கு பூர்ண நம்பிக்கை ஏற்படுகிறது.

அதேபோல், கீழ்நாட்டு சாஸ்திரியொருவன் நீர்மேல் நடப்பதற்கு உபாயங்கண்டுபிடித்திருக்கிறேனென்று சொன்னால், அதில் நமக்கு அத்தனை நம்பிக்கை ஏற்படுவதில்லை.

ஆனால், மேல் நாட்டு ஸயன்சுக்காரனொருவன் புதன் கிரகம் மனிதவாசத்துக்கு சௌகரியமான கோளம், விமானம் மூலம் அதற்கு பிரயாணம் பண்ணி அங்குபோய்ச் சேர்ந்து ஜனநெருக்கமில்லாமல் சுகஜீவியாய் வாழலாமென்னும்போது அதை நமது புத்திமறுப்பதாயிருப்பினும் அவனது வார்த்தையைநிராகரிப்பதற்கில்லை. நம்பத்தான்வேண்டியிருக்கிறது. ஏன்? அவர்கள் வல்லுனர்கள் சாதிப்பார்கள் என்ற எண்ணம் நமது மனதில் குடிகொண்டிருப்பதே நம்மை நம்பச்செய்கிறது. எனவே, அவனவன் சக்தியை ஓரளவு நிதானம் பண்ணிக்கொண்டபின் தானுகவே நம்பிக்கை பிறந்து விடுகிறது. இவ்விஷயங்களை நாம் கவனத்தில் கொண்டபின் தெய்வசக்தியை, பஞ்சாங்க பாப்பானின் சாமர்த்தியத்தைவிடவும் சாம்பலாய் மதிப்பதா? அல்லது மேல்நாட்டு விஞ்ஞானியின் வன்மையைவிட மேலாய் மதிப்பதா? என்பதை சகோதரர்களிடமே விட்டுவிடுகிறோம். ஆண்டவன் வகைதுகை தெரியாத வனல்ல. சர்வ சக்தன். அவன் தன் திருமறையில், அனேக விஷயம் பின் நடக்கப்போவதாயும், சில நடந்தும் நமக்குத்தெரியாமல் கண்மறைவாய் இருப்பதாயும் பறையறைகிறான். அதேபோல் அவனது தூதுவர் நபி பெருமானவர்களும் (ஸல்.) தீர்க்க தரிசனம் கூறினார்கள்.

ஷை கூற்று சிலவற்றில் குறுகிய புத்தி படைத்த வித்தாரக்காரர்கள் ஐயுறுகின்றனர். அவர்களின் ஐயப்பாடுகளை ஒவ்வொன்றாய் களைந்தெடுத்து அவர்களை சுத்திகரிப்பது அவசியமாகிறதாதலின், சமயம் நேரிடும்போதெல்லாம் ஒவ்வொரு சப்ஜக்டாய் எடுத்து எழுத எண்ணங் கொண்டுள்ளோம். உதாரணமாக, ஈஸா நபியின் (அலை.) ஆகாசகோள வாசத்தை நிராகரிக்கின்றனர். அதில் அவர்கட்குநம்பிக்கை இல்லை. அதாவது ஈமானில்லை. என்னே! இவர்களது ஈமானின் தன்மை.

ஷை ஆகாசவாசத்தை அறிவு விசாலமில்லாத கற்காடக காலத்தவர் நிராகரித்திருப்பாராயின், அதில் அத்துணை ஆச்சரிய மடைவதற்கில்லை. அங்ஙனமிருந்தும் தெய்வத்தின்மீது அவர்களுக்கிருந்த திடமான நம்பிக்கையானது ஆண்டகையால் எல்லாம் ஏலும், இது ஓர் பெருங்காரிய மல்லவென்று இறைவனும் அவனது தூதரும் எதைச் சொன்னாலும் ஏற்றுக் கொள்ளும்படி செய்திருந்தது.

கிழவிகளின் ஈமான்தான் உறுதியானது என்ற நாயக வாக்கேபோல், ஒன்றையும் கிளராமல் ஆண்டவனின் ஆயத்தையும் அவனது தூதரின் அறிக்கையையும் அப்படியே அவர்கள் ஏற்றுக்கொண்டிருந்தமையால், உண்மையான அவர்களது ஈமானின் வன்மை விளங்கக் கிடக்கிறது.

ஆனால், மரக்கிளைகளில் ஒன்றைவிட்டு மற்றொன்றைத் தாவிப் பிடிக்கும் குரங்குகளைபோல், பூமண்டலம்விட்டு செவ்வாய் கிரகத்திற்கும் அதைவிட்டு புதன் கிரகத்திற்கும் எட்டிப்பிடிக்க இதுகாலம் ஏற்பாடு நடந்துகொண்டிருக்கும் இவ் விருபதாம் நூற்றாண்டில், இயேஸு நபி (அலை.) எவ்வாறு வானுயர்ந்தாரென்ற விபரீத வினவை விடுத்துக்கொண்டிருப்பது மகா வெட்கக் கேடேயன்றோ?

இயேஸு வானத்திலிருந்தால், அவர் எதைத் தின்று ஜீவிக்கிறார், அவரது மலஜலம் பூமியில் நமது தலையில் வந்து வீழ்ந்து அபிஷேகம் பண்ணக்காணுமே என்பதுபோன்ற நாகரீகமான கேள்விகளை ஓர் நியூமாடல் இமிடேஷன் மௌலானா கிளப்பினார்.

தினமொன்றுக்கு மூன்று வேளையும் தொப்பையை நிறப்பாது உயிர்வாழ முடியாது யென, இவர் எண்ணினார் போலும். வாசிப்பழக்கம் செய்த சாதுக்கள், வருஷக்கணக்காய் வஜீபனமருந்தாது ஜீவித்திருப்பதை அனந்தம் காண்கிறோம். அதுவும் வேண்டாம். காந்திஜீயின் மூன்று வார பட்டினியை ஊன்றிப்பார்க்கட்டும்! மனிதன் உண்டியருந்தாமல் ஒருவாரங் கூட உயிர்வாழமுடியா தென்பதை பொய்ப்படுத்திவிட்டார். மூன்று வாரம் உண்டியருந்தாமலிருப்பது முடியுமென்று ஆனபின் இன்னும் வேறு சில உபாயங்களால் மூவ்வாயிர வார மென்ன? மூன்று இலக்ஷ வாரங்கள் கூட இருக்க முடியு மென்பதை தர்க்க நீதியில் ஏற்க வேண்டியதாகின்றது.

மலஜலம் ஏன் பூமியில் விழக்காணோ மென்கிறார். உயர்ந்த நோக்க முடையாருக்கு பெருந் தன்மையான சந்தர்ப்பங்கள் எழும். இவரது கீழ்புத்தியானது சந்தாபத்தை பீயிலும் மூத்திரத்திலும் கொண்டுபோய் விட்டதில் ஒன்றும் ஆச்சரியப்படுவதற்கில்லை. எனெனில், இவரிடம் இவ்வித கீழ்தரமான குருட்டு வாதத்தைத் தவிர உயரிய இலக்ஷியமொன்றையும் எதிர்ப்பார்ப்பதற்கில்லை.

எனவே, ஒவ்வொரு கோளங்களின் ஆக்ரஷ்ணை சக்தியானது தன் அண்டத்திலுள்ள யாவற்றையும் தன் வயமே ஈர்த்து கொள்ளக் கூடிய தன்மையுடையதென்ற ஞானம் இவருக்குசூன்யமாய்ப் போய் இவ்வினவை கிளப்பினரு? அப்படியாயின் மேதி பண்டிதரின் விஞ்ஞான அறிவுக்கு வருந்துகிறேரும். இல்லை, விஷயம் தெரிந்திருந்தும் எதிரியை விடைப்பதர்க்காக இவ்வினவை விடுத்தாரு? அப்படியாயின் குரும்புத்தனமான இவரது கேள்வியை கண்டிக்காமலிருக்க முடியாது.

எனவே, சைன்ஸுப்படி இயேஸு (அலை) ஆகாசகோளமொன்றில் வாசம்பண்ணிக்கொண்டிருப்பது விலக்கில்லை. ஒரு கோளத்தைவிட்டு மறுகோளத்துக்கு மனிதன் பிரயாணம் பண்ணலாமென்பதை சயின்ஸு அனுமதிக்கும் போது பிறகேன் அதில் சந்தாபம். இப்பொழுது விமானம் மூலம் பிரயாணம் பண்ணலாமென்ரூல், அக்காலம் இதுபோன்ற வேறு கருவியின் உதவியால் உயர்ந்திருக்கலாம்.

முற்கால பிரஞ்சு சர்வாதிகாரியான நெப்போலியன், தான் மாணவனு யிருக்குங்கால் ஏதோ குற்றஞ் செய்ததற்காக அந்த கெவர்ன்மெண்டாரால் காரா கிரகத்தில் வைக்கப்பட்டான். சிறைகூடத்தில் விழிப்பு நிலையில் விழித்த கண் விழித்தப்படியே எல்லோரும் முழி புரளப் பார்த்துக்கொண்டிருக்கும் போதே எல்லோருக்கும் கடுக்கா கொடுத்துவிட்டு புகை கூண்டின் மேலேறியவாறுயர்ந்து ஒரு காண்டத்தைவிட்டு மறுகாண்டத்திற்குப் பிரயாணம் பண்ணினனென்று ஐரோப்பா சரித்திரங் கூறுகிறது. கேவலம் நர உருவமான நெப்போலியன் மீதுள்ள நம்பிக்கை கூட தெய்வீக சக்தியில் இல்லையென்ரூல் மக்கிப்போன இவர்களின் ஈமானின் துருவை துலக்க அரம் யாரிடம் கிடைக்கும்?

எனவே, மறைவானவற்றை நம்பாதவர்கட்கு குர்ஆன் வழிகாட்டியா யிருக்க முடியாது. எவனுக்கு குர்ஆன் வழிகாட்ட வில்லையோ அவன்படுகுழிபுகுதவே வழிகோலுபவனுகும்.

பெருமானுர் (ஸல்.) சற்குணம்

நபிகள் திலகம் (ஸல்.) அவர்களுடன் அநேக ஆண்டுகள் வரை இருந்து பழகி அவர்களின் குணதிசயங்களை நன்கு தெரிந்திருந்த அநேகர், பெருமானுர் (ஸல்.) அவர்களின் சற்குண விஷயமாய்க் கூறியிருப்பவைகளை இதனடியில் விவரிக்கிறேமாதலின், அதனை நன்கு கவனத்தில் வைப்பது கொண்டு சத்தியத்தூதர் (ஸல்.) அவர்களின் குணதிசயங்கள் இனிது புலனுகும்.

நுபுவ்வத்துக்கு முன்பும் அதற்குபின்பும் 25 வருடங்கள் வரை பெருமானுர் (ஸல்.) அவர்கள் கூடவே இருந்து தொண்டாற்றி வந்த ஹஸ்ரத் கதீஜத்துல் குப்ரா (ரலி.) அவர்கள் பெருமானுர் (ஸல்.) அவர்களுக்கு 'வஹி' வரத் தொடங்கியகாலை ஏற்பட்ட திடுக்கத்தைக்கண்டு "தாங்கள் உற்றூர் உறவினர்களை ஆதரிக்கின்றீர்கள்; கடன் ஹிம்சையில் கஷ்டப்படுவோருக்கு உதவி புரிகின்றீர்கள்; ஏழைகளின் உபகாரியாக இருக்கின்றீர்கள்; விருந்தாளிகளை உபசரிக்கின்றீர்கள்; சத்தியத்தைக் காப்பாற்றுகின்றீர்கள்; கஷ்டநேரத்தில் மானிடர்களுக்கு உதவுகின்றீர்கள். இந்நிலைமையில் தங்களுக்கு எவ்விதஇடையூறும் நேரிடமாட்டாது" என்று அரும் மொழிகளால் தைரியவார்த்தை கூறி, பெருமானுர் (ஸல்.) அவர்களது சிறந்த குணங்களைப் புகழ்ந்திருக்கின்றூர்கள். அநேக ஆண்டுகள் பெருமானுர் (ஸல்.) அவர்களின் உற்ற துணைவியாக இருந்த ஹஸ்ரத் ஆயிஷா நாயகி (ரலி.) அவர்கள் கூறிய அரும் விஷயங்களை கவனிப்போம்:—

பெருமானுர் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் யாரையும் கெடுதி பேசியது கிடையாது. தங்களுக்கு கெடுதி செய்தவர்களுடனும், அதனை மன்னித்து அழகான முறையில் நடந்து கொள்ளுவார்கள்; தங்கள் சொந்த விஷயத்திற்காக யாரிடமும் பழிவாங்கியது கிடையாது; யாருடைய பெயரையும் குறிப்பிட்டு சாபமிட்டது கிடையாது; எந்த அடிமையையோ வெள்ளாட்டியையோ அல்லது மிருக ஜாதியையோ தங்கள் கையால் அடித்ததில்லை; யாருடைய வேண்டுகோளையும் திரஸ்கரித்தது

மில்லை; தாங்கள் வீட்டிற்குள் சிரித்த முகத்துடன் நுழைவார்கள்; சிநேகிதர் பக்கல் காலை ஈட்டியது கிடையாது; யாவருக்கும் விளங்கும்படியும், தாங்கள் கூறுவதை கவனத்தில் வைப்பவர்கள் நன்கு விளங்கிக்கொள்ளுமாறும் பேசுவார்கள். முடிவாக்கூறுமிடத்து, குர்ஆன்ஷரீபில் கூறப்பட்டுள்ள சற்குண நல்லொழுக்கங்கள் யாவும் பெருமானர் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள்பால் சிறந்து விளங்கியது எனக்கூறுவது மிகையாகா.

நுபுவ்வத்தின் ஆரம்பமுதல் கடைசிவரை சுமார் 23 ஆண்டுகள் வரை பெருமானர் (ஸல்.) அவர்களுடனே இருந்து சீர்திருத்தம் பெற்றுள்ள ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்களிடம்ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி.) அவர்கள், நபிகள் திலகம் (ஸல்.) அவர்களது சற்குணம் நடவடிக்கை முதலியவைகள் சம்மந்தமாய் வினவியகாலை, பெருமானர் (ஸல்.) அவர்கள் சிரித்த முகமுடையவர்களாயும், சற்குணசாலியாகவும், கிருபையாளராகவும் இருந்ததுடன் கடின கோபியான வன்னெஞ்ச முடையவர்களாக இல்லாது விளங்கினர்களென்றும், இன்னும் யாரிடமும் கடிந்து பேசாதவர்களாயும், கெட்ட வார்த்தைகளைத் தங்கள் வாயால் உச்சரிக்காதவர்களாயும், தங்களுக்கு முன்னிலையில் கூறப்படுபவைகளில் விருப்பமில்லாதவைகள்மீது வெறுப்புற்றவர்களாயும், தங்களிடம் ஆதரவுவைத்து வருபவர்களின் ஆதரவுகளை அலக்ஷியஞ் செய்யாதவர்களாயும், தேவைக்கு அதிகமாய்ப் பேசாதவர்களாயும், யாருடைய கெடுதியையும் கருதாதவர்களாயும், ஒவ்வொரு விஷயத்தையும் சந்தேக நோக்கோடு கவனியாதவர்களாயும், மானிடர் யாவருக்கும் பிரயோசனம் தரும்படியான வார்த்தைகளையே பேசுபவர்களாயும் இருந்தார்களென்றும், தாங்கள் சொற்பெருக்காற்ற முற்படுவார்களாயின் சஹாபாக்கள் யாவரும் ஒரே விதமாக தலையைச் சாய்த்தவர்களாய் நிசப்த அமைதியோடு செவிமடுத்துக்கொண் டிருப்பார்க ளென்றும், அறியாத பிற மனிதர் யாராகிலும் தெரியாத்தனத்தால் ஏதாகிலும் மரியாதைக்குறைவான வார்த்தை பேசிவிட்டால் அதற்காகக் கடிந்து பேசாமல் பொருமையுட னிருப்பார்க்களென்றும், இதரர் தங்களைப் புகழ்வதைக் கேழ்க்கப் பிரியப்படாமலும், ஒரு விஷயத்தைச் சொல்லிக்கொள்பவர் அவ்விஷயத்தை முடிக்கும்வரை தாங்கள் அதைவிட்டுத் திரும்பாதவர்களா யிருப்பார்க ளென்றும், நெகிரற்ற கொடையாளியாகவும் சத்திய சாந்தகுண சீலராகவும் விளங்கினர்களென்றும், ஒருமுறை தங்களைப் பார்ப்போர் தங்கள்மீது அபாரப் பிரீதிகொள்பவராகி விடுவார்களென்றும் ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்கள் தெரிவித்தார்கள்.

நபிகள் பெருமானர் (ஸல்.) அவர்கள் சற்குணம், பொருமை, மன்னிக்குந் தன்மை ஆகிய உத்தம குணங்களை ஒருபொழுதும் கைவிட்டது கிடையாது. உதாரணமாக, சையிதுஷ் ஷுஹதாஹஸ்ரத் அமீர்ஹம்ஸா (ரலி.) அவர்களை வெட்டிக் கொன்ற கொலை பாதகர் அல்லாஹ் தஆலாவின் சமூகத்தில் மன்னிப்புக்கோரியதைமுன்னிட்டு நபிகள் பெருமானர் (ஸல்.) அவர்கள் அப்பாதகரை மன்னித்துவிட்டார்கள். மேலும், சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள் மக்காவைவிட்டு தாயிப் சென்றிருந்த காலை அவ்வூர்வாசிகளான பொல்லாதோர், பெருமானர் (ஸல்) அவர்கள்மீது கல்மாரி பொழிந்தனர்; சொல்லொணா துன்பத்தை இழைத்தனர். அதுசமயம் சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள் "யாஅல்லாஹ் இவர்கள் அறியாதவர்களாக இருக்கின்றார்கள்; இவர்களுக்கு நேர்வழி காண்பி" என பிரார்த்தனை புரிந்தார்கள்.

இதுவுமன்றி நபிகள் பெருமானர் (ஸல்.) அவர்களின் சத்தியப் பிரசாரத்தைக் கெடுத்து அதனைப் பிரயோசன மில்லாது செய்துவிட வேண்டுமென்று குரைஷ்காபிர்கள் அளவற்ற பிரயத்தனஞ்செய்தும், பெருமானர் (ஸல்.) அவர்களை துன்புறுத்துவதற்காக அவர்கள் தங்கள் முழு சக்தியைப் பிரயோகித்தும் தயாரித்துள்ள திட்டங்களுக்கோர் எல்லையே கிடையாது. மேலும், பெருமானர் (ஸல்.) அவர்களைத் துயர்தோர்களைப் பெரும் சோதனைக்குட்படுத்தும் பொருட்டு அவர்கள் (குறைஷிகள்) தங்கள் பொருள்கள் முழுதையும் செலவிட்டனர். ஆனல், எல்லையற்ற கிருபையும், பெரும் தயவும், மன்னிக்குந்தன்மையுமுள்ள கருணைக்கடலான வள்ளல் ரஸூல் (ஸல்.) அவர்கள் இச்சகல தூர்க்கிருத்தியங்களையும் பெருந்தன்மையோடு சகித்துக்கொண்டுஅந்தகுரைஷ் காபிர்கள் நல்வழியடையுமாறு அல்லாஹ்தஆலாவின் சன்னிதானத்தில் இறைஞ்சியவர்களாய் இருந்தார்கள். இதனல், பெருமானர்

(ஸல்.) அவர்கள் இறைவனின் விசேட கிருபா கடாக்ஷத்திற்குரியவர்களானார்கள்.

ஒரு நாள் ரஜ்ஜாஷீபாதுஷாவிடமிருந்து ஒரு தூதுவர் பெருமானார் (ஸல்.) அவர்களிடம் வந்தார். சத்தியத்தூதர் (ஸல்) அவர்கள் அவரை தங்களது விருந்தாளியாக மதித்து தாங்களே உபசாரம் செய்ய ஆரம்பித்தார்கள். இதனைக் கண்ணுற்ற சஹாபாக்கள், அல்லாஹ்வுடைய ரசூலே! இச்சேவையில் நாங்களீடுபடுகிறோமென்று விண்ணப்பித்துக் கொண்டதற்கு, சத்தியத்தூதர் பெருமானார் (ஸல்) அவர்கள், அன்னார் என்னைச்சேர்ந்தவர்களை உபசரித்து அவர்களுக்கு வேண்டிய சகல காரியங்களையும் செய்திருப்பதால், நானே அவர்களுக்குச் தேவையானவைகளைச் செய்ய நாடுகின்கின்றேன் என, அறிவித்தார்கள். பத்ருடைய சஹாவாக்களில் 'உத்பானிப்னுமாலிக்' (ரலி.) என்பவரின் பார்வையில் கெடுதல் ஏற்பட்டு விட்டது. உடனே அவர் நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் சமுகம் வந்து, 'அல்லாஹ் வுடைய ரஸூலே! யான் எனது தெருவிலுள்ள பள்ளியில் தொழுகையை நிறைவேற்றி வருகின்றேன். ஆனால், மழை பெய்துவிட்டால் பள்ளிவரை போய்த் திரும்புவது கஷ்டமாக இருக்கிறது. தாங்கள் என் வீடுவரைவந்து அங்குள்ள ஒரு இடத்தில் தொழுகையை நிறைவேற்றுவீர்களாயின், அதே இடத்தை நான் தொழுமிடமாக அமைத்து அதிலேயே தொழுகையை நிறைவேற்றிவருவேன்' என்று தெரிவித்துக் கொண்டார். இவ்வேண்டுகோளைப் பூர்த்தி செய்துவைப்பதற்காகப் பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் மறுநாள் அதிகாலையில் ஹஸ்ரத் அபூபக்கர் ஸித்தீக் (ரலி.) அவர்களைத் தங்களுடன் அழைத்துக்கொண்டு அவருடைய வீடுசென்று கதவைத் தட்டி உள்ளால் பிரவேசிப்பதற்கு அனுமதி கோரினார்கள். உள்ளாலிருந்தவர்கள் கதவைத் திறந்து வரவேற்கவே, தாங்கள் அவ்வீட்டினுள் பிரவேசித்து எந்த இடத்தில் தொழுகையை நிறைவேற்றவேண்டுமென்று வினவினார்கள். அந்த சஹாபீ இடத்தைக்குறிப்பிடவே, சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள் அந்த இடத்தில் இரண்டு ரக்அத்து தொழுகையை நிறைவேற்றினார்கள். அதிலிருந்த சஹாபி முக்கிய சந்தர்ப்பங்களில் அதே இடத்தில் தொழுகை நிறைவேற்றிவந்தார். இவ்வாறு பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் ஒவ்வொருவருடைய வேண்டுதல்களையும் அழகான முறையில் நிறைவேற்றி, அவர்களுடைய மனங்களை திருப்திசெய்வதில் தங்களுக்கேற்படும் சிரமங்களையும் கவனியாது நடந்துவந்திருக்கிறார்கள்.

'உப்பாதிப்னு ஷரஹுபீல்' என்னும் பெயருடைய மதீனாவாசியொருவர் மதீனாவில் கடும் பஞ்சமேற்பட்டபோது பசியின் மேலீட்டால் ஒரு பேரீச்சந் தோட்டத்திற்குள் சென்று சில குலைகளைப்பறித்துத் தின்றுவிட்டு சிலதுகளை மூட்டை கட்டிக்கொண்டு வெளியில் கிளம்பும்போது, அத்தோட்டத்தையுடையவருக்குத் தெரிந்துவிட்டது. உடனே அவர் ஓடிவந்து அந்த மனிதரை நய்யப்புடைத்து துணிகளைப் பிடுங்கிக்கொண்டார். உடனே அந்த மனிதர் நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்களிடம் முறையிட்டுக்கொண்டார். அது பொழுது அந்தத் தோட்டக்காரரும் அங்கு வந்துவிட்டார். உடனே நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் அவரை நோக்கி, இந்த மனிதன் கல்வி அறிவில்லாதவராக இருப்பதால் பசியின் கொடுமை மேலீட்டால் இவ்வாறு செய்துவிட்டார் எனக் கூறியவர்களாய் அத்துணிகளை வாங்கி அந்தமனிதரிடங் கொடுத்துவிட்டு, தங்களிடமிருந்த தானியங்களில் 60 படி தானியங்களை அத்தோட்டக்காரருக்குக் கொடுத்தார்கள். பெருமானார் (ஸல்.) அவர்களின் தயாள சிந்தையையும் உபகார சிறப்பையும் ஊன்றிப்பாருங்கள்!

சோதரீர்! மேலே நாம் கூறியவைகளெல்லாம் பெருமானார் (ஸல்.) அவர்களது சற்குண நல்லொழுக்கத்தின் ஒரு சிறிய துளியேயாகும். அல்லாஹ்தஆலாவே திருகுர்ஆனில் "நீர் மேலான சற்குணத்திலிருக்கிறீர்" என், பெருமானார் (ஸல்.) அவர்களது சற்குணத்தைப் பற்றிப் புகழ்ந்து கூறியிருப்பதால் அக்குணங்களின் மகத்துவம் மகாம்கா உன்னதமானதாகுமென்பது இனிது புலனாகும். எல்லாம் வல்ல நாயன் அச்சற்குணங்களைப் பின்பற்றியொழுக நம்மனைவருக்கும் நல்லுதவி புரிவானாகவும்.

அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வபாரிக் வஸல்லிம் அலைகி.

தமிழ்நாடு அரசு 20824 N35.6.5-6

முந்துங்கள் ! கொஞ்சப் பிரதிகளேயுள்ளன ! முந்துங்கள் !

திருமறைத் தமிழுரை

தென்னிந்திய முஸ்லிம்கள் நீண்ட நாளாய் வெகு ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்த திருகுர்ஆன் தமிழ் மொழி பெயர்ப்பு, கூத்தானல்லூர் சாந்திபிரகடன சபையாரின் நன்முயற்சியால் (தென்னிந்திய உலமாக்களால் பரிசீலனை செய்யப்பட்டு, உலமாக்கள் மகாநாட்டில் அங்கீகாரமாகி) 10 ஜுஸ்உக்கள் அடங்கிய முதல் பாகம் வெளிவந்துவிட்டது. ஆண்டவனின் திருவசனத்தைப் படித்து அதன் கருத்துகளை உணர்ந்தொழுகவேண்டியது ஒவ்வொரு மானிடர் மீதுமுள்ள முக்கியக் கடமையாகும்.

இது ஒவ்வொரு ஆயத்தையும் ஒதி அதற்குள்ள அருத்தத்தை நல்லவிதமாய்த் தெரிந்துகொள்வதற்கு ஹேதுவான முறையில் அமைக்கப்பட்டு நேர்த்தியான பைண்டும் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, ஒவ்வொருவரும் வாங்கிப்படித்து பயன்பெறுவார்களாக.

கிரயம் ரூ. 4—0—0. போஸ்டேஜ் வேறு

கிடைக்குமிடம் :—

O. S. சதக்கத்தம்பி மரைக்காயர்,
36, அர்மீனியன் தெருவு,
ஜி. டி., மதராஸ்.

நமது ரங்கூன் ஏஜண்டு :—
S. அப்துற்றஹ்மான் மரைக்காயர்,
131, முதல் ரோடு, ரெங்கூன்.

முக்கிய கவனிப்பு

எங்களிடம் குர்ஆன்ஷரீப், அறபுத்தமிழ், சுத்தத்தமிழ், உர்து முதலிய பற்பல பாஷைகளிலுமுள்ள அநேக கிதாப்கள் சகாயமான விலைக்கு, அழகானதாயும், சுத்தமான வைகளாகவும் கிடைக்கும். விபரம் தெரிந்துகொள்ள விருப்பமுடையோர் தபால் செலவுக்காக ஒரு அணா ஸ்டாம்பு அனுப்பி எங்களது விபரமான கேட்லாக்கைப் பெற்று பயன் பெறுவார்களாக. தவிரவும், யாவரும் வெகு ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்த 'உசூலுல் அல்ஞ-பீ-உஸூலுல் ஹுல்ஞ, வென்னும் 18 மௌலிது வகைராக்கள் சேர்ந்த நூல், 21 மௌலிது, மற்றும் பைத்துகளுடன் அச்சாகி வெளிவந்திருக்கிறது.

கிரயம், கலிகோ பைண்டு ரூ. 6—0—0 ; தோல் பைண்டு ரூ. 7—0—0. வி. பி. சார்ஜ் வேறு.

K. M. மௌலவீ சுல்த்தான் அஹ்மது ஆலிம் சாஹிப்
1/222, அங்கப்ப நாய்க்கன் தெருவு, ஜி. டி., மதராஸ்.

"யவ்முந் நபி"

திருநபி தினக்கொண்டாட்டம்

சத்தியத்தூதர், உத்தமகுணசீலர் 'முஹம்மது நபி' (ஸல்.) அவர்கள் உலகின்கண் தோன்றி, மானிட வர்க்கத்துக்குச் செய்துள்ள பேருபகாரங்களையும், அவைகளினால் மானிடர் அடைந்துள்ள நன்மைகளையும் நம்மவரும் இதரர்களும் தெரிந்து கொள்ளுவதற்கும், அதனை மக்களிடையே பரத்துவதற்கும் ரபீஉல் அவ்வல் 12-ந் திகதி ஏற்ற தினமாகும். அத்தினம் இவ்வாண்டில் 14-6-35 வெள்ளிக்கிழமை வருகிறது. அன்றைய தினத்தில் ஒவ்வொரு இடங்களிலும் மாபெரும் மகாநாடுகள் கூட்டி, நபிகள் திலகம் (ஸல்.) அவர்களது வாழ்க்கைச் சரிதை, ஹிதோபதேசம் முதலியவைகளை மக்களுக்கு விளக்குவதுடன் உங்கள் "ஹிபாஜத்துல் இஸ்லாம்" சங்கத்தாரால் தயாரிக்கப்பட்டிருக்கும் "உலகரக்ஷகர் முஹம்மது நபி" (ஸல்.) என்னும் ஸீரத் பிரசங்கத்தை வாசித்துக்காட்டி ஏராளமான பிரதிகளை வினியோகிக்க வேண்டும். பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களது மகத்துவம் உலகமெங்கும் மிளிர்ந்திலங்க வேண்டுமென்பதைக்கருதி அகில உலக ஸீரத் கமிட்டியார் அபார முயற்சி செய்துவருகிறார்களென்பது உலகமறிந்த விஷயம். அவர்கள் இவ்வாண்டின் மீலாத்ஷரீப் விழாவிற்கென்றே, லண்டன் தி வெஸ்டர்ன் இஸ்லாமிக் அஸோஸியேஷன் ஜீவியத்தலைவரான ஷெய்குல் இஸ்லாம் டாக்டர் காலித் ஷெல்டிரேக் அவர்களைக்கொண்டு ஸீரத் பிரசங்கம் தயாரித்துள்ளார்கள். அதனை நம் சங்கம் மொழிபெயர்த்து அச்சிட்டிருக்கின்றது. அன்று பிரசங்கிப்பதற்கும். வினியோகிப்பதற்காகவுமென்றே தயாரிக்கப்பட்டிருக்கும் இப்பிரதிகளின் கிரயம் மிகச்சொற்பமாகவே வைக்கப்பட்டிருக்கிறது. ஆதலால், இவைகளை வாங்கி பயன் பெறுவீர்களாக.

"உலகரக்ஷகர் முஹம்மது நபி" (ஸல்.)

1000	பிரதிகள்	...	ரூ. 25—0—0
500	ஷை	...	ரூ. 13—0—0
250	ஷை	...	ரூ. 7—0—0
100	ஷை	..	ரூ. 3—0—0

தபால் சார்ஜ் வேறு

காரியதரிசிகள்,

ஹிபாஜத்துல் இஸ்லாம்,

A, போஸ்டாபீஸ் தெருவு, ஜி. டி., மதராஸ்.

Printed at the Kesari Printing Works & Edited & Published by Moulvi A. R. Abdur Rahim Saheb, Manager, Hifazath-ul-Islam, 43-A, Post Office St., G.T., Madras.